


பூங்கொடி
பதிப்பகம்

# சைவ சமய வளர்ச்சி

டாக்டர்
மா. இராசமாணிக்கனார்

# சைவ சமய வளர்ச்சி

டாக்டர் மா. இராசமாணிக்கனார்

பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக்குளம் மேற்கு தெரு
மயிலாப்பூர், சென்னை - 600 004
தொலைபேசி: 4943074

## நூல் விவரப்பட்டியல்

நூலின் பெயர் : சைவ சமய வளர்ச்சி

நூலாசிரியர் : டாக்டர் மா. இராசமாணிக்கனார்

உரிமை : மா.ரா.அரசு

மொழி : தமிழ்

வெளியீடு : பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக்குளம் மேற்கு தெரு
மயிலாப்பூர், சென்னை - 4

பதிப்பு ஆண்டு : முதற் பதிப்பு : டிசம்பர், 1958
இரண்டாம் பதிப்பு : 1972
மூன்றாம் பதிப்பு : டிசம்பர், 1999

பக்கங்கள் : 232

நூல் அளவு : 18.5 x 12.5 செ.மீ.

எழுத்து : 11 புள்ளிகள்

தாள் : 10.7 கி.கி. வெள்ளைத்தாள்

பைண்டிங் : கார்டு போர்டு

ஒளி அச்சுக் கோவை : அமராவதி
6/24, நாகரத்தினம்மாள் தெரு
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033
போன் : 48 50 484

அச்சிட்டோர் : நடராஜ் ஆப்செட் பிரஸ்
சென்னை - 600 005

விலை : ரூ. 80-00

# பதிப்புரை

**கா**லந்தோறும் தமிழியல் ஆய்வு வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய அறிஞர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவர் டாக்டர் மா. இராசமாணிக்கனார் (1907-1967). 'தென்னிந்திய வரலாறு பற்றியும் இலக்கியம் பற்றியும் வித்துவான் மா. இராசமாணிக்கம் எழுதியுள்ள நூல்கள் பலவும் அவரது மகத்தான சாதனைகளாகும்' என்று புகழ் பெற்ற வரலாற்று அறிஞரான ஈராஸ் பாதிரியார் பாராட்டியுள்ளார்.

டாக்டர் மா. இராசமாணிக்கனாரின் சாதனைகளில் ஒன்றுதான் இவருடைய முனைவர் பட்ட ஆய்வாகிய சைவசமய வளர்ச்சி என்னும் இந்நூல்.

'பல்லவர், சோழர் வரலாறுகள் குறித்து மேற்கொண்ட ஆராய்ச்சியும் எம்.ஓ.எல். பட்டத்திற்காகச் 'சேக்கிழாரும் அவருடைய வரலாற்று மூலங்களும்' என்று ஆய்வு செய்த பணியும் கல்வெட்டுகள், இலக்கியங்கள் வழியாக இடைக்காலப் பல்லவர், சோழர் பற்றி அறிய வகைசெய்தன. சைவசமயம் பற்றிக் கிடைத்த குறிப்புகள், தனியே அச்சமய வளர்ச்சி பற்றி எழுதத் தூண்டின. அதுவே டாக்டர் பட்ட ஆய்விற்கும் நுவல் பொருளாயிற்று' என்று இந்த ஆய்வு நூல் உருவான வரலாற்றைத் தம் ஆய்வேட்டின் முன்னுரை யில் குறிப்பிட்டுள்ளார் டாக்டர் மா. இராசமாணிக்கனார்.

'ஓர் ஆராய்ச்சியாளர் கல்வெட்டுகளின் அடிப்படையில் தமது கருத்தைச் சொல்லும்போது அவரது கருத்து உறுதியானதாகவும் மறுக்க முடியாததாகவும் அமைந்துவிடுகிறது. வித்துவான் மா. இராசமாணிக்கம் இந்த வழியைப் பின்பற்றித் தம் மதிப்பை மிகவும் உயர்த்திக்கொண்டுள்ளார்' என்பர்

கல்வெட்டு அறிஞரான வேங்கட சுப்பையர். இந்தப் பாராட்டால் இந்நூலின் தகுதி நன்கு புலனாகும்.

'வரலாற்று நூல்களையும் செய்திகளையும் பயன்படுத்திக் கொள்வதில் மா. இராசமாணிக்கம் தனித் தன்மை காட்டியுள்ளார். அறிஞர்கள் மாறுபட்ட கருத்துகளைக் கொண்டிருக்கும் வரலாற்று நிகழ்ச்சிகள் தொடர்பாக யார் சொல்வதையும் அப்படியே ஏற்றுக் கொள்ளாமல், புதிதாக ஆராய்ந்து நுணுக்கமாகச் சீர் தூக்கிப் பார்த்துத் தம்முடைய சொந்த முடிவுக்கு வருவது இராசமாணிக்கனாரின் இயல்பு' என்னும் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளையின் மதிப்பீடு டாக்டர் மா. இராசமாணிக்கனாரின் ஆய்வு அணுகு முறையை நன்கு உணர்த்தும். இத்தகைய ஆய்வு அடிப்படையில் உருவான 'சைவ சமய வளர்ச்சி' தனித் தன்மையுடன் விளங்கும் அரிய படைப்பாகும்.

இந்தச் சிறந்த ஆய்வு நூலின் மூன்றாம் பதிப்பு பூங்கொடி வெளியீடாக வருவதில் மகிழ்ச்சி அடைகிறோம். எங்கள் பதிப்பகத்தின் வாயிலாக வெளிவரும் டாக்டர் மா. இராசமாணிக்கனாரின் முதல் நூல் இதுவேயாகும். இனி, இவருடைய பிற நூல்களும் எங்கள் பதிப்பக வெளியீடுகளாக வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**வே. சுப்பையா**

# பொருட் பிரிவு

*1. ஆராய்ச்சிக்கு உரிய மூலங்கள்* 9-11

தோற்றுவாய் - சங்ககாலம் - பல்லவர் காலம் - சோழர் காலம் - சைவ சித்தாந்தம்.

*2. பல்லவர்க்கு முற்பட்ட சைவ சமயம்*
(கி.பி.300க்கு முன்) 12-34

தோற்றுவாய்-பல்லவர்க்கு முற்பட்ட தமிழ் நூல்கள் எவை? - தொல்காப்பியம் - தொகை நூல்களிற் சிவனைக் குறிக்கும் பெயர்கள்; சிவனைப்பற்றிய குறிப்புக்கள்-சிலப்பதிகாரம், மணிமேகலை தரும் குறிப்புக்கள் - முருக வழிபாடு - கொற்றவை வணக்கம் - வைணவ சமயம் - சைவமும் வைணவமும் - இதிகாசங்களில் கோயில்கள் - கோயில் அமைப்பு - லிங்க வழிபாடு - விழாக்கள் - திருநீறு - ஐம்படைத் தாலியும் இடப அணியும் - பிரார்த்தனை - மக்கள் கொண்ட சிவனார் பெயர்கள் - பாடலும் ஆடலும் - சமண சமயம் - பௌத்த சமயம் - அந்தணர் நிலை - சிவனுக்கு முதல் இடம்-சமய வெறுப்பு - முடிவுரை - குறிப்பு விளக்கம்.

*3. முற்காலப் பல்லவர் காலத்தில் சைவ சமயம்*
(கி.பி. 300-600) 35-59

பல்லவ அரசர் பட்டியல்-அக்கால நிலை: களப்பிரர்; சோழர்; கங்கர், கதம்பர்; பல்லவர், சாளுக்கியர்- அக்காலச் சமய நிலை; பௌத்தம்; சமணம்; பாடலி, சமணமடம்; சமண காஞ்சி; மதுரையில் சமணர் சங்கம்; வைணவ சமயம்-சைவ சமயம்: பல்லவரும் சைவமும், செப்புப்பட்டயங்களிலிருந்து; இலக்கியத்திலிருந்து - க்ஷேத்திர வெண்பா - நாயன்மார்-நாயன்மார் வரலாறுகள் உணர்த்தும் சைவ சமயச் செய்திகள் - வேறு சில அடியார்கள்: நக்கீரதேவ நாயனார்; கபிலதேவ நாயனார்; பரணதேவ நாயனார் - கல்லாடனார் - கடல் நாகைக் 'காரோணம்' - முடிவுரை - குறிப்பு விளக்கம்.

*4.திருமந்திரம்* 60-78

திருமூலர் வரலாறு (பெரியபுராணத்திற் கண்டபடி) - திருமந்திரமும் காஷ்மீரச் சைவமும் - திருமந்திரச் செய்திகள் - திருமூலர்

குறித்த சமயப் பாதைகள் : வேதாந்தம் ஆறு; சித்தாந்தம் ஆறு ; சைவத்தின் நான்கு பிரிவுகள் ; சரியை முதலிய நான்கு ; சன்மார்க்கம் முதலிய நான்கு ; புறச் சமயங்கள் ; அகச் சமயங்கள் ; சிவ பக்தி ; சிவ அத்வைதம் ; துறவு ; லிங்க வழிபாடு ; அரசர் கடமை ; திருநீறு ; சிவன் அடியார்கள் ; வைதிகர் நிலைமை-சிவ கதைகளும் திருமூலர் விளக்கமும் - சன்மார்க்க மடங்கள் - சைவப் பிரசாரம் - திருமந்திரச் சிறப்பு - குறிப்பு விளக்கம்.

***5. பிற்காலப் பல்லவர் காலத்தில் சைவ சமயம்-I*** 79-94

(கல்வெட்டுக்களில் சைவ சமயம்- கி.பி.600-900)

முன்னுரை - நந்தி முத்திரை - பல்லவரது கட்டுவாங்கம் - பல்லவ வேந்தர்களின் சமயத் திருப்பணி-காஞ்சி, முத்தீசுவரர் கோயில் - திருவல்லம் சிவன் கோயில்-கோயில் ஆட்சி - முடிவுரை - குறிப்பு விளக்கம்.

***6. பிற்காலப் பல்லவர் காலத்தில் சைவ சமயம் - II*** 95-122

(இலக்கியத்தில் சைவம் - கி.பி. 600-900)

சைவ இலக்கியம் - சிவத்தலங்கள் - நாயன்மார் - அரசரான நாயன்மார் - சிற்றரசரான நாயன்மார் - சேனைத் தலைவரான நாயன்மார் - பிராமண நாயன்மார் - வணிக நாயன்மார் - வேளாள நாயன்மார் - சிவாசாரியர் நால்வர் - சாதிக்கொருவராயுள்ள நாயன்மார் - மரபு குறிக்கப்படாத நாயன்மார் - நாயன்மார் செய்த சமயத்திருப்பணிகள், 32 - நாயன்மார் வீட்டுப் பெண்மணிகளும் சமயத் தொண்டும் - நாயன்மாருள் சாதி வேறுபாடு இல்லை - சமயப் போராட்டம் : பல்லவ நாட்டில் ; சோழ நாட்டில் ; பாண்டிய நாட்டில் - வைணவமும், பௌத்த சமணங்களும் - சங்கரரும் பௌத்தரும் - அப்பர், சம்பந்தர் தலயாத்திரை - கோவில்கள் : வளர்ச்சி ; தில்லையும் திருவாரூரும்; பெயர்கள்; ஆட்சி; விழாக்கள்; திருமேனிகளும் உருவச் சிலை களும்; இசையும் நடனமும் - சைவ மடங்கள் - நாயன்மார் சமயபோதனை - பலவகை வழிபாட்டு முறைகள் - நரபலி கொடுத்து வழிபடுதல்- அப்பர் கால அடியவர்கள் - சேரமான் பாடல்கள் - மாணிக்க வாசகர் - திருவாசகத்தின் உயிர்நாடி - முடிவுரை - குறிப்பு விளக்கம்.

*7. சோழர்காலச் சைவ சமயம்* 123-144
(கி.பி. 900-1300)

சோழர்கால இந்தியாவில் சைவ சமயம்: காஷ்மீரம், நேபாளம் - சாளுக்கியர் - பரமாரர் - சந்திராத்ரையர் - சாகமானர்கள் - ஹெய்ஹயர் - சோழர் சமயநிலை - சோழ அரசர்கள் (பட்டியல்) - ஆதித்த சோழர் - செம்பியன் மாதேவியார் - இராசராசன் I- இராசராசனும் திருமுறைகளும் இராஜேந்திரனும் கங்கை கொண்ட சோழேச்சுரமும் - முதல் குலோத்துங்கன் - விக்கிரமசோழன் - குலோத்தங்கன்II இராசராசன் II குலோத்துங்கன் III - அரசமாதேவியரும் திருப்பணிகளும் (14) - சிற்றரசரும் திருப்பணிகளும் (14) - கோப்பெருஞ்சிங்கன் திருப்பணிகள் - அரசியல் அலுவலாளர் செய்த திருப்பணிகள் (3) - காளிங்கராயன் திருப்பணிகள் - குடிகளும் திருப்பணிகளும் (7) - கோயில்களின் வளர்ச்சி - கோயில் ஆட்சி - எளிய கோயில்கள் கவனிக்கப்பட்ட முறை - முடிவுரை - குறிப்பு விளக்கம்.

*8. கோயில்கள் - மடங்கள் : சமய நிகழ்ச்சிகள்*

145-161

கோயில்களில் சிற்பங்கள் - தாராசுரத்தில் கடவுளர் சிற்பங்கள் - கங்கை கெண்ட சோழபுரச் சிற்பங்கள் - கீழைக் கடம்பூர்ச் சிற்பங்கள் - மேலைக் கடம்பூர்ச் சிற்பங்கள் - பெரியபுராணச் சிற்பங்கள் - தஞ்சை பெரியகோயில் ஓவியங்கள் - கடவுளர் திருமேனிகள் - கோயில் வழிபாடுகள் - நாயன்மார்க்குப் பூசையும் விழாக்களும் - கோயில்களில் அரசர்கள் - ஆடலும் பாடலும் - நாடகம் - தேவரடியார் - தளியிலார் - கோயில்களில் திருமுறைகள் - சிறப்புக்குக் காரணம் என்ன? - கோயில்களில் படித்து விளக்கப்பட்ட சமய நூல்கள் (12) - வேறு சில நூல்கள் - ஆளுடைய நம்பி ஸ்ரீ புராணம் - குறிப்பு விளக்கம்.

*9. மடங்களும் குகைகளும்* 162-185

முன்னுரை - இறைவன் பெயர்கொண்ட மடங்கள் - அரசர், சிற்றரசர் பெயர்கொண்ட மடங்கள் - நாயன்மார் பெயர்கொண்ட மடங்கள் - பல பெயர்களைக் கொண்ட மடங்கள் - கோமடம் - காபாலிகர் மடம் - வீரசைவ மடம் - கோளகி மடத்துச் சிவாசாரியர் - வாரணாசிக் கொல்லா மடம் - வாரணாசி பிக்ஷாமடம் - சோழ மன்னர்தம் இராஜ குருக்கள் - தமிழ்ச் சைவ மடங்கள் - மாளிகை மடத்து முதலியார் சந்தானம் - செண்பைக்குடி முதலியார் சந்தானம் - திருவாரூர் ஆசார மழகியான் திருமடம் - மருதப்பெருமாள் சந்தானம் - இலக்கியத்தில்

மடங்கள் - குகைகள் - மக்கள் கொண்ட நாயன்மார் பெயர்கள் - நாயன்மார் பெயர் கொண்ட இடங்கள் - கடவுளர் பெயர்கள் கொண்ட மக்கள், இடங்கள், பொருள்கள் - முடிவுரை - குறிப்பு விளக்கம்.

***10. சோழர் காலச் சைவ இலக்கியம்*** 186-205

சைவத் திருமுறைகள்: 11 - ஆந்திருமுறை - 12-ஆந்திருமுறை - தக்கயாகப் பரணி- கல்லாடம் - தில்லை உலா - சைவசித்தாந்த சாத்திரங்கள் : (1) திருவுந்தியார்; கடவுள் நிலை, உயிரின் இயல்பு, சிவமாந்தன்மை பெற வழி; முத்தி நிலை; (2) திருக்களிற்றுப்படியார்; இறை, உயிர், சாதனம், இறைவனை அணைந்தோர் இலக்கணம்; (3) சிவஞானபோதம்; பிரமாண இயல், இலக்கண இயல், சாதன இயல், பயன் இயல்; (4)சிவஞான சித்தியர்; (5) இருபா இருபஃது; (6) உண்மை விளக்கம் ; உமாபதி சிவாசாரியார் இயற்றிய 8 நூல்கள்: (1) சிவப்பிரகாசம் (2) திருவருட்பயன் (3) வினாவெண்பா (4) போற்றிப் பஃறொடை வெண்பா (5) கொடிக்கவி (6) நெஞ்சுவிடு தூது (7) உண்மை நெறி விளக்கம் (8) சங்கற்ப நிராகரணம் - குறிப்பு விளக்கம்.

***11. சைவ சித்தாந்த வளர்ச்சி*** 206-216

(திருமூலர் காலம் முதல் உமாபதிசிவம் வரை)

முன்னுரை - முப்பொருள்கள் - அத்துவிதம் அல்லது சுத்தாத்துவிதம் - ஐந்தொழிலும் ஐந்தெழுத்தும் - உயிர்கள் - உயிரின் மூன்று நிலைகள் - உயிர்களை இறைவன் ஆட்கொள்ளும் வகை - உண்மை ஞானம் பெற்ற உயிர்களின் ஒழுகலாறு - முத்தி நிலை - குறிப்பு விளக்கம்.

***12. சைவரது சமுதாய வாழ்க்கை*** 217-232

கல்வி - பெண்கல்வி - திருமணம் - மணவாழ்க்கை சிவனடியாரை உண்பித்தல் - உடன்கட்டை ஏறலும் கைம்மை வாழ்க்கையும் - உருத்திர கணிகையர் - சிவனடியார்கள் - அடியார்களும் ஐந்தெழுத்தும் - புறச் சமய வெறுப்பு - கோயில் தொண்டுகள் - அடியார்க்குக் கோயில் எடுத்தல் - கோயிலில் மக்கள் வழிபாட்டு முறைகள் - சைவர் நம்பிக்கைகள் - குறிப்பு விளக்கம்.

# சைவ சமய வளர்ச்சி

## 1. ஆராய்ச்சிக்கு உரிய மூலங்கள்

**நா**ம் இங்கு ஆராய எடுத்துக்கொண்ட பொருள், 'தென் இந்தியாவில் காஞ்சிப் பல்லவர் காலத்தும் பிற்காலச் சோழப் பேரரசர் காலத்தும் (கி.பி. 300-1300) உண்டான **சைவ சமய வளர்ச்சி**' என்பதாகும். தென் இந்தியா என்னும் சொல், துங்கபத்திரை - கிருஷ்ணையாறுகட்குத் தென்பாற்பட்ட நிலப் பகுதியைப் பொதுவாகக் குறிப்பதாயினும், இங்கு வடவேங்கடம் தென் குமரிக்கு இடைப்பட்ட பழைய தமிழகத்தையே சிறப்பாகக் குறிப்பதாகக் கொண்டு, ஆராய்ச்சி நிகழ்த்தப்படுகிறது.

### *சங்க காலம்*

பல்லவர் காலம் ஏறத்தாழக் கி.பி. 300-900 எனலாம். அதற்கு முற்பட்ட காலம் சங்ககாலம். சங்க காலத்தில் சைவ சமயமும் பிற சமயங்களும் பற்றிய விவரங்களை அறியத் தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப் பாட்டு, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் சங்ககால நூல்கள் பெருந்துணை புரிவன. சிந்து வெளி நாகரிக காலத்திலிருந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டுவரை வட இந்தியாவிலும் டெக்கானிலும் சைவமும் பிற சமயங்களும் எவ்வாறு இருந்தன என்பதை டாக்டர் பந்தர்க்கர் போன்ற அறிஞர்கள் ஆராய்ந்து வெளியிட்டுள்ளனர். அவ்வாராய்ச்சி நூல்களும் சங்ககாலச் சைவத்தை அறியச் சிறிதளவு பயன்படும். வால்மீகி இராமாயணமும் வியாச பாரதமும் தமிழகம் பற்றிக் கூறுவன ஆதலின், அவையும் இம் முயற்சியில் சிறிதளவு உதவக்கூடியவை.

### *பல்லவர் காலம்*

பல்லவர் காலத்தில் பல்லவர்கள் ஏறத்தாழக் கிருஷ்ணையாறு முதல் தெற்கே புதுக்கோட்டை வரையில் தங்கள் பேரரசை ஏற்படுத்தி

ஆண்டவர்கள். அவர்கள் காலத்தில் தெற்கே சோழரும் பாண்டியரும், மேற்கே சேரரும் கங்கரும் கதம்பரும், வட மேற்கில் சாளுக்கியர் - இரட்டர் என்பவரும் ஆண்டுவந்தனர். சிறப்பாகப் பல்லவ நாட்டிலும் பொதுவாகத் தென் இந்தியாவின் பிற பகுதிகளிலும் வெளியிடப்பட்ட கல்வெட்டுகள் (பல்லவர் காலத்துக் கல்வெட்டுகள் மிகச் சிலவே கிடைத்துள்ளன), கட்டப்பட்ட சிவன் கோயில்கள், அக் காலச் சைவ இலக்கியங்கள் என்பவை பல்லவர் காலச் சைவ சமயத்தை அறியப் பெருந்துணை புரிவன. வைணவ - சமண - பௌத்த சமய நூல்களும் அக் காலச் சைவ சமயத்தைப்பற்றி அறிய ஓரளவு துணை புரிவன. அக் காலத்தில் தென்னாடு போந்த ஹிவான் சுவாங் போன்ற அயல் நாட்டு யாத்ரிகர் குறிப்புகளும் துணை புரியும். பல்லவர் காலத்திற்றான் சைவ சமயம் தமிழ்நாடு முழுவதும் நாயன்மார்களாற் பரப்பப்பட்டது. சமணமும் பௌத்தமும் அலைக்கழிக்கப்பட்டன. தமிழகத்தில் இருந்த ஏறத்தாழ 300 சிவன் கோயில்களிலும் பூசைகளும் விழாக்களும் சிறப்புற நடக்க ஏற்பாடாயின. இந்த அரிய விவரங்களைத் தேவாரத்தைக் கொண்டும், தேவாரம் முதலிய தக்க சான்றுகளைக் கொண்டு கி.பி. 12-ஆம் நூற்றாண்டிற் பாடப்பட்ட பெரியபுராணம் கொண்டும் நன்கறியலாம்.

### சோழர் காலம்

சோழர் காலம் (கி.பி. 900-1300) தென் இத்தியவரலாற்றின் பொற்காலம். சோழர்கள் வழி வழிச் சைவர்கள். அவர்கள் காலத்தில் உண்டான பெரிய சிவன் கோயில்கள், புதுப்பிக்கப் பெற்ற பாடல் பெற்ற கோயில்கள், அக் கோயில்களிற் காணப்படும் கல்வெட்டுக்கள், அக் காலத்தில் இருந்த பட்டினத்தார், நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார் போன்ற சிவ பக்தர்கள் பாடிய சைவ நூல்கள் ஆகியவை அனைத்தும் அக் காலச் சைவ சமய வளர்ச்சியை நன்கு காட்டவல்லன. சோழப் பெருநாடு துங்கபத்திரை - கிருஷ்ணையாறுகள் வரையில் பரவியிருந்தமையால், சோழர் காலக் கல்வெட்டுக்கள் அவ்யாறுகள் வரையிலும் காணப்படுகின்றன. அவை அனைத்தும் அக்காலச் சைவ சமய வளர்ச்சியைக் காட்டப் பெருந்துணை புரிவனவாகும்.

சோழர்கள் சைவ சமயத்தினர் ஆதலின் அவர்கள் காலத்து நூல்கள் பல சைவ சமயத்தனவாக இருக்கின்றன. அரசர்களைப்பற்றிப் பாடப்பட்ட மூவருலாப் போன்ற நூல்களிலும் அவர்கள் சைவத்திற்குச் செய்த தொண்டுகள் விரிக்கப்பட்டுள்ளன. பெரும்பற்றப்புலியூர் நம்பி திருவிளையாடற் புராணமும் இக்காலத்ததே. அது சிவபெருமானுடைய திருவிளையாடல்களைக் கூறும் நூல்.

சோழர் காலச் சைவ நூல்களில் தலைசிறந்தது பெரிய புராணம். அந்நூல் இரண்டாம் குலோத்துங்கனது முதல் அமைச்சரான சேக்கிழார் பாடியது. அவர் முதல் அமைச்சர் ஆதலாலும், நாயன்மார் அறுபத்து மூவருள் சிலர் சேர - சோழ - பாண்டிய மரபினராதலாலும் வேறு சிலர் குறுநில மன்னராதலாலும் அவர் அவர்களைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளைத் தக்க சான்றுகள் கொண்டே தொகுத்தனர் என்று கருத இடமுண்டு.[1] அந் நூலாசிரியர், பாடல்பெற்ற ஏறத்தாழ 300 கோயில்களையும் நேரிற் கண்டனர் என்பதற்குச் சான்றுகள் உண்டு. இவ்வளவு அரும்பாடுபட்டு அவர் செய்த பெரியபுராணம் பல்லவர் காலத்தில் வாழ்ந்த நாயன்மார் வரலாறுகளையும் சைவம் வளர்ந்த நிலையையும் நன்கு விளக்குகிறது. அந் நூல் சோழர் காலத்தில் உண்டானது என்பதைக் கொண்டு, சோழர் காலத்தில் சைவ சமய நாயன்மார்கள் எவ்வாறு போற்றப்பட்டனர் என்பதை அறியலாம்.

நாயன்மார்கள் உருவங்கள் கோயில்களில் எடுப்பிக்கப்பட்டன; நாயன்மார்கட்கு விழாக்கள் நடைபெற்றன; அவர்கள் பாடல்கள் கோவில்களிற் பாடப்பட்டன என்பன போன்ற பல விவரங்கள் சோழர் காலக் கல்வெட்டுக்களைக் கொண்டு நன்கறியலாம். பல்லவர் காலத்தில் இருந்த மடங்களை விடச் சோழர் காலத்தில் மடங்கள் மிகுதிப் பட்டன என்பதையும், அவை சைவ சமயத்தை எவ்வாறு வளர்த்துவந்தன என்பதையும் சோழர் காலக் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன.

### சைவ சித்தாந்தம்

பல்லவர் காலத்தில் தோன்றிய திருமூலர் திருமந்திரம், தேவாரம், திருவாசகம் இவற்றிற் காணப்படும் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் எவ்வாறு சோழர் காலத்தில் உருப்பெற்றன என்பதையும் பெரிய புராணம் நன்கு காட்டுகிறது. இங்ஙனம் பல நூற்றாண்டுகளாக வளர்ச்சியடைந்து வந்த கருத்துக்களே, 13ஆம் நூற்றாண்டில் தோன்றிய சிவஞான போதம் முதலிய சைவ சித்தாந்த நூல்களாக வெளிவந்தன என்னலாம்.

---

*1. என்னுடைய M.O.L. ஆராய்ச்சி நூலான பெரிய புராண ஆராய்ச்சியைக் காண்க.*

# 2. பல்லவர்க்கு முற்பட்ட சைவ சமயம்

(கி.பி. 300க்கு முன்)

## *இப் பகுதியில் நமது நோக்கம்*

**வ**ரலாற்று ஆசிரியர் கணக்குப்படி பல்லவர் காலம் ஏறத்தாழக் கி.பி. 300-900 ஆகும்;[1] பிற்பட்ட சோழர் காலம் கி.பி. 900-1300 ஆகும்.[2] ஆதலின் நாம் முதலில் பல்லவர் காலச் சைவ சமய வளர்ச்சியை ஆராய வேண்டும். ஆயின், அதனை ஆராய்வதற்குமுன், பல்லவர்க்கு முற்பட்ட தமிழகத்தில் சைவ சமயம் எவ்வாறு இருந்தது என்பதை அறியக் கடமைப்பட்டவராவோம். அஃது அறியப்படின், அது பல்லவர் காலத்தில் எப்படி வளர்ச்சியுற்றது என்பதைப் பல்லவர் காலச் சான்றுகளைக் கொண்டு அறியலாம்.

## *பல்லவர்க்கு முற்பட்ட தமிழ் நூல்கள் எவை?*

சமுத்திரகுப்தன் தட்சிணத்தின்மீது படையெடுத்து வந்தபோது, காஞ்சியை விஷ்ணுகோபன் என்ற பல்லவன் ஆண்டுவந்தான் என்று அக் குப்தனது அலகாபாத் தூண் கல்வெட்டுக் கூறுகிறது.[3] அக் காலம் ஏறத்தாழக் கி.பி. 340-350 என்னலாம்.[4] இதனால் கி.பி. 4-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் தமிழகத்தின் வட பகுதி ஆகிய தொண்டைமண்டலம் பல்லவர் என்ற அரச மரபினர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என்பது திட்டமாகத் தெரிகிறது.

காஞ்சியிலிருந்து முதன் முதல் பட்டயம் விடுத்த சிவஸ்கந்தவர்மன் என்ற முதற் பல்லவன், ஏறத்தாழக் கி.பி. 3-ஆம் நூற்றாண்டினன் என்று ஒருசார் ஆராய்ச்சியாளர் கூறுவர்;[5] பிறிதொரு சார் ஆராய்ச்சியாளர் வேறு சில காரணங்களைக் காட்டி, 'சிவஸ்கந்தவர்மனே காஞ்சியைக் கைப்பற்றிய குமாரவிஷ்ணு ஆவன்; அவன் காலம் ஏறத்தாழக் கி.பி. 325-350' என்பர்.[6] வேறொரு சார் ஆராய்ச்சியாளர் வேறு சில காரணங்களைக் காட்டிச் சிவஸ்கந்தவர்மன் காலம் ஏறக்குறையக் கி.பி. 300-325 என்பர்.[7] இவை அனைத்தையும் காண, தொண்டை நாட்டில் பல்லவர் ஆட்சி ஏறத்தாழக் கி.பி.300-இல் தொடங்கியிருக்கலாம் என்று கொள்வது பொருத்தமாகும்.

ஏறத்தாழக் கி.பி. 300-இல் தொண்டைநாட்டைக் கைப்பற்றி ஆளத் தொடங்கிய பல்லவர், கி.பி. 900-ம் வரை தென்னிந்தியாவில் பேரரசராக இருந்தனர், சேர-சோழ-பாண்டியருடன் போரிட்டனர்

என்பன வரலாறு கண்ட உண்மை. ஏறத்தாழக் கி.பி.575 முதல் 900 வரை அவர்தம் பேரரசு கிருஷ்ணை முதல் காவிரி வரை பரவியிருந்தது.[8] இங்ஙனம் பல நூற்றாண்டுகளாகத் தமிழகத்தில் இருந்த பல்லவரைப்பற்றி மிகப் பழைய தமிழ் நூல்கள் என்று கருதப்படும் தொல்காப்பியம், புறநானூறு முதலிய எட்டுத் தொகை, பத்துப்பாட்டு என்பனவற்றில் ஒரு குறிப்பும் காணப்படவில்லை.[9] சிலப்பதிகாரம் மணிமேகலை என்னும் இரண்டு காவியங்களும் காஞ்சியைப் பற்றிப் பல இடங்களில் குறித்தாலும், பல்லவ அரசர் ஒருவரைப் பற்றியேனும் குறிப்பிடாதது கவனிக்கத் தக்கது. ஆதலின் அவை இரண்டும் பல்லவர்க்கு முற்பட்ட நூல்கள் ஆகும்.[10] எனவே, மேற்சொன்ன தமிழ் நூல்கள் அனைத்தும் கி.பி. 300க்கு முற்பட்டனவாகக் கொள்ளலாம். இனி அந் நூல்களில் கூறப்பட்டுள்ள சைவ சமயக் குறிப்புகளைக் காண்போம்.

## தொல்காப்பியம்

பழைய இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில், முருகன் மலைநாட்டவராலும், திருமால் காட்டுநில மக்களாலும் வழிபடப்பட்டனர் என்னும் செய்தி காணப்படுகிறது.[11] கொற்றவை வழிபாடும் இருந்ததாகத் தெரிகிறது.[12] ஆயின், சிவனைப் பற்றிய குறிப்புகள் தொல்காப்பியத்தில் வெளிப்படையாகக் காணப்படவில்லை. 'தெய்வங்கட்குரிய படிமைகளை (Images)க் காக்கப் பிரிவு கூறப்பட்டுள்ளது. தெய்வங்கட்குப் பூசையும் விழாக்களும் நடைபெற்றன'[13] என்று தொல்காப்பிய உரையாசிரியருள் காலத்தாற் முற்பட்ட **இளம்பூரணர்** கூறுவதால், தொல்காப்பியர் காலத்தில் கோயில்கள்-விக்கிரகங்கள்-அவற்றுக்குப் பூசை விழாக்கள் என்பன இருந்தன என்பது தெரிகிறது.

## தொகை நூல்களிற் சிவனைக் குறிக்கும் பெயர்கள்

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்னும் தொகை நூல்களில், "சிவன்" என்னும் பெயர் காணப்படவில்லை. ஆயின், அக் கடவுள்-தாழ்சடை பொலிந்த அருந்தவத்தோன், முக்கட்செல்வன், கறைமிடற்று அண்ணல், நீலமணிமிடற்று அண்ணல், முதுமுதல்வன்,[14] நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன், மழைதலை வைத்தவர்,[15] காய்கடவுள், பைங்கட் பார்ப்பான், புங்கம் ஊர்பவன், மறுமிடற்று அண்ணல், சலதாரி,[16] முக்கணான், ஈர்ஞ்சடை அந்தணன், ஆலமர் செல்வன், கணிச்சியோன்[17] முதலிய பல பெயர்களாற் குறிக்கப்பட்டுள்ளான்.

## தொகை நூல்களில் சிவனைப் பற்றிய குறிப்புகள்

சிவபெருமான் தாழ்ந்த-நீண்ட சடையுடையவன்,[18] சடையிலும், மார்பிலும் கொன்றைமாலை அணிந்தவன்,[19] முடிமேல் பிறைச் சந்திரனை அணிந்தவன்;[20] முடிமேல் மேகத்தை வைத்தவன்;[21] முடிமேல் கங்கையைத் தாங்கியவன்;[22] மூன்று கண்களை உடையவன்,[23] வேதத்தை வாயில் உடையவன்; அதனை அந்தணர்க்குச் சொன்னவன்;[24] கழுத்தில் விஷக் கறை உடையவன்;[25] கையில் மழுப்படை உடையவன்;[26] கையில் கபாலம் ஏந்தியவன்;[27] எட்டுக் கைகளை உடையவன்;[28] புலித்தோல் ஆடையன்; [29] உமாதேவியை ஒரு பாதியாகக் கொண்டவன்;[30] ரிஷபத்தை வாகனமாகவும் கொடியாகவும் பெற்றவன்;[31] ஆலமரத்தின் அடியில் இருப்பவன்;[32] அரிய தவம் செய்பவன்;[33] உயிர்கட்குப் பாதுகாவலன்;[34] அழித்தற் கடவுளும் அவனே;[35] அவனுக்குக் கோயில் இருந்தது;[36] அவன் முப்புரங்களை எரித்தவன்;[37] எரித்த அச் சாம்பலைப் பூசிக்கொண்டவன்;[38] சிவன் பல வடிவங்களைக் காட்டியும் ஒடுக்கியும் எல்லாவற்றையும் அழித்து நின்று ஆடுபவன். அக் கூத்துக் **'கொடுகொட்டி'** எனப்படும். அவன் முப்புரங்களை அழித்து, அசுரர் வெந்து வீழ்ந்த நீற்றை அணிந்து ஆடுங் கூத்துப் 'பாண்டரங்கம்' எனப்படும்.

அக் கடவுள் புலியைக் கொன்று அதன் தோலை உரித்து, கொன்றை மாலை தோளிலே அசையப் பிரமன் தலை ஒன்றை ஏந்தி ஆடுங் கூத்துக் **'காபாலம்'** எனப்படும்.[39] சிவபெருமான் உமையம்மையுடன் இமயமலை மீதுளன். இராவணன் அம் மலையைப் பெயர்க்க முயன்று அல்லற்பட்டான்.[40] சிவபெருமான் காத்தற்றொழிலை மேற்கொள்ளும் பொழுது ஒரு வடிவைக் கொண்டு அடியவரிடம் பொருந்துவான்.[41]

## சிலப்பதிகாரம், மணிமேகலை தரும் குறிப்புகள்

சிலப்பதிகாரம் மணிமேகலை என்னும் இரண்டு நூல்களிலும் பத்துப் பாட்டுக்களுள் ஒன்றான மதுரைக் காஞ்சியிலும் தெய்வங்கள் வரிசையில் சிவபிரான் முதலிடம் பெற்றுள்ளான்.[42] சிவன், திருமால், பலதேவன், முருகன் முதலிய தெய்வங்கட்கு நாடோறும் அந்தி நேரத்தில் பூசை செய்யப்பட்டது.[43] சேரன் செங்குட்டுவன் சிவன் அருளால் பிறந்தவன்;[44] சிவபூசை செய்தவன்.[45] அவனது அவையில் சேரநாட்டுச் சாக்கையன் ஒருவன் சிவபிரான் ஆடிய 'கொடுகொட்டி' என்ற கூத்தை ஆடிக் காட்டினான்.[46]

இந்த நூல்களிலும் 'சிவன்' என்னும் சொல் இல்லை. ஆயின், 'சைவம்' என்னும் சொல் மணிமேகலையில் காணப்படுகிறது. வஞ்சி மாநகரில் இருந்த மதவாதிகள் பலருள், **சைவவாதி** ஒருவன். கோவலன் மகளான மணிமேகலை, ஒவ்வொரு மதவாதியிடமும் சென்று, அவன் மதக் கொள்கைகளையும் கடவுள் தன்மையையும் விசாரித்தாள். அவள் சைவ வாதியிடம் சென்று, 'உன் கடவுள் எத்தகையது?' என்று கேட்டாள். அவன், "என் இறைவன் இருசுடர், இயமானன், ஐம்பூதம் என்ற எட்டினையும் உயிராகவும் உடம்பாகவும் உடையவன்; கலைகளை உருவாகவுடையவன்; உலகங்களையும் உயிர்களையும் படைத்து விளையாடுபவன்; அவற்றை அழித்து உயிர்களின் களைப்பைப் போக்குபவன்; தன்னைத் தவிரப் பெரியோன் ஒருவனைப் பெற்றிராதவன். அவன் ஈசானன்," என்று பதில் கூறினான்.[47]

## *முருக வழிபாடு*

சைவத்தின் ஒரு பிரிவாகிய முருக வழிபாடும் (கௌமாரம்) பழைய நூல்களிற் கூறப்பட்டுள்ளது. பரிபாடலிலும் கலித் தொகையிலும் முருகன் சிவகுமாரன் என்று குறிக்கப்பட்டுள்ளான்.[48] அவன் கார்த்திகைப் பெண்கள் அறுவருக்கும் பிறந்தவன் என்று பரிபாடல் கூறுகிறது.[49] அவன், சிவகுமாரன், கொற்றவை மகன், உமையின் மகன், கார்த்திகைப் பெண்கள் அறுவர்க்கும் பிறந்தவன் என்று திருமுருகாற்றுப்படை கூறுகிறது.[50] திருமுருகாற்றுப் படையில் ஆறு இடங்கள் முருகனுக்கு உகந்த இடங்களாகக் கூறப்பட்டுள்ளன. அவை திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்), திரு ஆவினன்குடி (பழநி); திருவேரகம் (சுவாமிமலை) பழமுதிர் சோலை (அழகர் மலை), மலைகள் என்பன. முருக வழிபாட்டைப் பற்றிய பழந்தமிழ்ச் செய்திகளும் 48 வயது வரை பிரமசரிய விரதம் காக்கும் அந்தணருடைய வழிபாட்டுச் செய்திகளும் திருமுருகாற்றுப்படையுள் கூறப்பட்டுள்ள.[51] முருக வழிபாட்டுச் செய்திகள் சிலப்பதிகாரத்தும் காணப்படுகின்றன.[52]

பரிபாடலில் முருகனைப் பற்றி 8 பாடல்கள் உள்ளன. அவை முருகனைப் பற்றிய கீழ்வரும் விவரங்களைத் தருகின்றன: முருகன் சூரபத்மனை வென்றவன்; ஆறு தலைகளையும் பன்னிரண்டு கைகளையும் உடையவன்; தேவசேனாதிபதி;[53] முருகன் திரிமூர்த்திகட்கும் முதல்வன்;[54] வள்ளி தெய்வானையர்க்குக் கணவன்;[55] முருகர்க்குச் சிறந்த கோயில் திருப்பரங்குன்றம் மலைமீது

இருந்தது. அக்கோயிலில் அழகிய மண்டபம் இருந்தது. அதன் சுவர்களிலும் மேற்கூரையிலும் பல நிகழ்ச்சிகளைக் குறிக்கும் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. அவற்றுள் இரதி, மன்மதன், பூனை உருவாகக் கொண்ட இந்திரன், அகலிகை, கௌதமன் முதலியோரைக் குறிக்கும் ஓவியங்கள் குறிப்பிடத் தக்கன.[56] முருகனைத் தரிசித்து வரம்பெறப் பாண்டியன் முதல் சாதாரண மக்கள் வரை எல்லோரும் சென்று வந்தனர்.[57] கோயிலில் ஆடல் பாடல்கள் நிகழ்ந்தன.[58] பண் அமைந்த பாடல்களைப் பாடி மக்கள் முருகனை வழிபட்டனர்.[59] "திருப்பரங்குன்றத்து அடியில் வாழ மறு பிறவியிலும் அருள்வாயாக!"[60], "பொன், பொருள், போகம் ஆகிய மூன்றையும் தருமாறு நாங்கள் உன்னை வேண்டோம்; அன்பு, அருள், அறம் எனும் மூன்றையுமே விரும்புகிறோம்,"[61] "பிறவித் துன்பம் அறுதலை வேண்டுகின்றோம்,"[62] "நின் அடியில் உறைதலையே விரும்புகின்றோம்"[63] என்பன நன் மக்கள் வேண்டுகோளாகும்.

### கொற்றவை வணக்கம்

கொற்றவை, தொல்காப்பியத்தில் தெய்வமாகக் குறிக்கப் பட்டுள்ளாள். அவளை வேடர்கள் தொழுத விவரங்களைச் சிலப்பதிகாரத்திற் பரக்கக் காணலாம்.[64] அவள் அந் நூலில் கவுரி, சமரி, சூலி, நீலி, மாலின் தங்கை, நெற்றிக் கண்ணை உடையவள் என்றெல்லாம் பாராட்டப்பட்டுள்ளாள்.[65] கொற்றவை நஞ்சுண்டும் சாகாமல் இருப்பவள்.[66] அவள் எல்லாம் உணர்ந்தவள்; பெரிய காட்டிடை வாழ்பவள்; பேய்க் கணங்களை உடையவள்; 'கொற்றி' எனவும் பட்டனள்.[67] முதலில் பாலை நிலத் தெய்வமாக இருந்து வேடர் தொழுகைக்கு உரியளாயிருந்த கொற்றவை, பிற திணைக்குரிய தெய்வங்கள் நகரங்களிற் குடி கொண்டாற்போல, நகரங்களில் கோயில் கொண்டாள். மதுரை நகர மேற்கு வாயிலில் கொற்றவைக்குக் கோயில் இருந்தது. கண்ணகி கணவனை இழந்த பின், நகரை விட்டுப் போகையில் கொற்றவை கோயிலில் தன் வளையல்களை உடைத்தாள் என்று சிலப்பதிகாரம் செப்புகிறது.[68] பிரிந்தவர் மீண்டுவந்து சேர்ந்தால், பின் பிரியாது உறைய வேண்டும் என்று கொற்றவையை வரம் வேண்டல் மரபு; கையிற் காப்பு நூற்கட்டி நோன்பிருத்தல் வழக்கம்.[69] இக்கொற்றவை வணக்கமே நாளடைவில் சக்தி வணக்கமாக மாறியது. சக்தியையே முழு முதல் கடவுளாகக் கொண்டதால், 'வாமம்' (சாக்தேயம்) என்று பெயர் பெற்றுச் சைவ சமயப் பிரிவுகளுள் ஒன்றாகக் கருதப்பட்டது.

## வைணவ சமயம்

பல்லவர்க்கு முற்பட்ட தமிழகத்தில் சைவத்துடன் வைணவம், பௌத்தம், சமணம் என்ற சமயங்களும் நன்னிலையில் இருந்தன என்பது பண்டைத் தமிழ் நூல்களால் தெரிகிறது. மாயோன், பலராமன் ஆகிய இருவருக்கும் காவிரிப்பூம்பட்டினம் போன்ற பெரிய நகரங்களில் கோயில்கள் இருந்தன என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.[70] மாயோனையும் பலராமனையும் முறையே வெற்றிக்கும் வலிமைக்கும் நக்கீரர் புறநானூற்றிற் குறித்துள்ளார்.[71] அகநானூறு முதலிய தொகை நூல்களிலும் இராமன், கண்ணனைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அழகர்மலையில் கண்ணன், பலராமன் உருவச் சிலைகள் வழிப்படப்பட்டன.[72] வாசுதேவனான கண்ணனைப் பலராமனுடன் சேர்த்து வழிபடும் வழக்கு, வட இந்தியாவிலும் அப் பண்டைக் காலத்தில் இருந்தது என்பது இலக்கியங்களாலும் கி.மு. முதல் இரண்டு நூற்றாண்டுக் கல்வெட்டுக்களாலும் தெரிகிறது.[73] மாயோனைப் பற்றிய பல விவரங்கள் சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவையுட் காணலாம். அதன்கண் திருமாலின் இராமாவதாரம், கிருஷ்ணாவதாரம், திரு விக்கிரம அவதாரம் முதலியன குறிக்கப்பட்டுள்ளன.[74] திருவேங்கடம், திருவரங்கம், அழகர்மலை என்பன சிறந்த வைணவத் தலங்களாகக் குறிக்கப்பட்டுள்ளன.[75] பரிபாடலில் திருமாலைப்பற்றி 6 பாடல்கள் உள்ளன.[76] வஞ்சி மாநகரிற் பல சமயவாதிகள் இருந்தனர். அவருள் வைணவ வாதி ஒருவன்.[77] இவ் விவரங்களை நோக்கப் பண்டைத் தமிழகத்தில் வைணவ சமயமும் ஓரளவு பரவியிருந்தமை நன்கறியலாம்.

## சைவமும் வைணவமும்

பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறனை நக்கீரர் பாடிய ஒரு செய்யுளில், அவனைத் திருமால், பலராமன், சிவன், முருகன் என்னும் நால்வருடனும் ஒப்பிட்டுப் பாடியுள்ளார். நீ சினத்தில் சிவனையும், வலிமையில் பலராமனையும், பகைவரைக் கொல்வதில் மாயோனையும், கருதியதை முடிப்பதில் முருகனையும் ஒப்பாவாய்,[78] 'வெள்ளை,' 'காரி', 'குரால்,' 'சேய்' என்று நிறம்பற்றி எருதுகட்கு இவ்வாறு பெயர் கூறி, அவற்றுக்கு முறையே பலராமன், மாயோன், முக்கண்ணன், முருகன் என்னும் கடவுளையும், அவர்களுடைய நிறம், மாலை, உடை முதலியவற்றையும் பொருந்த வைத்துக் கலித்தொகையில் உவமை கூறப்பட்டுள்ளது.[79] பரிபாடலில் திருமாலைப்பாடிய கடுவன் இள எயினனார் என்ற புலவரே, முருகனையும் வாயார வாழ்த்தியுள்ளார்.[80] கேசவன், அச்சுதன் என்ற

வைணவப் பெயர்களைக் கொண்ட புலவர் இருவர் முருகனைப் பாடியுள்ளனர்.[81] பாரதம் பாடிய பெருந்தேவனார் என்ற புலவர், அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு என்னும் மூன்றிலும் கடவுள் வாழ்த்தாகச் சிவனையும், குறுந்தொகையில் முருகனையும், நற்றிணையில் திருமாலையும் பாடியுள்ளார். சேரன் செங்குட்டுவன் வடநாட்டு யாத்திரைக்குப் புறப்படுமுன், சிவபூசை செய்து சிவப் பிரசாதத்தைத் தன் முடியில் தாங்கியிருந்தான்; பின்னர் வந்த திருமால் பிரசாதத்தைத் தன் தோளில் தாங்கினான் என்று சிலப்பதிகாரம் செப்புகிறது.[82] அதே நூலில் சிவனுக்குரிய ஐந்தெழுத்தும் திருமாலுக்குரிய எட்டெழுத்தும் சமநிலையில் மதிக்கும்படி பக்தனுக்குக் கூறப்பட்டுள்ளது.[83] இவற்றை நோக்க, இந் நான்கு கடவுளரும் தமிழ் மக்களால் போற்றப்பட்டனர் என்பதும், சைவ வைணவ வேறுபாடு பாராட்டப்படவில்லை என்பதும் அறியப்படுகின்றன.

## *இதிகாசங்களில் கோயில்கள்*

கோயில்கள் சம்பந்தமாகப் பழந்தமிழ் நூல்களைப் பார்ப்பதற்குமுன் தமிழகத்துக் கோயில்களைப்பற்றி வடமொழி இராமாயணத்தும் மகாபாரதத்தும் கூறப்பட்டுள்ள செய்திகளைக் காணுதல் நல்லது. அவ் வடமொழி நூல்களின் காலங்களைப்பற்றி மாக்டொனல், வின்டர்நிட்ஸ், மாக்ஸ்முல்லர் போன்ற ஆராய்ச்சியறிஞர் பலவாறு கூறியிருப்பினும், அக் கால எல்லை பல்லவர்க்கு (கி.பி.300-க்கு) முற்பட்டது என்பதில் ஐயமில்லை.

வால்மீகி தமது இராமாயணத்தில், 'சுவேதாரண்யத்தில் ருத்திரனால் எரிக்கப்பட்டு யமன் மாய்ந்தாற் போலக் கரன் இராமனுடைய எரியம்புகளால் தாக்கப்பட்டு இறந்தான்' என்று கூறியுள்ளார். இதற்கு உரை வகுத்த தீர்த்தர் என்பவர், 'பழைய காவிரிப்பூம்பட்டினத்திற்கு அருகில் உள்ள திருவெண்காடே சுவேதாரண்யம் என்பது' என்று பொருள் கூறினார். திருவெண்காட்டுத் தல புராணத்தும் அத் தலத்தில் சிவன் யமனைக் கொன்ற செய்தி கூறப்பட்டுள்ளது. கி.பி.7-ஆம் நூற்றாண்டில் இருந்த திருஞானசம்பந்தரும் இச் செய்தியைத் தம் பதிகத்திற் பாடியுள்ளார்.[84] இராமன் இராமேசுவரத்தில் சிவபூசை செய்தனன் என்றும் இராமாயணம் கூறுகிறது.

வியாச பாரதத்தில், 'அர்ச்சுனன் தீர்த்த யாத்திரையாகத் தெற்கே வந்து காவிரியில் நீராடினான்; பிறகு கடற்கரை வழியே பல புண்ணிய

தீர்த்தங்களையும் **கோயில்களையும்** தரிசித்து, மணலூரை அடைந்தான்' என்பது காணப்படுகிறது.[85] அர்ச்சுனன் தீர்த்த யாத்திரையாகத் தெற்கே வந்து பாண்டியன் மகளை மணக்க விரும்பியபோது பாண்டியன் அவனைப் பார்த்து, ''என் முன்னோர் **சிவனைப் பூசித்து** அவன் அருளால் ஒவ்வொரு குழந்தையைப் பெற்றனர். எனக்கும் ஒரே குழந்தைதான் பிறந்தது. அவளே நீ மணக்க விரும்பும் பெண்,''[86] என்றான். அப் பழைய காலத்திலேயே காவிரி, பொருநையாறுகள் சிறந்த தீர்த்தங்களாகக் கருதப்பட்டன; காவிரியின் இருகரைகளிலும் சோலைகள் இருந்தன; அங்கே இருடிகள், வேத வேதாந்தங்களில் வல்ல அந்தணர் ஆசிரமங்கள் இருந்தன என்பன மகா பாரதத்துள் குறிக்கப்பட்டுள.[87]

சிவன், முருகன், திருமால், பலராமன், கொற்றவை முதலிய தெய்வங்கட்குக் காவிரிப்பூம் பட்டினம் மதுரை போன்ற பெரிய நகரங்களில் கோயில்கள் இருந்தமை முன்னரே கூறப்பட்டது. நீல நாகம் நல்கிய கலிங்கத்தை ஆய்வேள், ஆல மரத்தடியில் இருந்த சிவனுக்கு அளித்தான் என்று கூறப்படுவதால், ஆய் நாட்டில் சிவன் கோவில் இருந்தமை அறியலாம்.[88] தொண்டை நாட்டுக் குளங்கள் சிலவற்றில் தாமரை மலர்கள் பூத்திருக்கும். அவை தெய்வங்கட் குரியவை,,[89] எனவரும் பெரும்பாண் ஆற்றுப்படை குறிப்பினால், அக் குளங்களைச் சார்ந்த ஊர்களிற் கோயில்கள் இருந்தமையும் பெறப்படும். தொண்டை நாட்டில் காஞ்சிபுரத்தில் திருவெஃகா[90] என்ற பெருமாள் கோயில் இருந்தது. அக் கோயிலில் திருமால் பாம்பணையில் பள்ளிகொண்டுள்ளான்.[91] கோயில்களை அடுத்துச் சோலைகள் இருந்தன; கோவில்கட்குச் சிறுவர் முதல் பெரியவர் ஈறாக அனைவரும் சென்று வழிபட்டனர்.[92] கரிகாற்சோழன் உறையூரைப் பெரிதாக அமைத்துக் **கோயில்களை முன்போல** நிலைநிறுத்தினான்.[93]

வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள செங்கம் என்பது பழைய காலத்தில் செங்கண்மா எனப்பட்டது. அதனை ஆண்ட நன்னனது நவிரம் என்ற மலையில், காரியுண்டிக் கடவுள் எனப்பட்ட சிவபிரான் கோவில் இருந்தது.[94] செங்கண்மா என்னும் ஊர், அங்குள்ள சிவன் கோவில் கல் வெட்டுக்களில், கண்ணை' எனப்படுகிறது. கண்ணை என்பது கி.பி.7ஆம் நூற்றாண்டினரான திருநாவுக்கரசரால் பாடப்பட்டுள்ளது.

கி.பி. 7ஆம் நூற்றாண்டினரான திருஞானசம்பந்தர் பாடிய க்ஷேத்திரக் கோவையில், (7ஆம் பாட்டில்) 'மயிண்டீச்சுரம்' என்பது காணப்படுகிறது. இது சேலம் மாவட்டம் தர்மபுரி தாலுகா-அதமன்

கோட்டையில் உள்ள சிவன் கோயிலின் பழைய பெயர். அக் கோவிற் கல்வெட்டுக்கள் அக் கோயில் மூர்த்தியை 'மயிந்தீசுவரம் உடையார்' என்று வழங்கியுள்ளன. அக்கோவிலையுடைய அதமன் கோட்டை, அதியமான் கோட்டை என்பதன் மரூஉவாகும். அதியமான் பல்லவர்க்கு முற்பட்டவன்; ஔவைக்கு நெல்லிக்கனி கொடுத்தவன். அதனால் அவர் மகிழ்ந்து,

பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீல மணிமிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே[95]

என அவனை வாழ்த்தியுள்ளார். இவ் வாழ்த்துடன் அவன் கோட்டைக்குள் சிவன் கோயில் உண்மையை இணைத்துப் பார்ப்பின், அக்கோயில் ஔவையார் காலத்ததாக இருக்கலாம் என்று கூறுதல் பொருத்தமாகும்.[96]

தமிழரசர், கோயில் மூர்த்தங்கட்கு நகைகள் முதலியன செய்தளித்தனர்.[97] பண்டைக்காலக் கோயில்கள், கோயில், நியமம், நகரம், கோட்டம், பள்ளி எனப் பலவாறு பெயர் பெற்றிருந்தன.[98] சமணர், பௌத்தர் கோயில்கள் பள்ளி என்றும் வழங்கப்பட்டன.[99]

## *கோயில் அமைப்பு*

கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த பல்லவ மகேந்திரவர்மன் அமைத்த மண்டபப்பட்டுக் குடைவரைக் கோயிலில் (Rock-Cut Temple) அவன் வெட்டுவித்த கல்வெட்டு ஒன்று இருக்கிறது. "அழியத் தக்க மண், மரம், செங்கல், சுண்ணாம்பு, உலோகம் இவை இல்லாமல் விசித்திர சித்தன் இக்கோயிலை மும்மூர்த்திகட்கு அமைத்தான்," என்பது அக் கல்வெட்டு வாசகம். இதனை நன்கு ஆராயின், (1) மகேந்திரனுக்கு முன்பே தமிழகத்திற் கோயில்கள் இருந்தன என்பதும், (2)அவை அழியத்தக்க மண், மரம், உலோகம், செங்கல், சுண்ணாம்பு இவற்றால் ஆனவை என்பதும், (3) மகேந்திரனே கோயில்களைப் பாறையிற் குடைவித்தான் என்பதும் தெளிவாகின்றன.[100]

பண்டைக்காலக் கோயில்கள் அழியத்தக்க பொருள்களால் ஆனவை என்பதை,

காடமர் செல்வி கழிபெரும் கோட்டமும்
குறியவும் நெடியவும் குன்றுகண் டன்ன
**சுடுமண்** ஓங்கிய நெடுநிலைக் கோட்டமும்[101]

என்னும் மணிமேகலை அடிகள் உறுதிப் படுத்துகின்றன. கோயில் என்னும் சொல் அக் காலத்தில் கோயிலையும் அரசன் அரண்மனையையும் குறித்தது. இதனால் அரசன் வாழ்ந்த அரண்மனையும் கோயிலும் பல பகுதிகளில் ஒத்திருந்தன. ஒன்றின் சிறப்புப் பெரும்பாலும் மற்றொன்றைக் குறிக்கும் எனக் கோடல் தவறாகாது. இரண்டும் சுற்று மதில்களை உடையவை; உயர்ந்த வாயில்களை உடையவை; வாயில்களின்மீது உயர்ந்த கோபுரங்கள் (மண்ணீடுகள்) உடையவை.[102] வாயில்கட்குத் துருப்பிடியாதபடி செந்நிறம் பூசப்பட்ட இரும்புக் கதவுகள் பொருத்தப்பட்டிருந்தன.[103] மாடங்கள் உயர்ந்து சாந்து பூசப் பெற்றவை.[104] கோயில்களின் மேற் கூரை சாந்து வேயப்பட்டிருந்தது. சில, தாமிரம் வெள்ளி முதலிய உலோகங்களாலான கூரைகளைப் பெற்றிருந்திருக்கலாம். மதுரையில் உள்ள சிவன் கோயிலில் வெள்ளியம்பலம் உண்டு. அது புறநானூற்றிற் குறிக்கப்பட்டுள்ளது. அச் சபையில் இறந்த காரணம் பற்றிப் பாண்டியன் ஒருவன், 'வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி'[105] எனப் பெயர் பெற்றான். வெள்ளியம்பலம் இருந்த தெருவில் வாழ்ந்தவராதல் பற்றி 'வெள்ளி வீதியார்' என்று ஒரு பெண்பாற் புலவர் பெயர் பெற்றனராகலாம்,[106] என்று நற்றிணைப் பதிப்பாசிரியர் ஊகித்தல் கவனிக்கத் தகும். திருப்பரங்குன்றத்துக் கோயிலில் ஓவியங்கள் தீட்டப்பெற்ற மண்டபம் ஒன்று இருந்தது என்பது முன்னர்க் கூறப்பட்டதன்றோ? அத்தகைய மண்டபங்கள் சில கோயில்களிலேனும் இருந்தன எனக் கோடல் தவறாகாது.

### *லிங்க வழிபாடு*

லிங்க வழிபாடு வேத காலத்திற்கு முற்பட்ட சிந்து வெளி மக்களிடம் இருந்தது;[107] வேதகாலத்திற் பழங்குடிகளிடம் இருந்தது; இதிகாச காலத்தில் எல்லோரிடமும் பரவியது;[108] சிவபெருமானான மகா தேவனைக் குறிக்கும் மூர்த்தமாகக் கருதப்பட்டது.[109] தென் இந்தியாவில் வேதகாலத்திற்கு முற்பட்ட கற்காலத்திலேயே லிங்கங்கள் இருந்தன.[110] இதிகாச காலத்தில் இராமனால் இராமேஸ்வரத்தில் லிங்கம் வழிபடப்பட்டது என்று இராமாயணம் கூறுகிறது. குடிமல்லம், களத்தூர், குடுமியான்மலை.[111] என்னும் இடங்களில் உள்ள பழைய கோவில்களில் உள்ள லிங்கங்கள் கி.மு.2-ஆம் நூற்றாண்டின என்று ஆராய்ச்சியாளர் கூறியுள்ளனர்.[112]

லிங்கம்-பீடம் என்பன உலகத் தோற்றத்தைக் குறிக்கும் சிவ-சக்திகளின் குறிகள் என்று வடமொழிப் புராணங்களும், பிற வடமொழி நூல்களும் விளக்கமாகக் கூறுகின்றன.[113] லிங்க வணக்கம்

கற்கால நாகரிகத்தைச் சேர்ந்தது.[114] அது அநாரியர் வழிபாடு; வேதகாலத்திற்கு முற்பட்டது. உருத்திரனைப் பற்றிக் கூறும் இடங்களில் லிங்கம் கூறப்படவில்லை. எனவே, லிங்கம் உருத்திரனைக் குறியாது; வேதங்களிற் கூறப்பட்டுள்ள வேறு எத்தெய்வத்தையும் குறியாது. கற்காலப் பொருள்களில் லிங்கங்களும் கிடைத்துள்ளன.[115] டாக்டர் R.G. பந்தர்க்கரும் இதே கருத்தினைக் கூறியுள்ளார்.[116] பீடம் வேள்விக் குண்டத்தையும் லிங்கம் அனற்பிழம்பையும் குறிக்கின்றன என்று கூறுவாரும் உளர்.[117]

லிங்கம் என்ற சொல் பண்டை நூல்களில் இல்லை. எனினும் தமிழகத்தைச் சேர்ந்த குடிமல்லம், களத்தூர், குடுமியான் மலை என்னும் இடங்களில் கி.பி.2-ஆம் நூற்றாண்டிலேயே லிங்கங்கள் இருந்தன என்பது முன்னரே கூறப்பட்டதால், லிங்க வழிபாடு பல்லவர்க்கு முற்பட்ட தமிழகத்தில் இருந்தது என்பதை உணரலாம். கல் லிங்கத்தைப்போல மரத்தூண்கள் பலர் கூடும் பொது இடங்களில் (அம்பலங்களில்) பல ஊர்களில் இருந்தன. ஒவ்வொன்றிலும் தெய்வவுருவம் எழுதப்பட்டிருந்தது. மக்கள் அத் தூண்மீது மலர்களைச் சூட்டினர்; அதன் அருகில் அவியா விளக்கு ஏற்றி வைத்தனர்.[118] அங்குப் பலவகை வாத்தியங்கள் முழங்கப்பட்டன.[119] இந்த மரத் தூண்கள் அழிந்துபட்டன. குடிமல்லம் முதலிய இடங்களில் உள்ள பீடமற்ற லிங்க வடிவமான கற்றூண்களைப் போலவே இம் மரத் தூண்களும் இருந்தனவோ, என்னவோ தெரியவில்லை. பீடமற்ற பழைய கல் லிங்கங்கள் இரண்டு காஞ்சி ஏகாம்பரேசுவரர் கோயிலில் இன்றும் உள்ளன.[120] சிவபிரான் 'ஆலமர் செல்வன்' என்று பழைய நூல்களிற் குறிக்கப்படலால், தட்சிணாமூர்த்தி வடிவமும் பண்டைக் காலத்தில் இருந்திருத்தல் வேண்டும்.

***விழாக்கள்***

1. **கார்த்திகை விழா** - கார்த்திகை மாதக் கார்த்திகையன்று இரவில் தெருக்களில் விளக்கு வைத்து மாலைகளைப் போட்டு மக்கள் விழாக் கொண்டாடினர்.[121] இது இன்று முருகனைப் பற்றியது.

2. **திரு ஆதிரை விழா** - இது 'மார்கழி விழா' என்றும் பெயர் பெறும். சிவபிரான் 'ஆதிரை முதல்வன்' எனப்பட்டான்.[122] இது சிவத் தொடர்பான விழா. இதனை இன்றும் சிதம்பரத்திற் சிறக்கக் காணலாம்.

3. **தை விழா** - தைந்நீராடல்; இஷ்ட தெய்வங்களை வணங்கு தல்.[123] இதுவே பிற்கால மார்கழி நோன்பு என்று அறிஞர் கூறுவர்.[124] அஃதாயின், இது சைவ வைணவர் இருவர்க்கும் உரிய விழாவாகும்.

**4. முருக விழா** - முருகன் கோயில்களில் கொண்டாடப்பட்ட பெரு விழா.[125]

5. மதுரைக் கோயிலில், விழாத் தொடங்கிய ஏழாம் நாள் அந்தியில், மக்கள் தீர்த்தமாடல் மரபு. தெய்வவுருவங்கள் ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டன. அத் தெய்வங்கட்குரிய கொடிகள் எடுத்துவரப்பட்டன. மதுரையில் ஒவ்வொரு கோயிலிலும் விழாக் கொண்டாடப்பட்டது.[126]

இவையன்றிப் பல விழாக்கள் பண்டை நூல்களிற் குறிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தையும் நோக்க, கோயில்களில் விழாக்கள் நடைபெற்றன; திருமேனிகள் ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டன என்பன நன்கறியலாம். இந்திரவிழா காவிரிப்பூம் பட்டினத்தில் 21-நாள் சிறப்பாக நடைபெற்றது; எல்லாக் கோயில்களிலும் பூசைகள் நடந்தன; ஆடல்-பாடல்கள் நிகழ்ந்தன; பல சமயப் பெரியார்கள் தங்கள் மடங்களில் அறிவுரை வழங்கினர் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

## *திருநீறு*

சிவபிரான் முப்புரத்தை எரித்த சாம்பலை அணிந்து ஆடியவன் என்ற கலித்தொகைக் குறிப்பினால்![127] பாண்டரங்கக் கூத்தாடுகையில் சிவன் திருநீறு அணிபவன் என்பதை அக்கால மக்கள் அறிந்திருந்தனர் என்பது தெரிகிறது.[128] மதுரையில் யானை ஒன்று நீறணிந்திருந்ததாகக் கூறப்பட்டுள்ளது.[129]

## *ஐம்படைத் தாலியும் இடப அணியும்*

பழந்தமிழ்ப் பிள்ளைகள் காத்தற் கடவுளான திருமாலின் சங்கு, சக்கரம், கதை, வாள், வில் என்னும் ஐந்தின் வடிவமாக அமைத்து அணியும் அணி **ஐம்படைத் தாலி** எனப்பட்டது.[130] இது போலவே சிவபிரானுடைய மழு, வாள், எருது இவற்றைப் போலப் பொன்னாற் செய்து மக்கள் அணிந்திருந்தனர்.[131]

## *பிரார்த்தனை*

மக்கள் கோயில்களில் வலம் வந்தனர்.[132] பிரார்த்தனை புரிந்தனர். அவர்கள் பிரார்த்தனை விவரங்கள் முன்னரே கூறப்பட்டுள்ளன. கடவுளிடம் வரம் வேண்டிப் பக்தர்கள் கோயிலில் உண்ணாதிருத்தலும் உண்டு.[133]

### மக்கள் கொண்ட சிவனார் பெயர்கள்

இறையனார், உருத்திரன், சத்திநாதன், பெருந்தேவனார், பேரெயில் முறுவலார், வெண்பூதி என்பன சிவபிரானைக் குறிக்கும் பெயர்கள். பெருந்தேவன் என்பது மகாதேவன் என்னும் பெயர்ப் பொருளையுடையது. பேரெயில் முறுவலார் என்பது திரிபுரங்களை முறுவலால் எரித்ததைக் குறிக்கும் பெயர்; வெண்பூதி என்பது திருநீற்றை அணிந்தவர் என்பதைக் குறிக்கும் பெயர்.[134]

### பாடலும் ஆடலும்

குறிஞ்சி முதலிய நிலங்கட்கு உரிய இசைக் கருவிகள் முதலியன வழக்கில் இருந்தன. இந்த நிலத்திற்கு இந்த நேரத்தில் இன்ன பண் வாசிக்கவேண்டும் என்ற வரையறை இருந்தது.[135] பக்தர்கள் கோயில்களில் பண்ணோடு தோத்திரங்களைப் பாடினர்.[136]

குரவைக் கூத்து, துணங்கைக் கூத்து,[137] குடக் கூத்து, சிவபிரான் ஆடிய கொடுகொட்டி, பாண்டரங்கம், காபாலம் என்னும் கூத்து வகைகள், மாதவியாடிய கூத்து வகைகள்,[138] முதலியன அக் கால நடனச் சிறப்பை நன்கு காட்டுவன. ஆடல் மகளிர் ஐந்து வயதுக்கு மேல் ஏழு ஆண்டுகள் ஆடல் பாடல்களிலும் பலவகைக் கலைகளிலும் பயிற்சி பெற்று வந்தனர். ஆடல் - பாடல் கலைகளைக் கற்பிக்கும் ஆடல் ஆசிரியன் அமைதி, இசை ஆசிரியன் அமைதி, மத்தள ஆசிரியன் அமைதி, குழலாசிரியன் அமைதி, யாழ் ஆசிரியன் அமைதி, அரங்கின் அமைதி, அரங்கிற் புகுந்து ஆடும் முறை இவைபற்றி எல்லாம் சிலப்பதிகாரம் விளக்கமாகக் கூறுகிறது.[139] விழாக் காலங்களிலும் பிற காலங்களிலும் ஆடல்-பாடல்கள் நிகழ்ந்தன என்பதற்குச் சிலப்பதிகாரமும் பிற தொகை நூல்களுமே சான்றாகும். சேரன் செங்குட்டுவன் அரண்மனைக்குள் இருந்த அரங்கத்தில் ஏறிச் சாக்கையன் ஒருவன், இமையவன் ஆடிய 'கொட்டிச் சேதம்' என்னும் கூத்தை ஆடிக் காட்டினன் என்பது சிலப்பதிகாரச் செய்தி.[140] இச் சாக்கையர் பண்டைக்கால முதல் பிற்காலச் சோழர்காலம் வரை தமிழகத்தில் கூத்தராயிருந்தனர் என்பதும், அரசர்களிடம் மானியம் பெற்று வாழ்ந்தனர் என்பதும் தெரிகின்றன.[141]

### சமண சமயம்

சந்திர குப்தன் காலத்தில் சமணம் தென்னாடு போந்தது என்பது அறிஞர் கூற்று. அச் சமணம் திகம்பர சமணம் என்பதும் அன்னார் கூற்றாகும். தென்னாட்டில் திகம்பர சமணமே பல நூற்றாண்டுகள்

நிலைத்திருந்தது என்று அவர்கள் கூறுகின்றனர்.[142] காவிரிப்பூம் பட்டினம், காஞ்சி, வஞ்சி, மதுரை என்ற பெரிய நகரங்களில் சமணர் பள்ளிகள் இருந்தன என்பதைச் சிலப்பதிகாரம், மணிமேகலை, மதுரைக் காஞ்சி இவற்றால் அறியலாம். சமண முனிவர் புலால் தின்னாதவர்; பொய் கூறாதவர்; அழுக்காறு, அவா முதலியன இல்லாதவர்; அறநூல் முதலியவற்றை அறிந்தவர்; ஐம்புலன்களை அடக்கியவர். அவர்கள் கோயில் ஸ்ரீ கோயில், நிக்கந்தக் கோட்டம் எனப்பட்டது. அங்கு நல்ல நாட்களில் அசோக மரத்தடியில் சமண இல்லறத்தார் கட்டிவைத்த மேடை மீது ஆகாய சாரிகள் வந்து தங்குவர்.[143] எறும்புக்கும் தீங்குசெய்யலாகாது என்பது சமணர் கொள்கை. சமணர் கடவுள் அருகதேவன்.[144] சமணத் துறவியரும் ஆசிரியரும் தங்கியிருந்த இடம் சமணப்பள்ளி எனப்பட்டது. அப் பள்ளியில் சித்திரங்கள் தீட்டப் பட்டிருந்தன.[145] சமணத் துறவிமார் உண்ணாமையால் வாடிய வயிற்றினர்; நீராடாத மேனியர்; உறியிலே வைத்த குண்டிகை உடையவர்; நுட்பமாகத் திரண்ட பிரம்பை உடையவர்;[146] எறும்பு முதலிய நுண்ணிய உயிர்கள் இறந்துவிடுமோ என்று அஞ்சி மயிற் பீலியால் வழியைத் தூய்மை செய்து நடப்பவர்; உடம்பில் ஆடையே இல்லாதவர்; மலைக் குகைகளிலும் நகரப் பகுதியில் உள்ள பள்ளிகளிலும் தவம் செய்பவர்;[147] ஸ்ராவகர் என்பவர் இல்லறத்தில் உள்ள சமணர்; அங்கங்குச் சென்று அறம் உபதேசிக்கும் சாரணர், ஸ்ராவகர்க்கு அறம் உபதேசித்தலும் உண்டு.[148] கோவலன் ஸ்ராவகநோன்பி; 'அடிகள்' என்றும் கூறப்பட்டான்.[149] ஸ்ராவகர் அறவோர்க்களித்தல், அந்தணர் ஓம்பல், துறவோர்க்கு எதிர்தல் ஆகிய மூன்றும் செய்யக் கடமைப்பட்டவர்.[150] சமணருள் பெண் துறவியரும் இருந்தனர். கவுந்தியடிகளே இதற்குச் சான்றாவார். பெண் துறவிகளும் 'அடிகள்' எனப்பட்டனர். சமண முனிவர்கள் சிறந்த கல்விமான்கள். அவர்கள் தங்கள் சமயத்தைத் தமிழகத்திற் பரப்பி வந்தனர். நிக்கந்தர் என்பதும் திகம்பரர் என்பதும் ஒரே பொருளையுடையன.[151] மணிமேகலையில் நிக்கந்தவாதமே கூறப்பட்டிருத்தலின், **தமிழகத்தில் பல்லவர்க்கு முன் திகம்பர சமணமே இருந்தது** என்பது தெளிவு.[152]

## *பௌத்த சமயம்*

பௌத்த சமயம் ஏறத்தாழ அசோகன் காலத்தில் தென்னாட்டிற் புகுந்தது என்பதை அவனுடைய சிறிய பாறைக் கல்வெட்டுகள் (Minor Rock Ediets) வெளிப்படுத்துகின்றன. காவிரிப்பூம் பட்டினம், வஞ்சி, காஞ்சி, மதுரை என்ற பெரிய நகரங்களில் பௌத்த விகாரங்களும் பள்ளிகளும் இருந்தன என்பது, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய

நூல்களால் அறியலாம். புத்தர் கோயில் 'சேதியம்' எனப்பட்டது. காவிரிப்பூம்பட்டினத்தில் புத்தாலயத்தில் இந்திரனால் நிருமிக்கப்பட்ட ஏழு அரங்குகள் இருந்தன. அவை புத்த சங்கத்தார் இருக்க இடமாக இருந்தவை. சாரணர்கள் அவற்றில் இருந்து பௌத்த ஆகமங்களை உபதேசித்தனர்.[153] மணிமேகலையின் காலத்தில் காஞ்சியில் சோழப் பிரதிநிதியால் ஒரு சேதியம் கட்டப்பட்டது.[154] பள்ளி என்பது புத்த முனிவர் உறைவிடம்.[155]

பௌத்தர்க்கு, **புத்தன்**, அவர் உபதேசித்த **தருமம்** அவர் ஏற்படுத்திய **சங்கம்** என்பன சிறந்தன. பௌத்த சங்கத்தார் துறவிகள். அவருள் ஆண் துறவிகள் 'பிக்ஷுக்கள்' என்றும், பெண் துறவிகள் 'பிக்ஷுணிகள்' என்றும் பெயர் பெற்றனர். மணிமேகலை காவியத்திற் கூறப்படும் அறவணவடிகள் பிக்ஷு; மணிமேகலை பிக்ஷுணி. இருபால் துறவிகளும் தலையை மொட்டை அடித்துக் கொண்டனர்;[156] துவராடை உடுத்து வந்தனர்; தம்மை நாடிய இல்லறத்தார்க்கு அறவுரை உபதேசித்தனர்.[157] அவ்வில்லறத்தார் 'உபாஸகர்' எனப்பட்டனர். அவர்கள் துறவிகளுடைய பாதங்களைக் கழுவி வணங்கி வரவேற்று உணவு படைத்தனர்.[158] ஆசையை ஒழிப்பதும் எவ்வுயிரிடத்தும் அன்பாயிருப்பதுமே பௌத்தருடைய சிறந்த கொள்கைகள். பௌத்த தருமம் பற்றிய பல விவரங்கள் மணிமேகலையிற் கூறப்பட்டுள்ளன.[159] பௌத்தமும் சமணமும் சாதிகளை ஒப்புக் கொள்ளாதவை; வேத வேள்விகளை ஒப்புக்கொள்ளாதவை; ஒழுக்கமே உயர்வை அளிக்கும் என்ற கொள்கை உடையவை.

இவை அன்றி ஆசீவகமதம் முதலியனவும் சிறிய அளவில் தமிழகத்தில் இருந்தன.[160]

### *அக்கால அந்தணர் நிலைமை*

வேதங்களில் வல்ல பிராமணர்கள் பழந்தமிழ் நூல்களில் பல இடங்களில் குறிக்கப்பட்டனர். அவர்கள் ஓதல் - ஓதுவித்தல், வேட்டல் - வேட்பித்தல், ஈதல் - இரத்தல் என்னும் ஆறு தொழில்களைச் செய்தனர். அவர்களது வடமொழிச் சொற்கள் தமிழில் வழங்கப்பட வேண்டும் முறைபற்றியும் மேற்சொன்ன ஆறு வகைத் தொழில்கள் பற்றியும் தொல்காப்பியம் கூறுகிறது.[161] வைதீகப் பிராமணர்களுள் முற்றும் துறந்த முனிவரும் இருந்தனர். மதுரையில் இருந்த அந்தணப் பள்ளி, மலைக்குகை போலக் கட்டப்பட்டிருந்தது. அங்கு இருந்த அந்தணத் துறவிகள், மக்கட்குச் சமயக் கருத்துக்களை வழங்கினர்.[162] நான்மறை, ஆறங்கம் இவற்றில் வல்ல அந்தணர் தமிழரசரிடம் மதிப்புப் பெற்றனர்; ஊர்களையும் நிலங்களையும் மானியமாகப் பெற்றனர்.[163]

தமிழகத்திற் பல இடங்களில் பரவி வாழ்ந்தனர். அவர்தம் பழக்க வழக்கங்கள், உணவு முதலியன பழைய நூல்களில் கூறப்பட்டுள.[164] தமிழரசர் அவர்களைக் கொண்டு வேள்விகள் செய்தனர். அவருள் பல்யாக சாலை முதுகுடுமிப்பெருவழுதி, இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, சேரன் செங்குட்டுவன் என்பவர் குறிப்பிடத்தக்கவர். அரசர்கள் அவர்களுக்குப் பொன்னும் பூவும் வழங்கினர்.[165] நாட்டின் மீது படையெடுப்பு நேரில், அந்தணர் காக்கப்பட்டனர்;[166] மதுரை எரியுண்ட போதும் காக்கப்பட்டனர்.[167] வந்தேறு குடிகளான பிராமணர் தமிழகத்தில் இவ்வளவு சிறப்புப் பெற்றமைக்கு, அவர்களுடைய கல்வி, ஒழுக்கம், தெய்வ பக்தியே காரணங்களாகும்.

இவ்வாறு தமிழகத்திற் புகுந்து அரசாற் சிறப்புப் பெற்ற அந்தணருட் சிலர் தமிழைக் கற்றுப் பெரும்புலவராய் விளங்கினர். அத்தகைய புலவர் ஏறத்தாழ 25 பேர் பழைய நூல்களில் பாடியுள்ளனர். கபிலர் என்ற பிராமணப் புலவர் பாரிவேளின் உயிர் நண்பராக இருந்தார்; பரணர் சேரன் செங்குட்டுவனால் மதிப்புப் பெற்றார். இத்தகைய புலவர் சேர்க்கையாலும் பிராமணத் தவசிகள் கூட்டுறவாலும் தமிழரசர்கள் வேத வேள்விகள் செய்தனர். வைதிகர் கூட்டுறவினால் தமிழகத்துப் பழைய வழிபாட்டு முறைகள் புதிய தோற்றம் எடுத்தன. முருகன் சுப்ரமணியன் ஆனான்; கொற்றவை உமாதேவியானாள்; முது முதல்வனான சிவன் ருத்ரன் ஆனான்; வைதிகச் சடங்குகளும் இதிகாச புராணக் கதைகளும் வழக்காறு பெற்றன.[168]

## *சிவனுக்கு முதல் இடம்*

சிலப்பதிகாரம், மணிமேகலை, மதுரைக் காஞ்சி என்னும் நூல்களில் கோவில்களின் வரிசையைக் குறிக்கும் இடங்களில் எல்லாம் சிவபிரான் திருக்கோயிலே முதன்மை பெற்றுள்ளதைக் காணலாம்.

**பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்**
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீல மேனி நெடியோன் கோயிலும்;[169]

**நுதல்விழி நாட்டத் திறையோன் கோயிலும்**
உவணச் சேவல் உயர்த்தோன் நியமமும்
மேழி வலனுயர்த்த வெள்ளை நகரமும்
கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்;[170]

**நுதல்விழி நாட்டத் திறையோன் முதலாப்**
பதிவாழ் சதுக்கத்துப் பூதமீ றாக.[171]

முன்னவை இரண்டும் சிறந்த சமணத் துறவியாராகிய இளங்கோவடிகள் கூற்று. பின்னது பௌத்தராகிய சாத்தனார் கூற்று. புறச் சமயத்தாராகிய இவர்கள் இருவரும் இங்ஙனம் சிவனுக்கு முதலிடம் தந்திருத்தலைக் காணச் சிலப்பதிகார மணிமேகலை காலத்தில் சைவசமயம் பெற்றிருந்த முதன்மை ஒருவாறு அறியப்படும். அத்துடன், அப்புறச் சமயிகளது மதவேறுபாடற்ற நல்லுள்ளமும் நன்கு விளங்கும். இப் புலவர்கள் கூற்றை,

நீரும் நிலனும் தீயும் வளியு
மாக விசும்போ டைந்துடன் இயற்றிய
**மழுவாள் நெடியோன் தலைவ னாக,**[172]

என வரும் மதுரைக் காஞ்சி அடிகளும் ஆதரிக்கின்றன.

## *சமய வெறுப்பு*

அக் காலத்தில் சைவம், வைணவம், சமணம், பௌத்தம் முதலிய சமயங்கள் அமைதியாக நாட்டில் வாழ்ந்தன; அமைதியாகப் பிரசாரம் செய்தன; வெளிப்படையாகப் பூசல் இன்றி வாழ்ந்தன. எனினும், வைதிகச் சமயிகட்குச் சமணம், பௌத்தம் போன்ற புறச் சமயங்கள் வெறுப்பைத் தந்தன; வைதிகர் சிலர் புறச் சமயக் கொள்கைகளை மறுத்து வந்தனர் என்பது ஆவூர் மூலங்கிழார் என்ற புலவர் பாடலால் தெரிகிறது: ''வேதம் நான்கு பிரிவுகளையும் ஆறு அங்கங்களையும் உடையது. அது சிவபிரானுடைய நாவை விட்டு நீங்காதது. புத்தர் முதலிய புறச் சமயத்தார் வேதத்திற்கு மாறுபட்ட நூல்களைக் கண்டவர்கள். அவரது மிகுதியை (செல்வாக்கை)ச் சாய்க்கவேண்டி, அவருடைய மெய்போன்ற பொய்க் கொள்கைகளை அறிந்து, அப் பொய்யை மெய்யென்று கருதாமல், உண்மைப் பொருளை அவர்கட்கு ஏற்பச் சொல்லி, இருபத்தொரு வேள்விகளைக் குறைவின்றிச் செய்த அறிவுடையோர் மரபில் வந்தவனே!'' என்று ஆவூர் மூலங்கிழாரால் பாராட்டப்பட்டவன் சோழ நாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயன் என்பவன்.[173]

## *முடிவுரை*

இதுகாறும் கண்ட விவரங்களிலிருந்து கீழ்வரும் உண்மைகள் புலனாகின்றன :

1. பல்லவர்க்கு முற்பட்ட தமிழகத்தில் சைவம், வைணவம், பௌத்தம், சமணம் முதலிய மதங்கள் இருந்தன. அவற்றுள் சைவசமயம் முதலிடம் பெற்றிருந்தது.

2. தமிழகத்தில் கோயில்கள் இருந்தன. அவை அழியத்தக்க மண், மரம் முதலிய பொருள்களால் ஆனவை. கோயில்களிற் கடவுளர் உருவச் சிலைகள் வைக்கப்பட்டுப் பூசிக்கப்பட்டன. விழாக்கள் நடைபெற்றன. விழாக் காலத்தில் திருமேனிகள் ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டன. கோவில் மண்டபங்களில் கண்கவர் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. கோயில்களில் ஆடல்-பாடல்கள் நடைபெற்றன.

3. லிங்க வணக்கமும் தட்சிணாமூர்த்தி வணக்கமும் சிவன் கோயில்களில் இருந்தன.

4. அருகர் பள்ளி, பௌத்தப் பள்ளி, அந்தணர் பள்ளி முதலியவற்றிற் கல்வி ஒழுக்கங்களிற் சிறந்த துறவிகள் இருந்து பொது மக்கட்கு அறிவுபதேசம் செய்தனர்.

5. தமிழரசர் எல்லாச் சமயவாதிகட்கும் நாட்டில் இடமளித்தனர். அவர்கள் வெளிப்படையாகப் பூசல் புரியவில்லை. ஆயினும் பௌத்தம் சமணம் முதலிய புறச் சமயங்கள் மீது ஆவூர் மூலங்கிழார், கௌணியன் விண்ணந்தாயன் போன்ற சிலர்க்கேனும் வெறுப்பு இருந்தது என்பது தெரிகிறது.

6. தமிழரசர் வேத வேள்விகள் செய்தனர்; வைதிகர்க்கு ஊர்களையும் நிலங்களையும் தானம் செய்தனர். வைதிகர் செல்வாக்கு நாட்டில் படிப்படியாக வளர்ந்தது; வடமொழியும் வைதிக சமயக் கொள்கைகளும் இதிகாச புராணக் கதைகளும் நாட்டிற் பரவலாயின.

7. திகம்பர சமணத் துறவிகள், பௌத்த சமயத்துறவிகள், வைதிகத் துறவிகள், சைவத் துறவிகள்.[174] தமிழகத்தில் இருந்தனர். சமண, பௌத்த சமயங்களிற் பெண் துறவிகளும் இருந்தனர்.[175]

8. நக்கீரரது திருமுருகாற்றுப்படை, பரிபாடல் என்பன முருகன், திருமால் பற்றிய பாடல் நூல்கள் என்றே கூறத்தகுவன, அக் காலத்தில் தோத்திரப் பாக்கள் இருந்திருத்தல் வேண்டும் என்பதை நினைவூட்டுவனவாக இவற்றைக் கொள்ளலாம். பரிபாடலில் உள்ள திருமால் துதிகளும் அக்கால மக்களது பக்தியை நன்கு உணர்த்துவன.

9. பல்லவர்க்கு முற்பட்ட கால மக்கள் இறையனார், வெண்பூதி, பெருந்தேவனார் போன்ற சிவனுக்குரிய பல பெயர்களைப் பூண்டிருந்தனர்.

## குறிப்பு விளக்கம் :

1. காஞ்சிப் பல்லவர், பக். 36,146
2. சோழர் பகுதி 2, பிரிவு 1, ப. 207
3. காஞ்சிப் பல்லவர், பிற் சேர்க்கை 1, எண் 7.
4. மேலது ப. 33.
5. மேலது பக். 35-36.
6. பல்லவர் வரலாற்று ஆராய்ச்சி, பக். 9-14, 22.
7. சாதவாகனர்க்குப் பிற்பட்டவர், பக். 164-166, 247-'8.
8. காஞ்சிப் பல்லவர், பக். 83,85,142.
9. பாண்டிய அரசு, ப. 19.
10. தீக்ஷிதர் முகவுரை, டாக்டர் ஆர்.கே.ச. சிலப்பதிகாரம், பக்.30.
11. அகத்திணை இயல், சூ, 5.
12. புறத்திணை இயல், சூ. 59.
13. மேலது சூ. 30, அதன் உரை.
14. புறம். 1,6,55,91,166.
15. ஐங்குறு-கடவுள் வாழ்த்து, செ. 207.
16. பரிபாடல்-5,8.
17. கலித்தொகை 2,38,81,103.
18. புறம். 1,55,166; கலி. 38.
19. புறம். 1; கலி 1.
20. புறம். 1,55,56; கலி 103.
21. ஐங்குறு. 207.
22. கலி. 1; பரிபாடல் 9.
23. கலி. 6,55; பரிபாடல் 2; திருமுருகு, வரி, 153.
24. கலி. 1,100; புறம். 166.
25. புறம். 1,56; கலி. 1; பரிபாடல் 9, வரி 7.
26. புறம் 56; கலி 2, 101, 103; ம.கா.வரி, 455.
27. கலி. 1, வரி, 12.
28. கலி. 1, வரி. 4.
29. கலி. செ. 1, வரி. 11.
30. புறம். 1; ஐங்.க.வாழ்;கலி. 101, வரி, 24-உம் உரையும்.
31. புறம். 1.56; திருமுருகு. வரி. 151-2.
32. கலி. 81, 83; சிறுபாண், வரி. 96-99; திருமுருகு, வரி. 256; புறம்: கடவுள் வாழ்த்து.
33. புறம். 1
34. புறம்.
35. புறம். 56; கலி. 1, வரி 6.
36. புறம். 6.
37. புறம்.55; பரிபாடல் 5, வரி. 22-29; கலி. 1,2,38; திருமுருகு, வரி, 154.
38. கலி. 1, வரி. 8.

39. கலி. 1, வரி. 1-12.
40. புறம்38, வரி 1-5.
41. கலி 1, வரி 16-உம் அதன் உரையும்.
42. சிலப். காதை. 5, வரி 169-172; காதை 14, வரி 7-10; மணி. காதை 1, வரி 54-55; ம.கா.வரி 453-455.
43. ம.கா.வரி. 453-60.
44. சிலப். காதை 26, வரி 98,99.
45. சிலப். வரி 64-65.
46. காதை 28, வரி 67-75.
47. காதை 27, வரி 86-95.
48. பரி. 5, வரி 13; செ.8, வரி 127-8; செ.9, வரி, 9; கலி. செ. 8,83.
49. செ. 5, வரி. 27-49.
50. வரி, 255-'9.
51. வரி. 126-136; 178-188; 190-217.
52. காதை 24.
53. பாடல் 5.
54. பாடல் 8.
55. பாடல் 9.
56. பாடல் 9. வரி. 19, வரி. 46-53.
57. பாடல் 9. வரி. 20-24.
58. பாடல் 17, வரி, 15-18; 14, வரி, 5.
59. 14, வரி. 23-24; 30; பாடல். 17, வரி. 50-53; பாடல். 18, வரி, 51-56.
60. பாடல் 21, வரி, 16.
61. பாடல் 5, வரி. 78-80.
62. பாடல் 17, வரி. 52-53.
63. பாடல் 18, வரி. 54-56; 21, வரி. 68-70.
64. காதை 12.
65. காதை 12, வரி. 67-68; காதை 11, வரி. 214.
66. காதை 12.
67. கலி. 89; வரி. 8.
68. காதை 23, வரி. 181.
69. குறுந்தொகை 218.
70. காதை 5, வரி. 169-172; காதை 11, வரி. 7-10.
71. செ. 56.
72. பரிபாடல் 2, வரி. 20-27.
73. பந்தர்க்கர், வைணவம் முதலிய சமயங்கள், பக். 3-5.
74. காதை 17.
75. சிலப். 11, வரி. 35-51; 91.
76. 1-4, 13, 15.
77. மணி. 27, வரி. 98-99.

78. செ.56.
79. கலி. 103-104.
80. பரிபாடல், 3,4,5.
81. பரிபாடல் 14, 21.
82. காதை 26. வரி.62-67.
83. காதை 11, வரி. 128-130.
84. ஆராய்ச்சித் தொகுதி, பக்.12-13.
85. வியாச பாரதம், பக்.836-8.
86. சைவ சமயத் தோற்றமும் வளர்ச்சியும் பக். 99.
87. சைவ சமயத் தோற்றமும் வளர்ச்சியும் பக்.98-99.
88. சிறுபாண், வரி 96-98.
89. சிறுபாண், வரி 290.
90. நான் இக்கோயிலைப் பார்வையிட்டேன். அதன் இக்காலப் பெயர் 'எதோத்காரி கோயில்' என்பது.
91. பெரும்பாணாற்றுப் படை, வரி, 372-3ம் அதன் உரையும்.
92. ம.கா.வரி.444-456-ம் உரையும், தொகுப்பாளர்ரின் அடிக் குறிப்பும் கலி. 81.
93. பட்டினப்பாலை, வரி. 286ம் உரையும்.
94. மலை படுகடாம், வரி. 82-3' 230-'2.
95. புறம். 91.
96. ஆராய்ச்சித் தொகுதி, பக்-283, 291, 294.
97. பதிற்று, 15, வரி. 37ம் உரையும்.
98. சிலப், காதை. 14, வரி. 7-11; கலி 82,84,94.
99. கி.பி.-7ஆம் நூற்றாண்டில் சில சிவன் கோயில்களும் 'பள்ளி' என்று வழங்கப்பட்டன.
100. பல்லவர் கட்டடக்கலை, பகுதி I,பக்-22-23.
101. கானத் 4, வரி. 53-'9.
102. மணி. காதை, 6.வரி. 42-48; 58-59.
103. மணி. கா. வரி. 352-' 6; பெரும்பாண், வரி 405.
104. மணி.கா. வரி. 451; ஷை. வரி. 347-'8.
105. செ. 58.
106. முன்னுரை பக். 79; சிதம்பரம் கோவிலில் பொன்னம்பலம் என்ற சபையும் குற்றாலத்தில் தாமிரம் வேயப்பட்ட சபையும் பல நூற்றாண்டுகளாக உள்ளன. ஆயின், அவை பண்டை நூல்களிற் குறிக்கப் பெற்றில.
107. சிந்துவெளி நாகரிகம், சமயம்
108. வைணவம், சைவம் முதலிய சமயங்கள். பக்.164-5.
109. மேலது
110. மேலது
111. நான் இவ்விடங்களைப் பார்வையிட்டேன்.
112. இந்து சமயச் சிலைகள், பகுதி II:பிரிவு, 1, பக்.55-57.
113. மேலது பக். 58-63.

114. சைவ சமயம் பக்.25.
115. இந்தியாவில் கற்காலம், பக்.48-49.
116. வைணவம் முதலிய சமயங்கள், ப. 115.
117. சைவ சமயத் தோற்றமும் வளர்ச்சியும், ப.51.
118. பட்டினப்பாலை, வரி-246-250; அகம். செ. 167,287.
119. புறம். 52.
120. நான் இவற்றைப் பார்வையிட்டேன்.
121. அகம். 41,141.
122. பரிபா. 11, வரி. 78;8, வரி 6.
123. நற்றிணை, 22; ஐங்குறு. 84; கலி. 59 - 80; பரிபா. 11, வரி. 81 அதன் உரையும்.
124. ஆராய்ச்சித் தொகுதி. பக் 203
125. திருமுருகு; வரி, 220.
126. ம.கா. வரி-427-452.
127. செ. 1.
128. சிலப் காதை 6, வரி 44-45ம் உரையும்.
129. கலி, 97, வரி. 10. ''சுண்ணநீராடி''-இத்துடன் ''சுண்ணப்பொன் நீற்றன்'' என்ற திருவாசகத் தொடர் ஒப்பு நோக்கத் தக்கது.
130. மணி. காதை, 3. வரி. 137-8; 7, வரி. 56,6.
131. கலி. 82, 85, 86-உம் உரையும்.
132. கலி. 82, 84, 133. பதிற்றுப்பத்து, 31, வரி. 6-9ம் உரையும்.
134. கலித்தொகை, முகவுரை. பக். 111-'2.
135. தொல். பொருள். சூ. 18-உம் உரையும்.
136. பரிபா. 14, வரி. 23-24, 30.
137. கலி. 66, வரி. 18;70, வரி 14.
138. சிலப். காதை. 6. வரி. 49-66.
139. காதை. 3-ம் உரையும்
140. காதை. 28, வரி. 67-75.
141. 65 of 1914; section 13 of M.E.R.1924&'25.
142. கங்கர்-பக். 191-193.
143. சிலப். காதை. 10, வரி. 15-25; காதை, 14, வரி-35-38; ம. கா. வரி. 475-488.
144. மணி. காதை 11வரி. 5-7; காதை, 9, வரி 13.
145. ம. கா. வரி. 485.,
146. மணி. காதை. 3, வரி. 86-91.
147. நீலகேசி, முகவுரை, பக்.27-28.
148. சிலப். காதை. 15, வரி. 160-197; காதை. 16, 5, 71ம் உரையும்.
149. சிலப். காதை. 16, வரி. 18-21.
150. சிலப். காதை, 16, வரி. 71-72.
151. நீலகேசி, முகவுரை, பக் 82.
152. மணி, காதை, 27, வரி 167-201.
153. மணி. காதை. 26, வரி. 54-55-உம் உரையும்; காதை. 28, வரி 68-70உம் உரையும்.

154. மணி. காதை 28, வரி. 172-'5.
155. மணி. காதை. 18, வரி, 6-8-உம் உரையும்.
156. சிலப். காதை 27, வரி. 107-'8; காதை 30, வரி. 27-'8.
157. மணி. முகவுரை, அதிகாரம்-புத்த தர்மம்.
158. மணி. காதை 28, வரி, 11-12.
159. மணி. அதிகாரம் புத்த தர்மம்.
160. மணி. காதை. 27.
161. தொல். எழுத்து. சூ. 102; சொல், சூ. 401; புறத்திணை 20.
162. கலி. 93, வரி. 29-36; ம.கா. வரி. 474-உம் உரையும்.
163. புறம். 166. பதிற்றுப்பத்து-2; வேள்விக்குடிப் பட்டயம்.
164. பெரும்பாண். வரி. 297-308; சிலப். காதை. 10, வரி. 142-'7.
165. புறம். 367
166. புறம். 9.
167. சிலப். காதை. 21, வரி. 53.
168. பண்டைத் திராவிடர், பஞ்.109-111, சமயங்களின் தோற்றமும் வளர்ச்சியும், பக்.102-103.
169. சிலப். காதை, 5, வரி.169-172.
170. சிலப். காதை. 14, வரி. 7-10.
171. மணி. காதை 1. வரி. 54-55.
172. வரி. 453-455.
173. புறம். 166உம் உரையும். இவ்வாறு பல்லவர்க்கு முற்பட்ட காலத்தில் தோன்றிய புறச் சமய வெறுப்பே நாளடைவில் வளர்ந்து கி.பி.7-ஆம் நூற்றாண்டில் பெரிய சமயப் போராக எழுந்தது போலும்!
174. நற்றிணை, 141.
175. சாதவாகனர் தட்சிணத்தை ஆண்டபோது (கி.மு.200.கி. பி. 300) உடம்பில் நீறு பூசிக் காபாலம் ஏந்திய காபாலினிகள் (பெண் துறவிகள்) இருந்தனர். அவர்கள் சைவ சமயத்துள் ஒரு பிரிவான காபாலிக மதத்தைச் சேர்ந்தவர்கள். ஆந்திர நாட்டுப் பண்டை வரலாறு, ப. 123. இக் காபாலினிகள் தமிழகத்தில் இருந்தமைக்குப் பண்டை நூல்களிற் சான்றில்லை.

# 3. முற்காலப் பல்லவர் காலத்தில் சைவ சமயம்

(கி.பி. 300-600)

***இக்காலப் பல்லவ அரசர் பட்டியல்***

பிராக்ருத மொழியிலும் வடமொழியிலும் பட்டயங்களை வெளியிட்ட பல்லவர்களை முற்காலப் பல்லவர் என்று கூறலாம். இவர்கள் பட்டியல்கள் பலவாறு காண்கின்றன. அவற்றை ஆராய்ந்து வரலாற்று ஆசிரியர்கள் கீழ் வருமாறு குறித்துள்ளனர்:

பப்ப தேவன்
|
சிவஸ்கந்த வர்மன்
|
புத்தவர்மன்
|
விஷ்ணு கோபன் (கி.பி.340)
|
குமார விஷ்ணு
|
ஸ்கந்த வர்மன்
|
வீரகூர்ச்சவர்மன்
|
ஸ்கந்த சிஷ்யன்

- சிம்மவர்மன் I (கி.பி.436-460)
  - ஸ்கந்தவர்மன் (கி.பி.460)
    - நந்திவர்மன் I
- இளவரசன் விஷ்ணு கோபவர்மன்
  - சிம்மவர்மன்II
    - விஷ்ணுகோபவர்மன்
- குமார விஷ்ணு
  - புத்தவர்மன்
    - குமாரவிஷ்ணுII

விஷ்ணுகோபவர்மன்
|
சிம்மவர்மன் III
|
சிம்மவிஷ்ணு (கி.பி.575-600)
|
மகேந்திரவர்மன் (கி.பி. 600-630)[1]

மேலே குறிப்பிடப்பட்ட பல்லவருள் சமுத்ரகுப்தன் காலத்து விஷ்ணுகோபன் காஞ்சியை ஆண்டவன் என்பது முன்பே கூறப்பட்டது. இரண்டாம் குமாரவிஷ்ணு என்பவன் காஞ்சியை ஆண்டான் என்பது தெரிகிறது.[2] நந்திவர்மன் விஜயகாஞ்சிபுரத்தை ஆண்டான் என்பது தெரிகிறது.[3] சிம்மவிஷ்ணு காஞ்சியைக் கைப்பற்றி ஆண்டான் என்பது தெரிகிறது.[4] பட்டியலிற் காணப்படும் மற்ற அரசர்கள் நெல்லூர் மாவட்டத்தைச் சேர்ந்த பல ஊர்களிலிருந்து பட்டயங்களை வெளியிட்டுள்ளதைக் காண, அவர்கள் காலங்களில் காஞ்சி, பல்லவர் ஆட்சியில் இல்லை என்று கூறலாம்.[5]

## *அக்கால நிலை: களப்பிரர்*

**புத்ததத்தர்** என்ற பௌத்த துறவியார் ஏறத்தாழக் கி.பி.5-ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் வாழ்ந்தவராகக் கருதப்படுகிறார்.[6] அவர் சோழ நாட்டினர். அவர் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த பௌத்த விஹாரத்தில் தங்கி அபிதம்மாவதாரம் என்ற நூலை எழுதினார். தாம் அதனை எழுதிய காலத்தில் நாட்டை **அச்சுத விக்கந்தன்** என்ற **களப்ர குல** அரசன் ஆண்டு வந்தான் என்று அவர் கூறியுள்ளார்.[7] சேர, சோழ, பாண்டியரைச் சிறைப்படுத்தித் தமிழகத்தை ஆண்ட பேரரசன் என்று சில தமிழ்ச் செய்யுட்கள் **அச்சுதக் களப்பாளன்** என்ற ஒருவனைப் புகழ்கின்றன.[8] இவன் புத்ததத்தர் குறித்த அச்சுதனாகலாம் என்று அறிஞர் கொள்கின்றனர்.[9] இவன் புத்ததத்தராற் குறிக்கப்பட்டுள்ளான். இவன் பாண்டிய நாட்டையும் பிடித்தாண்டவன் என்று மேற்சொன்ன தமிழ்ப் பாக்கள் கூறுகின்றன. ''பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதிக்குப் பிறகு அளவரிய அதிராசரை அகல நீக்கி அகலிடத்தைக் களப்பிரன் என்னும் கலியரசன் கைக் கொண்டான்'' என்று வேள்விக் குடிப் பட்டயம் விளம்புகிறது.[10] இம் மூன்று குறிப்புக்களையும் நோக்க, புத்ததத்தர் குறித்த அச்சுதவிக்கந்தன் என்ற களப்ரகுல அரசன் ஏறத்தாழக் கி.பி.5-ஆம் நூற்றாண்டின் முதற் பகுதியில் தமிழகத்தைக் கைப்பற்றியிருத்தல் வேண்டும் என்பது தெரிகிறது. இக் களப்பிர மரபினரிடமிருந்தே ஏறத்தாழக் கி.பி. ஆறாம் நூற்றாண்டின் கடைப்பகுதியில் கடுங்கோன் என்ற அரசன் பாண்டிய நாட்டைக் கைப்பற்றினான்.[11] ஏறக்குறைய அதே காலத்தில் சிம்மவிஷ்ணு என்ற பல்லவன் களப்பிரர், சோழர் முதலியோரை வென்று காஞ்சியில் பல்லவ அரசனானான்.[12] இக் கூற்றுக்களை நோக்க, களப்பிரர் ஆதிக்கம் பல்லவ பாண்டிய நாடுகட்குப் பேராபத்தை உண்டாக்கியிருந்தன என்பதை அறியலாம். களப்பிரர் சிறந்த

வீரமரபினர் என்று கொள்ளவே அவர்களைப் பற்றிய குறிப்புக்கள் இடந்தருகின்றன.[13]

**களவர்** என்னும் தமிழ்ப் பெயர், கன்னடத்தில் **களபரு** என்று மாறும். அது வடமொழியில் களப்ரா என்று மாறும். இவர்கள் வேங்கடம், காளத்தி முதலிய மலைப்பிரதேசங்களில் வாழ்ந்த வீரமரபினர். பல்லவர் தெற்கு நோக்கி வந்தபொழுது, இவர்கள் இடைஞ்சலுற்றுத் தொண்டை நாட்டையடைந்தனர்; பின்னர்ப் பல்லவர் காஞ்சியைக் கைப்பற்றியதும் சோழ நாட்டிலும் பாண்டிய நாட்டிலும் புகுந்து, சோழ, பாண்டியரை விரட்டி நாடுகளைக் கைப்பற்றினர்; பல்லவர்க்கும் ஓயாத தொல்லைகள் கொடுத்தனர். குமார விஷ்ணு இவர்களிடமிருந்தே காஞ்சியைக் கைப்பற்றியிருத்தல் வேண்டும்.[14]

## சோழர்கள்

கோச்செங்கணான் பெயரைக் குறிக்கும் புறநானூற்றுப் பாடலின் அடிக் குறிப்புக்கும் அப் பாடற் பொருளுக்கும் தொடர்பில்லை. மேலும் தொகை நூல்கள் காலத்தில் ஓர் அரசன் 70 சிவன் கோவில்கள் கட்டக்கூடிய அளவில் சைவப் பிரசாரமோ, சைவத்திற்கு ஆபத்தோ இருந்ததென்று கூறச்சான்றில்லை; கோச்செங்கணான் பெற்றோர்களின் பெயர்களான சுபதேவன், கமலவதி என்பன போன்ற வடமொழிப் பெயர்களைப் பண்டைத்தமிழ் நூல்களிற் காணக் கூடவில்லை. களவழியை ஆராய்ந்தால் கோச்செங்கணான் பெரும் படையையுடைய மன்னர்களை வென்றனன் என்பது தெரிகிறது. இங்ஙனம் பல போர்களைச் செய்த அவன், பண்டைக் காலத்தவனாயின், அவனை அக் காலப் புலவர்கள் பாடியிருக்க வேண்டுமல்லவா? ஒரு பாட்டேனும் தொகை நூல்களில் இல்லையே! அவன் காலத்தில் தில்லை (சிதம்பரம்) சமயத்துறையில் பெயர் பெற்றதாகப் பெரிய புராணம் கூறுகிறது. ஆயின், 'தில்லை' என்னும் பெயரே பழைய நூல்களில் இல்லை. இவற்றை நன்கு ஆராயின், கோச்செங்கணான் பல்லவர்க்கு முற்பட்ட காலத்தவனல்லன் என்று திட்டமாகக் கூறலாம். ஆயின், இவன் கி.பி. 7-ஆம் நூற்றாண்டினரான அப்பர் சம்பந்தராற் குறிக்கப்படலால், அவர்கட்கு முற்பட்டவனாவன். இப்பேரரசன் கி.பி.300-600-க்கு உட்பட்டவனாக இருக்க வேண்டும். பல சான்றுகளைக் கொண்டு ஆராயின், இவன் காலம் ஐந்தாம் நூற்றாண்டு என்னலாம்.[14a] இவன் காலம் இது என்பதை இராவ் சாஹிப். எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் சொல்லாராய்ச்சி கொண்டு முடிவு கட்டுகிறார்கள்.[14b]

மு. இராகவையங்கார்,[14c] பி.டி. சீநிவாச ஐயங்கார்[14d] போன்ற அறிஞர்களும் இக் கருத்தையே வெளியிட்டுள்ளார்கள். எனவே, இவனும் இவன் மரபினரும் இக் காலத்துச் சோழர்கள் என்று கொள்ளுதல் பொருத்தமாகும்.

இவர்கள் பல்லவருடனும் களப்பிரருடனும் போர் செய்தவராதல் வேண்டும்.

### *கங்கர் – கதம்பர்*

ஏறத்தாழக் கி.பி. 350 முதல் மைசூர்ச் சீமை என்ற கங்கபாடியைக் கங்கர்கள் ஆளத் தொடங்கினர். அவர்கட்கு வடக்கே, வனவாசியைத் தலைநகராகக் கொண்ட குந்தள நாட்டை மயூர சர்மன் மரபினர் ஆளத் தொடங்கினர். அவர்கள் கதம்பர் எனப்பட்டனர். மயூரசர்மன் பல்லவர்க்குப் பகைவன்.[15] அவன் மரபினரும் அங்ஙனமே.[16] அவர்கள் தமக்குத் தெற்கே இருந்த கங்கரைத் தாக்கினர். பல்லவர் கங்கரைக் காக்கக் கதம்பரைத் தாக்கினர். முதலாம் சிம்மவர்மன் என்ற பல்லவன் கதம்பரைத் தாக்கி, அரிவர்மன் என்ற கங்க அரசனை நிலைபெறச் செய்தான்; அவன் மகனான ஸ்கந்தவர்மன் இரண்டாம் மாதவன் என்ற கங்க அரசனை அரசனாக்கினான்.[17]

### *பல்லவர்-சாளுக்கியர்*

கி.பி.6-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாதாபியைத் தலைநகராய்க் கொண்டு சாளுக்கியர் பேரரசினை நிலைநாட்ட முயன்றனர். சாளுக்கியர் தெற்கே நாட்டை விரிவாக்கல் பல்லவர்க்கு ஆபத்து ஆதலின், பல்லவர் எதிர்த்தனர். தொடக்க காலத்தில் பல்லவரும் இராஷ்டிர கூடரும் சேர்ந்து சாளுக்கியரைத் தாக்கினர். ஓயாது போர்கள் நடைபெற்றன.[18] கி.பி. 6-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கங்க அரசனான துர்விநீதன் சாளுக்கியருடன் சேர்ந்துகொண்டு பல்லவரைத் தாக்கினான்.

இவ்வாறு இம் முதற் காலப் பல்லவர்கள் தெற்கே களப்பிரர் சோழர்களுடனும், மேற்கில் கதம்பருடனும் கங்கருடனும், பின்னர் வடமேற்கில் சாளுக்கியருடனும் ஓயாது போர்கள் செய்து வந்தமையால், அடிக்கடி காஞ்சியையும் தொண்டை நாட்டையும் விட்டு ஓட வேண்டியவராயினர். சிம்மசிஷ்ணு கால முதலே தொடர்ச்சியாகப் பல்லவர் காஞ்சியிலிருந்து ஆளலாயினர்.

# அக்காலச் சமய நிலை

## பௌத்தம்

முன் சொன்ன புத்ததத்தர் காவிரிப்பூம் பட்டினம், உரகபுரம் (உறையூர்), பூதமங்கலம், காஞ்சிபுரம் என்னும் இடங்களில வாழ்ந்தவர் என்பதால், அவ்விடங்களில் பௌத்த விஹாரங்களும் மடங்களும் இருந்தனவாதல் வேண்டும். அவர் காவிரிப்பூம்பட்டினத்தில் கண்டதாசன் கட்டிய புத்த விஹாரத்தில் இருந்து அபிதம்மாவதாரத்தை எழுதினார். அவரே விநயவிநிச்சயம் என்னும் தமது நூலின் இறுதியில், 'இந்நூல் புத்த சீடர்க்காக வரையப்பட்டது. நான் சோணாட்டில் உள்ள பூதமங்கலத்தில்[19] உள்ள வேணுதாச விஹாரத்தில் தங்கியிருந்த பொழுது எழுதப்பட்டது' என்று வரைந்துள்ளார்.[20] புத்ததத்தர் அச்சுதவிக்கந்தனைத் தமது நூலிற் குறிப்பிடலால், அவன் பௌத்த சமயத்தில் கருத்துடையவனாக இருந்திருக்கலாம். இக் காலப் பல்லவ அரசர்களுள் இருவர் புத்தவர்மன் என்று பெயர் தாங்கியிருத்தல், அவர்களது பௌத்த சமயச் சார்பினைக் காட்டுகிறதென்னலாம். சிம்மவர்மன் என்ற பல்லவன் ஒருவன் அமராவதியில் புத்த முனிவர்களுடைய உபதேசங்களைக் கேட்டுப் புத்தர் சிலை ஒன்றை எழுப்பி, அதனைப் பொன்னாலும் மணிகளாலும் அலங்கரித்தான் என்று அமராவதிக் கல்வெட்டு ஒன்று கூறுகிறது.[20a]

## சமணம்

நிக்கந்தம் அல்லது திகம்பர சமணம் என்பதே தமிழகத்தில் இருந்த சமயமாகும். திகம்பர சமண ஆசாரியர்கள் தென் இந்தியா முழுவதும் தங்கள் சமயத்தைப் பரப்பினர். அவருள் குந்த குந்தர் என்பவர் சிறந்தவர். அவர் பாடலிபுரத்தில் (திருப்பாதிரிப்புலியூரில்) சமண மடத்தில் தங்கிப் பல்லவ அரசனும் தம் மாணவனுமாகிய சிவகுமார மஹாராஜன் என்பவனுக்கு, அக்கால அரசாங்க மொழியான பாலி மொழியில் சமய நூல்களை வரைந்தார். அவர் பலமுறை சேர, சோழ, பாண்டிய நாடுகட்குச் சென்று தமது சமயத்தைப் பரவச் செய்தார். அவருக்கு அடுத்தபடியாகக் கூறக் கூடிய ஆசாரியர் சமந்தபத்ரர் என்பவர். அவர் பௌத்தர்களை வாதத்தில் வென்றவர்; வட இந்தியப் பாடலிபுத்திரம், சிந்து, திக்க, வைதேகம், காஞ்சிபுரம் முதலிய நகரங்கட்கும் நாடுகட்கும் சென்று சமயப் பிரசாரம் செய்தவர்.

கி.பி.4-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சமண ஆசாரியருள் சிறந்தவர் சிம்மநந்தி என்பவர். கங்கநாடு ஏற்படக் காரணமாயிருந்தவர் அவரே. அதனால் கங்க நாட்டில் சமணம் மிகவுயரிய நிலையை அடைந்தது. அவருக்குப் பின் வக்ரக்ரீவர், வச்சிரநந்தி என்பவர்கள் சிறப்புற்றவர்கள். ஸ்ரீவர்த்ததேவர், குமாரசேனர், சிந்தாமணி ஆசாரியரும் குறிக்கத்தக்கவர். பூஜ்யபாதர் என்பவர் சமண முனிவர்; யோகத்திற் சிறந்தவர். அகளங்கர் என்பவர் புகழ் பெற்ற சமண ஆசாரியர். மேற்சொன்ன ஆசாரியர்களைப்போலவே அவரும் கங்க நாட்டிலிருந்து தமிழகம் முழுவதையும் சுற்றினவர்; புத்தர்களை வாதில் வென்றவர். அவர் காலத்தில் வட இந்தியாவிலிருந்து திகம்பர சமணர் பலர் தென்னாட்டிற்கு வந்து ஆனைமலை, மதுரை, ஸ்ரவண பெல்கோலா முதலிய இடங்களிற் குடியேறினர். அகளங்கர், சைவர், பாசுபதர், பௌத்தர், காபாலிகர், கபிலர் (கபில மதத்தார்) என்பவர்களைத் தர்க்கத்தில் வெல்ல முனைந்தவர்[21]

## பாடலி: சமண மடம்

தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த பாடலி புரத்தில் சமண மடம் ஒன்று இருந்தமை முன் கூறப்பட்ட தன்றோ? அங்குக் கி.பி. 458-இல் லோகவிபாகம் என்ற திகம்பர சமண நூல் படியெடுக்கப்பட்டது. அக் காலத்தில் சிம்மவர்மன் என்ற பல்லவன் நாட்டை ஆண்டு வந்ததாக அவர் அந் நூலிற் குறித்துள்ளார். அதே நூற்றாண்டில் அம் மடத்தில சிம்ம சூரி, சர்வநந்தி என்ற சமண ஆசாரியர்கள் இருந்தார்கள். அவர்கள் பிராக்ருதத்திலும் வடமொழியிலும் சிறந்திருந்தனர். அம் மடம் பல்லவ மன்னர் ஆதரவைப் பெற்றிருந்ததெனக் கூறல் தவறாகாது. ஏழாம் நூற்றாண்டின் முற்பாதியில் அம்மடம் மகேந்திரவர்மனால் ஆதரிக்கப்பட்டது.[22] திகம்பர சமண ஆசாரியர்கள் சமயப் பிரசார நிமித்தம், பாடலியிலிருந்து டெல்லிக்கும் ஜெய்பூருக்கும் சென்றனர்[23] என்பதிலிருந்து இம் மடத்தின் சிறப்பினை நன்கறியலாம்.

## சமண காஞ்சி

காஞ்சியில் வேகவதி ஆற்றங்கரையில் உள்ள திருப்பருத்திக் குன்றம் பல்லவர் காலத்தில் சமண காஞ்சி எனப்பட்டது; கங்கநாட்டுத் திகம்பர சமணரால் கல்வியிற் சிறந்த இடம் எனப் பாராட்டப்பட்டது. அது நீண்ட காலமாக இருந்து வந்ததாகும்.[24]

### மதுரையில் சமணர் சங்கம்

முன் சொன்ன சமண ஆசாரியருள் ஒருவரான ஸ்ரீ பூஜ்யமிபாதர் என்பவருக்கு மாணவரான வச்சிர நந்தி என்பவர், மதுரையில் (கி.பி.470-இல்) ஒரு சங்கத்தை ஸ்தாபித்தார். இச் சங்கத்தில் சமணர்களே இருந்தனர். சமயப் பணியுடன் இலக்கியங்களிலும் ஈடுபட்டனர்; இச் சங்கத்தின் செல்வாக்கினால் பாண்டிய நாட்டில் சமணம் விரைந்து பரவியது எனக்கோடல் தவறாகாது.[25] தமிழில் உள்ள கீழ்க்கணக்கு நூல்களுட் பல இச் சங்கத்தவரால் இயற்றப் பெற்றிருத்தல் வேண்டும் எனக் கருதுதல் பொருத்தமாகும்.[26]

### சுற்றுப்புற நாடுகளில் சமணம்

கங்கவரசே சிம்மநந்தி என்ற சமண முனிவரால் ஏற்படுத்தப் பட்டது. அதனால் கங்கவாடியாகிய மைசூர்ப்பிரதேசம் சமணத்திற்கு முதலிடம் அளித்திருந்தது. அதனை ஆண்ட பெரும்பாலான அரசர்கள், சமணர் கோயில்கட்கும் மடங்கட்கும் பொருள் உதவி செய்தனர். சில அரசர் காலங்களில் சமணம் ஒழிந்த பிற சமயக் கோயில்கட்கு அரசாங்க உதவி நிறுத்தப்பட்டிருந்தது; அதனால் விழாக்கள் தடைப்பட்டன.[27]

கதம்ப அரசருள் சிலரும் சமணத்திற்கு ஆதரவளித்தனர். சாளுக்கிய அரசர்கள் சமணத்திற்கும் பேராதரவு அளித்தனர்.[28] முன் சொன்ன சமண ஆசாரியர்கள் அடிக்கடி வடநாடு சென்று சமயப் பிரசாரம் செய்து திரும்பியபொழுது, அவர்களுடன் வட இந்தியாவிலிருந்து புதிய சமணத் துறவிகள் தென்னாடு வந்திருக்கலாம். கி.பி. 7-ஆம் நூற்றாண்டினரான சம்பந்தர் தம் காலச் சமணரைப் பார்த்து, "வட மொழியும் தென் மொழியும் அறியாதவர்"[29] எனக் கூறியுள்ளதை நோக்க, அவர்கள் மேற்சொன்னவாறு தென்னாட்டிற்கு வந்த புதியவர்கள் என்பது பெறப்படுகிறது.

### வைணவ சமயம்

பல்லவர் பட்டயங்களில் உள்ள விஷ்ணுகோபன், குமார விஷ்ணு, சிம்ம விஷ்ணு போன்ற வைணவப் பெயர்கள் பல்லவருட் சிலரேனும் வைணவராக இருந்தனர் என்பதை உணர்த்தவல்லவை. விஜயஸ்கந்த வர்மனது மனைவியான சாருதேவி என்பவள், ஆந்திர நாட்டில் உள்ள தாலூராவில் இருந்த நாராயணன் கோயிலுக்கு நில தானம் செய்தாள்.[30] இளவரசன் விஷ்ணுகோப வர்மன், தன்னைப்

பரமபாகவதன் என்று பட்டயத்திற் கூறிக்கொள்கிறான்.[31] அவன் மகனான சிம்மவர்மன் II வெளியிட்ட பிகிராப் பட்டயம் (Pikira grant) பகவத் (விஷ்ணு) தோத்திரத்துடன் தொடங்குகிறது.[32] முதலாம் நந்திவர்மன் பட்டயம் அவனைப் பரமபாகவதன் என்று கூறுகிறது.[33] இரண்டாம் நந்திவர்மன் காலத்து உதயேந்திரம் பட்டயங்கள் சிம்மவிஷ்ணுவைப் **பக்தியாராதித விஷ்ணு சிம்ம விஷ்ணு** என்று குறிக்கின்றன.[34]

வட இந்தியாவில் சுங்கவம்ச ஆட்சி ஏற்பட்ட பிறகு, வைதிகர் செல்வாக்குப் பெற்றனர்; இராமாயண - பாரதங்கள் திருத்தி எழுதப்பட்டன; பிரமன், விஷ்ணு, சிவன் ஆகிய மூவரும் சமநிலையில் வைக்கப்பட்டனர். இராமனும் கிருஷ்ணனும் விஷ்ணுவின் அவதாரங்களாகக் கருதப்பட்டனர்; ஒருசாரார் சிவனை உயர்த்தினர்; மற்றொரு சாரார் விஷ்ணுவை உயர்த்தினர். கீதை முடிவான உருவெடுத்தது அக் காலத்திற்றான். கிருஷ்ணன் விஷ்ணுவின் முழு அவதாரம் என்று கருதப்பட்டான்; 'பகவான்' என்று அழைப்புண்டான். அவனுடைய கதைகள் பொது மக்களிடம் பரவின. அவன் வழிபாடு பாகவதமதம் எனப்பட்டது. அம் மதத்தைப் பின்பற்றியவர் பாகவதர் எனப்பட்டனர். அவன் வரலாற்றைக் கூறும் நூல் பாகவதம் எனப்பட்டது. வட இந்தியாவில் பேரரசர்களாயிருந்த குப்தர்கள் (கி.பி. 300-600) தங்களைப் பரமபாகவதர்கள் என்று கூறிக் கொண்டனர். அவர்கள் காலத்தில் பாகவத சமயம் நாடெங்கும் பரவியது. இலக்குமியை நாராயணனுடன் இணைத்து வழிபடும் முறையும் ஏற்பட்டது. குப்தர்கள் காலத்தில் புராணங்கள் பல எழுதப்பட்டன. அரசராலும் பிறராலும் சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் பெரிய கோயில்கள் கட்டப்பட்டன; விழாக்கள் முதலியன நடைபெற்றன. இங்ஙனம் வடநாட்டிற் சிறப்பாகப் பரவிய பாகவத மதம், மஹாராஷ்டிரத்திலும் தெலுங்கு நாட்டிலும் பரவியது. சாளுக்கியர் ஆட்சித் தொடக்கமான கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் - மங்களேசன் ஆட்சியில் சிவ - விஷ்ணு கோயில்கள் பாறைகளிலும் குடையப்பட்டன. சாளுக்கியர் விஷ்ணுவை வராக அவதாரத்தில் வணங்கினர்; வராகக் கொடியைத் தங்கள் கொடியாகக் கொண்டிருந்தனர்.[35]

இவ்வாறு வடநாட்டில் தோன்றிப் பையப் பையத் தென்னாட்டிற் பரவிய பாகவத சமயத்தையே மேற்சொன்ன பல்லவ அரசர்கள் பின்பற்றினர் என்பது அவர்கள் தங்களைப் 'பரம பாகவதர்கள்' என்று கூறிக்கொண்டதிலிருந்து நன்கு அறியலாம்.

# சைவ சமயம்

## பல்லவரும் சைவமும் (செப்புப் பட்டயங்களிலிருந்து)

சிவஸ்கந்தவர்மன், ஸ்கந்தவர்மன், ஸ்கந்த சிஷ்யன் போன்ற பெயர்கள் பல்லவருட் சிலர் சைவர் என்பதை உறுதிப்படுத்துகின்றன. ஸ்கந்த சிஷ்யன் (கி.பி. 5-ஆம் நூற்றாண்டு) திருக்கழுக்குன்றம் சிவன் கோயிலுக்குத் தானம் செய்தவன்.[36] பல்லவர் பட்டயங்கள் பலவற்றில் நந்தி (எருது) முத்திரை காணப்படுகிறது. போர்க்களங்களிலிருந்து விடுத்த பட்டயங்களில் மட்டுமே சிங்க முத்திரை இருக்கிறது. பிற்பட்ட பல்லவர் பட்டயங்களிலும் நந்தியே காணப்பட்டாலும், சாளுக்கியர் வராக முத்திரையைக் கையாண்டாற் போலப் பல்லவர் நந்தி முத்திரையைக் கையாண்டதாலும் பல்லவரது நாட்டுச் சமயம் சைவம் என்று கூறலாம்.[37] இம் முதற்காலப் பல்லவர் பட்டயங்கள், பெரும்பாலன நான்மறையாளர்க்குக் கிராமங்களும் நிலங்களும் அளிக்கத் தோன்றியனவேயாகும். சிவஸ்கந்த வர்மன் அக்நிஷ்டோமம், வாஜபேயம், அசுவமேதம் என்ற வேள்விகள் செய்தவன்.[38] இவற்றை நோக்க, இக் காலப் பல்லவர்களுட் பலர் பல ஊர்களில் கற்றுவல்ல பிராமணர்களைக் குடியேற்றியவர் என்பதும், வேத வேள்விகளைச் செய்தவர்கள் என்பதும் சைவ வைணவ சமயங்களை ஓரளவு வளர்த்தவர்கள் என்பதும் அறியலாம். இக் காலப் பல்லவர் பட்டயங்களிலிருந்து இந்த அளவே அறிய முடிகின்றது.

## பல்லவரும் சைவரும் (இலக்கியத்திலிருந்து)

'ஐயடிகள் காடவர் கோன் என்ற பல்லவ அரசர் பல நாடுகளை வென்றவர்; வட மொழிப் புலவர்; தமிழ்ப் புலவர்; சைவத்தைப் பரப்பினார்; முடிவில் அரசை வெறுத்து மகனுக்குப் பட்டமளித்துச் சிவத்தலங்களைத் தரிசித்துத் தரிசித்துத் தலத்துக்கொரு வெண்பாவாகப் பாடினார். அந்நூல் க்ஷேத்திர வெண்பா ஆகும்' என்பது பெரிய புராணக் கூற்று.[39] இவர் வடமொழிப் புராணத்தில் 'சிம்ஹாங்க, பாதசிம்ஹா பஞ்சபாத சிம்ஹா' என்ற பெயர்களை உடையவராகக் காண்கிறார். மேலும் இவர் மகன் பீமவர்மன் என்று அந்நூல் கூறகிறது. பல்லவர் பட்டியலில் பீமவர்மன், சிம்மவிஷ்ணு என்பவர் கட்குத் தந்தையார் மூன்றாம் சிம்மவர்மன் என்பது காண்கிறது. 'பஞ்சபாத' என்பதன் தமிழ்மொழி பெயர்ப்பே 'ஐயடிகள்'[40] என்று

காணப்படுவதால், இச் சிவனடியார் மூன்றாம் சிம்மவர்மனே என்பது அறிஞர் கருத்து.[41] இம் முடிபு பொருத்தமாயின், சிம்மவிஷ்ணு, (கி.பி.575-600) தந்தையாரான இவர் காலம் ஏறத்தாழக் கி.பி. 550-575 என்னலாம்.

சிம்மவர்மன் என்ற அரசன் தில்லைத் திருக்கோயிலுக்கு வந்து திருக்குளத்தில் நீராடியதால் தன் நோய் நீங்கி உடல் பொன்னிறம் பெற்றமையின், சிற்றம்பலத்திற்குப் பொன் வேய்ந்தான் என்று கோயிற் புராணம், சிதம்பர மான்மியம் என்னும் நூல்கள் கூறுகின்றன.[42] பல்லவர்க்குப் பின் கி.பி.10-ஆம் நூற்றாண்டில் முதற்பராந்தக சோழன் சிற்றம்பலத்திற்குப் பொன் வேய்ந்தான் என்பது தெரிகிறது.[43] கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பர், சிதம்பரத்தில் பொன்னம்பலம் இருந்ததைக் கூறுகிறார்.[44] தில்லை, சிதம்பரம் என்ற சொற்களே பல்லவர்க்கு முற்பட்ட நூல்களில் இல்லை. எனவே, சிதம்பரம் முதற்பல்லவர் காலத்தில் சமயச் சிறப்புப் பெற்ற இடமாயிற்று என்பது தெரிகிறது. இக்காலப் பல்லவருள் சிம்மவர்மன் என்ற பெயருடன் மூவர் காணப்படுகின்றனர். இரண்டாம் சிம்மவர்மன், பரம பாகவதானாகிய இளவரசன் விஷ்ணு கோபவர்மனுடைய மகன். அவன் பட்டயத்தில் விஷ்ணு துதி காணப்படுகிறது.[45]

முதலாம் சிம்மவர்மன் திருக்கழுக்குன்றம் சிவன் கோவிலுக்குத் தானம் செய்தவன் மகன். இவன் கி.பி. 436 முதல் 458 வரை ஆண்டனன் என்பது உறுதியாகத் தெரிகிறது.[46] இவனைப் பற்றி வேறு எந்தச் செய்தியும் தெரிவதற்கில்லை. மூன்றாம் சிம்மவர்மன் முன் சொன்ன ஐயடிகள் காடவர்கோன் ஆவர். அவர் பாடிய க்ஷேத்திர வெண்பாவில் இன்று 24 வெண்பாக்களே உள்ளன. ஒவ்வொரு வெண்பாவிலும் ஒரு சிவ க்ஷேத்திரம் குறிக்கப்பட்டுள்ளது. அந் நூலின் முதல் வெண்பா தில்லைச் சிற்றம்பலம் பற்றிக் கூறுகிறது. இதனைக் காண, அவர் பிறக்ஷேத்திரங்களை விடத் தில்லையையே முதலிடமாகக் கருதியவர் என்பது தெரிகிறது. ஐயடிகள் வரலாற்றையும் இம் முதற் செய்யுளையும் மேற்சொன்ன பிற காரணங்களையும் நோக்க, சிற்றம்பலத்திற்குப் பொன் வேய்ந்தவர் மூன்றாம் சிம்மவர்மனாக இருக்கலாம் என்று ஊகிக்க இடமுண்டாகிறது.

### க்ஷேத்திர வெண்பா

இது, 'இறக்குந் தறுவாயில் துன்பங்கள் நேருமுன் இன்ன தலத்து இறைவனை நினை', என்று நெஞ்சிற்கு அறிவுறுத்துவதாக அமைந்த 24 செய்யுட்களைக் கொண்ட நூல். இந்நூலில் குறிக்கப்பட்டுள்ள சிவத்தலங்கள் பின்வருவனவாகும்:-(1) தில்லை.

(2) குடந்தை (கீழ்க் கோட்டம்), (3) ஐயாறு, (4) ஆரூர், (5) திருத்துருத்தி (குற்றாலம், தஞ்சை மாவட்டம்), (6) திருக்கோடிகா, (7) பாண்டவாய்த் தென் இடைவாய் (பாண்டவாய் என்ற ஆற்றின் தென் கரையிலுள்ள இடைவாய்), (8) திரு நெடுங்களம், (9) குழித்தண்டலை (குளித்தலை), (10) ஆனைக்கா, (11) மயிலாப்பூர், (12) உஞ்சேனை மாகாளம், (13) வளைகுளம், (14) சாய்க்காடு (15) திருப்பாச்சிலாச் சிராமம், (16) சிராமலை, (17) மழபாடி, (18) ஆப்பாடி, (19) ஏகம்பம் (காஞ்சி), (20) திருப்பனந்தாள், (21) ஒற்றியூர், (22) திருக்கடவூர் மயானம்.

### *இக்கால நாயன்மார்*

சிம்மவிஷ்ணு மகனான மகேந்திரன் காலத்தில் வாழ்ந்தவர் அப்பர். அப்பருடன் வாழ்ந்தவர் சம்பந்தர். இந்த இருவராலும் அவர்கள் திருப்பதிகங்களிற் பாடப் பட்டவர் பலர். அப்பர் தம் தேவாரப் பதிகங்களில் (1) அப்பூதி அடிகள், (2) சண்டீசர், (3) கோச்செங்கணான், (4) சாக்கிய நாயனார், (5) கண்ணப்பர், (6) கணம்புல்லர், (7) சம்பந்தர், (8) அமர் நீதியார், (9) நமிநந்தி, (10) அரிவாள் தாயர் என்ற பதின்மரைப் பாராட்டியுள்ளார்.[47]

சம்பந்தர் தம் பதிகங்களில் (1) சண்டீசர், (2) கண்ணப்பர், (3) நமிநந்தி, (4) கோச்செங்கணான், (5) தண்டியடிகள், (6) புகழ்த்துணை, (7) முருகர், (8) சிறுத் தொண்டர், (9) நீல நக்கர், (10) மங்கையர்க்கரசி யார், (11) குலச்சிறையார், (12) திருநீலகண்ட யாழ்ப்பாணர், (13) நெடுமாறர் என்ற 13 பேரைப் பாராட்டியுள்ளார்.[48] அப்பர்-சம்பந்தர் தேவாரம் கொண்டும், பெரியபுராணம் கொண்டும் காணின், அப்பர்-சம்பந்தர் காலத்து அடியார் இவராவர். (1) அப்பர், (2) சம்பந்தர், (3) அப்பூதி, (4) முருகர், (5) சிறுத்தொண்டர், (6) நீலநக்கர், (7) குலச்சிறை, (8) மங்கையர்க்கரசியார், (9) நெடுமாறர், (10) குங்கிலியக்கலயர், (11) திரு நீலகண்ட யாழ்ப்பாணர். எனவே, முன் குறிப்பிட்ட அடியாருள் இவர்களை நீக்கினால், அப்பர் - சம்பந்தராற் பாடப்பட்டு அவர்கட்கு முற்பட்டவர் இவராவர்.

(1) கோச் செங்கணான், (2) சண்டீசர், (3) கண்ணப்பர், (4) சாக்கியர், (5) கணம்புல்லர், (6) அமர்நீதி, (7) அரிவாள் தாயர், (8) நமிநந்தி, (9) தண்டியடிகள், (10) புகழ்த்துணையர், இப் பத்துப்பேரும் அப்பர் - சம்பந்தர்க்கு முற்பட்ட காலத்தவர் ஆவர். ஆயின், இவர்கள் பெயர்கள் பழந்தமிழ் நூல்களிற் காணப்படாமையின், கோச்செங்கணான் உட்பட இவர் அனைவரும் முற்காலப் பல்லவர் காலத்தவர் எனக் கோடலே பொருத்தமாகும்.[49]

பெரிய புராணத்துட் கூறப்படும் விவரங்கள் கொண்டும், பிற சான்றுகள் கொண்டும் காண்கையில், வேறு சிலரும் அப்பர் - சம்பந்தர்க்கு முற்பட்டவராகக் காண்கின்றனர்.

1. **புகழ்ச் சோழர் :** உறையூரைத் தலைநகராகக் கொண்டவர். கொங்கர், குடகரை வென்றவர்; சைவத்தை வளர்த்தவர். கொங்கு - குடகு நாடுகளை வென்ற சோழப் பேரரசர் எவரும் மகேந்திரவர்மன் முதலிய பிற்காலப் பல்லவர் காலத்தில் இருந்திருக்க முடியாமையானும், இவர் பெயர் பல்லவர்க்கு முற்பட்ட தமிழ் நூல்களிற் காணாமையானும், இவர் முற்காலப் பல்லவர் காலத்தவராகக் கோடலே ஏற்புடையது.[50]

2. புகழ்ச்சோழரது யானையைக் கொன்று, அவரால் மதிப்புப் பெற்ற **எறிபத்த நாயனார்** காலமும் முன் சொன்னதே யாகும்.[51]

3. **கூற்றுவ நாயனார் :** இவர் களப்பிர மன்னர்; பல நாடுகளை வென்றவர். இவர் தமக்கு முடி சூட்டுமாறு தில்லைவாழ் அந்தணரை வேண்ட, அவர்கள், 'சோழர்க் கன்றிப் பிறர்க்கு முடி சூட்டோம்' என்று கூறி மறுத்து, அவரது சீற்றத்திற் கஞ்சிச் சேரநாடு புகுந்தனர்.[52] தில்லைவாழ் அந்தணர் களப்பிர அரசர்க்கு அஞ்சத்தக்க நிலையில் சோழர் வலியிழந்து நின்றனர் என்பது இதனால் தெரிகிறது. ஆதலால் கூற்றுவ நாயனாரும் இம் முற்காலப் பல்லவர் காலத்தவரேயாவர்.[53]

4. **மூர்த்தி நாயனார் :** இவர் மதுரை வாணிகர்; சிறந்த சிவபக்தர்; தினமும் சிவன் கோயிலுக்குச் சந்தனம் அரைத்துக் கொடுத்தவர். இவர் காலத்தில் பாண்டிய நாட்டைக் கவர்ந்த களப்ர அரசன், புறச்சமயச் சார்புடையவன். அவன் இவர்க்குச் சந்தனம் கிடைக்காதபடி செய்தவன்.[54] இக் குறிப்பால் இவரும் கடுங்கோனுக்கு முற்பட்ட காலத்தவராவர்.[55]

5. **ஐயடிகள் காடவர்கோன் நாயனார் :** இவரைப்பற்றி முன்பே கூறப்பட்டது.

6. **காரைக்கால் அம்மையார் :** 'இவர் தலையால் நடந்த பதியாதலின், திருவாலங்காட்டைச் சம்பந்தர் மிதிக்க அஞ்சி, ஊரின் வெளிப்புறத்தில் தங்கினார்' என்று சேக்கிழார் கூறலும்,[56] அதற்கு ஏற்ப, சம்பந்தர் பாடிய திருவாலங்காட்டுப் பதிகத்தின் முதற்செய்யுள் அதனைக் குறிப்பாக உணர்த்தலும்[57] நோக்க, இவ்வம்மையார் சம்பந்தர்க்கு முற்பட்டவர் என்பது தெரிகிறது. ஆதலால் இவரும் கி.பி. 7-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டவராவர்.

**7. திருமூலர் :** இவர் செய்த திருமந்திரம் என்னும் நூலை நன்கு ஆராய்ந்து, இவர் ஏறத்தாழக் கி.பி. 6-ஆம் நூற்றாண்டினர் ஆகலாம் என்று டாக்டர் இரமண சாஸ்திரி கூறியுள்ளார்.[58] மற்றோர் அறிஞரும் அந் நூலைப் பலபடி ஆராய்ந்து, இவர் கி.பி. 300-க்கும் 600-க்கும் இடைப்பட்டவராவர் எனக் கூறியுள்ளார்.[59]

## *இவர்கள் வரலாறுகள் உணர்த்தும் சைவ சமயச் செய்திகள்*

**கோச்செங்கணான் :** இவன் சிதம்பரத்தில் சிவனருளாற் பிறந்தவன்; பகைவரைவென்று பேரரசன் ஆனவன்; திருவானைக்கா முதலிய இடங்களில் பல சிவன் கோயில்களைக் கட்டினவன்; தில்லையில் மறையவர்க்கு (தில்லை வாழ் அந்தணர்க்கு) மாளிகைகள் கட்டிக்கொடுத்தவன்.[60] இவன் 70 சிவன் கோயில்களைக் கட்டினவன் என்றும், திருமாலை வழிபட்டவன் என்றும் திருமங்கையாழ்வார் கூறுகிறார்.[61] இவன் சிதம்பரத்தில் சிவனருளாற் பிறந்தவன் ஆதலின், தில்லைக் கோயிலைச் சிறப்பித்திருக்கக் கூடும்; தில்லைவாழ் அந்தணரைக் குடியேற்றி வீடுகள் அளித்திருக்கக் கூடும். முன் நூல்களிற் காணப்பெறாத தில்லைக்கோயில் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் அப்பர் முதலியோரால் 'கோயில்' என்றே சிறப்பாகக் குறிக்கப்பட்டதெனின், அது கோச்செங்கணான் காலமுதலே சிறப்படைந்து, தமிழகத்துக் கோயில்களில் தலைமணியாக விளங்கியதென்று கூறல் தவறன்று.[62]

**சண்டேசர் :** இவர் பிராமணச் சிறுவர்; கும்பகோணத்திலிருந்து 6 கல் தொலைவில் உள்ள சேய்ஞலூரினர். அதற்கு அருகில், இவர் பூசித்த லிங்கம் ஆப்பாடிக் கோயிலில் இருக்கிறது.[63] இவர் பூசைக்காக வைத்திருந்த பாற்குடத்தை உதைத்துத் தள்ளிய தந்தையின் காலை வெட்டிச் சிவனருள் பெற்றவர். சிவன் உமாதேவியுடன் வந்து இவர் முடியில் கொன்றைமாலை சூட்டி இவருக்குச் 'சண்டேசப்பதம்' அளித்தார்.[64] அச் சிறப்பால், சண்டேசர் உருவம் ஒவ்வொரு சிவன் கோயில் உட்பிரகாரத்திலும் தனிக் கோயிலில் வைக்கப்பட்டது; கோயில் தானங்கள் அவர் பெயருக்கே செய்யப்பட்டன; கோயில் சொத்துக்களுக்கு அவர் மேற்பார்வையாளராய்க் கருதப்பட்டார். இந்த உண்மையைப் பிற்காலப் பட்டயங்களையும் கல்வெட்டுக்களையும் கொண்டு அறியலாம். இவர் அப்பர் - சம்பந்தரால் மிகுதியாகப் பாடப்பட்டவர்.[65]

**கண்ணப்பர் :** இவர் வேடர்; கண்ணைப் பெயர்த்துச் சிவனது கண்ணில் அப்பிய இவரது பக்தி, அப்பர் முதலிய அடியார்

அனைவரையும் மதிக்கச் செய்தது; சம்பந்தர் இவரது விக்ரகத்தை மெய்மறந்து பணிந்தார்.[66] இவர் காலத்தில் காளத்திக் கோயிலில் ஒரு பிராமணர் ஆகம முறைப்படி பூசை செய்து வந்தார்.[67] கோவிலில் இருந்த கடவுளின் பெயர் 'குடுமித் தேவர்' என்பது; 'குடுமி' என்பதற்கு 'மலையுச்சி' என்பது பொருள்; மலையுச்சி நாதர் என்பது பொருள்.[68] இதனை அறியாது அவருக்குத் தலைமயிர் இருந்ததென்று கருதினாரும் உளர்.[69] கண்ணப்பர் தியாகத்தால், காளத்தி சிறந்த சிவத்தலமாகி விட்டது.[70]

**சாக்கியர் :** இவர் வேளாளர்; மத விசாரணைக்காகக் காஞ்சிபுரம் சென்றார்; பௌத்தரானார்; பௌத்த நூல்களை நன்கு ஆராய்ந்தார்; செய்வினை (கருமம்), செய்வான் (ஆத்துமா), அதன் பயன், சேர்ப்பான் (பதி) ஆகிய நான்கையும் விளக்கும் சைவ சமயமே தக்கதெனக் கண்டு, பௌத்த வேடத்தில் இருந்துகொண்டே லிங்க வழிபாட்டை மேற்கொண்டார்; தினந்தோறும் உண்பதற்கு முன் லிங்கத்தின் எதிரிற் சென்று மானத பூசை செய்து அதன் மீது ஒரு சிறிய கல்லைத் தம் அன்புக்கறிகுறியாகப் போட்டு வந்தார்.[71] அவர் பூசித்த லிங்கம் உள்ள கோயில் காஞ்சியில் வீரட்டாசம் எனப்படுகிறது.[72] இவர் அப்பரால் பாராட்டப்பட்டவர்.[73]

**கணம் புல்லர் :** இவர் தலயாத்திரை செய்து கொண்டே சிவன் கோயில்களில் விளக்கெரித்து வந்தார்; தில்லையில் காசின்றிக் கணம்புல்லை அறுத்து விற்று, எண்ணெய் வாங்கி விளக்கெரித்தார்; புல் விலையாகாதபோது அப்புல்லையே எரித்தார்; புல் கிடைக்காத போது தம் தலைமயிரையே எரித்து முத்தி பெற்றார்.[74] இவர் அப்பரால் பாராட்டப்பட்டவர்.[75]

**அமர் நீதியார் :** இவர் வணிகர்; பழையாறை என்னும் பதியினர்; திருவிழா நடந்த நல்லூரில் மடத்தைக் கட்டி அடியார்க்கு உணவு, உடை உதவியவர். பிராமண பிரமசாரி ஒருவர் இவர் மடத்தில் வந்து தங்கினார்.[76] இவர் அப்பரால் பாராட்டப்பட்டவர்.[77]

**அரிவாள் தாயர் :** இவர் வேளாளர்; தஞ்சாவூர் மாவட்டத்தில் (இப்பொழுது) திருத்துறைப்பூண்டியை அடுத்த கணமங்கலம் என்ற ஊரினர்; நாடோறும் உணவு சமைத்துச் சிவனுக்குப் படைத்து வந்தவர்; ஒரு நாள் கைதவறி அவ்வுணவு கீழே விழுந்ததால் வருந்தித் தம் கழுத்தை அறுக்க அரிவாள் எடுத்தார். சிவனால் தடுக்கப்பட்டார்.[78] இவர் பூசித்த கோவில் ஊட்டித் தண்டலையில் உள்ளது.[79] இவர் அப்பரால் பாராட்டப்பட்டவர்.[80]

**புகழ்த்துணையார் :** இவர் ஆதிசைவர்; கும்பகோணத்தை அடுத்த செருவிலிபுத்தூர்ச் சிவன் கோயில் அர்ச்சகர். கொடிய பஞ்ச காலத்தில் ஊரைவிட்டு ஓடாது சிவபூசை செய்து வந்ததால் சிவனால் பஞ்சம் தீரும் வரை நாடோறும் படிக்காசு தரப்பட்டவர்.[81] இவர் சம்பந்தரால் பாராட்டப்பட்டவர்.[82]

**எறிபத்தர் :** இவர் கருவூரினர்; சிவனடியார்க்குத் தொண்டு செய்து வந்தவர்; சிவன் கோயில்[83] ஆண்டார்[84] ஒருவர் பறித்துவந்த பூக்கள் இருந்த குடலையைப் புகழ்ச் சோழரது பட்டத்து யானை மிதித்து, ஆண்டாரையும் கீழே தள்ளிவிட்டதால் அந்த யானையையும் அதன் பாகரையும் தம் மழுவால் கொன்றவர்; அச் செயலுக்காகப் புகழ்ச் சோழரால் பாராட்டப்பட்டவர்.[85]

**புகழ்ச் சோழர் :** இவர் தம் நாட்டுக் கோயில்களில் பூசை சிறப்பாக நடக்க ஏற்பாடு செய்தவர்; தகடூர் அதியமானுடன் போர் செய்து தம் வீரர் கொணர்ந்த தலைகளில் ஒன்றில் சிறிய சடை இருந்ததைப் பார்த்து, சிவனடியார் ஒருவரைத் தம் வீரர் கொன்று விட்டனர் என்றெண்ணிப் பதறி நெருப்பில் வீழ்ந்து மாண்டவர்.[86]

**கூற்றுவ நாயானர் :** இவர் பேரரசர் என்பது முன்பே கூறப்பட்டது. இவர் சிவநாமத்தை (பஞ்சாக்ஷரம்?) நாவாற் செபித்தவர்; பல சிவன் கோயில்களில் திருப்பணி செய்தவர்.[87] இவர் காலத்தில் தில்லை வாழ் அந்தணர்கள் சோழர்க்கு முடிசூடும் பெருமை பெற்றிருந்தனர்.[88] அப்பெருமை கோச்செங்கணான் காலத்திருந்து ஏற்பட்டது போலும்!

**நமிநந்தி அடிகள் :** இவர் பிராமணர்; திருவாரூர்க் கோயிலில் விளக்கெரிக்க விரும்பி ஒரு வீட்டில் எண்ணெய் கேட்டார். அவ் வீட்டார் சமணர். அவர்கள், ''கையில் அனலையுடைய சிவனுக்கு விளக்கு ஏன்? வேண்டுமாயின், தண்ணீர் ஊற்றி விளக்கு எரியும்,'' என்றனர். நமிநந்தி சிவனை வேண்டி நீரால் விளக்கெரித்தார். அவர் பெருமையுணர்ந்த சோழ அரசன் அக் கோயிலுக்கு வேண்டியன அளித்து, அவரை மேற்பார்வையாளராக நியமித்தான். அக் காலத்தில் திருவாரூர்க் கோவில் பங்குனி உத்திரத் திருவிழா நடந்தது. சுவாமி திருவாரூரிலிருந்து மணலிக்குக் கொண்டு செல்லப்பட்டது. விழாவில் கலந்து கொண்டவருள் சாதிகளைப் பார்க்கலாகாது. அனைவரும் சிவகணங்களே என்பதை நாயனார் சிவனருளால் உணர்ந்தார்.[89] இவர் அப்பராலும் சம்பந்தராலும் பாராட்டப்பட்டவர்.[90]

**தண்டி[91] அடிகள் :** இவரும் பிராமணர்; பிறவிக் குருடர்; திருவாரூர்ச் சிவன் கோயில் குளக்கரையைச் சமணர்கள் பள்ளிகளும், பாழிகளும் கட்டிக் குறைத்தமையால், குளத்தைப் புதுப்பிக்க

முனைந்தார்; குருடர் இந்த வேலை செய்கிறார் என்பதைச் சமணர்கள் பரிகசித்தனர்; அவர் சிவனருளால் கண் பெறின், தாம் ஊரைவிட்டுப் போவதாக வாக்களித்தனர். சோழன் எதிரில் திருவருளால், தண்டி கண் பெற்றார்; சமணர் வெளியேறினர். அரசன் பள்ளிகளையும் பாழிகளையும் இடித்துக் குளக்கரையைச் செப்பனிட்டான்.[92]

**மூர்த்தி நாயனார் :** மூர்த்தி நாயனார் வணிகர். இவர் காலத்தில் பாண்டிய நாட்டைக் கவர்ந்த களப்பிர அரசன் சமணச் சார்புடையவன்; சிவன் கோயிலுக்குச் சந்தனம் அரைத்துக் கொடுத்துவந்த இவருக்குச் சந்தனக்கட்டை கிடைக்காமற் செய்தான்; சிவன் கோயிலைக் கவனிக்கவில்லை. அவன் இறந்த பிறகே சைவம் தலை தூக்கியது,[93] பல்லவர்க்கு முற்பட்ட முதுகுடுமிப் பெருவழுதி கொடுத்த தானமும் புறக்கணிக்கப்பட்டது.[94]

**காரைக்கால் அம்மையார் :** இவர் வணிகர் மரபினர்; காரைக்காலைச் சேர்ந்தவர்[95]; புனிதவதி என்ற பெயரினர்; இளமை முதல் சிவபூசையில் மிக்கவர். இவர் திருவாலங்காடு சென்று பதிகங்கள் பாடி, மோட்சத்தை அடைந்தவர். இவர் சிறந்த தமிழ்ப் புலவர்; (1) திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், (2) இரட்டைமணி மாலை, (3) **அற்புதத் திருவந்தாதி** என்ற மூன்று நூல்களைப் பாடியுள்ளார்.[95a]

**திருமூலர் : இவரைப் பற்றியும்** இவர் செய்த திருமந்திரம் பற்றியும் அடுத்த பிரிவில் விளக்கமாகக் கூறப்படும்.

**வேறு சில அடியார்கள் :** 63 நாயன்மார்களைக் குறிப்பிட்ட சுந்தரராற் குறிக்கப்படாதவர்கள் இவர்கள். இவர்கள் (1) நக்கீரதேவ நாயனார், (2) கபில தேவ நாயனார், (3) பரணதேவ நாயனார், (4) கல்லாடதேவ நாயனார் என்பவர்கள். இவர்கள் பாடல்கள் 11ஆம் திருமுறையிற் சேர்க்கப்பட்டுள்ளன.

**1. நக்கீரதேவ நாயனார் :** பல்லவர்க்கு முற்பட்ட நூல்களிற் குறிக்கப் பெறாத கண்ணப்பர் வரலாற்றை இவர் விரிவாகக் கூறலால், கண்ணப்பரைத் தவிர அப்பர் சம்பந்தரைக் குறியாமையால், இவர் காலம் அப்பருக்கு முற்பட்டதென்னலாம்.[96] இவர் பாடியன :- (1) கயிலை பாதி காளத்தி பாதித் திருவந்தாதி, (2) திரு ஈங்கோய் மலை எழுபது, (3) திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, (4) திருவெழு கூற்றிருக்கை, (5) பெருந்தேவ பாணி, (6) கோபப் பிரசாதம், (7) காரெட்டு, (8) போற்றித் திருக்கலி வெண்பா, (9) திருக் கண்ணப்ப தேவர் திருமறம், என்பன.[97]

நக்கீரதேவர் கோபப் பிரசாதத்தில் கண்ணப்பர், சண்டீசர், சாக்கியர், கோச்செங்கட்சோழர் இந்நால்வர் பக்தியையும் பாராட்டியுள்ளார். இவர் நூல்களில் பல தலப்பெயர்கள் இருத்தலைக் காண, இவர் காளத்தி, திருஈங்கோய்மலை, திருவலஞ்சுழி முதலிய தலங்களைத் தரிசித்தவராகக் காண்கிறார்.

2. **கபிலதேவ நாயனார் :** இவர் (1) சிவபெருமான் திரு அந்தாதி, (2) சிவபெருமான் இரட்டைமணிமாலை, (3) மூர்த்தி நாயனார் திருவிரட்டை மணிமாலை என்னும் மூன்று நூல்களைப் பாடியவர். இவற்றில் ஓரடியாரும் குறிக்கப் பெற்றிலர். பின்வந்தோர் அனைவராலும் குறிக்கப்பெற்ற கண்ணப்பரையும் குறியாமையின், இவர் கண்ணப்பர்க்கும் முற்பட்டவர் எனக் கொள்ளலாம். புறநானூறு போன்ற பழைய நூல்களில் உள்ள கபிலர் நடைவேறு; இவரது நடை வேறு. மேலும் இவர் அப்பழங்காலத்தில் இல்லாத அந்தாதி, இரட்டைமணிமாலை பாடியவர்; பழங்காலத்தில் இல்லாத விநாயகரைப் பாடியவர். எனவே, இவர் முதற்காலப் பல்லவர் காலத்தினரேயாவர்.

இவர் குறித்துள்ள சிவத்தலங்கள் பல. **இரட்டைமணி மாலையில்** (1) வெண்காடு, (2) முதுகுன்றம், (3) அதிகை, (4) ஒற்றியூர், (5) மறைக்காடு, (6) வாய்மூர், (7) தில்லை, (8) ஆரூர், (9) ஐயாறு, (10) பாண்டிக் கொடுமுடி, (11) கோவலூர், (12) சத்தி முற்றம் என்னும் பன்னிரண்டு தலங்களைக் குறித்துள்ளார்.[98]

**சிவபெருமான் திருவந்தாதியில்** குறித்துள்ள தலங்கள் இவையாகும். (1) ஆவூர், (2) ஆமாத்தூர், (3) கூடல், (4) சிராமலை, (5) நாரையூர், (6) வக்கரை, (7) கானப்பேர், (8) ஆக்கூர், (9) குரக்குக்கா, (10) கோகரணம், (11) குற்றாலம், (12) பழனம், (13) புகலூர், (14) களந்தை, (15) தலையாலங்காடு, (16) செங்குன்றூர்.[99]

இரட்டைமணி மாலையில் வந்துள்ள தலப் பெயர்கள் அந்தாதியில் வாராமை காணத்தக்கது. இந்த 28 தலங்களும் இவர் காலத்தில் சிறப்புற்றிருந்தன என்பது தெரிகிறது. இவர் ஒவ்வொன்றையும் தனித்தனிச் செய்யுளிற் கூறலை நோக்க, இவர் இத்தலங்களைத் தரிசித்தவராகலாம்.

**விநாயகர் வழிபாடு :** கபில தேவ நாயனார் விநாகர் மீது 20 செய்யுட்களைப் பாடியுள்ளார். விநாயகர் வழிபாடு பல்லவர்க்கு முற்பட்ட இலக்கியங்களில் இல்லை என்பது முன்பே கூறப்பட்டது. 'மூத்த பிள்ளையார்' என்ற பெயர் விநாயகர்க்குக் கபிலதேவர் காலத்தில்

இருந்தது போலும்! அஃதாவது, 'சிவனது மூத்த மகன் கணபதி' என்பது பொருள். 'கணங்கட்குத் தலைவன்' என்னும் பொருளில் 'கணபதி' என்னும் பெயரும், தொடங்கும் செயல்களை ஊறின்றி நிறைவேற்றும் தலைவன் என்னும் பொருளில் 'விக்கினேசுவரன்' என்னும் பெயரும் மூத்த பிள்ளையாருக்கு உண்டு. இக் கடவுளையே முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயமே காணா பத்தியம் எனப்படும். இக் கடவுள் வழிபாடு ஏறத்தாழக் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் உண்டானது என்னலாம்.[100]

3. **பரணதேவ நாயனார் :** இவர் பாடியுள்ளது சிவபெருமான் திருவந்தாதி என்னும் ஒரே நூலாகும். இதன்கண் ஆளப்பட்டுள்ள பேச்சு, உளரேல், உன்பால், உன்னை நீர், ஆனால்[101] முதலிய சொற்கள் புறநானூறு போன்ற பழைய நூல்களில் காணப் பெறாதவை. இவையே இப்புலவர் பல்லவர்க்கு முற்பட்ட காலத்தவர் அல்லர் என்பதை வலியுறுத்தப் போதியவை. ஆயின், நூறு செய்யுட்களைப் பாடிய இவர், கபிலதேவரைப் போலவே, கண்ணப்பர் உள்ளிட்ட எந்த அடியாரையும் தம் பாக்களிற் குறியாமையின், கண்ணப்பர்க்கும் முற்பட்டவர் எனக் கொள்ளலாம்.

**இவருடைய பாக்களிற் குறிக்கப்பட்டுள்ள சிவத்தலங்கள் இவையாகும் :** (1) இடைமருது, (2) புகலூர், (3) ஒற்றியூர், (4) ஆரூர், (5) பாசூர், (6) தில்லை, (7) ஆமாத்தூர், (8) ஏகம்பம், (9) ஆனைக்கா, (10) ஆலவாய், (11) கடல் நாகைக் காரோணம், (12) அண்ணாமலை, (13) ஆலந்துறை, (14) சோற்றுத்துறை, (15) வீரட்டம், (16) சிராமலை, (17) பூவணம், (18) புகலூர், (19) வெண்காடு, (20) சேதுக்கரை (இராமேசுவரம்), (21) கோளிலி, (22) ஆலங்காடு, (23) மறைக்காடு, (24) வலஞ்சுழி, (25) அம்பர் மாகாளம்,* (26) கழுமலம், (27) கழிப்பாலை, (28) செங்காட்டங்குடி, (29) மீச்சூர் (மீயச்சூர்), (30) கடவூர், (31) கானப்பேர், (32) காளத்தி, (33) மருகல், (34) சாய்க்காடு, (35) பைஞ்ஞீலி, (36) வஞ்சி, (37) ஈங்கோய் மலை.[102]

இவை தமிழகம் முழுவதிலும் இருக்கின்ற பதிகள், இவற்றைப் பரணர் கருத்துடன் குறித்திருத்தலால், இவர் இத் தலங்களைத் தரிசித்தவர் எனக் கோடலில் தவறில்லை.

கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பரும் சம்பந்தரும் தமக்கு முன்பே நாட்டில் பல கோவில்களில் பண்ணிறைந்த பாக்கள் பாடப்பட்டு வந்தன என்று குறித்துள்ளதைக் காண,[103] மேற்சொன்ன நக்கீரதேவர், கபிலதேவர், பரணதேவர், காரைக்கால் அம்மையார்,

ஐயடிகள் முதலியோர் பாடிய பாக்களும் அவற்றில் இடம் பெற்றிருத்தல் கூடியதே எனக் கருதல் தவறாகாதன்றோ?

பரணதேவர் பாக்கள் இரண்டில், **தில்லையில் பொன்னம்பலம் இருந்தது** என்ற செய்தி காணப்படுகிறது[104] நக்கீரர், கபிலதேவர் பாடல்களில் ஈற்றிற் காணாத பாடினோர் பெயர், நூல் படிப்பதால் பயன் என்பன, காரைக்கால் அம்மையார் பாடிய திருவந்தாதி யீற்றிலும் பரணதேவர் பாடிய திருவந்தாதி யீற்றிலும் இருப்பதும் கவனிக்கத் தக்கது. இக் குறிப்பு, பலரையும் பயன்கருதிப் படிக்கத் தூண்டும் - அதனால் சைவசமயம் வளரும் என்னும் கருத்துடன் தரப்பட்டதாகும். இம் முறையையே பின்வந்த சம்பந்தரும் சுந்தரரும் மிகுதியாகக் கையாண்டனர்.

**4. கல்லாடனார் :** இவர் கண்ணப்பதேவர் திருமறம் என்னும் பெயரால் 30 வரிகளைக் கொண்ட அகவற்பா ஒன்றுமட்டும், கண்ணப்பர் பக்தியை விளக்கிப் பாடியுள்ளார். அதில் வந்துள்ள உத்தரியம், தாமம், மஞ்சனநீர், நயனம் என்னும் வடசொற்கள் புறநானூறு முதலிய பழைய நூல்களிற் காணாமையால், இவர் அந் நூல்களின் காலத்தவர் அல்லர் என்னலாம்; கண்ணப்பரைத் தவிர, அப்பர், சம்பந்தர் போன்ற சைவம் வளர்த்த பெரியார்களைப்பற்றி ஒன்றுமே குறியாததால் அப்பர் - சம்பந்தர்க்கு முற்பட்டவர் என்னலாம். இதே கருத்தை அறிஞரும் கூறியுள்ளனர்.[105] கி.பி. 9-ஆம் நூற்றாண்டினரான மாணிக்கவாசகரைக்[106] குறித்துள்ள 'கல்லாடம்' பாடிய கல்லாடர் வேறு என்பது இங்கு அறியத்தக்கது.

**கடல் நாகைக் 'காரோணம்' :** நாம் இப் பகுதியிற் கண்ட சுமார் 70 கோயில்களுக்கும் இல்லாத புதுப் பெயராக இது ('காரோணம்' என்பது) காணப்படுகிறது. இதனைப் பரணதேவர் ஒருவரே குறித்துள்ளார். ஆதலின், இப் பெயர் ஆராய்ச்சிக் குரியது. திருவொற்றியூர்ச் சிவன் கோயிலில் படம் பக்கநாயக தேவர் கோயில் ஒன்று வீரராசேந்திரன் காலத்திற் (கி.பி. 1067-'8) கட்டப்பட்டது. அக் கோயில் மூர்த்தத்தின் பெயர் 'காராணை விடங்கர்' என்பது. அஃதாயின் ''காராணை'' என்பது ஒற்றியூரின் பழைய பெயராதல் வேண்டும். அது லகுலீச பாசுபதர் வாழ்ந்த இடமாகவும், அச் சமய முதல்வரான லகுலீசர் பிறந்த (பம்பாய் மாகாணத்துக்) 'கார்வான்' என்ற ஊர் நினைவாக அப் பாசுபதர் போற்றிய இடமாகவும் இருத்தல் வேண்டும். காராணை, காரோஹணம் என்பன இன்றைய 'கார்வான்' என்ற ஊரின் பழைய பெயர்கள். எனவே, காரோஹணத்தைச் சேர்ந்த லகுலீசர்க்கும்

திருவொற்றியூரில் வழிபடப்பட்ட படம்பக்க நாயகதேவர்க்கும் தொடர்பு இருத்தல் வேண்டும்.[107]

லகுலீசர் சுமார் கி.பி. 2-ஆம் நூற்றாண்டினர். அவர் தமக்கு முன் நீண்ட காலமாக நாட்டில் இருந்துவந்த பாசுபத சமயத்தைப் புதுப்பித்தவர். அவரால் புதுப்பிக்கப்பட்ட சமயம் லகுலீச பாசுபதம் எனப்பட்டது. சிவனே லகுலீசராக வந்தார் என்பது அவர்தம் அடியார் கருத்து.[108] அச் சமயத்தவர் தெற்கே பரவித் தங்கிய இடங்களில், மேற்சொன்ன திருவொற்றியூரைப் போல நாகையும் ஒன்றாகலாம். அங்கிருந்த கோவிலை*த் தங்கள் மதத் தலைவர் பிறந்த காரோஹணம் போலச் சிறந்ததாகக் கருதிப் பெயரிட்டிருக்கலாம். ‘காரோஹணம்’ என்பது நாளடைவில் காரோணம் என மருவுதல் இயல்பே; இதனால் நாகையில் லகுலீசபாசுபதர் இருந்தனர் என்பதை அறியலாம்.

### *முடிவுரை*

இதுகாறும் கூறப்பெற்ற செய்திகளால் கீழ்வரும் உண்மைகள் அறியப்படும் :-

1. முதற்காலப் பல்லவர் காலத்தில் (கி.பி. 300-600) பல்லவர் - களப்பிரர் - சோழர் - கதம்பர் - கங்கர் - சாளுக்கியர் போர்கள் நடைபெற்றன - பல்லவரிடமிருந்து காஞ்சி அடிக்கடி கை மாறியது - சோழபாண்டிய நாடுகள் உரிமை இழந்தன - உரிமைப் போராட்டங்கள் நடைபெற்றன. இவற்றால் நாட்டில் முற்றிலும் அமைதி இருந்தது என்று கூறக் கூடவில்லை. ஏறத்தாழக் கி.பி. 575-இல் சிம்ம விஷ்ணு காஞ்சியையும் கடுங்கோன் மதுரையையும் கைப்பற்றி ஆளத் தொடங்கினர்.

2. இக் காலத்தில் பௌத்த - சமண சமயங்கள் களப்பிரரால் மிக்க செல்வாக்குப் பெற்றன. சமணம் மிகுதியாகச் செல்வாக்குப் பெற்றது. சமண – பௌத்தர்கள் சிறந்த படிப்பாளிகள்; நாடெங்கும் சுற்றிச் சமயப் பிரச்சாரம் செய்தனர். வைதிகப் பிராமணரால் வேதங்களும் புராணக் கதைகளும் தமிழ் நாட்டில் பரவின. வடநாட்டுப் பாகவத மதம் தமிழகத்திற் பரவியது.

3. பல்லவர்கள் வைதிகப் பிராமணர்க்குக் கிராமங்களும் நிலங்களும் மானியமாக அளித்தனர்; சமணர் பௌத்தர்களையும் ஆதரித்தனர்.

4. கோச் செங்கணான் தில்லைக்குச் சிறப்பளித்தான்; தில்லை வாழ் அந்தணர்க்கு மாளிகைகள் கட்டித்தந்தான்; பல சிவன்

கோவில்களைக் கட்டினான். ஐயடிகள் காடவர்கோன் தில்லைச் சிற்றம்பலத்தைப் பொன் வேய்ந்தார். புகழ்ச்சோழர், கூற்றுவநாயனார் போன்ற அரசர்கள் சிவன் கோவில்களை ஆதரித்தனர். மூர்த்தியாரால் பாண்டி நாட்டில் சைவம் தழைத்தது.

5. ஐயடிகள், காரைக்கால் அம்மையார், நக்கீரதேவர், கபில தேவர், பரணதேவர், கல்லாட தேவர் என்ற அடியார்களின் பாடல்கள் ஏறத்தாழ 70 சிவன் கோவில்களைக் குறித்துள்ளன. அவர்கள் அத் தலங்கட்கு யாத்திரை செய்தவர்கள் என்றும் கூறலாம். அவர்கள் கண்ணப்பர் போன்ற சிறந்த அடியார்களைப் பற்றியும் பாடியுள்ளனர்.

6. பல கோயில்களில் ஆதிசைவர் (சிவமறையோர்) இருந்து ஆகமமுறைப்படி பூசை செய்யலாயினர். கோயில்களில் லிங்கம் இருந்தது. விழாக்கள் நடைபெற்றன; திருமேனிகள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன. கோயிலில் ஆண்டார் முதலிய தளிப் பரிவாரத்தார் இருந்தனர். கோயிலில் பண்ணுடைய தோத்திரப் பாடல்கள் பாடப்பட்டன.

7. பிராமணர், ஆதி சைவர், முதலிய எல்லா வகுப்பினரும் சிவனடியாராக இருந்தனர். பக்தி ஒன்றுக்கே மதிப்புத் தரப்பட்டது என்பது, கண்ணப்பரை அடியார் பாராட்டலிலிருந்து அறியலாம். அடியார் அரசராயினும் ஆண்டியாயினும் வேறுபாடு காட்டிலர்; சமயத் தவறுகள் அடியாரால் வன்மையாகக் கண்டிக்கப்பட்டன; அடியார்க்குள் சைவ சமயக் கட்டுப்பாடு இருந்தது. விழாக் காலங்களில் சில மடங்களிலேனும் அடியார்க்கு உணவு, உடை வழங்கப்பட்டன.

8. சமணர், சமயம் நேர்ந்தபொழுது சைவரைப் பரிகசித்தனர்; பூசல் இட்டனர்; நாட்டு அரசன் தலையிடக் கூடிய நிலையை ஏற்படுத்தினர்; மூர்த்தியார் வரலாறும் வேள்விக்குடிப் பட்டயச் செய்தியுமே பாண்டிய நாட்டில் சமணர் கொடுமைக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். சைவ சமய வளர்ச்சியைச் சமணர் தடுக்க முயன்றனர் என்பதற்கு இவ் விவரங்களே சான்றாகும்.

9. லகுலீசபாசுபதர் தமிழகத்தில் வாழ்ந்தனர். அவர்கள் வாழ்ந்த இடங்களில் நாகை ஒன்றாகும்.

10. காஞ்சி மத விசாரணை செய்யக்கூடிய அளவில் பல மதப் பெரியார்களைப் பெற்றிருந்தது; கல்வியில் மிக்க சிறப்புற்றிருந்தது.

## குறிப்பு விளக்கம்

1. காஞ்சிப் பல்லவர், 42,59,69,88.
2. E. I. 8. p.233.
3. E. I. 3. p.142.
4. பல்லவர் வரலாற்று ஆராய்ச்சி, பக். 19.20.23.
5. மேலது. ப. 18.
6. பாலி இலக்கிய வரலாறு, பகுதி-2, பக்.384-5 , 389.
7. சோழ I,பக். 121.
8. தமிழ் நாவலர் சரிதை, செ, -154-'7.
9. சோழர் I,பக். 121.
10. E. I. vol. 17. p.306.
11. மேலது.
12. S. I. I. II, p.356.
13. பாண்டிய அரசு, பக். 47-'8.
14. காஞ்சிப் பல்லவர், முகவுரை, ப-23.

14a. இது பற்றிய பல விவரங்களை எனது பெரிய புராண ஆராய்ச்சியிற் காணலாம், (பக்.86-94).

14b. திரிகடுகம் பக். 10.11, 75.

14c. ஆழ்வார்கள் காலநிலை, பக். 40.

14d. பல்லவர், பகுதி I.

15. E. I- I. PP. 24-26.
16. கதம்பர் குலம், பக். 31.40.
17. கங்கர் வரலாறு, பக். 11,27.
18. S. I. I. II P. 510; கங்கர் வரலாறு, பக். 35.39.
19. இதுவே சம்பந்தர் காலத்துப் போதி மங்கை. இங்கு இருந்த பௌத்தருடன் சம்பந்தர் வாதிட்டார் என்பது பெரிய புராணக் கூற்று.
20. சோழர் I, பக். 121.

20a. S.I.II.-32.

21. கங்கர் வரலாறு, பக். 191-199.
22. பல்லவர் ஆட்சியும் சமுதாய வாழ்க்கையும், பக் 227-230.
23. கங்கர் வரலாறு, ப. 193.
24. மேலது. ப. 231; நான் இவ்விடத்தை 20-4-'48 அன்று பார்வையிட்டேன்.
25. மேலது. ப. 227.
26. திரிகடுகமும் சிறு பஞ்ச மூலமும், ப. 23.
27. கங்கர் பக். 31-34.
28. சைவ சமயத் தோற்றமும் வளர்ச்சியும், பக். 299-303.
29. சம்பந்தர் தேவாரம், 3, 297,4.
30. E.I.6, 88.No.10.
31. I.A.5.P.50.
32. E.I.8.P.159.
33. E.I.3.P.142.
34. S.I.I.2,P.74, lines,11-12.
35. இந்து உட் சமயங்களின் வரலாறு, பக். 31-34.

36. E.I-3, P. 276. இக்கோயில் 7-ஆம் நூற்றாண்டில் தோன்றிய அப்பர் சம்பந்தராற் பாடப்பட்டது.
37. பல்லவர் ஆட்சியும் சமுதாய வாழ்க்கையும், ப. 41.
38. E.I.I.P.5.
39. ஐயடிகள் புராணம், 1-7.
40. இப்பெயர் வழக்குத் தமிழ் நாட்டில் இருந்தது என்பது, திருவாரூர்க்கு அருகில் உள்ள ஐயடிமங்கலம் என்னும் ஊர்ப் பெயரால் அறியப்படும். - திருவாரூர் (தருமபுர ஆதீன வெளியீடு), ப. 71.
41. மைசூர்ப் புதை பொருள் அறிக்கை, 1925, பக். 9-12.
42. சிதம்பரம், பக். 25, 27, 143.
43. திருவாலங்காட்டுப் பட்டயம்.
44. அப்பர் தேவாரம், பக். 165-'6.
45. E.I.8. P.'159.
46. காஞ்சிப் பல்லவர், பக். 66.

   * 'உச்சைனி' நகரத்தில் உள்ள 'மகாகாளம்' என்ற சிவன் கோயில், இது காளிதாசரால் சிறப்பிக்கப்பெற்ற பெருமையுடையது. மிக்க பழமையுஞ் சிறப்பும் உடையன எனக் கருதப்பட்ட பின்வரும் பன்னிரண்டு லிங்கங்களுள் மகாகாள லிங்கமும் ஒன்றாகும் :-

   1. கஜினி முகமது அழித்த சோமநாதபுரம்.
   2. கர்நூல் மாவட்டத்து ஸ்ரீசைலம்.
   3. அல்டாமவால் 1235-இல் அழிக்கப்பட்ட உச்சைனி மாகாளம்.
   4. நருமதைக் கரையில் உள்ற ஓங்காரநாதர்.
   5. உச்சைனியில் உள்ள அமரேசுவரர்.
   6. வங்கத்தில் உள்ள வைத்தியநாதர்.
   7. இராமேசுவரம்.
   8. ஆந்திராவில் உள்ள தகினியூர் - பீமசங்கரர்.
   9. 'நாசிக்' அருகில் உள்ள த்ரையம்பகேசுவரர்.
   10. கௌதமேசர் - கோயில்பற்றி ஒன்றும் தெரியவில்லை.
   11. காசி விஸ்வநாதர்.
   12. கேதாரிநாதர் - இமயமலை.

   இந்து உட் சமயங்கள்; ப. 59.

47. அப்பர் தேவாரம், பக். 22,74,75,76 (3),85,145,151,(2).
48. சம்பந்தர் தேவாரம், முகவுரை, ப. 23.
49. பெரிய புராண ஆராய்ச்சி, பக். 82,84.
50. சைவ சமயத் தோற்றமும் வளர்ச்சியும், ப. 183.
51. எறிபத்தர் புராணம், 24-25; 37-48.
52. கூற்றுவர் புராணம், 2-7.
53. சைவ சவயத் தோற்றமும் வளர்ச்சியும், பக். 180-181.
54. மூர்த்தியார் புராணம், 11-17.
55. சைவ சமய... ...ப. 168.
56. சம்பந்தர் புராணம், 1008.
57. மெய்கண்டான் திருமுறை மாநாட்டு, மலர், பக். 229-230.
58. திருமந்திரம், முகவுரை, ப, 27.
59. சைவ சமயத்... ... 'பக். 224, 253 To 275.

60. கோச் சோழர் புராணம், 12-16.
61. நாலாயிரம், திருநறையூர்ப்பதிகம், 1-10.
62. சைவ சமயத்... ..., பக், 201-'2.
63. நான் இவற்றை 30-3-49-இல் பார்வையிட்டேன்.
64. சண்டீசர் புராணம், 31-57.
65. அப்பர் தேவாரம், பக். 74,75,99,110,165,265,350,385 முதல் 472; சம்பந்தர் தேவாரம், பக். 78,100,167,327,511,530.
66. சம்பந்தர் புராணம், 1022.
67. கண்ணப்பர் புராணம், 135,138-140.
68. த.முதலியார் பெ-பு. பகுதி. 2,பக், 937.
69. சைவ சமய... ...பக். 163-'4.
70. நான் இதனை 20-3-48-இல் பார்வையிட்டேன்.
71. வழிபாட்டு நேரத்தில் ஒவ்வொரு தோத்திர முடிவிலும் புத்த தேவனடியில் ஒரு சிறு கல்லைப் போடுதல் திபேத் புத்தர்களிடம் காணப்படும் வழக்கம் என்பது இங்கு நினைவு கூரத்தக்கது.
72. நான் இக்கோயிலை 20-4-49-இல் பார்வையிட்டேன்.
73. அப்பர் தேவாரம், பக். 76, 423.
74. கணம் புல்லர் புராணம், 2-7.
75. அப்பர் தேவாரம், பக். 76 முதல் 336.
76. அமர் நீதியார் புராணம், 4-12.
77. அப்பர் தேவாரம், 145.
78. அரிவாள் தாயர் புராணம், 6-22.
79. நான் இக்கோயிலை 10-12-49-இல் பார்வையிட்டேன்.
80. அப்பர் தேவாரம், ப. 151.
81. புகழ்த்துணையார் புராணம், 1-6.
82. சம்பந்தர் தேவாரம், ப. 325.
83. நான் இக்கோயிலை 30-4-50-இல் பார்வையிட்டேன்.
84. கோயில் பிரகாரம் சுத்தம் செய்பவர், மெழுகுபவர், நந்தவனம் வைத்துப் பாதுகாப்பவர், கோயில் மண்டபங்களைத் தூய்மை செய்பவர் ஆண்டார் எனப்பட்டனர். 350 முதல் 1929; S.I.I.7.97. ஆண்டார்கள் பூப்பறித்த முறையினைப் பெரிய புராணம் விளக்கமாகக் கூறுகிறது. எறிபத்தர் புராணம், 9
85. எறிபத்தர் புராணம், 6-45.
86. புகழ்ச் சோழர் புராணம், 8-38.
87. கூற்றுவர் புராணம், 1,7.
88. மேலது. 4.
89. நமி நம்பியார் புராணம், 7-12.
90. அப்பர் தேவாரம், பக். 151' 382; சம்பந்தர் தேவாரம், 101.
91. 'பிரமசாரிய நிலையை நீங்கி இல்லற நிலையை அடையும் பிராமணன் மூங்கில் தண்டை ஏற்றுக்கொள்க' என்று தரும சூத்திரம் கூறுவதால், அத்தகைய தண்டைத் தாங்கிவந்த அந்தணருள் ஒரு சாரார்குடி 'வேயர்குடி' 'மூங்கிற்குடி' என்ற பெயர்கள் வழங்கியனவாதல் வேண்டும்:- கோவிந்தாச்சாரிய சுவாமி, ஆழ்வார் புளிவரலாறுகள், பக். 120. பெரியாழ்வார் 'வேயர் குடியினர்' எனப்பட்டனர். இங்ஙனம் தண்டு ஏந்திய அந்தண மரபினர் ஆதலின்

இச்சிவனடியார் தண்டி (தண்டு ஏந்தியவர்) எனப் பெயர் பெற்றனர் போலும்! கி.பி.7-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்த இராஜசிம்மன் அவைப் புலவர் தண்டி என்ற பெயர் பெற்றவர் என்பது கவனிக்கத்தக்கது. கி.பி. 8-ஆம் நூற்றாண்டினரான சங்கரர் ஏற்படுத்திய பத்து வகைச் சந்நியாசிகளுள் முதன்மையானவர் தண்டு ஏந்தித் திரிந்த காரணத்தால் தண்டிகள் (*Dandis*) எனப்பட்டனர். - இந்து உட்சமயங்கள், ப. 69.

92. தண்டியடிகள் புராணம், 4-24.
93. *மூர்த்தியார் புராணம், 11-25.*
94. சோழர், I, ப. 121.
95. காரைக்காலில் 6-4-58இல் இவர் கோயிலைப் பார்வையிட்டேன்.
95a. *காரைக்கால் அ. புராணம்,*5-65.
96. தமிழ் இலக்கிய வரலாறு, II, ப. 376.
97. திருமுருகாற்றுப்படையும் இவர் பெயரால் 11-ஆந் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளது.
98. செ.2,5,12,15,16,17,24,26,30,33,34,37.
99. செ.13,15,29,42,45,46,51,58,67,79,80,85,90,93,95.
100. இந்து சமய உட்பிரிவுகள், ப. 86.
101. செ. 9,24,11,51, etc.

   ✱'உஞ்சேனை மாகாளம்' மிக்க பழமையானது. அதன் நினைவாகத் தென் நாட்டில் 'அம்பர் மாகாளம்' ஏற்படுத்தப்பட்டது போலும்!
102. செ.4,5,6,8,15,17,21,22,27,35,38,39(2),40,44, 45,46(2),48,49,50,51,53,55,62,63,69,70,71,73, 80,90,93,95,96.
103. *சம்பந்தர் தேவாரம், பக். 539,550; அப்பர் தேவாரம்,* ப. 190.
104. செ. 17முதல் 86.
105. *தமிழ் இலக்கிய வரலாறு, II,* 376.
106. திருப்பதி வெளியீடு, தொ. 4, பகுதி2 (1943), பக். 152-182.
107. A.R.E.19,3;14,To 103.
108. இந்து உட்சமயங்கள், ப. 62.

   ✱ கச்சி ஏகம்பம், கச்சிக் காரோணம் என வரும் பெயர்களை நோக்க, முன்னது ஊர்ப் பெயரும் பின்னது கோயிற் பெயரும் என்பது தெரியலாம். அஃதாயின், காரோணம் என்பது கோயிற் பெயர் என்று கொள்ளுதல் பொருந்தும்.

# 4. திருமந்திரம்

## *திருமூலர் வரலாறு (பெரிய புராணத்திற் கண்டபடி)*

**தி**ருமூலர் நந்தியின் அருள் பெற்றவர்; பிராமணச் சிவயோகி; அணிமா முதலிய சித்திகளில் வல்லவர். இவர் பொதியமலையில் இருந்த அகத்தியரைக் காண விரும்பிக் கயிலாயத்திலிருந்து புறப்பட்டார்: வழியில் கேதாரம்,[1] நேபாளம்,[2] என்னும் இடங்களில் இருந்த சிவன் கோயில்களைத் தரிசித்துக் கங்கையில் நீராடினார்; பிறகு காசி,[3] விந்தம், ஸ்ரீசைலம்[4] ஆகிய இடங்களைத் தரிசித்தார்; பின்பு காளத்தி, ஆலங்காடு, ஏகம்பம் தரிசித்தார்; காஞ்சியில் இருந்த யோகமுனிவர்களுடன் அளவளாவினார்; பிறகு திருவதிகையைத் தரிசித்துத் தில்லையை அடைந்தார்; நடராஜரது ஆனந்தக் கூத்தைக் கண்டார்; பின்னர் காவிரியில் நீராடித் திருவாவடுதுறை அடைந்தார்; சிவனை வழிபட்டார்; பசுக்களின் துன்பத்தைப் போக்க, இறந்து கிடந்த மூலன் என்ற இடையன் உடம்பிற் புகுந்தார்; மூலன் மனைவியைக் கண்டதும் எட்டி நின்றார். அவ்வூர் அறிஞர்கள் இவரைப் பெரிய யோகி என்றதும் அவள் அகன்றாள். பிறகு திருமூலர் தமது சொந்த உடம்பை விட்ட இடத்தில் தேடினார். அஃது அகப்படவில்லை. அப்போது இவர், 'ஆகமப் பொருளைத் தமிழ்ப்படுத்த வேண்டும் என்பதற்காகக் கடவுள் தம் உடலை மறைத்து விட்டார், என்பதை உணர்ந்தார்; பிறகு திருவாவடுதுறை (இது கோயில் பெயர்) மேற்குப் பக்கத்தில் அரசமரத்தடியில்✱ யோகத்தில் இருந்து மூவாயிரம் பாடல்களைக் கொண்ட திருமந்திரத்தைச் செய்தார்.[5] இவரது இயற்பெயர் தெரியவில்லை. கூடுவிட்டுக் கூடு பாய்ந்ததால் இவர் பெற்ற பெயர் மூலன் என்பது.

## *திருமந்திரமும் காஷ்மீரச் சைவமும்*

''திருமூலர் கயிலையிலிருந்து வந்ததாகக் கூறப்படுகிறது. 'கயிலாஸ்' என்பது காஷ்மீரத்திற்கு வடகிழக்கில் உள்ள பெரிய மலைத் தொடரைக் குறிப்பது. காஷ்மீரத்தில்தான் ஆகமாந்தா என்னும் சைவ சித்தாந்தம் தோன்றியது. அஃது 28 சிவாகமங்களின் சத்தாகும். வேதங்கள், உபநிடதங்கள் இவற்றில் மறைந்து கிடக்கும் உண்மைகளை விளக்கிக் கூறுவனவே ஆகமங்கள். சைவ சித்தாந்தம்

காஷ்மீரில் பிரத்ய பிஞ்ஞான தரிசனம் எனப்பட்டது. அதுவே தென்னாட்டில் **சுத்த சைவ தரிசனம்** எனப்பட்டது. சைவ சித்தாந்தத்திற் கோயில் வழிபாடு புறச் சடங்குகளில் ஒன்றாக வற்புறுத்தப்படுகிறது.

ஆகமாந்த உண்மைகளைத் திருமூலர் திருமந்திரம் எடுத்துக் கூறுகிறது; திருமந்திரத்திற்கும் காஷ்மீரத்தில் தோன்றிய பிரத்ய பிஞ்ஞான தரிசனத்திற்கும் ஒருமைப்பாடு காணப்படுகிறது. திருமூலர் கயிலாயத்திலிருந்து வந்தவர் என்று வரலாறு கூறுகிறது. இவற்றை நோக்க, பிரத்ய பிஞ்ஞான தரிசனக் கருத்துக்கள் காஷ்மீரத்தில் சிறப்புற்றிருந்த காலத்தில், திருமந்திரம் செய்யப் பட்டதென்பது தெளிவு.

இச் சைவத் துறையில், சிறந்த ஆசாரியர் இருவர் தோன்றினர்; ஒருவர் 'சிவதிருஷ்டி' என்ற நூலைச் செய்த சோமநாதர்; 'பரமார்த்த சாரம்' என்ற நூலைச் செய்த அபிநவகுப்தர் மற்றொருவர். இவர் கி.பி. 10-ஆம் நூற்றாண்டினர். திருமூலர் இவ்விருவருக்கும் முற்பட்டவர்.[6]

### *திருமந்திரச் செய்திகள்*

**திருமந்திரம்** ஒன்பது பகுதிகளாக உள்ளது. ஒவ்வொரு பகுதியும் ஒரு **தந்திரம்** எனப் பெயர் பெறும். ஒவ்வொரு தந்திரத்திலும் கூறப்பட்டுள்ள செய்திகளை ஒருவாறு இங்கு அறிய முயல்வோம். திருமூலர் காலத்துத் தமிழகத்தில் சைவ சமயம் இருந்த நிலையை உணர இச் செய்திகள் பெருந்துணை புரியவல்லவை.

1. **முதல் தந்திரத்தில்** யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை, இளமை நிலையாமை, கொல்லாமை, புலால் உண்ணாமை, காம அடக்கம், அந்தணர் ஒழுக்கம், அரசன் கடமை, அறஞ் செய்தலின் சிறப்பு, அன்பை வளர்த்தல், பிறர்க்கு உதவி செய்தல், கற்றோரிடமிருந்தும் நூல்களிலிருந்தும் அறிவை வளர்த்தல், மனத்தை விருப்பு வெறுப்புக்களிற் செல்ல விடாமை போன்ற அறிவுரைகள் தரப்பட்டுள்ளன.

2. **இரண்டாம் தந்திரத்தில்** அகத்தியர் தென்னாடு போந்தது, சிவனுடைய எட்டு வீரச் செயல்கள், லிங்கத்தின் தோற்றம், தக்கயாகம், பிரளயம் பற்றிய புராணக் கதைகள் குறிக்கப்பட்டுள. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பன சிவனுடைய ஐந்தொழில்கள் என்பதும், சக்தி, சிவன் விளையாட்டால் உண்டான ஜீவர்கள், விஞ்ஞானகலர், சகலர், பிரளயாகலர் என்னும் மூவகையினர் என்பதும், அவருள் மதிக்கத்தக்கவர் யாவர் என்பதும், விளக்கப்பட்டுள.

கோயில்களை அழிப்பது தீது, சிவ நிந்தை தீது, அடியார் நிந்தை தீது, என்பன பற்றியும், பொறையுடைமை, பெரியாரைத் துணைக்கோடல் என்பன பற்றியும் குறிக்கப்பட்டுள்ளன.

3. **மூன்றாம் தந்திரம்** முழுவதும் யோகத்தைப் பற்றியது; ஆனால் பதஞ்சலி கூறும் யோக முறையன்று, இயமம் முதலிய எண்வகை யோக முறைகளும் அவற்றால் அடையும் பயன்களும் பிறவும் கூறப்பட்டுள.

4. **நான்காம் தந்திரம்** மந்திர சாத்திரம் அல்லது உபாசன மார்க்கத்தைப் பற்றியது. அஜபாமந்திரம், பைரவி மந்திரம் கூறப்பட்டுள. திரு அம்பலச் சக்கரம், திரிபுர சக்கரம், ஏரொளிச் சக்கரம், பைரவச் சக்கரம், சாம்பவி மண்டலச் சக்கரம், புவனாபதி சக்கரம், நவாக்ஷரி சக்கரம் என்பவை பற்றிய விவரங்கள் தரப்பட்டுள்ளன.

5. **ஐந்தாம் தந்திரத்தில்** சுத்தசைவம், அசுத்தசைவம், மார்க்க சைவம், கடும் சுத்த சைவம் என்பன பேசப்பட்டுள; பிறகு சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன குறிக்கப்பட்டுள; பின்னர்ச் சன்மார்க்கமும் அதன் பிரிவுகளான **சகமார்க்கம்,** (கடவுளை நண்பராகக் கருதுதல்), **சத்புத்ர மார்க்கம்** (கடவுளைத் தந்தையாகக் கருதுதல்), **தாசமார்க்கம்** (கடவுளை எசமானனாகக் கருதுதல்) என்பனவும் விளக்கப்பட்டுள. அடுத்து, சாலோகம் (இறைவுலகில் வாழ்தல்), சாமீப்யம் (இறைக்கு அண்மையில் இருத்தல்), சாரூப்யம் (இறையுடன் சமநிலை பெறுதல்), சாயுச்யம் (இறையுடன் இரண்டறக் கலத்தல்) என்பன விளக்கப்பட்டுள. பிறகு கடவுள் சக்தி, மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம் என்னும் நான்கு முறைகளில் இறங்குவதாகக் கூறப்பட்டுள்ளது. புறச் சமயங்கள் கண்டிக்கப்படுகின்றன; உட் சமயங்கள் ஏற்கப்படுகின்றன.

6. **ஆறாம் தந்திரத்தில்** உயிர் நாடியாக உள்ளவை சிவகுரு தரிசனம், அவனது திருவடிப் பேறு, ஞானத்தின் பொருள், தெரிபவன், தெரியப்பட்ட பொருள், துறவு, தவம், அருளிலிருந்து தோன்றும் ஞானம், தக்கவர் (பக்திக்குப் பக்குவமுடையவர்) இலக்கணம், தகாதவர் இலக்கணம், திருநீற்றின் பெருமை என்பவையாகும்.

7. **ஏழாம் தந்திரத்தில்** ஆறு ஆதாரங்கள், ஆறு லிங்கங்கள் (அண்ட லிங்கம், பிண்ட லிங்கம், சதாசிவ லிங்கம், ஆத்ம லிங்கம், ஞான லிங்கம், சிவ லிங்கம்), சமயச் சிறப்புப் போதனை, ஆத்மாவில் உள்ள சிவனுக்கியற்றும் வழிபாடு, குருவாகிய சிவனுக்கியற்றும் வழிபாடு, மாகேசுவர பூசை, அடியார் பெருமை, உணவு விதி, பலவகை முத்திரைகள், பலவகை யோகிகள் இறப்புக்குப் பின் அடையத்தகும்

உலகங்கள், அவர்கள் தங்கள் உடலங்களை விடும் முறை, இடகலை, பிங்கலை நாடிகள், பிராண - புருஷ - அணு, ஜீவ - பசு, போதம் என்னும் ஆறு, ஐம்புலன்களை அடக்கும் முறை, குருவின் வருணனை, கூடா ஒழுக்கம் முதலியன பேசப்பட்டுள்ளன.

8. **எட்டாம் தந்திரத்தில்** சிவத்திற்கலக்க உடம்பை விடும் முறை, 11 அவத்தைகள், ஞானோதயம் முதலியன குறிக்கப் பட்டுள்ளன. சித்தாந்தத்தின் விளக்கம், பிற சமயங்கட்கும் அதற்கும் உள்ள தொடர்பு, பதி-பசு-பாச விளக்கம், பிரமனும் மாலும் காணாத சிவன் என்பதற்குரிய தத்துவ விளக்கம், மூன்று குற்றங்கள், (காமம், வெகுளி, மயக்கம்), மூன்று பதங்கள் (தத், த்வம், அசி), மூன்று பரங்கள், மூன்று துரியங்கள், மூன்று முக்திகள், மூன்று ஸ்வரூபங்கள், முக்கரணங்கள், மூன்று சூனியங்கள் என்பன அடுத்துக் குறிக்கப்பட்டுள.

காரிய - காரண உபாதிகள், உபசாந்தம், புறங்கூறாமை, சிவநிந்தை ஒழிப்பு, அகத்தாமரை பற்றிய வருணனை, மோட்சநிந்தை கூடாது, தத்துவ மசி, அகம் பிரம்மாசி என்னும் மகா வாக்கியங்களைப் பற்றிய ஆராய்ச்சி, விஸ்வக்ராசம், உண்மை பேசல், ஆசையை ஒழித்தல், பக்தி வளர்த்தல், தூய்மை யடைவதிலும் விடுதலை பெறுவதிலும் நாட்டமுறுதல் முதலியன அடுத்துக் குறிக்கப்பட்டுள்ளன.

9. **ஒன்பதாம் தந்திரத்தில்** குரு, குருமடம், குரு தரிசனம், வைணவ சமாதி, ஸ்தூல, சூக்கும, அதிசூக்கும பஞ்சாக்ஷரங்கள் பேசப்பட்டுள; சிவானந்த நடனம், சுந்தர நடனம், பொன்னம்பல நடனம், **பொன்தில்லை நடனம்**, ஆச்சரிய நடனம் என்பன விளக்கப்பட்டுள; ஞானம் மலர்தல், உண்மை ஞானத்தின் சிறப்பு முதலியன நன்கு கூறப்பட்டுள்ளன.[7]

## *திருமூலர் குறித்த சமயப்பாதைகள்*

1. திருமூலர் குறித்த **யோகமுறைக்கும்** பதஞ்சலி குறித்த யோக முறைக்கும் நிரம்ப வேறுபாடுகள் உள. அவை பதஞ்சலிக்குப் பிறகு நாட்டில் தோன்றியவை என்னலாம். அவற்றைத் திறம்பட விளக்குவதிலிருந்து திருமூலர் ஒரு பெரிய யோகி என்பதை உணரலாம்.[7a]

2. திருமூலர் குறித்த **மந்திரோபாசன முறை** சாக்த மதத்திலிருந்து கிளைத்தது என்னலாம். சக்தியைப் பெண்மைக்

கடவுளாக நெடுங்காலமாக மக்கள் வழிபாட்டு வந்தனர்; கடவுளைப் பாதி ஆண்-பாதி பெண்ணாகக் கருதி வழிபட்டனர். அச் சக்தி, விஷ்ணுவிடத்தில் இலக்குமியாகவும், சிவனிடத்தில் பார்வதி அல்லது உமை வடிவத்திலும் (அமைதி நிலையில்), துர்க்கை (காளி, சாமுண்டி, பைரவி, விந்திய வாசினி) (கடுமையான நிலையில்) ஆகவும் பிரமனிடத்திற் சரசுவதியாகவும் இணைக்கப்பட்டது.

இச் சக்தி பிற்காலப் புராண காலத்தில் தனித் தனிக் கடவுளுக்கு மனைவியாக முறைப்படுத்தப்பட்டது. பின்பு இச் சக்தியைத் துர்க்கையாகக் காண்கிறோம்; அவள் எருமைத்தலை அசுரனைக் கொன்றவளாகவும், விந்த மலையின் அதி தேவதையாகவும், இறைச்சியும் மதுவும் படையற் பொருளாகப் பெறும் தெய்வமாகவும் காண்கிறோம். இங்ஙனம் ஏறத்தாழக் கி.பி. 500-இல் **அம்மன் வணக்கம்** தனி வணக்கமாக ஏற்பாடாயிற்று. அம்மனை முழுமுதற் கடவுளாக வணங்கும் மக்களும் ஏற்பட்டனர். சக்தியையே முழுமுதற் கடவுளாக வணங்கும் இவர்கள், **சாக்தர்** எனப்பட்டனர்; இவர் சமயம் **'சாக்தம்'** எனப்பட்டது. இது சைவத்திலிருந்து தோன்றியதேயாகும். யோக வகைகள், மந்திர சாதனைகள் என்பன இத் துறையைச் சார்ந்தவை. மந்திரம், யந்திரம், முத்திரை, சக்கரம் என்பன இத் துறையில் சித்தியடையச் சொல்லப்பெறும் வழிகளாகும்.[8]

**3. வேதாந்தம் ஆறு:** நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், மீமாம்சை, வேதாந்தம்.[8a]

**4. சித்தாந்தம் ஆறு:**[9] பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், பைரவம், சைவம்.

இந்த அறுவகைச் சித்தாந்த சைவ முறைகளும் சைவத்தின் பிரிவுகள் ஆகும். ஆதலின், இங்கு இவை பற்றி ஓரளவு அறிதல் நல்லது. இவற்றைத் திருமூலர் குறிப்பதால் அவர் காலத்தில் தமிழகத்தில் இப் பிரிவினர் இருந்தனர் என்பது தெளிவாகிறது.

**(1) பாசுபதம்:-** ஆன்மாக்களுக்கு ஆணவ மலம் இல்லை; மாயை, கன்மம் என்ற இரண்டால் பந்தமுற்று, இன்ப துன்பங்களை அனுபவிக்கும் இவற்றில் வெறுப்புற்றுச் சாத்திர முறையானே தீக்கை பெற்றவனிடம் ஈசனது ஞானம் போய்ப் பற்றும். அப்பொழுது ஈசன் தன் குணங்களை அவன்பால் பற்றுவித்துத் தன் அதிகாரத்திலிருந்து ஓய்வு பெற்றிருப்பான் என்பது பாசுபதர் கொள்கை.[10] இவர்கள் தங்கள் உடம்பில் சாம்பலையும் களிமண்ணையும் பூசுவர்; கருப்புடைகளை அணிவர்; தலைமயிர் முடியிடாமலும் முடியிட்டும் கொள்வர்; இவர்கள்

இதிகாச கால முதலே நாட்டில் இருப்பவர்; பசுபதி வழிபாட்டினர்; லிங்க வழி பாட்டினர்; சிவனுடன் கணங்களையும், பேய்களையும் இணைத்து வழிபட்டனர்; சாதி வேறுபாடு அற்றவர்; ஜபம் தபம் இவற்றில் ஈடுபட்டவர். இவர்தம் முகத்திலும், தோளிலும், கொப்பூழிலும் மார்பிலும் லிங்க முத்திரை இடப்பெற்றிருக்கும்.[11] உயர்ந்த பாசுபத விரதம் 'ஞானம்' எனப்படும். சிவன் யோக ஆசிரியனாக வந்து, அந்த ஞானத்தைக் குரு, ததீசி, அகத்தியர், உபமந்யு முனிவர்க்கு உபதேசித்தான். அந் நால்வரும் பலர்க்கும் அந்த ஞானத்தை உரைத்தனர். அச் சீடர்களிடமிருந்து குருமார் பலர் தோன்றினர். இச் சமயத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன வற்புறுத்தப்படுகின்றன. பாசுபத யோகிக்குச் சிவன் காட்சியளிப்பான். அநுஷ்டானமே பாசுபத சமயத்தில உயிர் நாடியானது.[12]

**(2) மாவிரதம்:-** (மஹாவ்ரதம்)-'பாசுபதக் கொள்கையில் கூறப்பெற்ற ஆன்மாக்கள் பந்தமுற்றுச் சுக துக்கங்களை அநுபவிக்கும். சாத்திரத்திற் கூறும் முறையே தீக்கை பெற்று, எலும்பு மாலை அணிதல் முதலிய சரியைகளில் வழுவாது ஒழுகினவர் முத்தராவர்; முத்தருக்குச் சிவனோடு சமமாக எல்லாக் குணங்களும் உற்பத்தியாம்' என்பது மாவிரதியர் கொள்கையாகும்.[13] நெற்றியில் மூன்று கீற்றுகளாக விபூதி அணிந்தனர்; உடல் முழுவதும் நீறு பூசினர்; தலைமயிர் உச்சியில் எலும்பு மணிகள் கட்டியிருந்தனர்; காதில் எலும்பு மணிகளைக் குண்டலங்களாக அணிந்தனர்; கழுத்தில் எலும்பு மணித்தாழ்வடம்- ஒரு முன்கையில் எலும்பு மணி கோத்த கயிறு கட்டியிருந்தனர்; தோளில் யோகப்பட்டிகையும் கறுப்பு மயிர்க் கற்றையாலான பூணூலும் அணிந்தனர்; கோவணமும் அதன்மேல் அசைந்தாடும் சிறியவுடையும் அணிந்தனர்.[13a]

மண்டையோட்டில் பிச்சையேற்று உண்பது, பிணச் சாம்பலை உடம்பு முழுமையும் பூசிக்கொள்ளுதல் முதலியன மாவிரதிகள் கடுமையாகக் கையாண்டனர். இவர்களைப் பற்றி இராமநுசர் கூறியுள்ளார்.[14]

**(3) காபாலம்:-**'ஆன்மாக்களின் இயல்பும் பந்த இயல்பும் மாவிரதியர் கொண்டவாறேயாம். சாத்திர முறையே தீக்கை பெற்றுப் பச்சைக்கொடி ஒன்று கைக்கொண்டு, நாடோறும் மனிதர் தலை ஓட்டில் ஐயம் ஏற்று உண்பவர் முத்தராய், சிவன் ஆவேசித்தலால் எல்லாக் குணங்களும் பெற்றுச் சிவசமமாவர்' என்பது காபாலிகர் கொள்கையாகும்.[15] காபாலிகம் பாசுபதம் போலப் பழமையானது.

காபாலிகர் சிவனைக் கொடிய பைரவ வடிவத்தில் வணங்கினர்; உடம்பில் நீறு பூசினர்; தலை மாலை அணிந்திருந்தனர்; ஜடை உடையவர்; புலித் தோலாலான கௌபீனத்தை அணிந்தனர்; இடக்கையில் கபாலம் ஏந்தியிருந்தனர். இவர்கள் நரபலியிலும் ஈடுபட்டிருந்தனர்.[16]

**(4) வாமர் :-** 'சடமும் சித்துமாகிய அனைத்தும் சக்தியின் பரிமாணமே. வாமநூல் விதித்த முறையே ஒழுகிச் சக்தியில் லயித்தலே முத்தி' என்பது வாம மார்க்கத்தினர் கொள்கை. இவர்கள் 'சாக்தர்' எனப்படுவர்.[17] இம் மதம்பற்றி முன்னரே கூறப்பட்டது.

**(5) பைரவர்:-** 'பெரும்பாலும் வாம மதத்தோடு ஒத்துச் சிறுபான்மை ஆசாரங்கள் வேறுபட்டுப் பைரவனே பரம்பொருள் எனக் கொண்டு, பைரவ மதத்திற் சேர்வதே முத்தி' என்பது பைரவ மதத்தினர் கோட்பாடு.[18]

**(6) சைவம் :-** சிவனையே முழு முதற் கடவுளாகக் கொண்டு, சரியை முதலிய நான்கினாலும் அவனை அடையப் பாடுபடும் சமயமே சைவம்; பதி, பசு, பாசம் என்னும் மூன்றையும் ஒப்புக்கொண்டது. ஆகம வழிப்படி இதனைப் பின்பற்றியவர் மாஹேசுவரர் எனப்பட்டனர்[19].

**(7) வீரசைவம் :-** திருமூலர் லிங்கபுராணத்தின் உட்பொருளை, விளக்கியுள்ளார்.[19a] அது வீரசைவ முனிவர்களால் (வீரமாஹேஸ்வரர்) பெரிதும் மதிக்கப்படுவதாகும். அவர்களால் பெரிதும் மதிக்கப்படும் வீரம், வாதுளம் என்னும் இரண்டு ஆகமங்களையும் பாராட்டியுள்ளார். வீரமாஹேஸ்வரரின் சிறப்புக் கொள்கைகளில் ஒன்றான சட்ஸ்தல விவேசனம் என்பதன் அரிய பொருள்களைத் தெளிவு படுத்தியுள்ளார்.[20] எனவே, திருமூலர் காலத்தில் வீரசைவம் நாட்டில் இருந்தது என்பதை நன்கறியலாம். வீரசைவர் அல்லது வீரமாஹேஸ்வரர் அல்லது லிங்காயத்துகள் என்பவர் சிவனை மட்டுமே (லிங்கவடிவில்) வழிபடுவர். வீரசைவர் லிங்கத்தை மார்பில் தொங்கவிட்டிருப்பர். சிவசக்தி கடவுளாகவும் ஆன்மாவாகவும் பிரிந்துள்ளது. நெறி வழுவாது பக்தி செலுத்தலே சிவனை அடையும் வழி என்பது இவர்கள் நம்பிக்கை. இச் சமயத்தை முதலில் தோற்றுவித்தவர் துறவிகள் ஐவர். ஒவ்வொருவரும் ஒரு மடத்தின் தலைவராவர். அம் மடங்கள் கேதாரம், ஸ்ரீ சைலம், பெலெஹல்தர், (மேற்கு மைசூரில் உள்ளது), உச்சைனி, காசி என்ற இடங்களில் இருந்தன.

வீரமாஹேஸ்வரர் வேதங்களை ஒப்புக்கொள்ளாதவர்; சாதி வேறுபாடுகள் இல்லாதவர்; குழந்தை மணம் செய்யாதவர்;

விதவைகளுக்கு மறுமணம் செய்பவர்; புலால், குடி ஒழித்தவர்; இறந்தாரைப் புதைப்பவர்; லிங்கத்தைப் போலக் குல்லாயைத் தைத்து அதனைத் தலையில் அணிபவரும் அவருட் சிலராவர்.[21]

## சைவத்தின் 4 பிரிவுகள்

திருமூலர் காலத்துச் சைவம், (1) சுத்தசைவம், (2) அசுத்த சைவம், (3) மார்க்க சைவம், (4) கடுஞ் சுத்த சைவம் என நால்வகைப்பட்டது. இப் பிரிவு பிற்காலச் சைவ சித்தாந்த சாத்திரங்களில் இல்லை என்பது கவனிக்கத்தக்கது.

**(1) சுத்த சைவர்** :- பதி, பசு, பாசம் என்பவற்றின் வேறுபாடுகளை உணர்ந்தவர்; 'சித்' என்னும் அறிவை 'அசித்' என்னும் அவித்தையால் கெடாமற் பார்ப்பவர்; தூய மாயையுடன் அசுத்த மாயையைக் கலக்க விடாதவர்; பதி நித்தியம், பரம் என்பதை உணர்ந்தவர்; வேதாந்தத்திலிருந்து தோன்றிய சித்தாந்தமே சுத்தசைவ சித்தாந்தம்.[22]

**(2) அசுத்த சைவர்** - காதில் குண்டலங்களை அணிவர்; உடம்பில் நீறு பூசுவர்; ருத்திராட்ச மாலையை அணிவர்; சரியை, கிரியை வழி நிற்பர்; உபதேசம் பெற்று மந்திரங்களைச் செபித்துக்கொண்டிருப்பர்.[23]

**(3) மார்க்க சைவர்** - காதில் குண்டலங்களை அணிவர்; உடம்பில் நீறு பூசுவர்; புற வேடத்திற்கு மிகுந்த மதிப்புத் தாரார்; ஞானத்தையே சிறப்பாகக் கருதுவர்; வேதாந்தத்துடன் கூடிய சித்தாந்தப் பாதையிற் சென்று ஜீவன் முக்தராவர்.[24]

**(4) கடுஞ்சுத்த சைவர்** - என்பவர் சைவர்க்குரிய வெளி வேடங்களில் கவனம் செலுத்தார்; நேரே சிவமிடம் சென்று தங்கள் பாசத்தையும் பசுத்வத்தையும் ஒழித்துச் சிவஞானத்தை அடைவர். அவர்கள் சுத்த சைவர்க்குரிய சமயப்படிகளிற் செல்லார்; அவர்கள் 'நான்', 'அவன்' என்று வேறுபாடற்றவர்கள்; சொல்லரிய தத்துவத்தை அடைந்து இந்திரியங்களை அடக்கியவர்கள். அவர்கள் பரசாயுச்யத்தை அடைந்தவர்கள்.[25] கண்ணப்பர், சாக்கியர் போன்ற நாயன்மார்கள் பலர் இவ் வகுப்பைச் சேர்ந்தவராவர். அவர்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் படிகளைக் கடந்தவர்கள்; புறவேடம் அற்றவர்கள். கடுஞ் சுத்த சைவம், சிஞான போதம் முதலிய பின்னூல்களில் கூறப்படாமை கவனிக்கத்தக்கது. கடுஞ்சுத்த சைவருடைய இலக்கணங்களைத் திருமூலர் கூறியிராவிடில், நாயன்மார் பலருடைய

செயல்கள் பித்துடையர் செயல்களாகக் காணப்பட்டிருக்கும்; நாட்டில் விளக்கமும் மதிப்பும் பெற்றிரா. நாம் வேறு எந்த நூலைக்கொண்டும் உண்மை அறிந்திருக்க முடியாது.

இந் நால்வருள் அசுத்த சைவர் வேதாந்தத்துடன் கூடிய சித்தாந்தத்தை அறியாதவர். வேதாந்தத்துடன் கூடிய சித்தாந்தம் சாதாரண சைவர் உபாயம் என்று திருமூலர் கூறுகிறார்.[26] கடுஞ்சுத்த சைவர் எல்லாம் கடந்தவர். எனவே, சுத்த சைவரும் மார்க்க சைவருமே வேதாந்தத்துடன் கூடிய சித்தாந்தத்தை அறிந்தவர் என்பதும், வேதாந்தத்துடன் கூடிய சைவ சித்தாந்தமே சுத்த சைவம் என்பதும் திருமூலர் கருத்தாதல் காண்க.[27]

**சரியை முதலிய நான்கு :** சுத்த சைவர்கள் சரியை முதலிய நான்கையும் பின்பற்ற வேண்டும்; கோவில்களைக் கட்டி வழிபட வேண்டும்; பூசைகள் செய்ய வேண்டும்; உள்ளொளி கண்டு யோகத்தில் இருக்க வேண்டும்; தானே உள்ளொளியாதல் வேண்டும். இவை நால்வகைச் சரியைகள் ஆகும். திருமூலர் இவ்வாறே பிறவற்றையும் விளக்கிச் செல்கிறார்; ஆனால் இறுதியில் ஞானத்தை நன்றாக வற்புறுத்தியுள்ளார். ''நாட்டில் ஞானத்தின் மிக்க அறநெறி இல்லை; ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று; ஞானத்தைக் கூறாதவை முத்தியளியா; ஞானம் இல்லாதவர் நகரத்திற்கு (நாட்டிற்கு?)த் தகுதியற்றவர்''.[28] மூவகை தீக்ஷைகள் : ஐந்தாம் தந்திரத்தில் சரியை முதலியன கூறுகையில் திருமூலர் **மூவகைத் தீக்ஷைகள்** பற்றிக் கூறியுள்ளார். அவை : (1) சமய தீக்ஷை, (2) விசேஷ தீக்ஷை, (3) நிருவாண தீக்ஷை என்பன. **சமய தீக்ஷையால்** ஒருவன், சைவ ஆசாரத்திற்கு உரியவனாகிறான்; **விசேஷ தீக்ஷையால்** அவன் சிவ பூசை முதலியவற்றுக்கும் யோக நெறிக்கும் சிவாகமம் ஓதுதற்கும் உரியவன் ஆகிறான்; நிருவாண தீக்ஷையால் சிவாகமங்களின் உண்மைப் பொருளை ஆராய்தற்கு அதிகாரியாவான்; அவ்வாராய்ச்சியால் சிவஞானம் விளங்கிச் சிறப்பியல்பு உணர்ந்து சிவம் பிரகாசித்து வீடுபேறு அடைவான். இம் மூன்று தீக்ஷைகளின் விரிவினைச் சிவஞான போதப் பாயிர உரையிற் காண்க.[29]

**சன்மார்க்கம் முதலிய நான்கு : (1) சன்மார்க்கம்** என்பது சிவன் திருவடிகளைக் காணல், தொழுதல், நினைத்தல், தொடுதல், புகழ்தல், தலையிலே சூடுதல் இவற்றைச் செய்பவர் முத்தியடைவர். அவர்கள் தத்சிவதத்துவத் தோற்றங்களான சுருதிச் சுடர் காண்பர். ஏனைய மூன்று மார்க்கங்கட்கும் இது மேலானதாகும்.[30] (2) சகமார்க்கம் இறைவனையே நண்பனாகக் கொண்டு வழிபட்டு முத்தியடையும் வழி.[31] (3) சத்புத்ர

மார்க்கம் என்பது சிவனைத் தந்தையாகவும் தன்னைப் பிள்ளையாகவும் கொண்டு வழிபட்டு முத்தியடையும் வழி.

சிவனைப் பூசித்தல், தோத்திர பாராயணஞ் செய்தல், போற்றுதல், செபித்தல், வாய்மை, அழுக்கின்மை உடையராதல், அபிடேகமாட்டல், தூபதீபாதிகள் காட்டல் என்பன இம் *மார்க்கத்திற்குரியவை.*[32] (4) *தாச மார்க்கம்* என்பது சிவனைத் தலைவனாகவும் தன்னை அடிமையாகவும் கொண்டு வழிபட்டு முத்தியடையும் வழி. விளக்கேற்றல், மலர் கொய்தல், கோயிலில் மெழுகுதல், மணியடித்தல், அபிடேக நீர் கொணர்தல், முதலிய கோயில் தொழில்கள் இத் துறைக்குரியன.[33] (5) சக்தி நிபாதம் : இது (1) மந்தம், (2) மந்ததரம், (3) தீவ்ரம், (4) தீவ்ர தரம், என நால்வகைப்படும். இவை சிவனடியார் தகுதிக்கேற்ப இறைவன் அருள்வான்.[34]

**திருமூலரும் புறச் சமயங்களும் :** லோகாயதம், சாங்கியம் முதலிய ஆறு புறச் சமயங்களும் பக்தி நெறியைப் பற்றிக் கவலைப்படாதவை. அவை நாம் என்பதை அறிய முயலாதவை. ஆதலால் அச் சமயங்கள் பயனற்றவை,[35] என்பது திருமூலர் கருத்து.

**திருமூலரும் அகச் சமயங்களும் :** சைவ உட்சமயங்கள் ஆறும் ஒரே முடிவுக்குக் கொண்டு செல்வன. இவற்றுள் ஒன்றைப் பின்பற்றுபவர் மற்றொன்றைப் பின்பற்றுபவரைக் குறை கூறுதல் தவறு. அங்ஙனம் குறை கூறுவோர் குன்றினைப் பார்த்துக் குரைக்கும் நாய்களை ஒப்பர்.[36]

**சிவபக்தி :** பாசத்திலிருந்து விடுபட்டு முத்தியடைய விரும்பும் ஒருவன், பல படிகளைக் கடக்கவேண்டும். முதலில் குருபரம் அவனுக்கு முத்தி வழியைக் காட்டுவான்; அவ்வழியே சென்றால், சுத்த குரு தோன்றிக் கடவுள் அருளை நல்குவான். அந் நிலையில் பக்தன் மேற் சொல்லப்பட்ட சித்திகள், யோகச் சக்திகள் முதலியவற்றை அடைகிறான். அடுத்த நிலையில் சத் - குரு தோன்றிப் பக்தனுடைய ஆணவம் - மாயை - கன்மம் என்னும் மும்மலங்களை அகற்றுவான்; முக்திக்குச் செலுத்துவான். பின்னர்ச் சிவ - குரு காட்சியளித்துச் சத், அசத், சத் - அசத் என்பவற்றைக் காட்டுவான். இந்த அறிவில் ஆன்மா நிலைத்த பொழுது சிவமாகிறது.[37] சிவபிரானது திருவடிச் சிறப்பு நன்கு விளக்கப்பட்டுள்ளது. உண்மைப் பக்தர்களுடைய தலையிலும் உள்ளத்திலும் புருவ மத்தியிலும் திருவடி பதிக்கப்பெறும், அத் திருவடியே மந்திரம், மாமருந்து, தந்திரம், தானம், சுந்தரம், தூய நெறி.[38]

**சிவ அத்வைதம் :** ஆன்மா 'தான்' வேறு, 'அவன்' வேறு என்னும் எண்ணத்தில் இருக்கும் வரை 'த்வைதம்' அல்லது 'இருமை' இருக்கும். தனிப்பட்ட ஆன்மா அவனிற் கலந்து விடுமாயின், இருமை ஒழிந்து ஒருமை ஏற்படும்.[39] இது 'சிவாத்வைதம்' எனப்படும்.

**துறவு :** உள்ளத் துறவு கொண்டு மறதியின்றி இறைவனைப் பாடி புகழ்வோர் முத்தியடைவர். சிவன் துறவி; காடுகளில் வாழ்பவன்; பிச்சை ஏற்று உண்பவன்;[40] துறவு கொண்ட பக்தர்களின் பிறப்புத் தளையை அறுக்கும் பித்தன்; துறவிகள் இலக்கணத்தை உணர்த்தவே தான் துறவியானவன்.[41]

**லிங்க வழிபாடு :** லிங்க வழிபாடு நாட்டில் மிகப் பழையது என்பது முன்பே கூறப்பட்டது. முதற்காலப் பல்லவர் காலத்தில் தமிழகத்தில் பல சிவன் கோயில்கள் கட்டப்பட்டன என்பதையும் முன்னர் அறிந்தோம். திருமூலர் அக் காலத்தவர். 'தாவர லிங்கங்களைப் பெயர்த்து வேறு இடங்களில் தாபித்தால் அரசு நிலை கெடும்; இறக்கும்முன் பெருநோய் அடைவான்'[42] என்று அறிவுறுத்தியுள்ளார். இக் கூற்றால் திருமூலர் காலத்தில் லிங்கங்கள் பிரதிட்டை செய்யப்பட்டமை நன்கறியலாம். ஏறத்தாழக் கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்ட காசிகாண்டம் என்ற நூலும் அந் நூற்றாண்டில் வாழ்ந்த வராஹமிஹிரர் நூலும் லிங்க வணக்கத்தை வற்புறுத்துகின்றன; லிங்கம் செய்யப்படவேண்டும் முறையை மிக நுட்பமாகத் தெரிவிக்கின்றன.[43] மேலும் வராஹமிஹிரர் இயற்றிய மிருகத் சம்ஹிதையில் 20 வகை விமானங்கள் கூறப்பட்டுள்ளன. அவை : மேரு, மந்திரம், கயிலாசம், நந்தனம், பத்மம், கருடம், குஞ்சரம், ரிஷபம், ஹம்சம், கடம், சிம்ஹம் முதலிய பெயர்களை உடையன.[43a] இவ்விவரங்களால் அந்த நூற்றாண்டில் இந்தியாவில் விமானமுடைய பல சிவன் கோயில்கள் புதியனவாகக் கட்டப்பட்டன, லிங்கங்கள் பிரதிஷ்டிக்கப்பட்டன என்பன தெளிவாகின்றன. "மாஹேஸ்வரர்க்குப் பகல் உணவு தருவது ஆயிரம் கோபுரங்கள் (கோயில்கள்) கட்டுதலை விடச் சிறந்தபயனைத் தரும்,"[44] என்று திருமூலர் கூறுகிறார். இதனால் அவர் காலத்தில் தமிழகத்தில் பல கோயில்கள் புதியனவாகக் கட்டப்பட்டன என்பது தெரிகிறது. அப்பர் சம்பந்தரால் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் குறிக்கப்பெற்ற கோயில்கள் சுமார் 325. அவற்றுள் முன் சொன்ன பரணதேவர், கபிலதேவர் முதலியவராற் பாடப்பட்டவை சுமார் 70 என்பதை நோக்க, எஞ்சியவற்றுட் பல கி.பி. 5-6-ஆம் நூற்றாண்டுகளிற் புதியனவாகக் கட்டப்பட்டன எனல் பொருந்தும். திருமூலர் காலத்தில் படிக லிங்கம், பொன் லிங்கம், மரகத லிங்கம், கல் லிங்கம், மணல் லிங்கம் இருந்தன.[45]

**அரசர் கடமை :** திருமூலர் காலத்தில் கோயில்கள் மரம், செங்கல் இவற்றால் ஆனவை. கோயிலில் முத்துக்கள், விலையுயர்ந்த மணிகள், ஆகம நூல், அரிசி, அன்னம், மலர்கள், தயிர், பால், நெய் முதலியன இருந்தன.[46] "கோவில் மதிலிலிருந்து ஒரு கல் எடுக்கப்படும் குற்றம், (அக் கோவிலைக் காக்கக் கடமைப்பட்டுள்ள) அரசனை வாளுக்கு இரையாக்கும். கோயிற் பூசைகள் செவ்வையாக நடைபெறவில்லை யாயின் மழை குன்றும்; அரசனது போர்வலி குன்றும். ஆகமங்களை நன்கு அறியாது பெயரளவில் பிராமணனாயிருப்பவன் அர்ச்சகனாயிருப்பின், அரசனுக்கு நோயுண்டாகும்; நாட்டில் பஞ்சம் உண்டாகும்."[47] என்னும் திருமூலர் கூற்றுகள் அரசன் கோயில்களை நன்கு கவனிக்கக் கடமைப்பட்டவன் என்பதை வலியுறுத்துகின்றன. தத்தம் சமயநெறி நில்லாதவரைத் தண்டித்தலும் அரசன் கடமை என்பது திருமூலர் கருத்து.[47a]

**திருநீறு :** திருநீற்றைப் பூசுபவரிடம் தீவினைகள் அண்டா : சிவகதி சாரும். திருநீறு பூசுவோர் இறைவன் திருவடிகளைச் சேர்வர் என்று திருமூலர் கூறுகிறார். தொண்டர்கள் திருநீறு அணிந் திருந்தனர்.[48]

**சிவன் அடியார்கள் :** ஆகமவழி நின்ற சைவர்கள் திருமூலர் காலத்தில் 'மாஹேசுவரர்' எனப் பெயர் பெற்றனர். அவர்கள் காபாலிகர், பாசுபதர், பைரவர், மாவிரதியர் முதலியோரின் வேறானவர். 'அவர்களை நிந்திப்பவர் தீய நரகில் வீழ்வர். மாஹேசுவரர் நீறு அணிபவர், அவர்களைச் சிவனாகக் கருதிப் பூசிப்பவர் நல்வினை எய்துவர். அவர்கட்குப் பகல் உணவு தருதல் ஆயிரம் கோயில்களைக் கட்டுவதைவிடச் சிறந்ததாகும்.'[49] சைவத் துறவிகள் சிறப்பும், அவர்கள் பிச்சை ஏற்று உண்ணும் முறையும், அவர் உடல்கள் அடக்கம் செய்யவேண்டும் முறையும் பிறவும் 7-ஆந் தந்திரத்தில் கூறப்பட்டுள்ளன.[50] தமிழகத்தில் அறிவு மிக்கவராய், நீரை வாயிலிருந்து கொட்டுவது போல மிக எளிதாகப் பாடல்களைப் பாடிக்கொண்டு **நாடு சுற்றும் அறிஞர்களைத்** திருமூலர் குறிப்பிட்டுள்ளார்.[50a] இதனால் அவர் காலத்தில் சிவனடியார் சிலரேனும் பாக்களைப் பாடித் தல யாத்திரை செய்து வந்தனர் என்பது பெறப்படும்.

**வைதிகர் நிலைமை :** நான்கு வேதங்களிலும் ஆறு அங்கங்களிலும் வல்ல பிராமணர்கள் சங்க காலத்திலேயே நாட்டிற் குடியேறியிருந்தனர்; அரசர்களிடம் ஊர்களையும் நிலங்களையும் பெற்றனர் என்பது இரண்டாம் அதிகாரத்திற் கூறப்பட்டது; பின்பு

முற்காலப் பல்லவர் காலத்தில் சிலர் குடியேறினர் என்பது பட்டயங்கொண்டு மெய்ப்பிக்கப்பட்டது. திருமூலர், ''அந்தணர்க்கு ஆயிரம் அகரங்கள் (அக்கிரகாரங்கள்) ஈதலைவிட மாஹேஸ்வரர்க்குப் பகல் உணவு ஈதல் மிக்க பயனைத் தரும்'',[51] என்று கூறுதலை நோக்க, அவர் காலத்தில் தமிழ் நாட்டில் பல புதிய கிராமங்கள் நான்மறையாளர்க்குக் கொடுக்கப்பட்டன என்பது தெரிகிறது. ''வேள்வி செய்யும் கோடி மறையவர்க்குத் தரும் உணவை விட, நீறணிந்த பக்தர்க்குக் கொடுக்கும் ஒரு பிடி உணவு மிக்க பயனைத்தரும்.''[52] என்று திருமூலர் கூறியுள்ளார். இதிலிருந்து, அவர் காலத்தில் தமிழகத்தில் வேள்விகள் பல செய்யப்பட்டன என்பதும், வேதியர் உண்பிக்கப் பட்டனர் என்பதும் தெளிவாகின்றன. வேள்வியியற்றுவதை விட அடியாரை உண்பித்தல் மிகச் சிறந்த சமயத்தொண்டு என்பது திருமூலர் கருத்து என்பதும் தெளிவாகின்றது.

## *சிவ கதைகளும் திருமூலர் விளக்கமும்*

சிவன் சம்பந்தமான பழைய கதைகட்குத் திருமூலர் தரும் விளக்கம் கவனிக்கத்தக்கது : (1) சிவபிரான் முப்புரங்களை எரித்தான் என்பது ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலங்களாலாகிய ஸ்தூல - சூட்சும - காரணம் என்னும் மூன்று உடலங்களை அழித்தான் எனப்பொருள்படும்[53] என்று கூறியுள்ளார். (2) வடபகுதி தாழ்ந்து தென்பகுதி உயர்ந்ததால் சிவன் அதைச் சமப்படுத்த அகத்தியனைத் தெற்கே அனுப்பினான் என்பது கதை. 'உலகம் சமனிலை தவறியது என்பது மக்கள் நடுவு நிலை தவறினர் என்பதாகும். குண்டலினி நெருப்பை எழுப்ப இறைவன் மக்கட்கு உணர்ச்சி யூட்டல் என்பதே இக் கதையின் உட்கொள். குண்டலினி என்னும் ஒளியே அகத்தியர் என்று கூறப்படுவது.[54] (3) சிவன் விடத்தை உண்டு கழுத்தில் வைத்திருக்கிறான் என்பது கதை, அறியா மக்கள் சிவன் விடத்தை உண்டான் என்று கூறுவர். சிவன் விடத்தை உண்ணவில்லை. அவன் ஜீவாத்மா, பரமாத்மா, கீழ் நிலைச் சிவன், நான்கு துரிய நிலைகள், இவற்றுக்கு அப்பாற்பட்ட உலகங்கள் என்பனவற்றை விழுங்கினான்; விழுங்கி அவற்றைக் கரியவாக்கினான்.[55] அஃதாவது, சிவன் இவற்றைத் தன்னுள் அடக்கியுள்ளான். (4) திருமாலும் நான்முகனும் சிவனுடைய அடியையும் முடியையும் காணவில்லை என்பது கதை. விஷ்ணு சிவனது சக்தியை உணரக் கூடவில்லை, பிரமன் சிவ ஞானத்தை உணரக்கூடவில்லை என்பதே கருத்து.[56] இங்குப் பிரமன் என்பது வேதம்.[57]

**கணிகையர் :** திருமூலர் காலத்தில் ஆடல் - பாடல்களில் வல்ல கணிகையர் இருந்தனர். அவர்கள் கோயில்களில் ஆடல் - பாடல் நிகழ்த்தினர்.[58]

**சன்மார்க்க மடங்கள் :** திருமூலர் காலத்தில் ஏழு மடங்கள் சன்மார்க்க சைவத்தைப் பின்பற்றி ஏற்பட்டன. ஒவ்வொன்றிலும் ஒரு குரு இருந்தார். மூலர் (திருமூலர்), காலாங்கர், அகோரர், மாளிகைத் தேவர், நாதாந்தர், பரமானந்தர், போகதேவர் என்னும் எழுவர் மடத்துக் குழுவினர் ஆவர்.[59] திருமூலர் மடத்து வழிவந்த சீடர்கள், மூலன் மரபினர் எனப்பட்டனர். அவர்கள் பல நூற்றாண்டுகள் தமிழ் நாட்டில் இருந்து வந்தனர். அவருள் ஒருவரே, கி.பி. 17-ஆம் நூற்றாண்டினரான தாயுமானவர்க்குக் குருவாக இருந்தவர். இதனை,

> **மந்த்ரகுரு வேயோக... தந் த்ர குருவே மூலன்**
> **மரபில் வருமௌன குருவே!**[60]

என்னும் அவர் பாடலைக் கொண்டு அறியலாம். திருச்சி மலைமீதுள்ள மௌன குருமடம் இந்த மௌன குருவுடன் தொடர்புடையதாகும்.[61]

**சைவப் பிரச்சாரம் :** திருமூலர் தமது நூலில் சைவ சமயத்தின் சிறப்பை விளக்கியதுடன் நில்லாது, சமயப்பிரச்சாரம் செய்திருப்பதும் காணலாம். "சிவனுக்கு நிகராகும் தெய்வம் வேறில்லை; அவன் பிறப்பு அற்றவன்; பேரருளாளன்; யாவர்க்கும் இன்பம் அருள்வான்; அவனைத் தொழுங்கள்; ஞானம் பெறலாம்; அவனை எந்த வகையிலும் ஏத்தலாம்;[62] அவன் அருள் புரிவான்."[63] காரைக்கால் அம்மையாரும், பரண தேவரும் கையாண்ட முறைப்படியே திருமூலரும் தம் பெயரையும் நூல் படிப்பதால் அடையும் பயனையும் குறித்துள்ளார்.[64] இக் குறிப்பும் பலரையும் பயன் கருதிப் படிக்கத் தூண்டவல்லது.

**திருமந்திரச் சிறப்பு :** ஆகமாந்தா அல்லது சைவசித்தாந்த சாத்திரங்கள் என்பன சுமார் கி.பி. 4 அல்லது 5-ஆம் நூற்றாண்டில் சிறப்புற்றன என்னலாம். குப்தர்கள் காலத்தில் கோதாவிரியாற்றங் கரையில் மந்த்ரகலேஸ்வர் என்ற இடத்தில், மந்த்ரகலேஸ்வர் கோயிலைச் சுற்றி நான்கு சைவ மடங்கள் இருந்தன. அங்கு ஆகமச் சைவர்கள் இருந்தார்கள்.[65] இந்த 4,5,6-ஆம் நூற்றாண்டுகளில் திருமூலர் ஒரு நூற்றாண்டைச் சேர்ந்தவராதல் வேண்டும் என்பதும் முன்னரே கூறப்பட்டது. திருமூலருக்கு முன் தமிழ் நாட்டில் தமிழ் மொழியில் சைவ சித்தாந்த நூல் இல்லை, அவர் செய்த திருமந்திரமே சைவ சித்தாந்த முதல் நூல் என்பன தெளிவு. ஆதலின் இந் நூல் பின்வந்த அப்பர், சம்பந்தர், சுந்தரர் முதலிய சமயாசாரியர்கட்கும், அவர்களால் பரப்பப்பட்ட சைவ சமயத்திற்கும் ஆதார நூலாயிற்று.

அவர்கள் திருமந்திரத்தை நன்கு படித்தவர்கள் என்பதற்குப் பல சான்றுகள் காட்டலாம். இடம் போதாமையால் சில சான்றுகள் மட்டும் இங்குத் தருவோம் :

1. (1) குருவே சிவமெனக் கூறினன் நந்தி.[66]

(2) ஒருவராயிரு மூவருமாயவன் குருவதாய குழகன்.[67]

2. (1) இதயத்தும் நாட்டத்தும் என்றன் சிரத்தும் பதிவித்த பாதம் பராபர நந்தி.[68]

(2) நனந்தனைய திருவடிஎன் தலைமேல் வைத்தார்.
நற்றவர்சேர் திருவடிஎன் தலைமேல் வைத்தார்.[69]

(என்) கண்ணுளும் நெஞ்சத் தகத்தும் உளகழற் சேவடியே.[70]

(3) இணையார் திருவடி என் தலைமேல் வைத்தலுமே -
துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந் தொழிந்தேன்.[71]

3. (1) தானென் றவனென் றிரண்டாகும் தத்துவம்
தானென் றவனென் றிரண்டுந் தனிற்கண்டு
தானென்ற பூவை அவனடி சாத்தினால்
தானென் றவனென்கை நல்லதொன் றன்றே.[72]

(2) ஒருவ னாகிநின் றானிவ் வுலகெலாம்
இருவ ராகிநின் றார்கட் கறிகிலான்.[73]

4. திருமூலர் துறவு பற்றிப் பல பாக்கள் பாடியுள்ளார்; அவற்றில் துறவின் சிறப்பினை விளக்கியுள்ளார்.[74] இவ்விளக்கம் அப்பர் உள்ளத்தைக் கவர்ந்தது. அவர்,

துறந்தார்தம் தூநெறிக்கண் சென்றேன் அல்லேன்[75]
என்று கூறியுள்ளார்.

5. (1) சாத்திர மோதும் சதுர்களை விட்டுநீர்
மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்
பார்த்த இப் பார்வை பசுமரத் தாணிபோல்
ஆர்த்த பிறவி அகலவிட் டோடுமே''.[76]
இதே அறவுரையை அப்பர் கூறுதல் காண்க :

(2) சாத்தி ரம்பல பேசும் சழக்கர்காள்
கோத்தி ரமுங்கு லமுங்கொண் டென்செய்வீர்?
பாத்தி ரஞ்சிவ மென்று பணிதிரேல்
மாத்தி ரைக்குள் அருளுமாற் பேறரே.[77]

6. திருமூலர் சிவனுடைய எட்டு வீரச் செயல்களைக் குறித்து, அவற்றில் இரண்டு கடவூர், குறுக்கை என்னும் தலங்களில் நடந்தனவாகக் கூறியுள்ளார்.[78] பின்வந்த அப்பர் முதலானோர், கண்டியூர், கோவலூர், அதிகை, கருப்பறியலூர், விற்குடி, வழுவூர்,[79] குறுக்கை, கடவூர்களில் எட்டு வீரச் செயல்கள் நடந்தன எனத் தம் பாக்களிற் குறித்துள்ளனர்.

7. எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரி சீசன் அருள்பெற லாமே.[80]

இக் கருத்து,

எப்பெருந் தன்மையும் எவ்வெவர் திறமும்
**அப்பரி சதனால்** ஆண்டுகொண் டருளியும்.[81]

எனவரும் திருவாசக அடிகளில் பிரதிபலிக்கிறதன்றோ?

8. இங்ஙனம் பின்வந்த அப்பர் முதலியோர் திருமூலர் கருத்துக்களை எடுத்துக் கொண்டதன்றித் திருமூலர் ஆண்ட சொற்களையும் தொடர்களையும் அப்படியே ஆண்ட இடங்கள் பல. அவற்றுள் மாதிரியாக இரண்டைக் காட்டுதும் :

(1) வேயன தோளிக்கு வேந்தொன்றுந் தானே[82]
வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்.[83]

(2) அத்தன் திருவடிக் கப்பாலைக் கப்பாலாம்.[84]
அப்பாலைக் கப்பாலைப் பாடுதுங்காண் அம்மானாய்.[85]

(3) சீரார் பிரான் வந்தென் சிந்தை புகுந்தனன்.[86]
சிவன வனென் சிந்தையுள் நின்ற அதனால்.[87]

இவ்வாறு அப்பர், சம்பந்தர் முதலியோரைத் தன்வயப்படுத்திய இத் திருமந்திரமே தமிழ் நாட்டில் அப்பர் முதலியோர் கையாண்ட சன்மார்க்க சைவம் பரவுவதற்கு ஆதார நூலாக இருந்தது என்பதும், பின்வந்த் சைவ சித்தாந்த சாத்திரங்கட்குத் தூண்டுகோலாக இருந்தது என்பதும் மிகையாகாது. வரலாற்று ஆசிரியரால் 'தமிழகத்தின் இருண்ட காலம்' எனப்பட்ட கி.பி. 4-5-6-ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்தின் சைவ சமய வரலாற்றை அறிய இந் நூல் பெருந்துணை புரிவதென்பதில் ஐயமில்லை. இங்ஙனம் அருந்துணை புரியும் இந் நூலியற்றிய திரு மூலர்க்கு நமது நன்றி உரியதாகுக.

## குறிப்பு விளக்கம்

1. மிகப் பழைய லிங்கங்களுள் கேதாரத்திரல் உள்ள லிங்கம் ஒன்று என்பது முன்னரே கூறப்பட்டது.
2. அசோகன் கி.மு. 249-இல் தன் மகளான சாருமதி என்பவளுடன் நேபாளத்திற்குச் சென்றான். அங்குக் காட்மண்டு (Katmandu) என்னும் நகரத்திற்கு வடக்கே இரண்டுகல் தொலைவில் பசுபதி நாதர் என்ற சிவன் பெயரால் ஒரு பாசுமதச் சைவர் மடம் இருந்தது. சாருமதி அம் மடத்திற் சேர்ந்து துறவியானாள் என்ற செய்தியால், நேபாளம் அக்காலத்திற்றானே சைவத்திற் சிறந்த நாடாக இருந்தது என்பது தெரிகிறது - இந்து உட்சமயங்கள், ப. 12.
3. 4 இவ்விடங்களில் உள்ளவை மிகப் பழைய லிங்கங்கள் என்பது முன் கூறப்பட்டது.

   ✱ நான் இவ்விடத்தை 20-6-49-இல் பார்வையிட்டேன்.

6. டாக்டர் இரமண சாஸ்திரி முன்னுரை, திருமந்திரம், பக். 5-8.
7. நமது ஆராய்ச்சி 'சைவ சமயம்' பற்றியதே அன்றிச் 'சைவ சித்தாந்தம்' பற்றியதன்று என்பது நினைவில் இருத்தல் தக்கது.

7a. சைவ சமயத் தோற்றமும் வளர்ச்சியும். ப. 237.

8. இந்து உட்சமயங்கள், பக் 77-78.

8a. சைவ சமயத் தோற்றமும் வளர்ச்சியும், ப. 254.

9. செ. 1449.
10. சிவஞான போதம், பாயிரம், பக். 70-71.
11. இந்து உட்பிரிவுகள், பக். 13,61-63 - 69.
12. சைவ சமயத் தோற்றமும் வளர்ச்சியும். ப. 256.
13. சிவஞான போதப் பாயிரம், ப. 71.

13a. மானக்கஞ்சாறர் புராணம், 22-25.

14. வைணவம்... ... ... ப. 128.
15. மேலது. ப. 71.
16. இந்து உட்சமயங்கள், ப. 64.
17. மேலது, ப. 72.
18. சிவஞானபோதம், பாயிரம், ப. 72.
19. இந்து உட்சமயங்கள், ப. 13.

19a. செ. 347-352.

20. டாக்டர் இரமண சாஸ்திரி முகவுரை, திருமந்திரம், ப. 25.
21. இந்து உட்சமயங்கள், ப. 73-74.
22. செ. 1420, 1422.
23. செ. 1423, 1424.
24. செ. 1427-'28.
25. செ. 1438, 1440, 1442.
26. செ. 1435,
27. செ. 1429; சைவ சமயத் தோற்றமும்... ... ... பக். 248-253 (அடிக்குறிப்பு).
28. செ. 1444, 1447, 1467.
29. சிவஞான போதம், பாயிரம், பக். 30-31.
30. 1479, 1484, மாணிக்கவாசகர் இத்துறைப்படி முத்திபெற்றவர்.

31. ‘தம்பிரான் தோழர்’ என்ற சுந்தரர் இம் மார்க்கத்தில் நின்று பேறு பெற்றவர்.
32. செ. 1496; இவ்வழிப்படி நடந்து முத்திபெற்றவர் சம்பந்தர் (1496).
33. செ. 1502; இவ்வழிப்படி நடந்து முத்திபெற்றவர் அப்பர் (1502).
34. செ. 1514-1529.
35. செ. 1535.
36. செ. 1558.
37. செ. 1573-’77.
38. செ. 1596- 1604.
39. செ. 1607.
40. ‘பிக்ஷாண்டார்’ என்னும் பெயர் காண்க.
41. செ. 1614 - 1616.
42. செ. 515.
43. இந்து சமய உட்பிரிவுகள், ப. 59.
43a இந்தியச் சிற்ப சாத்திரக் கருத்துக்கள், ப. 70.
44. செ. 1860.
45. செ. 1719- 1721.
46. செ. 1719 - 1720.
47. செ. 516-519.
47a. செ. 247.
48. செ. 1666- 1861.
49. செ. 537, 1862- 1860.
50. செ. 1868, 1922.
50a. செ. 1646.
51. செ. 1860.
52. செ. 1861.
53. செ. 343.
54. செ. 337’-’8, 1255இன் குறிப்பு.
55. செ. 521, 2593.
56. செ. 2425.
57. சைவ சமயத்... ... ... ப. 229.
58. செ. 66.
59. செ. 105, 106; இச் செய்யுட்கள் இடைச் செருகல் என்பர் டாக்டர் இரமண சாஸ்திரி, திருமந்திர முகவுரை, பக். 16-17 - 23.
60. தாயுமானவர் பாடல், மவுனகுரு வணக்கம், செ. 1-10.
61. நான் இம் மடத்தை 20-5-49-இல் பார்வையிட்டேன்.
62. பௌத்த வேடத்திலிருந்து சிவனைத் தொழுத சாக்கியநாயனார் வரலாறு இங்கு நினைக்கத்தக்கது.
63. செ. 5, 25, 36- 2642.
64. செ. 107.
65. இந்து உட்சமயங்கள், ப. 71.
66. திருமந்திரம், 1581.
67. அப்பர் தேவாரம், ப. 191, செ.1.

68. திருமந்திரம், 1596.
69. அப்பர் நல்லூர்ப்பதிகம், 1-11.
70. அப்பர் தேவாரம், ப. 145, செ. 5.
71. திருவாசம், திருப்பூவல்லி, செ.1.
72. திருமந்திரம், 1607.
73. அப்பர் தேவாரம், பக். 303, 11.
74. செ. 1614-1623.
75. அப்பர் தேவாரம், ப. 412, செ. 10.
76. திருமந்திரம், 1631.
77. அப்பர் தேவாரம், ப. 251-செ. 3.
78. செ. 339-346.
79. 'வழுவூர்' அப்பரால் பாடப்பட்டது; வைப்புத்தலம் - அப்பர் தேவாரம், ப. 462, செ. 8.
80. திருமந்திரம், 36.
81. கீர்த்தித் திருவகவல், வரி. 125-6.
82. திருமந்திரம், 42.
83. சம்பந்தர், கோளறு பதிகம், செ. 1.
84. திருமந்திரம், 1758.
85. திருவாசகம், செ. 185.
86. திருமந்திரம், 2960.
87. திருவாசகம், சிவபுராணம், வரி. 17.

# 5. பிற்காலப் பல்லவர் காலத்தில் சைவ சமயம் - I

## (கி.பி. 600-900)

## கல்வெட்டுக்களில் சைவ சமயம்

### *முன்னுரை*

சிம்மவிஷ்ணு மகனான மஹேந்திரவர்மன் காலமுதல் தென் இந்தியாவில் பல்லவராட்சி பெயரும் புகழும் பெற்றது. என்றும் அழியாத நிலையில் இருக்கத்தக்க குகைக் கோவில்களும், ஒற்றைக் கற்கோவில்களும், கற்களை உடைத்து அடுக்கிக் கட்டப்பட்ட கோவில்களும் இக்காலத்தேதான் தோன்றின. பல்லவ அரசர்கள் சிறந்த போர்வீரர்களாக இருந்தாற் போலவே சிறந்த பக்திமான்களாகவும் கல்விமான்களாகவும் கலைவளர்ச்சியில் ஆர்வம் கொண்டவராகவும்; இருந்தனர். அவர்கள் வடமொழியிலும் தமிழிலும் வல்லவராக விளங்கினர். அவர்கள் சைவ - வைணவ சமயங்களை வளர்த்தனர்; இசை - ஓவியம், சிற்பம் - நடனம், நாடகக் கலைகளை வளர்த்தனர். அவர்களது நீண்ட ஆட்சிக் காலத்திற்றான் (அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் என்னும் சைவசமய குரவரும் பிற (முன் அதிகாரத்திற் கூறப்பெறாத) நாயன் மார்களும் இருந்து சைவத்தை வளர்த்தார்கள்; திருப்பதிகங்கள் தோன்றின. ஆழ்வார்கள் பன்னிருவரும் வைணவத்தை வளர்த்தனர்; அருட்பாடல்களைப் பாடினர். அப்பர் சம்பந்தரால் பல்லவநாட்டிலும் பாண்டிய நாட்டிலும் இருந்த சமணர் செல்வாக்கு ஒழிந்தது. வைணவமும் சமண - பௌத்த சமயங்களை ஒழிப்பதில் ஓரளவு பங்கு கொண்டது. சமய வளர்ச்சி, பல கலை வளர்ச்சி, உயர்ந்த கல்வி வளர்ச்சி இவற்றில் இப் பிற்காலப் பல்லவர் காலம் 'பொற்காலம்' என்னலாம்.

*இனி, இப் பிற்காலப் பல்லவர் யாவர் என்பதையும்,* அவர்களும் குடிகளும் எவ்வாறு சைவசமயத்தை வளர்த்தார்கள் என்பதையும் பட்டயங்களையும் கல் வெட்டுக்களையும் கொண்டு காண்போம் :

மகேந்திரவர்மன் I(கி.பி. 600-630)[1]
|
நரசிம்மவர்மன் I (கி.பி. 630-660)
|
மகேந்திரவர்மன் II ✱

பரமேசுவரவர்மன் I (கி.பி. 660-680)
|
இராஜசிம்மன் என்ற
நரசிம்மவர்மன் II (கி.பி. 680-700)
|
பரமேசுவரவர்மன் II (கி.பி. 700-710) — மகேந்திரவர்மன் III
|
நந்திவர்மன் II(கி.பி. 710-775)
|
தந்திவர்மன் (கி.பி. 775-826)
|
நந்திவர்மன் III (கி.பி. 826-849)
|
நிருபதுங்கவர்மன் (கி.பி. 849-875)
|
அபராஜிதவர்மன் (கி.பி. 875-883)

## பல்லவரும் சைவ சமயமும்

### *நந்தி முத்திரை*

பிற்காலப் பல்லவர் பட்டயங்கள் எல்லாவற்றிலும் **நந்தி முத்திரை** காணப்படுகிறது. இரண்டாம் நந்திவர்மன் நிருபதுங்கவர்மன் போன்ற வைணவ சமயத்தைப் பின்பற்றிய அரசர் பட்டயங்களிலும் நந்தி முத்திரை காணப்படுவதால், சைவ சமயமே நாட்டுச் சமயமாக (State Religion)க் கருதப்பட்டதென்பது தெரிகிறது. கூரம், கசாக்குடிப் பட்டயங்களின் மேல் நந்திக்கு மேல் லிங்கம் காணப்படுதல், இவ் வுண்மையை உறுதிப்படுத்துவதாகும். அரசாங்க ஓலைகள் மீது பொறிக்கப்பட்ட அரசாங்க முத்திரையும் நந்தி முத்திரையேயாகும். 'விடை வெல் விடுகு' (விடேல் விடுகு), 'விடைமண் பொறி ஓலை' என்பன இந்த உண்மையை உணர்த்துவன.[2] பல்லவர் நாணயங்கள் பலவற்றிலும் நந்தி முத்திரையைக் காணலாம்.[3]

### *பல்லவரது கட்டுவாங்கம்*

முதலாம் பரமேசுவரவர்மன் கொடியில் கட்டுவாங்கம் தீட்டப்பட்டிருந்தது. இரண்டாம் பரமேசுவரவர்மன் முடிசூடும்பொழுது

கட்டுவாங்கம் அரசப் பொருள்களில் ஒன்றாகக் கொடுக்கப்பட்டான். அவன் கொடியிலும் கட்டு வாங்கம் தீட்டப்பட்டிருந்தது. கட்டுவாங்கம் என்பது சிவனுக்குரிய ஆயுதங்களில் ஒன்று. அதன் உச்சியில் மண்டை ஓடு பொருத்தப்பட்டிருக்கும். அவ் வாயுதம் முன்கை அல்லது முன்கால் எலும்பைக்கொண்டு செய்யப்படுவது. கயிலாசநாதர் கோயில் சிற்பங்களிலும் இவ்வாயுதத்தைக் காணலாம்.[4] இவ்வாயுதம்பற்றி அப்பரும் தம் தேவராத்திற் குறித்துள்ளார்.[5]

இனிப் பல்லவ வேந்தர்கள் செய்த சமயத் திருப்பணிகளைக் காண்போம் :

**மகேந்திரவர்மன்** : இவனே தமிழகத்தில் மலைகளைக் குடைந்து கோயில்களாக்கிய கொற்றவன். இவன் குணபரன் முதலிய பட்டப் பெயர்கள் பல உடையவன். இவன் முதலிற் சமணனாயிருந்து, அப்பரைத் துன்புறுத்தியவன்; பிறகு சைவ சமயத்தின் சிறப்பை உணர்ந்து சைவனாக மாறியவன்; மாறிப் பாடலிபுரத்தில் (திருப்பாதிரிப்புலியூர்) இருந்த புகழ்பெற்ற சமணமடத்தையும் பாழிகளையும் இடித்து, அச் சிதைவுகளைக் கொண்டு திருவதிகையில் **குணபரஈசுவரம்** என்ற சிவன் கோயிலைக்கட்டியவன்.[6] மகேந்திரன் இங்ஙனம் சமயம் மாறினவன் என்பதை அவனது திருச்சிராப்பள்ளிக் குகைக் கோயில் கல்வெட்டு உணர்த்துகிறது.[7] இவன் வல்லம், தளவானூர், சீயமங்கலம், பல்லவபுரம், திருச்சிராப்பள்ளி என்னும் இடங்களில் சிவனுக்காகக் குகைக் கோயில்களையும், மண்டகப்பட்டில் திரிமூர்த்தி கோயிலையும் அமைத்தவன். ஒவ்வொரு கோயிலும் இப்பல்லவன் பெயருடன் 'ஈசுவரம்' என்று முடியும். காஞ்சி ஏகாம்பரநாதர் கோயிலில் இவன் ஒரு மண்டபம் கட்டியிருந்தான்.[8] குண்டூர் மாவட்டத்து செசர்லா என்னும் ஊரில் உள்ள கபோதீஸ்வரர் கோயிலில், இவன் காலத்தில் கோயில் காரியங்களைக் கவனிக்க 12 பேர் இருந்தனர்[9] என்பதை நோக்க, கோயிலில் பல வேலைகளைக் கவனிக்கப் பலர் இருந்தனர் என்பதும், அவர்களை மேற்பார்க்க 12 பேர் இருந்தனர் என்பதும் தெளிவாகிறதன்றோ? இவன் காலத்தில் தோன்றிய வல்லம் குடைவரைக் கோயிலில் பிள்ளையார் இருக்கிறது. நாம் அறிந்த வரையில் தமிழகத்தில் இதுவே முதற் பிள்ளையார் என்று கூறலாம்.[9a]

மகேந்திரவர்மன் இசையில் பெரு விருப்புடையவன்; சிறந்த பயிற்சியுடையவன் என்பது திருமெய்யம், குடுமியான்மலைக் கல் வெட்டுக்களால் அறியலாம்.[10] 'இசைப்பாக்களே என் செல்வமும் வாழ்வும்'[11] என்று தான் இயற்றிய மத்தவிலாசப் பிரஹசனத்தில் நடிகர்

கூற்றாகக் குறித்துள்ளான். இவன் நடனத்தில் பெரும் பற்றுடையவன் என்பதைச் சித்தன்ன வாசல் நடிகையர் ஓவியங்கள் உணர்த்துகின்றன. எனவே, இவன் காலத்தில் இசையும் நடனமும் உயர்நிலையில் இருந்தன என்பதை நன்கு உணரலாம். அதனாற்றான் இவன் காலத்தவரான அப்பருடைய திருப்பதிகங்களில் நடனத்தைப் பற்றிய குறிப்புக்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

''வேறு துறையிலிருந்து குணபரனைத் திருப்பிய ஞானம் இந்த லிங்கத்தால் நாட்டில் நீண்ட காலம் பரவட்டும். குணபரன் லிங்க வழிபாட்டினன்,''[12] ''புருஷோத்தமன் தன் மனத்தில் சிவனை உறுதியாகப் பற்றியிருப்பவன்,''[13] என்பனவும், குடுமியான்மலை இசைபற்றிய கல்வெட்டில், ''சித்தம் நமசிவாய''[14] என்று சிவனுக்கு வணக்கம் கூறும் பகுதியும் மகேந்திரனது ஆழ்ந்த சிவபக்தியை நன்கு உணர்த்துவனவாகும்.

**பல்லவன் ஈசுவரம்** என்பது காவிரிப்பூம்பட்டினத்தில் இருப்பது. அப் பட்டினத்தின் எல்லையில் முன் சொன்ன கோயிலுக்குக் கால் மைல் தூரத்தில் சாய்க்காட்டுக் கோயில் இருக்கிறது. சாய்க்காட்டுக் கோயிலை அப்பரும் சம்பந்தரும் பாடியுள்ளனர். ஆனால் பல்லவனீச்சுரத்தைச் சம்பந்தர் மட்டுமே பாடியுள்ளார்; அப்பர் பாடவில்லை. கால் மைல் தூரத்தில் உள்ள அதனை அப்பர் பாடாமைக்கு என்ன காரணம்? அவர் பாடிய ஏடு கிடைக்கவில்லை என்பது ஒரு காரணமாகலாம். அப்பர் சாய்க்காட்டைத் தரிசித்த பிறகு பல்லவனால் (பெரும்பாலும் மகேந்திரவர்மனால்) அக் கோயில் கட்டப்பட்டதாகக் கொள்வதும் பொருந்தும், மயேந்திரப்பள்ளி[14a] என்பதும் மகேந்திரன் தொடர்புடைய கோயிலாகத் தெரிகிறது. அதனையும் அப்பர் பாடவில்லை; சம்பந்தரே பாடியுள்ளார். அதற்கு அண்மையில் உள்ள நல்லூர்ப் பெருமணத்தையும் சம்பந்தரே பாடியுள்ளார். இவற்றையும், மகேந்திரனுக்கு முற்பட்ட பல்லவர் தமிழகத்திற் சிவன் கோயில் கட்டினமைக்குச் சான்றின்மையையும் நோக்க, பல்லவன் ஈச்சுவரமும் மயேந்திரப்பள்ளியும் மகேந்திரன் காலத்திற் கட்டப்பட்டவை எனக் கருதுதல் பொருந்தும்.

**நரசிம்மவர்மன்** : இவன் வைணவன். இவன் இரண்டாம் புலிகேசியை வென்று வாதாபியைக் கைப்பற்றியவன்; மஹாமல்லன் என்று பெயர் பெற்றவன். பெரும்பாண் ஆற்றுப்படையில், 'பட்டினம்'[15] எனப் பெயர் பெற்றிருந்தது, இவன் காலத்தில் புதுப்பிக்கப்பட்டு மஹாமல்லபுரம் அல்லது மாமல்லபுரம் என்று பெயர் பெற்றது.[16] இவன் மாமல்லபுரத்தில் ஒற்றைக் கல் கோயில்களை (இக்கால ரதங்களை)

அமைக்கத் தொடங்கியவன். இன்று அர்ச்சுனன் ரதம், தர்மராசர் ரதம் என்பன சிவன் கோயில்களே.[17] திருக்கழுக்குன்றம் சிவன் கோயிலுக்குக் கந்தசிஷ்யன் செய்த தானத்தை இவன் புதுப்பித்தவன்.[18]

**பரமேசுவரவர்மன் :** மாமல்லபுரத்தில் உள்ள தர்மராசர் ரதம், கணேச மண்டபம், இராமநுச மண்டபம் என்பன அத்யந்தகாம பல்லவேசுவரம் எனக் கல்வெட்டில் இருத்தலால், இவன் காலத்தில் முடிவுற்றன என்பது தெரிகிறது. இவை மூன்றும் சிவன் கோயில்களே.[19] இவன் தன் விருதுப் பெயர்களுள் ஒன்றான 'வித்யாவிநீதன்' என்னும் பெயரால் கூரத்தில் ஒரு சிவன் கோயிலைக் கட்டினான்; அக் கோயில் கூரைபோட ஓடுகள் செய்து சூளை போடுவித்தான்; மண்டபம் கட்டினான்; மண்டபத்தில் பாரதம் படித்து மக்களுக்குக் கூற ஏற்பாடு செய்தான்; பூசை செய்ய அனந்த சிவாசாரியார் என்பவனை நியமித்தான்; 20 சதுர்வேதிகட்கு நிலம் அளித்தான். அவ்வூரில் முன்னரே 108 சதுர் வேதிகள் இருந்தனர்.[20] அக் கூரம் கோயில் இன்று பாழ்பட்டுக் கிடக்கிறது.[21] இதன் அடிப்படையில் கற்பலகைகள் காண்கின்றன. அவற்றுக்கு மேல் செங்கற்சுவர்; ஓட்டுக் கூரை. கற்களை உடைத்துப் பாறைகளாக்கி ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக் கோயில் கட்ட முயன்ற முதல் பல்லவன் இராசசிம்மன் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். ஆனால் அந்த எண்ணத்தை அவனுக்கு உண்டாக்கியது, அவன் தந்தை கட்டிய கூரம் சிவன் கோயிலேயாகும். பரமேசுவரன் காலத்தில் கற்கள் பெரிய கற்பலகைகள் போலச் செய்யப்பட்டுக் கோயில் அடிப்பகுதிக்கு மட்டும் பயன்படுத்தப்பட்டன.அவன் மகனான இராசசிம்மன் காலத்தில் கற்பலகைகள் இன்றிப் பெரிய கல்துண்டங்கள் போலச் செய்யப்பட்டுக் கோவில் முழுவதற்குமே பயன் படுத்தப்பட்டன. கூரம் கோயிலை நன்கு கவனியாத காரணத்தாலோ என்னவோ, ஆராய்ச்சியாளர்கள் இதனைக் கவனித்து எழுதத் தவறிவிட்டனர்.

''சிவனுக்கு மேல் தெய்வம் இல்லை. அவனே முழு முதற் கடவுள்; பிறப்பிலி; ஸ்ரீநிதி சிவனை உள்ளன்புடன் வழிபடுபவன்; சிவனை நினையாதவர் ஆறுமுறை சபிக்கப்பட்டவராவர்.''[22] இவை மாமல்லபுரத்துக் கணேசர் கோயிலில் உள்ள பரமேசுவரன் கல்வெட்டு வாக்கியங்கள். இவற்றிலிருந்து பரமேசுவரனது சமயப் பற்றையும் சிவனைப் பற்றிய அவனது கருத்தையும் நன்கறியலாம். ''ஸ்ரீநிதி பிறப்பற்ற சிவனைத் தன் முடிமீது தாங்கியுள்ளான். புகழ்பெற்ற அத்யந்த காமனது மணி முடியைச் சிவன் இருப்பிடமாகக் கொண்டிருக்கிறான்.''[23] சிவன் தன் முடிமீது இருப்பதாகத் தெரிவிக்கும்

இவ்வாக்கியங்கள், முடிமீது லிங்கத்தைத் தரித்திருந்தான் என்றெண்ண இடந்தருகின்றன. ருத்திராக்ஷத்தாலான சிவலிங்கத்தை முடியாகத் தரித்திருந்தான் என்று அறிஞர் கருதுகின்றனர்.[24] இதிலிருந்து இவனது பக்தியின் சிறப்பை நன்கறியலாம்.

**இராசசிம்மன்:** இவன் முதலாம் பரமேசுவரவர்மன் மகன். இவன் கற்களை அடுக்கிக் கற்கோயில் கட்டிப் புகழ்பெற்றவன். மாமல்லபுரம் கடற்கரையில் க்ஷத்திரிய சிம்ம பல்லவேசுவரம், இராசாசிம்ம பல்லவேசுவரம் என்ற இரண்டு சிறிய சிவன் கோயில்கள் இவனால் கட்டப்பட்டவை.[25] வராக மண்டபத்தின் மேலுள்ள ஒலக்கணேசுவரர் கோயிலும் இவனால் கட்டப்பட்டது.[26] மாமல்ல புரத்தை அடுத்த சாளுவன் குப்பத்தில் உள்ள அதிரண சண்டேசுவரர் கோயிலும் இவன் கட்டியதே.[27] பனமலைக் குகைக் கோயிலும் இவனால் குடையப்பட்டது.[28] பன மலையில் உள்ள தலபுரீசுவரர் கோயிலிலும் வாயலூர்[28a] வியாக்ர புரீசுவரர் கோயிலிலும் இவன் கட்வெட்டுக்கள் காணப்படுதலால், அவை இவனால் கட்டப்பட்டவையாகலாம்; அல்லது ஆதரிக்கப்பட்டவையாகலாம்.[29] திருப்போரூர்த் தூண் கல்வெட்டு ஒன்றைக் காண, அங்கு இவன் காலத்துச் சிவன் கோயில் ஒன்று இருந்தது தெரிகிறது.[30]

இவன் கட்டிய எல்லாக் கோயில்களிலும் உலகப் புகழ்பெற்றதும் சிற்ப வேலைப்பாடு அமைந்ததும் **காஞ்சி கயிலாசநாதர் கோயிலேயாகும்**. அதன் பழைய பெயர் இராச சிம்ம பல்லவேசுவரம் என்பது. அஃது அமைப்பில் மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயில்களை ஒத்தது. திருச்சுற்றுச் சுவரில் 58 சிறு கோயில்கள் உள்ளன. [31] அவற்றில் அம்மையப்பர், பாற்கடல் கடைந்த வரலாறு, முப்புரம் எரித்த வரலாறு, மார்க்கண்டனுக்காக யமனை உதைத்த வரலாறு, சிவன் அர்ச்சுனன் போர், இராவணன் கயிலையைப் பெயர்க்கும் காட்சி, சிவன் நால்வர்க்கும் அறம் உரைத்த காட்சி, திருமால் சிவனை வழிபட்டு ஆழி பெற்ற காட்சி, இராமன் வழிபட்ட ஆன்ம லிங்கத்தை அநுமான் கவர்ந்து செல்லல் முதலிய செய்திகளைக் குறிக்கும் சிற்பங்கள் அழகாக அமைந்துள்ளன. பராசக்தியின் ஏழு வகை உருவங்கள், ருத்திரர் பதினொருவர் உருவங்கள், அம்மை யாழ் வாசிப்பது, பிரமன் - நாமகள் திருமணம், திருமால் - திருமகள், திருமணம், பிள்ளையார் இவை நன்கு காட்டப்பட்டுள்ளன.

கருவறையைச் சுற்றியுள்ள சுவர்களில் பல சிறு பிறைகள் உள்ளன. அவற்றில் சிவனது உயர்வையும் நடனத்தையும் குறிக்கும் சிற்பங்கள் உள. சிவபெருமானுடைய பலவகை நடனங்கள் இங்குச்

சிற்பங்களாகக் காட்டப்பட்டுள்ளன. கணங்கள் பலவகை இசைக் கருவிகளை வைத்துள்ளன. சிவன், நடராஜன் அல்லது நிருத்த மூர்த்தி என்பதை விளக்கவல்ல நடனவகைகள் பல கயிலாசநாதர் கோயிலில் இருக்கின்றன. இராசசிம்மன் காஞ்சியிற் கட்டிய மதங்கீசர் கோயிலிலும், ஐராவதேசுவரர் கோயிலிலும் இத்தகைய நடனச் சிற்பங்களைக் காணலாம்.[32] இந் நடன வகைகளைப் பற்றிய விளக்கம் அறிஞர் நூல்களிற் காணலாம்.[33].

இராசசிம்மன் சிறந்த போர்வீரன்; இசைக் கருவிகளை மீட்டுவதில் வித்யாதரனை ஒத்தவன். இசை, நடனக் கலைகளில் வல்லவன்; செய்யுளை உயிர்ப்பித்தவன் என்று இவனுடைய கயிலாசநாதர் கோயில் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. அவை இவனைச் ''சிவசூடாமணி, சங்கரபக்தன், ஆகமப்பிரியன், சிவனையே அடைக்கலமாகக் கொண்டவன், ரிஷபலாஞ்சனன், சைவசித்தாந்தப்படி நடப்பவன், அதனையே ஆதாரமாகக் கொண்டவன், சிவனைத் தன் முடிமீது தரித்துள்ளவன்''[32] என்று கூறுகின்றன. இவற்றால், இவன் சிறந்த சிவபக்தன் என்பதும், சைவசித்தாந்தத்தை நன்கு அறிந்தவன் என்பதும், தன் தந்தையைப் போலவே லிங்கத்தை முடியில் தரித்தவன் என்பதும் விளங்குகின்றன. இவன் ''இக் கலியுகத்தில் அசரீரி கேட்டவன்''[35] என்று கல்வெட்டுக் கூறுகிறது. இக் குறிப்புப் பூசலார் நாயனார் புராண வரலாற்றுடன் தொடர்பு கொண்டதாகலாம் என்பது அறிஞர் கருத்து.[36] பூசலார் வாழ்ந்த திருநின்றவூர் (திண்ணனூர்)ச் சிவன் கோயிலில் இராசசிம்மன் காலத்துத் தூண்கள் காண்கின்றன; பூசலார் உருவம், பல்லவன் உருவம் காண்கின்றன.[37] அக் கோயில் இராசசிம்மன் காலத்தது என்று கூறுவதில் தவறில்லை.

காடவ அரசன் காஞ்சியில் கற்றளி எடுத்துப் பக்கத்தில் எல்லாம் சிவனுக்குப் பெருஞ்செல்வம் அளித்தான் என்று சேக்கிழார் கூறியுள்ளார்.[38] இவ்வாறு காஞ்சியில் சிவனுக்குக் கற்றளி எடுத்தவன் இராசசிம்மனே என்பதை நாமறிவோம். இவன் அக் கோயிலுக்குப் பெருஞ்செல்வத்தை அளித்தது உண்மை என்பதைக் கயிலாசநாதர் கோயிலிலுள்ள இரண்டாம் விக்கிரமாதித்தன் (சாளுக்கியன்) கல்வெட்டும், அவனது கேந்தூர்ப் பட்டயமும், இரண்டாம் கீர்த்தி வர்மனது வக்கலேரிப் பட்டயமும் உணர்த்துகின்றன.[39] இவ்வாறு சேக்கிழார் கூறியதைச் சாளுக்கியர் கூற்றுக்கள் மெய்ப்பித்தலைக் காண, பூசலார் இராசசிம்மன் காலத்தவர் என்பதை உறுதியாகக் கூறலாம். இவனுடைய கல்வெட்டுக்களில் வரும் சிவனைக் குறிக்கும்

பெயர்கள்; சங்கரன், அரன், சம்பு, பவன், பசுபதி, எண் கைப் பெரியோன், ஈசானன், காலகாலன், ஸ்தாணு, தேவதேவன், ஈசுவரன் என்பன.[40]

**மகேந்திரன் III:** இவன் இராசசிம்மன் மகன்; கயிலாச நாதர் கோயிலில் ஒரு சிறிய சிவன் கோயிலைக் கட்டியவன். அதன் பெயர் மகேந்தரவர்மேசுவரம் என்பது. ''சிவன் கடவுளருள் முதல்வன்; தோல் ஆடையன்; ஈசன்; மகேசுவரன்; தன் கணங்களுடன் இக் கோயிலில் உறைவானாக,'' என்பது அவன் கல்வெட்டு.[41]

இராசசிம்மன் மனைவியான **(அ) ரங்கபதாகை** என்பவளும் ஒரு சிறிய சிவன் கோயிலைக் கயிலாசநாதர் கோயிலிற் கட்டினாள்.[42] இங்ஙனம் கணவன்-மனைவி-மகன் ஆகிய மூவரும் சிறந்த சிவ பக்தர்களாக இருந்து சைவத்தை வளர்த்தனர் என்பதை நோக்க, அவர்கள் காலத்தில் நாட்டில் சைவசமயம் நன்கு வளர்நததென்பதை அறியலாம்.

**இரண்டாம் பரமேசுவரன்:** இவன் திருவதிகைச் சிவன் கோயிலைக் கற்றளியாக்கினன்;[43] அக் கோவிலுக்கு இவன் காலத்தில் திருப்பணிக்குப் பொன் அளிக்கப்பட்டது.[44]

**இரண்டாம் நந்திவர்மன்:** இவன் வைணவன்; திருமங்கையாழ்வார் காலத்தவன்.[45] காஞ்சியில் வைகுந்தப் பெருமாள் கோயிலைக் கட்டியவன்.[46] சீயமங்கலத்து ஸ்தம்பேசுவரர் கோயில், தயாமுக மங்கலம் சிவன் கோயில், திருக்கோவலூர் வீரட்டானேசுவரர் கோயில், தளவானூர் குகைக் கோயில், காஞ்சி-முத்தீசுவரர் கோயில், திருவல்லம் சிவன் கோயில், மணலூர்ப் பேட்டை உமுதீசுவரர் கோயில் என்பன இவன் காலத்துக் கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ளன.[47] இவற்றுள் சீயமங்கலம், தளவானூர்க் கோயில்கள் மகேந்திரவர்மன் குடைவித்தவை. அவை வழிபாட்டுக்குரிய கோயில்களாக இருந்தவை என்பது இக் கல்வெட்டுக்களால் தெரிகிறது. கோவலூர் வீரட்டம், திருவல்லம் என்பன அப்பர்- சம்பந்தராற் பாடப்பட்டவை. திருவல்லம் கோயில் இவன் காலத்திற் புதுப்பிக்கப்பட்டதை[48] நோக்க, அது மிகப் பழைய கோயில் என்பது தெரிகிறது.

### *காஞ்சி-முக்தீசுவரர் கோயில்*

இவன் காலத்துச் சிவன் கோயில்களிற் குறிக்கத் தக்க சிறப்புடையது, காஞ்சிமுக்தீசுவரர் கோயில் ஆகும். இது இவன் காலத்தில் தர்மமஹாதேவீசுவரம் எனப்பட்டது. இக் கோயில்,

ஏகாலியரான திருக்குறிப்புத் தொண்டர் பூசித்த கோவில் என்று கூறப்படுகிறது.[49] அதற்கேற்ப இக் கோயிலில் இன்றும் எகாலியரே தர்ம கர்த்தாவாக இருக்கின்றனர்; திருக்குறிப்புத்தொண்டர் உருவச் சிலையும் இருக்கின்றது.[50] இக் கோயிலைக் கற்றளியாக்கியவள் தர்மமஹாதேவியாக இருத்தல் கூடும். அக் காலத்தில் இக் கோயிலில் 44 கூத்திகள் இருந்து இசையையும் நடனத்தையும் வளர்த்தனர்; பூசைக்கெனப் பிராமணர் மூவர் இருந்தனர். தட்டளி கொட்டுவார் இருவர், மந்திரம் சொல்வார் ஐவர், விளக்கும் தவசிகள் (கோயிலைத் தூய்மை செய்பவர்) 12 பேர், ஆக 64 பேர் இருந்தனர். இவர்கள் ஊதியத்திற்காக ஒரு கிராமத்தின் வருவாய் விடப்பட்டது. கோயில் ஆட்சியைத் தளியாள்வார் கவனித்து வந்தனர். இவர்கள் அனைவர்க்கும் தளிப்பரிவாரம் என்பது பெயர். சுவாமி பெயர் மாணிக்க ஈசுவரர்.[51]

இரண்டாம் நந்திவர்மன் வெளியிட்ட உதயேந்திரம், கசாக்குடி, தண்டன் தோட்டம், கொற்றங்குடிப் பட்டயங்கள், அவன் காலத்தில் சதுர்வேதிகள், திரிவேதிகள், சோமயாஜிகள்,[52] பட்டர்கள், ஷடங்கவித்கள், [53] க்ரம வித்தர் என்பவர்க்குத் தமிழகத்தில் புதிய ஊர்களும் நிலங்களும் அளிக்கப்பட்டன என்பதை உணர்த்துகின்றன.[54] காஞ்சி வடமொழிக் கல்லூரியும் இருந்தது. சோளிங்கர் மலைமீதும் ஒரு கடிகா இருந்தது.[54a]

**தந்திவர்மன்:** இவனும் வைணவன். இவன் காலத்தில் வயலகாவூர் - வாணாதிசுவரர் சிவன் கோயிலும், குடிமல்லம் பரசுராமேசுவரர் கோயிலும், கச்சித்திருமேற்றளியும் கல்வெட்டுக்களிற் குறிக்கப்பட்டுள.[55] திருமேற்றளியில் ஒரு மடம் இருந்தது. அதற்கு முத்தரையன் ஒருவன் பொருள் உதவி செய்தான்.[56] இது தந்திவர்மன் காலத்திற் புதிதாகக் கட்டப்பட்டதென்று கல்வெட்டுக் குறியாமையின், தந்திவர்மனுக்கு முற்பட்டது என்றே கொள்ளலாம். நாயன்மார் காலத்தில் மடங்கள் இருந்தன என்பதற்கு இது சிறந்த சான்றாகும். திருமேற்றளி அப்பர் சுந்தரரால் பாடப்பெற்றது.

**மூன்றாம் நந்திவர்மன்:** இவன் நந்திக் கலம்பகத்தில் குறிக்கப்பட்டவன்; சிறந்த சிவபக்தன்; தெள்ளாறு எறிந்த நந்திவர்மன், குமாரமார்த்தாண்டன், எனப் பல விருதுப் பெயர்கள் இவனுக்குண்டு. இவன் பொன்னேரிக் கடுத்த திருக்காட்டுப் பள்ளியில் புதிதாய்க் கட்டப்பட்ட சிவன் கோயிற்கு, அச் சிற்றூரையே தானமாக அளித்தான்;[57] திருவதிகை வீரட்டானேசுவரர்க்குமுன் விளக்கெரிக்க 100 கழஞ்சு பொன் அளித்தான்;[58] குமாரமார்த்தாண்டன் என்ற தன்

விருதுப்பெயர் கொண்ட விளக்கு ஒன்றைத் திருவிடை மருதூர்ச் சிவனுக்களித்தான்,[59] திருவொற்றியூர்ச் சிவன் கோயிலில் விளக்கெரிக்கப் பொன் அளித்தான்;[60] திருத்தவத்துறை மகாதேவர் கோயிலில் விளக்கெரிக்கப் பொன் அளித்தான்;[61] திருக் கடைமுடி மகாதேவர்க்கு நில தானம் செய்தான்;[62] இவன் மனைவியருள் ஒருத்தியான மாறம்பாவையாலும் பிறராலும் இவனாட்சியில் அறங்கள் செய்யப் பெற்றவை, திருநெய்த்தானம், செந்தலை, திருவல்லம், திருக்கடைமுடி, திருப்பராய்த் துறை, குடிமல்லம், நியமம், வெண் குன்றம் என்ற இடத்துக் கோயில்கள் ஆகும்.[63] குன்றாண்டார் கோயில் திரு ஆதிரை நாளில் 100 பேருக்கு உணவளிக்க ஒருவன் அரிசி தானம் செய்தான்.[64] இவன் காலத்தில் திருவல்லம் கோயிலில் திருப்பதிகம் ஓதப்பட்டு வந்தது என்பது தெரிகிறது.[65]

**திருவல்லம் சிவன் கோயில் :** இக் கோயிலில் பூசை செய்யச் சிவப்பிராமணர், ஸ்ரீபலி கொட்டுவார், கோயில் நந்தவனங்களிலிருந்து பூப்பறிப்பவர், திருப்பதியம் ஓதுவார், வேறு பல பணி செய்வாரும் இருந்தனர்.[66]

மாறம் பாவையாரது கல்வெட்டில், 'திருக்கோவில் பணி செய்யும் மாணிகள் ஐவர்' என்பது காண்கிறது.[67] எனவே அவர்களும் தளிப் பரிவாரத்தில் சேர்ந்தவர் என்பது தெரிகிறது. அவர்கள் கோயிலை அடுத்திருந்த மடத்தில் சாத்திரங்களைக் கற்று வந்தவராகலாம்.

இந் நந்திவர்மன் செய்த திருப்பணிகள் இவன் சிறந்த சிவபக்தன் என்பதை உணர்த்துகின்றன. இவன் மனைவியான மாறம்பாவையும், இராசசிம்மன் மனைவியான ரங்கபதாகை போலச் சிவபக்தியுடையவள். இவன், ''சிவனை முழுதும் மறவாத சிந்தையன்'' என்று நந்திக் கலம்பகம்[68] கூறுகிறது. அந் நூல் ''பைந்தமிழை ஆய்கின்ற நந்தி''[69] என்றும் கூறுகிறது. இவன் பெயரால் நந்திக் கலம்பகம் இருத்தலையும், பாரத வெண்பாப் பாடிய பெருந்தேவனார் இவனைப் பாராட்டலையும் நோக்க, இவன் தமிழ் வளர்ச்சியில் நாட்டங் கொண்டிருந்தான் என்றும் கூறலாம்:

இவ்வறிஞனே,

**கடல்சூழ்ந்த உலகெல்லாம் காக்கின்ற பெருமான்**
**காடவர்கோன் கழற்சிங்கன்**

என்று சுந்தரரால் பாராட்டப்பட்டவன் என்று அறிஞர் தக்க பல காரணங்களைக் கூறியுள்ளனர்.[70] அஃதாயின் கோயிலில் மாலை கட்டுவதற்னெ இருந்த மலரை ஆகமவிதிக்கு மாறாக முகந்த

தவற்றுக்காகத் தன் பட்டத்தரசியை மூக்கரிந்த கடுஞ் சுத்த சைவன் இவனாதல் வேண்டும். இவனால் மூக்கறுபட்டவள் இராஷ்டிரகூட அரசனான அமோகவர்ஷ நிருபதுங்கன் மகளான சங்காவாதல் வேண்டும்.[71] இவன் சுந்தரர் காலத்தவனாயின், சுந்தரர் காலத்தில் வாழ்ந்த மானக்கஞ்சாறரும் இக் காலத்தவரேயாவர். அவர் திருமுட்டம் சிவன் கோயிலில் திருப்பதியம் பாடிக்கொண்டிருந்து முத்திபெற்றார். அவரது உருவம் அக் கோவில் கோபுரத்தில் இருக்கிறது.[72] இன்றைய நெல்லூர் மாவட்டம் - கூடூர்த் தாலூக்காவைச் சேர்ந்த மல்லம் என்னும் ஊர், இவன் காலத்தில் பையூர் இளங்கோட்டத்துத் திரு ஆன்பூர் எனப்பட்டது. அங்குச் சுப்பிரமணியர் கோயில் இருந்தது என்பதை ஒரு கல்வெட்டு உணர்த்துகிறது.[73]

**நிருபதுங்கவர்மன் :** இவன் நந்திவர்மனுக்கும் சங்காவுக்கும் பிறந்தவன்; வைணவன், இவன் பாகூர் வடமொழிக் கல்லூரிக்கு மூன்று கிராமங்களைத் தானமாக வழங்கினான்.[74] இவன் காலத்தில் முத்தரையன் ஒருவன் நாரத்தா மலையில் சிவன் கோயிலைக் குடைவித்தான்.[75] காடவன் மாதேவியார் என்பவள் திருவாலங்காட்டுக் கோயிலில் விளக்கெரிக்க 108 கழஞ்சு பொன் அளித்தாள்.[76] பரமேசுவர மங்கலத்துச் சிவன் கோயில் பூசைக்காக 11 கழஞ்சு பொன் கணப்பெருமக்கள் வசம் தரப்பட்டது.[77] திருக்கோவலூர் வீரட்டானேசர் கோயிலுக்கு விளக்கெரிக்க ஊராரிடம் (ஊரவையார்) 12 கழஞ்சு பொன் ஒருவனால் தரப்பட்டது.[78] மாறம்பாவையால் திருச்சன்னம்பூண்டிச் சிவன் கோயிலுக்குப் பொன் தரப்பட்டது.[79] கண்டியூர், திருத்தவத்துறை, அதிகை, திருக்கோடிகா, திருப்புலிவலம் என்ற இடத்துக் கோயில்கட்குப் பொன் தரப்பட்டது.[80] இவன் மனைவியருள் ஒருத்தியான வீர மஹாதேவி என்பவள் திருக்கோடிகாவில் உள்ள சிவன் கோயிலில் இரண்ய கர்ப்பம், துலாபாரம் புகுந்து, ஒரு பகுதிப் பொன்னை அப்பெருமானுக்கு அளித்தாள்.[81] அச்சிறுபாக்கம் சிவன் கோயிலுக்கு நிலதானம் செய்யப்பட்டது.[81a]

**அபராசிதன் :** இவன் காலத்தில் கட்டப்பட்டதே திருத்தணிகை வீரட்டானேசுவரர் கோயில். அதில் இவன் பாடியதாக ஒரு தமிழ் வெண்பா காண்கிறது. இவன் சிறந்த சிவ பக்தன்; பெருமானடிகள் என்று வழங்கப்பட்டான்.[82] அக்கற்கோயில் விமானம் தூங்கானை அமைப்புடையது. இவன் காலத்தில் மாங்காடு, திருவொற்றியூர், சத்தியவேடு என்னும் இடத்துக் கோயில்கள் சிறப்புற்றன.[83] அபராசிதன் மனைவியான மாதேவடிகள் திருவொற்றியூர்க் கோயிலில் விளக்கெரிக்க 30 கழஞ்சு பொன்கொடுத்தாள்.[84]

இந்த அபராசிதனை வென்று ஆதித்த சோழன் (சுமார் 886 இல்) தொண்டை நாட்டைக் கைப்பற்றிக் கொண்டான். இவனுடன் பல்லவப் பேரரசு முடிவுற்றது.[85]

**வேறு பல்லவ மன்னர் :** கம்பவர்மன், வைரமேகவர்மன், சந்திராதித்தன் என்ற பல்லவ அரசர் கல் வெட்டுக்கள் சில கிடைத்துள்ளன. அவர்கள் நிருபதுங்கன், அபராசிதன் காலத்தில் மாகாணத் தலைவர்களாக இருந்தவர் போலும்! சந்திராதித்தனால் மேலைச்சேரி – ஸ்ரீ சிகரிபல்லவேசுரம் என்னும் குகைக் கோயில் சிங்கபுரத்தில் (செஞ்சி வட்டம்) குடையப்பட்டது.[86] தாமல் கோட்டத்துப் பொய்கை நல்லூர்ச் சிவன் கோயில், வைரமேகவர்மன் ஆட்சியில் குறிக்கப்பட்டுள்ளது.[87] கம்பவர்மன் காலத்தில் வேலூரை அடுத்த சோழபுரம் கோயில் குறிக்கப்பட்டுள்ளது.[88] கம்பவர்மன் காலத்தில் திருவொற்றியூரில் ஒரு மடம் இருந்தது. அதன் தலைவர் பெயர் நிரஞ்சன குரவர் என்பது.[89] காவேரிப்பாக்கம் கல்வெட்டில் 'மடத்துச் சத்தப் பெருமக்களிடம் விளக்கு எண்ணெய் வாங்கப் பொன்தானம் செய்யப்பட்டது''[90] என்பதைக் காணக் கோயிலை அடுத்து மடம் இருந்ததும், அக்கோயில் ஆட்சியைச் சத்தப் பெருமக்கள் கவனித்து வந்தனர் என்பதும் தெரிகின்றன. கூத்திகள் 'அடிகள்மார்;'[91] 'மாணிக்கத்தார்'[92] எனப் பட்டனர்.

**கோயில் ஆட்சி:** திருவொற்றியூர் போன்ற பெரிய கோயில் ஆட்சி 'அமிர்தகணத்தார்' என்ற தனிக் கூட்டத்தாரிடம் இருந்தது. அக்கூட்டத்தார் ஊரவையார் மேற்பார்வையில் இருந்தனர்.[93] காவேரிப்பாக்கத்தில் இருந்த நடுத்தரக் கோயில் போன்றவை மடத்தார் மேற்பார்வையில் இருந்தனவாகலாம். குடிமல்லம், கூரம், திருமுக்கூடல், திருக்கோவலூர், திருவல்லம், தொண்டூர், திருநின்றவூர், திருக்கோடிகா, திருத்தவத்துறை, திருத்தணிகை முதலிய ஊர்க் கோவில்கள் ஊரவையார் மேற்பார்வையில் இருந்தன என்று கருதுதல் பொருத்தமாகும்.[94]

### *முடிவுரை*

இதுகாறும் கூறப்பெற்ற செய்திகளிலிருந்து கீழ்வரும் உண்மைகளை உணரலாம்:

1. தனிப்பட்ட அரசர் எச்சமயத்தவராயினும், அரசாங்க சமயம் சைவ சமயமாக இருந்தது. நந்தி முத்திரை, கட்டுவாங்கக்கொடி, நந்தி முத்திரையிட்ட நாணயங்கள் என்பன இவ்வுண்மைக்குச் சான்றாகும்.

2. பல்லவர்கள் பாறைகளைக் குடைந்து கோயில்களை அமைத்தனர்; சிறிய குன்றுகளைக் கோயில்களாக மாற்றினார்கள்; பாறைகளை அடுக்கிக் கோயில்கள் கட்டினார்கள். இப்புதிய முறை பிற்காலச் சோழர் கோயில்கட்கு வழிகாட்டியாயின.

3. பல்லவ அரசர் பலர் சைவராக இருந்ததாலும் நாயன்மார் இக்காலத்தில் வாழ்ந்தமையாலும் தமிழ் நாட்டில் சைவசமயம் நன்கு பரவியது.

4. அரசர் - அரசமாதேவியர் - பொதுமக்கள் கோயில்கட்குப் பல அறங்கள் செய்தனர். அவற்றுள் பாடல்பெற்ற கோயில்களும் அடங்கும்.

5. கோயில்களில் ஆகமங்களில் வல்ல சிவசாரியர்கள் அர்ச்சகராக இருந்தனர்; தட்டளி கொட்டுவார், மாலை கட்டுவார், ஆடுவார், பாடுவார் முதலிய கோயிற் பணியாளர் பலர் இருந்தனர். கோயில்கள் அமிர்தகணத்தார் அல்லது மடத்துப் பெருமக்கள் அல்லது ஊரவையார் ஆட்சியில் செவ்வனே பாதுகாக்கப்பட்டன. திருமேற்றளி போன்ற சில கோவில்களை அடுத்து மடங்களும் இருந்தன.

6. பல்லவ அரசர் இசை-நடன-ஓவிய-சிற்பக் கலை அறிவிற் சிறந்திருந்தனர். இசை, நடனக் கலைகளை வளர்க்கக் கோயில்களில் கூத்திகள் இருந்தனர். அவர்கள் கூத்திகள், அடிகள்மார், மாணிக்கத்தார் எனப் பெயர் பெற்றனர்.

7. திருவல்லம் கோவிலில் திருப்பதியம் ஓதப்பட்டது என்று கல்வெட்டுக் கூறுகிறது. கல்வெட்டுச் சான்று இன்மையால், பிற கோயில்களில் ஓதப்படவில்லை என்று கூறற்கில்லை. சில கோயில்களிலேனும் திருப்பதியம் ஓதப் பெற்றதெனக் கொள்ளலாம்.

8. இக்காலப் பல்லவர் சிறந்த வடமொழிப் புலவர்கள். அவர்கள் ஆட்சியில் வேதம் முதலிய வடமொழி நூல்களில் வல்ல பிராமணர்கள் ஊர்களையும் நிலங்களையும் பெற்றனர். காஞ்சி, சோளிங்கர், பாகூர் முதலிய இடங்களில் வடமொழிக் கல்லூரிகள் பல்லவர்களால் ஆதரிக்கப்பட்டன.

## குறிப்பு விளக்கம்

1. காஞ்சிப் பல்லவர்கள், பக்.88, 97, 104, 108, 111, 119, 134, 136, 139 &141.

* இவனைப்பற்றி எந்த விவரமும் கிடைக்கவில்லை-காஞ்சிப் பல்லவர். ப.104.

2. பல்லவர் ஆட்சியும் சமுதாய வரலாறும், பக்.45; நந்திக்கலம்பகம். செ.11.
3. S.I.I.I.P.2.
4. மேலது. பக்.43.44.
5. அப்பர் தேவாரம், பக்.300; செ.7.
6. அப்பர் புராணம், 80-146.
7. S.I.I.I.33.
8. 82 of 1921.
9. S.I.I.VI.595.

9a. நான் இக்கோயிலைப் பார்வையிட்டேன்.

10. பல்லவர் ஆட்சியும் சமுதாய வரலாறும், ப. 279
11. மத்தவிலாஸப் பிரஹசனம், ப.8.
12. S.I.I.I.33
13. மேலது. 34.
14. பல்லவர் ஆட்சியும்... ... ... ப.245.

14a நான் இக்கோயிலைப் பார்வையிட்டேன்; பள்ளி என வருவது சிறந்த பக்தர் அடக்கமான இடத்தில் எழுப்பப்படும் கோவில், இதனை; 'மதங்கப்பள்ளி' (A.D.PP.384'-5); "தம் அப்பனாரைப் பள்ளி படுத்தவிடத்து ஈசுவராலயம் கண்டு" (429 of 1902), என வரும் சான்றுகள் மெய்ப்பிக்கின்றன. சமணர், பௌத்தர்க்குரிய பள்ளிகள் அவர்கள் வாதங்களில் தோற்ற பிறகு சைவர்க்குரியவாகிச் சிவன் கோயில்களாக்கப்பட்டும் இருக்கலாம். இவை ஆராய்ச்சிக்குரியன.

15. வரி. 336, பத்துப்பாட்டு, முகவுரை, பக்.9அடிக்குறிப்பு.
16. நாகப்பட்டினம் 'நாகை' என்றாற்போல, மாமல்லபுரம் 'மல்லை' என மருவியது.
17. பல்லவர் வரலாற்று ஆராய்ச்சி, பக். 89-90.
18. 65 of 1909.
19. S.I.I.I. 18,199 - 20.
20. மேலது. 151.
21. நான் இக் கோவிலை 22-4-48-இல் பார்வையிட்டேன்.
22. S.I.I.I. 18.
23. மேலது.
24. பல்லவர், II. P.68.
25. 566 of1912.
26. பல்லவர் வரலாற்று ஆராய்ச்சி, ப.98.
27. S.I.I.I. 21.
28. மேலது. 31.

28a இது பாலாற்றங்கரையில் இருப்பதால் 'வாயிலூர்' எனப்பட்டது; கடவுள் 'பிலவாயிலுடையார்' எனப்பட்டார். இப்பெயர் 'புலிவாயிலுடையார்' எனத் தவறாகக் கருதப்பட்டு' வியாக்ரபுரீசுவரர்' என வடமொழியில் வழங்கலாயிற்று E.I.18, PP.145-'6.

29. 616 of 1915; 368 of 1908.

30. 76 of 1909; நான் இதனைப் பார்வையிட்டேன்.

31. நான் பலமுறை இக்கோயிலைப் பார்வையிட்டேன்.

32. நான் இவ்விரு கோயில்களையும் 20.4.48-இல் பார்வையிட்டேன்.

33. பல்லவர் ஆட்சியும்... ... ...பக். 282-'7; இந்து உருவச் சிலைகள், பகுதி I,பக் 265-'75.

34. S.I.I.I.23, 24 & 25; E.I.18, P 150.

35. S.I.I.P. 14.

36. காஞ்சிப் பல்லவர், ப. 109.

37. நான் இக்கோயிலைப் பார்வையிட்டேன்.

38. பூசலார் புராணம், செ. 9.

39. E.I.3, P. 360, மேலது 9, P.205; மேலது 5, P. 200.

40. S.I.I.II. 21, 24, - 25; இவை அப்பர் சம்பந்தர் பாடல்களிற் பயில்வதைக் காணலாம்.

41. S.I.I. 27.

42. மேலது. 28.

43. பல்லவர் வரலாறும் நிலையங்களும், ப. 15.

44. 56 of 1903; இக்கோயிலுக்கு எதிரிலிருந்த மடத்திற்றான் அப்பரது தமக்கையாரான திலகவதியார் இருந்தார். அப்பர் முதல் முதலில் இக் கோயிலிற்றான் பதிகம் பாடினார் என்பது கருதத்தக்கது. நான் இக் கோயிலைப் பார்வையிட்டேன்.

45. காஞ்சிப் பல்லவர், ப. 126.

46. ஆழ்வார்கள் காலநிலை, பக். 93.

47. 68 of 1900; 295, 296, 300 of 1902; 49 of 1905; 14 of 1893; S.I.I.II.P.S17; 76 of 1899; 467 of 1938.

48. 76 of 1899.

49. C.K. சு. பெரிய புராணம். II. ப. 1537.

50. நான் இக் கோவிலைப் பார்வையிட்டேன்.

51. 14 of 1893; S.I.I.IV. 827; தளி-கோவில், S.I.I.I. 151-வரி. 60 of 63.

52. சோமயாஜி என்பதன் மரூஉப் பெயரே சோமாசி என்பது.

53. சுந்தரர்க்குப் பெண் கொடுக்கச் சம்மதித்தவர் புத்தூர்-ஷடங்க வித் சிவாசாரியார்-தடுத்தாட்கொண்ட புராணம், 7; 'புத்தூர்' (புதிய குடி யேற்றவூர்) என்ற பெயரையும் கவனிக்க.

54. S.I.I.II. PP. 365, 346, 517, E.I. 18, PP.115.

மாற நாயனார் அறுபத்து மூவருள் ஒருவர்.

54a பல்லவர் ஆட்சியும்... ... ...பக். 197-199

55. 256 of 1922, 226 of 1903, 89 of 1921.

56. 89 of 1921.

57. S.I.I.II 98.
58. S.I.I.8. 309.
59. 197 of 1907.
60. 162 of 1938.
61. 27 of 1931.
.62. 11 of 1899.
63. 52 of 1895, 11 of 1899, S.I.I. 3, P. 93, 283 of 1901, 180 of 1907. E.I.2, P. 224, 13, 16 of 1899, 73 of 1900.
64. 347 of 1914.
65. S.I.I.3, P. 93.
66. மேலது.
67. 303 of 1901.
68. 24, செ.8.
69. 25, செ. 15.
70. 299-304; செந்தமிழ்த் தொகுதி,9.
71. மேலது. பக்.55-56.
72. 255 of 1916.
73. நெல்லூர்க் கல்வெட்டுக்கள், தொகுதி I, ப.430.
74. S.I.I.2, P.515.
75. 365 of 1904.
76. 460 of 1905.
77. 257 of 1912.
78. 277 of 1902.
79. 300, 303 of 1901.
80. 17 of 1895, 84 of 1892,S.I.I.8. 308, 22 of 1931, 63 of 1898.
81. 38 of 1931.
81a. 108 of 1934.
82. 433 of 1905.
83. 351 of 1908; 158, 159, 161, 180, 190, of 1912; 31 of 1912.
84. 163 fo 1912.
85. காஞ்சிப் பல்லவர், ப.143.
86. 284 of 1916.
87. 150 of 1916.
88. 429 of 1902.
89. 372 of 1912.
90. பல்லவர் ஆட்சியும்... ... ...ப.208.
91. 303 of 1901.
92. 278, 302 of 1902.
93. 158 fo 1912.
94. 228 of 1902, 37 of 1960, 179 of 1915, 277 of 1902, S.I.I.3, P.93; 283 of 1916, 168 of 1938, 22 of 1913, 84 of 1892 and 435 of 1905.

# 6. பிற்காலப் பல்லவர் காலத்தில் சைவசமயம்-II

## இலக்கியத்தில் சைவம்

(கி.பி. 600-900)

**இக்காலச் சைவ இலக்கியம்:** மகேந்திரவர்மன் காலத்தவரான அப்பர் பாடிய திருமுறைகள் மூன்று, அவர் காலத்தவரான சம்பந்தர் பாடிய திருமுறைகள் மூன்று, கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின ரான சுந்தரர் பாடிய திருமுறை ஒன்று, அவர் காலத்தவரான சேரமான் பெருமாள் நாயனார் பாடிய பொன்வண்ணத்து அந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை, திருக்கயிலாய ஞானவுலா என்பன. அதே நூற்றாண்டினரான மாணிக்கவாசகர் பாடிய திருவாசகம், திருக் கோவையார் என்பன இக்காலச் சைவ நூல்கள் ஆகும். இந்நூற்களில் கூறப்பட்டுள்ள பல தலங்களைப்பற்றியும் நாயன்மார்களைப் பற்றியும் அவர்கள் சைவம் வளர்த்த முறைபற்றியும் தம் காலத்திற் கிடைத்த தக்க சான்றுகள் கொண்டு சேக்கிழார் பெரிய புராணம் என்னும் நூலைப் பாடியுள்ளார். ஆதலின், அது பல்லவர்கால நிலையையே படம் பிடித்துக் காட்டுவது என்றே கொள்ளலாம்.[1] அந்தப் பெருநூலையும் இங்கு ஆதாரமாகக் கொள்வது பொருத்தமாகும்.

**இக்காலச் சிவத் தலங்கள்:** அப்பர்-சம்பந்தர்-சுந்தரர் என்னும் மூவரும் தமிழ் நாட்டில் தம் காலத்திருந்த பல சிவன் கோயில்கட்கு நேராகச் சென்று பதிகம் பாடினர். அவர்கள் பாடிய பதிகங்களுள் அழிந்தன போக எஞ்சியவற்றை இன்றும் காணலாம். அவற்றுள் குறிக்கப்பட்டுள்ள கோயில்கள் ஏறத்தாழ 275. தனிப் பதிகம் பெறாமல் வைப்புத் தலங்களாகக் காணப்படுவன ஏறத்தாழ 50 என்னலாம்.[2] இத்தலங்களுள் தமிழகத்திற்கு அப்பாற்பட்ட பகுதிகளில் இருப்பவை, கேதாரம், ஸ்ரீசைலம், இலங்கையில் உள்ள கேதீச்சரம் முதலிய சிலவாகும்.

சிலப்பதிகார காலத்தில் (கி.பி.2-ஆம் நூற்றாண்டில்) பாண்டி நாட்டுக்குச் செல்லதக்க வழி ஒழுங்கற்றது, ஆபத்தானது என்று கோவலற்குக் கவுந்தியடிகள் கூறியதைக் காணலாம்.[3] ஆனால் அப்பர்-சம்பந்தர் காலத்தில் வழி செவ்வையாக இருந்ததையும் வழி

நெடுகக் கோயில்கள், மடங்கள் இருந்தமையையும் அறியலாம்.[4] இவ்வாறே காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து உறையூர்வரை கோவலன் கண்ணகி சென்றபொழுது பல சிவன் கோயில்கள் வழியில் இருந்தனவென்று இளங்கோவடிகள் கூறவில்லை.[5] ஆயின், அப்பர்-சம்பந்தர் காலத்தில் அவ்வழி நெடுக ஏறக்குறைய ஐந்து மைலுக்கொரு சிவன் கோயில் இருந்ததை அறிகிறோம். தொகை நூல்களிற் கூறப்படாத பல கோயில்கள் முற்காலப் பல்லவர் காலத்தில் தோன்றிய கபிலதேவர்-பரணதேவர்-ஐயடிகள் முதலியோர் பாடல்களிலிருந்து அறிகின்றோம். கி.பி.7-ஆம் நூற்றாண்டில் ஏறத்தாழ 325 கோயில்கள் தமிழகத்தில் இருந்தன என்பதைத் திருமுறைகளைக் கொண்டு அறிகின்றோம். இக்கோயில்களின் பெருக்கம் சைவசமய வளர்ச்சியைப் படிப்படியாக உணர்த்துகிறதன்றோ?

**இக்கால நாயன்மார்:** சுந்தரர் தாம் பாடிய திருத்தொண்டத் தொகையில் 63 நாயன்மார்களைப் பற்றியும் 9 தொகை அடியார்களைப் பற்றியும் கூறியுள்ளார் இந்த நாயன்மார்கள் ஒரு காலத்தார் அல்லர்; ஒரு சாதியார் அல்லர். ஒரு நாட்டார் அல்லர்; கி.பி.300 முதல் கி.பி.900 வரையிலும் இருந்தவராவர்; வடக்கே காம்பீலி முதல் தெற்கே குமரி வரை வாழ்ந்தவராவர். இவருள் அப்பர் சம்பந்தருக்கு முற்பட்டவர் 17 பேர் என்பது முன்னரே கூறப்பட்டது. அப்பர், சம்பந்தர் காலத்தவர் என்று திருமுறைகள் கொண்டும் பெரிய புராணம் கொண்டும் கணிக்கத் தக்கவர் 11 பேர். அவராவார் (1) அப்பர், (2) சம்பந்தர், (3) அப்பூதியடிகள், (4) முருக நாயனார், (5) சிறுத்தொண்டர், (6) நீலநக்கர், (7) குலச்சிறையார், (8) மங்கையர்க்கரசியார், (9) நெடுமாறர், (10) குங்குலியக்கலயர், (11) திருநீலகண்ட யாழ்ப்பாணர். சுந்தரர் காலத்தில் வாழ்ந்தவர்கள் 13 பேர். அவராவார் (1) சுந்தரர், (2) அவர் தந்தையார் சடையனார், (3) தாயார் இசை ஞானியார். (4) அவரை வளர்த்த நரசிங்க முனையரையர், (5) அவரைத் தொகை பாடத்தூண்டிய விறல் மிண்டர், (6) அவருடன் யாத்திரை செய்த சேரமான் பெருமாள், (7) அவர் நண்பரான கலிக்காமர், (8) கலிக்காமர் மாமனாரான மானக்கஞ்சாறர், (9) கோட்புலியார், (10) பெருமிழலைக் குறும்பர், (11) சோமாசிமாறர், (12) கழற்சிங்கர், (13) செருத்துணை நாயனார். இதுவரை கூறிய 41 பேர் போக எஞ்சிய 22 பேரும், வேறுதக்க சான்றுகள் கிடைக்கும் வரை, அப்பர்-சம்பந்தர்க்கும் சுந்தரர்க்கும் இடைப்பட்ட காலத்தவர் எனக்கொள்ளலாம்.[6]

**அரசரான நாயன்மார்:** நாயன்மார் அறுபத்து மூவருள் (1) சேரமான் பெருமாள் சேரமன்னர்; (2) கோச்செங்கணானும் புகழ்ச் சோழரும் சோழ மன்னர்; (3) நெடுமாறர் பாண்டிய மன்னர்;

மங்கையர்க்கரசியார் அவர் மனைவியார்; (4) ஐயடிகளும் கழற்சிங்கரும் பல்லவர்கள்; (5) கூற்றுவ நாயனார் கொடும்பாளூர் அரச மரபினர்.[7]

**சிற்றரசரான நாயன்மார்:** (1) திருக்கோவலூரை ஆண்ட மெய்ப்பொருள் நாயனார், (2) திருமுனைப்பாடி நாட்டை ஆண்ட நரசிங்க முனையரையர், (3) பெருமிழலை நாட்டை ஆண்ட பெருமிழலைக் குறும்பர், (4) கொடும்பாளூரை ஆண்ட இடங்கழியார்.

**சேனைத்தலைவரான நாயன்மார்:** (1) பல்லவர் சேனைத் தலைவரான சிறுத் தொண்டர், (2) சோழர் சேனைத் தலைவரான கலிக் காமர், (3) அவர் மாமனாரான மானக் கஞ்சாறர், (4) கோட்புலியார்.

**பிராமண நாயன்மார்கள்:** சண்டீசர், நமிநந்தி, திருமூலர், சம்பந்தர், குங்குலியக் கலயர், முருகர், உருத்திர பசுபதியார், அப்பூதியடிகள், நீலநக்கர், சோமாசி மாறர், சிறப்புலி, பூசலார், கணநாதர், தண்டி[8] - 14 பேர்.

**வணிக நாயன்மார்:** இயற்பகை, அமர்நீதி, மூர்த்தி, காரைக்கால் அம்மையார், கலிக்கம்பர், கலியர்-6 பேர்.

**வேளாள நாயன்மார்:** இளையான் குடிமாறர், விறல் மிண்டர், மானக் கஞ்சாறர், கலிக்காமர், கோட்புலியார், அரிவாள் தாயர், அப்பர், மூர்க்கர், சத்தியார், வாயிலார், முனையடுவார், செருத்துணை, சாக்கியர்-13 பேர்.

**சிவாசாரியர் நால்வர்:** சுந்தரர், சடையனார், இசை ஞானியார், புகழ்த்துணையார்.

**சாதிக் கொருவராயுள்ள நாயன்மார்:** திருநீலகண்டர்-குயவர்; கண்ணப்பர்-வேடர்; ஆனாயர்-இடையர்; திருக்குறிப்புத் தொண்டர்-வண்ணார்; அதிபத்தர்-பரதவர்; நேசர்-சாலியர்; நீலகண்ட யாழ்ப்பாணர்-பாணர்; நந்தனார் - பறையர்; ஏனாதி நாதர்-சான்றார்; சிறுத்தொண்டர்-மாமாத்திரர்.

**மரபு குறிக்கப்படாத நாயன்மார்:** எறிபத்தர், குலச்சிறையார், கணம்புல்லார், காரியார்.

இந்த விவரங்களால், சைவ சமயம் பேரரசராலும் சிற்றரசராலும் எல்லாச் சாதி மக்களாலும் போற்றி வளர்க்கப்பட்டது என்பது அறியப்படும். இனி, இக்கால நாயன்மார் சைவ சமய வளர்ச்சிக்கெனச் செய்த திருப்பணிகள் யாவை எனக் காண்போம்:

## *நாயன்மார் செய்த சமயத் திருப்பணிகள்*

**1. அப்பூதியடிகள்:** அப்பரைத் தலைவராகக் கொண்டு அவர் பெயரால் தண்ணீர்ப்பந்தல் முதலிய அறச் செயல்களைச் செய்து வந்தார்.[9]

**2. இடங்கழியார்:** தம் நாட்டிற் கோயிற் பூசைகள் குறைவற்று நடக்க ஏற்பாடு செய்தவர்; சிவனடியார்க்குத் தம் பொருள்களை வழங்கியவர்.[10]

**3. இளையான்குடிமாறர்:** சிவனடியார்க்கு உணவு படைத்தே வறியரானவர்.[11]

**4. கணநாதர்:** நந்தவனம் அமைத்துக் காக்கும் முறை, மலர்களைக் கொய்க்கும் முறை, அவற்றைப் பல வகை மாலைகளாக்கும் முறை, அபிஷேக முறைகள், விளக்கு எரிக்கும் முறை, கோயிலைத் தூய்மை செய்யும் முறை, திருமுறை எழுதும் முறை, பதிகங்கள் வாசிக்கும் முறை இவற்றில் பலருக்குப் பயிற்சி அளித்தார்.[12]

**5. கலிக்கம்பர்:** அடியார்க்கு உணவும் செல்வமும் வழங்கியவர்.[13]

**6. கழற் சிங்கர்:** இவர் திருப்பணிகள் சென்ற அத்தியாயத்திற் குறிக்கப்பட்டுள்ளன.

**7. காரி நாயனார்:** மூவேந்தர்மீது கோவை பாடிப் பணம் பெற்றுப் பல கோயில்கள் கட்டினார்; அடியார்க்கும் பொருள் உதவி செய்தார்.[14]

**8. குங்குலியக் கலயர்:** திருக்கடவூர்க் கோயிலில் நாடோறும் குங்குலியப் புகையூட்டி வந்தவர்; அப்பணியிலே தம் செல்வத்தை இழந்தவர்.[15]

**9. குலச் சிறை:** சமணரை ஒழிக்கச் சம்பந்தரைப் பாண்டிய நாட்டுக்கு வரவழைத்தவர்; அடியார்க்கு உணவு முதலியன அளித்தவர்.[16]

**10. கோட்புலி:** அடியார்க்கு நெல் வழங்கியவர்; அடியார்க்கென வைக்கப்பட்ட நெல்லைச் செலவழித்த உறவினரைக் கொன்றவர்.[17]

**11. சத்தி நாயனார்:** சிவனடியாரை இகழ்ந்தவரை நாவறுத்தவர்.[18]

**12. சிறுத்தொண்டர்:** அடியார்க்கு நாடோறும் உணவளித்தவர்; பைரவ அடியார்க்கு மகனைக் கொன்று அமுது படைத்தவர்.[19]

**13. செருத்துணை:** திருவாரூரிற் கோயில் தொண்டு செய்தவர்; இறைவனுக்கெனப் பறித்த மலர்களில் ஒன்றை மோந்த காரணம் பற்றிக் கழற்சிங்கர் மனைவியை மூக்கறிந்தவர்.[20]

**14. சேரமான் பெருமாள்:** எல்லோருக்கும் பொருளை வழங்கியவர்; சிவத்தல யாத்திரை செய்தவர்; நூல்கள் பாடியவர்[21]

**15. திருக்குறிப்புத் தொண்டர்:** சிவனடியார் ஆடைகளைத் துவைத்துக் கொடுக்கும் திருப்பணியில் ஈடுபட்டவர்.[22]

**16. சம்பந்தர்:** சமணரை வாதில் வென்று பாண்டியனைச் சைவராக்கினவர்; பௌத்தரை வாதில் வென்று சைவராக்கினவர்; தல யாத்திரை செய்து பதிகங்கள் பாடியவர்; சில அற்புதங்கள் செய்து மக்களைச் சைவத்திற் பற்றுள்ளம் கொள்ளச் செய்தவர்.

**17. அப்பர்:** சமணத்திலிருந்து சைவரானவர்; பல்லவ நாட்டிற் சமணர் செல்வாக்கு இழக்கக் காரணமானவர்; தல யாத்திரை செய்து பதிகங்கள் பாடியவர்.

**18. நந்தனார்:** கோயில் வாத்தியங்கட்கு வேண்டிய தோல், வார் முதலியனவும் பூசைக்கு வேண்டிய கோரோசனையையும் உதவி வந்தார்; திருப்புன்கூரில் குளம் தொட்டவர்.[23]

**19. திருநீலகண்டர்:** சிவனடியார்கட்குப் பலவகைத் தொண்டுகள் செய்தவர்.[24]

**20. திருநீலகண்ட யாழ்ப்பாணர்:** தல யாத்திரை செய்து, யாழ் வாசித்தவர்; மக்கள் உள்ளங்களை இசையால் மகிழ்வித்தவர்; சம்பந்தர் பாட, யாழ் வாசித்தவர்.[25]

**21. நரசிங்க முனையரையார்:** அடியார்க்கு உணவும் பணமும் உதவியவர்; திருவாதிரை தோறும் ஒவ்வோர் அடியார்க்கும் உணவும் நூறு பொன்னும் கொடுத்தவர்.[26]

**22. நெடுமாறர்:** சமணராயிருந்து சைவரானவர்; பாண்டிய நாட்டிற் சைவம் வளர இடமளித்தவர்.[27]

**23. நேசநாயனார் :** காம்பீலி நகரத்தினர் அடியார்க்குப் பலவகை ஆடைகளை நெய்து கொடுத்தவர்.[28]

**24. பெருமிழலைக் குறும்பர்:** அடியார்க்கு வேண்டிய உணவு, உடைகளை உதவி வந்தவர்.[29]

**25. மங்கையர்க்கரசியார்:** குலச் சிறையை ஏவிச் சம்பந்தரைப் பாண்டி நாட்டிற்கு வரச் செய்து, கணவரைச் சைவராகச் செய்தவர்.[30]

**26. மானக் கஞ்சாறர்:** அடியார்களின் குறிப்பறிந்து உணவு, உடை, பொருள் முதலியன கொடுத்தவர்; மாவிரதியர் விருப்பின்படி மணமகளான தம் மகளது கூந்தலைப் பஞ்சவடிக்காக அறுத்துக் கொடுத்தவர்.[31]

**27. முருக நாயனார்:** பூசைக்குரிய மலர்மாலைகளைத் தொடுத்துக் கோயிலுக்கு உதவி வந்தவர்; மடம் வைத்து அடியார்களை உபசரித்தவர்.[32]

**28. முனையடுவார்:** தோற்ற அரசர்கள் சார்பில் நின்று வெற்றி பெற்று அவர்கள் தந்த பணத்தைச் சிவனடியார்க்கு உதவி வந்தவர்.[33]

**29. மூர்க்க நாயனார்:** சொத்தையெல்லாம் அடியாரை உண்பிப்பதிலேயே செலவழித்தவர்; பிறகு சூதாடிப் பொருள் பெற்று அடியாரை உண்பித்தவர்.[34]

**30 மெய்ப்பொருள் நாயனார்:** அடியார்க்கு வேண்டியன அளித்தவர்; தம் நாட்டுக் கோயில்களில் பூசை, ஆடல், பாடல் முதலியன குறைவின்றி நடக்க ஏற்பாடு செய்தவர்; அடியார்க்கு மட்டும் அடையாத வாயிலை உடையவர்.[35]

**31. விறல்மிண்டர்:** சேர நாட்டினர்; தலயாத்திரை செய்தவர்; அடியார்களை வழிபட்டவர்; திருவாரூரில் சுந்தரர் திருத்தொண்டத் தொகை பாடக் காரணமாயிருந்தவர்.[36]

**32. சுந்தரர்:** தமிழகம் முழுவதும் சுற்றித் தல யாத்திரை செய்து பதிகங்கள் பாடியவர்; கழற்சிங்கர், சேரமான் பெருமாள், பாண்டியன், சோழன் இவர்கட்கு நண்பர்.[37]

இந்நாயன்மாருட் பலர் மாகேசுவர பூசை (அடியார்க்கு உணவளித்தல்) செய்தனர் என்பதைக் காண திருமூலர் கூறிய மாகேசுவர பூசையின் தேவையை இவர்கள் நன்குணர்ந்து கடைப்பிடித்தனர் என்பதை அறியலாம்.

**நாயன்மார் வீட்டுப் பெண்மணிகளும் சமயத்தொண்டும்:** திலகவதியார் திருவதிகைக் கோயிலில் சிவத்தொண்டு செய்து வந்தார். அப்பர் சமணத்திலிருந்து சைவராக உதவி செய்தவர் அவரேயாவர்.[38] நெடுமாறனைச் சைவராக்க மங்கையர்க்கரசியார் மேற்கொண்ட முயற்சி பெரிதாகும். சமணரான தம் கணவர்க்குத் தெரியாமல் அமைச்சரான குலச்சிறையைச் சம்பந்தரிடம் அனுப்பி, அவரைப் பாண்டிய நாட்டுக்கு வரச் செய்தார்; கணவரைத் தூண்டிச் சம்பந்தரைக் கொண்டு நோய் நீக்கிக் கொள்ளுமாறு அறிவுறுத்தினார். அவரது முயற்சி இன்றேல் பாண்டிய நாட்டிற் சைவம் பரவியிராதென்பது உண்மை.[39] காரைக் கால்

அம்மையார் சமயப்பற்று, அவர் அருட்பாடல்களைக் கொண்டே நன்கறியலாம். தம் மகனை அறுத்துச் சமைக்க உடன்பட்ட சிறுத்தொண்டர் மனைவியாரின் சமயப்பற்றுக்கு எல்லை கூற முடியுமா? அடியார்க்குச் சமைக்க, வயலில் விதைத்த நெல்லைக்கொண்டு வரும்படி யோசனை கூறிய இளையான் குடிமாறர் மனைவியார்,[40] நெல்லை வாங்கத் தம் தாலியைத் தந்த குங்குலியக் கலயர் மனைவியார், [41] விளக்கெரிக்கப் பணம் வேண்டித் தம்மை விற்க உடன்பட்ட கலிய நாயனார் மனைவியார்,[42] அடியார் கால்களைக் கழுவக் கணவனுடன் இருந்து நீர் வார்த்து வந்த கலிக்கம்பர் மனைவியார்[43] முதலிய மாதரசியர் சிவபக்தியை என்னென்பது! இத்தாய்மார்களின் ஒத்துழைப்பு இன்றேல் நாயன்மார்கள் சமயத்திருப்பணிகள் செய்திருத்தல் இயலுமா? சைவ சமயம் நன்கு வளர இப்பெண்மணிகளின் ஒத்துழைப்பும் ஒரு காரணமாக இருந்ததென்பது உறுதி.

நாயன்மாருள் சாதி வேறுபாடு இல்லை: பிராமணரான சம்பந்தர், அப்பருடைய கல்வியறிவு, அநுபவம், முதுமை இவற்றைக் கருதி அவரை 'அப்பரே' என அழைத்தனர்.[44]

பாணர் மரபினரான திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவர் மனைவியாரும் இரவில் தங்கியிருக்க நீலநக்கர் தமது வீட்டு நடுவில் யாககுண்டத்தின் பக்கத்தில் இடவசதியளித்தார்.[45] பிராமணரான அப்பூதியடிகள் வேளாளரான அப்பருடன் (தம் குடும்பத்தினருடன்) இருந்து உணவு உண்டவர்; அவருக்கும் பாதபூசை செய்தவர்.[46] சிவநேசச் செட்டியார் தம் மகளை மணந்து கொள்ளும்படி பிராமணரான சம்பந்தரை வேண்டினார். அதற்குச் சம்பந்தர், 'நான் இவளை உயிர்ப்பித்தவன் ஆதலின் இவள் எனக்கு மகள் போல்வாள்'[47] என்று பதில் கூறினரே அன்றி, வேறுகூறாதது கவனிக்கத்தக்கது. சிவப்பிராமணரான சுந்தரர் உருத்திரகணிகையரான பரவையாரையும் வேளாளப் பெண்ணாகிய சங்கிலியாரையும் மணந்துகொண்டமை கவனிக்கத்தக்கது. அவரைத் தம் இரு பெண்களையும் மணந்து கொள்ளுமாறு வேளாளரான கோட்புலியார் வேண்டினார்.[48] ''தொழுநோயராயினும் ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் சிவனடியாராயின், அவர் நாம் வணங்கும் கடவுளார்''[48a] என்பது அப்பர் வாக்கு. இவை அனைத்தையும் நோக்க, அக்காலச் சிவனடியாருள் சாதி வேற்றுமை காட்டப்படவில்லை என்பதும் பக்தி ஒன்றுக்கே மதிப்புத் தரப்பட்டது என்பதும் தெரிகின்றன. அனைவரும் கலந்து ஒன்றாய்ப் பழகுதல், பாடுதல், உண்ணுதல், உறங்குதல் சமய வளர்ச்சிக்குத் தேவையானது என்று கருதப்பட்டது. மேலும் சாதி வேறுபாடுகள் அற்ற சமணத்தையும் பௌத்தத்தையும் வெல்ல முயன்ற சைவத்தில்

அவ்வேறுபாடுகள் இருத்தல் இழிவென்று கருதியிருத்தல் இயல்புதானே! இங்ஙனம் அடியாருள் சாதி பேதம் காட்டப்படாமை சைவ வளர்ச்சிக்குரிய காரணங்களுள் ஒன்றாகும்.

### சமயப் போராட்டம்

பல்லவர்க்கு முற்பட்டகாலத்தமிழகத்தில் கவுணியன் விண்ணந்தாயன் முதலிய சிலரால் வெறுக்கப்பட்ட சமண-பௌத்த சமயங்கள், முற்காலப் பல்லவர் காலத்தில் மிகுதியாக வெறுக்கப் பட்டன; சிறப்பாகச் சமண சமயம் தண்டியடிகள், நமிநந்தியடிகள் முதலியோரைப் பரிகசிக்கத்தக்க நிலைக்கு இழிந்துவிட்டது என்பது முன்பு கூறப்பட்டது. அந்நிலை நாளடைவில் வளர்ந்து, அப்பர் சம்பந்தர் காலத்தில் உச்சநிலை அடைந்தது; அப்பர்-சம்பந்தரால் அழிவுற்றது. இவ்விரு சமயங்களும் எவ்வாறு செல்வாக்கிழந்தன என்பதை இங்குக் காண்போம்:

**பல்லவ நாட்டில்:** அப்பர் நடு நாட்டைச் சேர்ந்த திருவாமூரினர்;[48] சைவப் பெற்றோருக்குப் பிறந்தவர்; பெற்றோர் இறந்தபின் பாடலியில் இருந்த சமண மடத்திற் சேர்ந்து பல ஆண்டுகள் அச்சமய நூல்களைக் கற்றுப் புத்தரை வாதில் வென்றார்; தருமசேனர் என்ற பட்டம் பெற்றார்; பிறகு தமக்கு உண்டான சூலைநோய் சமணரால் நீங்காது வளரவே, தம் தமக்கையாரிடம் சென்றார்; சிவனருளால் நோய் நீங்கப் பெற்றார்; சைவராக மாறினார். தங்கள் சமயத்திலிருந்து சென்று சைவரான அப்பரால் தங்கள் சமயத்துக்கு ஆபத்து நேரும் என்பதை உணர்ந்து அஞ்சிய சமண முனிவர்கள், மகேந்திரவர்மனைக்கொண்டு அவருக்குப் பல துன்பங்களை இழைத்தனர். அப்பர் சிவனருளால் அத்துன்பங்களிலிருந்து நீங்கினார். சிறந்த அறிஞனான மகேந்திரவர்மன் மனமாற்றம் அடைந்து சைவனானான்; பாடலியில் இருந்த சமண மடத்தையும் கோயிலையும் இடித்து, அச்சிதைவுகள் கொண்டு திருவதிகையில் குணபரஈச்சுரம் எனத் தன் பெயரால் சிவன்கோயில் கட்டினான். இது முன்பே கூறப்பட்டது. பாடலியில் புகழ்பெற இருந்த சமண மடத்தைப் பற்றிப் பிற்காலத்தில் ஒன்றும் கேட்கப்படாமையின்,[49] அது மகேந்திரன் காலத்தில் அழிக்கப்பட்டதென்ற சேக்கிழார் கூற்று உண்மை எனக் கொள்ளலாம்.[50] அந்நிலையில் சம்பந்தர் தொண்டை நாட்டில் யாத்திரை செய்தார்; திருவோத்தூரில் இருந்த சமணரால் பரிகசிக்கப் பெற்றும் சிவனடியாரால் வளர்க்கப்பெற்றும் வந்த ஆண்பனையைக் குலையீனும் படி சம்பந்தர் செய்தார். அந்த அற்புதம் கண்ட சமண முனிவர்கள் திருவோத்தூரை விட்டு அகன்றனர்.[51]

சமணரிடம் தருமசேனர் என்ற பட்டம் பெற்றுப் புத்தரை வாதில் வென்ற பேரறிஞரான அப்பர் சைவரானது சமணத்துக்கு இடுப்பு ஒடிந்த மாதிரியாகும். போதாக் குறைக்கு நாட்டையாண்டவனும் பல்கலை விற்பன்னனுமான மகேந்திரவர்மன் மதம் மாறிச் சமண மடத்தையே அழித்துவிட்டான் எனின், பல்லவ நாட்டில் சமணர் செல்வாக்கு அழிந்துவிட்டது என்பது பொருளன்றோ? மதம் மாறிய பல்லவன் பல புதிய கோயில்களைச் சிவனுக்கமைத்தான்; மதம் மாறிய அப்பர் சிவன் கோயில் தோறும் சென்று, பதிகம்பாடி, மக்கட்குச் சிவநெறியின் சிறப்பை உபதேசித்தார்; சம்பந்தரும் தொண்டை நாட்டில் யாத்திரை செய்து பதிகங்கள் பாடினார். இம்மூவர் முயற்சியால் தொண்டை நாட்டில் சைவசமயம் புத்துயிர் பெற்று வளரத் தொடங்கியது.

**சோழநாட்டில்:** அப்பர் பழையாறை வடதளிக்கு வந்தபொழுது அத்தளி சமணர் கையில் இருந்ததையும் பூசையற்று இருந்ததையும் கேட்டு, அங்கு உண்ணாவிரதம் இருந்தார். சோழ அரசன், இதனை உணர்ந்து, அங்கிருந்த ஆயிரம் சமணரையும் விரட்டியடித்துக் கோயிலைப் பழையபடி நன்னிலையில் அமைத்தான்.[52] இதனால் சோணாட்டில் சமணர் செல்வாக்கும் குறைந்தது. அந்நாட்டில் போதிமங்கை என்னும் இடத்தில பௌத்தர்கள் இருந்தார்கள். சம்பந்தர் அவர்களை வாதில் வெல்ல, பலர் சைவராயினர்.[53] இங்ஙனம் சோழநாட்டில் அப்பராற் சமணமும் சம்பந்தராற் பௌத்தமும் செல்வாக்கிழந்தன.

**பாண்டிய நாட்டில்:** பாண்டிய அரசனான நெடுமாறன் சமணச் சார்புடையவன் ஆதலின், சமண சமயமே அங்குச் செல்வாக்குப் பெற்றிருந்தது. ஆயின், பாண்டியன் மனைவியாரும் அமைச்சர் குலச் சிறையாரும் செய்த முயற்சியின் பயனாகச் சம்பந்தர் பாண்டிய நாட்டை அடைந்தார்; சமணரால் தீர்க்க முடியாதிருந்த வெப்பு நோயை (Hectic Fever)ப் பதிகம் பாடித் தீர்த்தார்; சமணரை நீர் வாதத்திலும் நெருப்பு வாதத்திலும் வென்றார். அரசன் மனம் மாறிச் சைவனானான். பெருங்குன்றத்தைச் சேர்ந்த எண்ணாயிரம் சமணத்துறவிகளும் கழுவேறினர்.[54] ‘மன்னவன் எவ்வழி மன்னுயிர் அவ்வழி’ ஆதலின், நெடுமாறன் சைவனானதும் பாண்டிய நாட்டில் சைவம் தழைக்கத் தொடங்கியது.

இங்ஙனம் பல்லவ நாட்டிலும் சோழ நாட்டிலும் பாண்டிய நாட்டிலும் இருந்த சமணரும் பௌத்தரும் அப்பர்- சம்பந்தராலும் பல்லவ - சோழ - பாண்டிய மன்னராலும் ஒடுக்கப்படவே, தமிழகத்தில் அவை செல்வாக்கிழந்தன. சமண முனிவர்கள் ஆயிரக் கணக்கில் தமிழகத்தை விட்டு நீங்கித் தங்கள் புகலிடமாகிய கங்க நாட்டை

அடைந்தனர்; அங்கும் இராட்டிரகூட நாட்டிலும் தங்கள் செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டனர்.[55]

**வைணவமும் பௌத்த – சமணங்களும் :** அப்பர்-சம்பந்தர்க்குப் பிறகு தமிழகத்தில் எஞ்சியிருந்த சமண-பௌத்தர்கள் கி.பி.8-ஆம் நூற்றாண்டில் வைணவர் சீற்றத்திற்கு ஆளாயினர் என்பது தெரிகிறது. பல்லவமல்லன் அம்மதத்தார் அநுபவித்து வந்த நிலங்களைக் கைப்பற்றிப் பிராமணருக்களித்தான். அவன் ஆட்சியில் அச்சமயத்தார் கழுவேற்றப் பட்டனர் என்பதைக் காஞ்சிவைகுந்தப் பெருமாள் கோயிற் சிற்பங்கள் உணர்த்துகின்றன.[56] வைணவர் அப்புறச்சமயத்தாரை எந்த அளவு வெறுத்தனர் என்பதை,

**வெறுப்பொடு சமண மிண்டர் விதியில்சாக் கியர்கள் நின்பால்**
**பொறுப்பரி யனகள் பேசிப் போவதே நோய தாகி**
**குறிப்பெனக் கடையு மாகில் கூடுமேல் தலையை ஆங்கே**
**அறுப்பதே கருமம் கண்டாய் அரங்கமா நகரு ளானே.**[57]

என்னும் தொண்டரடிப்பொடியாழ்வார் பாசுரத்திலிருந்து நன்கறியலாம்.

**சங்கரரும் பௌத்தரும்:** சங்கரர் (கி.பி.788-820) காஞ்சியில் இருந்த புத்தரை வாதில் வென்று, அங்கொருமடத்தை நிறுவினார்; கும்பகோணத்திலும் ஒன்றை நிறுவினார். அவர் சிவன், திருமால், அம்பிகை வழிபாட்டினை ஆதரித்தார்; நரபலி மிருக பலிகளைக் கண்டித்தார்; அவரது சேவையால் ஸ்மார்த்த மதம் நாட்டிற் பரவத் தொடங்கியது.[57a]

இங்ஙனம் சமணமும் பௌத்தமும் தமிழகத்தில் தம் செல்வாக்கை 7,8-ஆம் நூற்றாண்டுகளில் இழந்து விட்டமையால், 9-ஆம் நூற்றாண்டினரான சுந்தரர் பதிகங்களிலும் மாணிக்கவாசகரது திருவாசகத்திலும் சமணபௌத்த கண்டனங்கள் குறிக்கத்தக்க அளவு இல்லை; சைவ சமய விளக்கமும் மிகுதியாகத் தேவைப்படவில்லை என்பன இங்கு அறியத்தகும்.

**அப்பர்-சம்பந்தர் தலயாத்திரை:** சமண-பௌத்தங்களை வென்றமை சைவத்திற்கு வெற்றியே ஆயினும், சைவ சமய வளர்ச்சிக்குரிய ஆக்கவேலைகள் தேவை ஆதலின், அப்பரும் சம்பந்தரும் நாட்டில் இருந்த பல கோயில்கட்கும் யாத்திரை சென்றனர். அப்பர் ஏறத்தாழ 126 கோயில்கட்குச் சென்று பதிகம் பாடினார். சம்பந்தர் 216 கோயில்கட்குச் சென்று பதிகம் பாடினார். இவ்விருவரும் நேரே செல்லாமல் பதிகங்களிற் குறிப்பிட்ட தலங்கள் சில; அப்பரும் சம்பந்தரும் தனித்தனியே சென்று பதிகம் பாடிய கோயில்கள் பல;

இருவரும் சேர்ந்து சென்று பதிகம் பாடிய கோயில்கள் சில; அவர்கள் பாடிய பாக்கள் மக்கள் உள்ளங்களைக் கவர்ந்தன.[57]

அப்பர்-சம்பந்தருடன் அடியார் பலர் தல யாத்திரை செய்தனர். ஒவ்வோர் ஊராரும் அவர்களை எதிர்கொண்டழைத்து உபசரித்தனர். அக்காலத்தில் எல்லாத் தலங்களிலும் மடங்கள் இல்லை; திருவதிகை, திருநல்லூர், சீகாழி, திருப்புகலூர், திருக்கடவூர், திருமறைக்காடு, திருப்பூந்துருத்தி, திங்களூர், திருவாரூர், திருவீழிமிழலை, மதுரை, காஞ்சி, காளத்தி, சாத்தனூர், கொடுங்கோளூர், ஒற்றியூர் என்னும் ஊர்களில் மடங்கள் இருந்தன.[58] அப்பரே திருப்பூந்துருத்தியில் மடத்தைக் கட்டினார்; அங்குப் பலநாள் தங்கிப் பதிகங்கள் பாடிக்கொண்டிருந்தார்.[59] மடங்கள் இல்லாத ஊர்களில் ஊர்ப் பொதுமக்கள் ஆதரவில் பல வீடுகளில் தங்கியிருந்தனர் அல்லது கோயிலில் தங்கியிருந்தனர் போலும்! பல்லவராட்சியில் பல பெரிய கோயில்கள் நன்னிலையில் இருந்தமையால் கோயிற் செலவிலும் அவர்கள் தங்கியிருக்கலாம். இங்ஙனம் கோயிற் செலவிலும் ஊரார் செலவிலும் அப்பர்-சம்பந்தர் தல யாத்திரை வெற்றிகரமாக நடைபெற்றதென்னலாம். செங்காட்டங்குடி, திருப்புகலூர் முதலிய இடங்களில் அவர்கள் காலத்திலிருந்த சிறுத்தொண்டர், முருக நாயனார்போன்ற அடியார்களின் தொண்டு மிகுதியாக இருந்தது. தலந்தோறும் இருந்த அடியார்கள் தத்தம் ஊர்களில் சைவ சமயத்தைப் பரவச் செய்தனர். அவர்கள் முயற்சிக்கு உறுதுணையாக அப்பர்-சம்பந்தர் தலயாத்திரையும் பதிகமும் இருந்தன. நாடெங்கும் மக்கள் சைவ சமயத்திற் பற்றுள்ளம் கொள்ளலாயினர்.

இனிச் சமய வளர்ச்சிக்குக் கோயில்கள் எவ்வாறு உதவின என்பதைக் காண்போம்.

## *கோயில்கள்*

**கோயில் வளர்ச்சி:** கண்ணப்பர் காலத்தில் காளத்திமலைமீது லிங்கம் இருந்தது. ஆனால் கோயிலோ, பாதுகாப்போ, கோயில் ஆட்சிமுறையோ இருந்ததாகத் தெரியவில்லை. அக்கடவுள் தனித்திருப்பதை எண்ணிக் கண்ணப்பரே வருந்தினார் என்று பெரியபுராணம் கூறுகிறது. இவ்வாறே ஆலங்காடு போன்ற காடுகளிலும் கடம்பவனம் போன்ற வனங்களிலும் நெல்லிக்கா போன்ற சோலைகளிலும் மயிலாடுதுறை போன்ற நீர்த் துறைகளிலும் மக்கள் பிரயாணத்தில் தங்கும் இடங்களிலும் மரத்தடியில் லிங்கங்கள் இருந்திருத்தல் வேண்டும்; அவ்விடங்களில் நாளடைவில் அரசராலும் பிறராலும் கோயில்கள் ஏற்பட்டிருத்தல் வேண்டும்.[59A] மக்கள்

அவ்வப்பொழுது புதிதாகக் குடியேறிய குடி, புத்தூர், மங்கலம், புரம் என்று முடியும் ஊர்களில் புதிய கோயில்கள் உண்டாயின. இங்ஙனம் பல வழிகளில் ஏற்பட்ட கோயில்களுட் பலவே கி.பி.7-ஆம் நூற்றாண்டில் அப்பர் - சம்பந்தராலும் பின்னர் சுந்தரர், மாணிக்கவாசகராலும் பாடப் பெற்றன.

**தில்லையும் திருவாரூரும்:** நாயன்மார் காலத்தில் இருந்த சுமார் 325 கோயில்களிற் சிறப்புற்றவையாக இருந்தவை தில்லைக் கூத்தப்பிரான் திருக்கோயிலும் திருவாரூர்ப் பூங்கோயிலுமே ஆகும். ஏனைய கோவில்கள் முதன்மை பெறுதற்கு முன்பிருந்தே தில்லைக் கோயில் தில்லைவாழ் அந்தணர் மூவாயிரவரால் பூசிக்கப் பெற்றதாலும் கூத்தப் பெருமான் கோயில் கொண்ட முதலிடமாதலாலும், சைவவுலகில் தில்லை முதலிடம் பெறலாயிற்று. அம்முதன்மை கருதியே நாயன்மார் திருப்பதிகங்கள் அங்கு அடக்கம் செய்யப்பெற்றனவாதல் வேண்டும். பேரம்பலம், சிற்றம்பலங்களைப் பெற்ற தில்லைத் திருக்கோயிலின் பழமையும் பெருமையும் உணர்ந்தே பிற்காலச் சோழர்கள் அதனைத் தம் உயிரினும் மேலாகப் பாதுகாத்துச் சிறப்பித்தனர்; தில்லைப் பெருமானைத் தம் குலநாயகன் என்று கூறிக் கொண்டனர். பிற கோயில்களை நோக்கத் திருவாரூர்க் கோயில் அப்பர்-சம்பந்தர் காலத்திற் சிறந்து விளங்கியதாயினும் சுந்தரர் காலத்தில் அது மிக்க சிறப்புற்றது. மநுநீதிச் சோழன் தலைநகரம் திருவாரூர்; சப்த விடங்க தலங்களில் முதன்மையானது. சுந்தரர் தாயார் கௌதமி கோத்திரத்தவரும் சைவ சித்தாந்த வல்லவருமாகிய திருவாரூர் ஞான சிவாசாரியார் மகளார்;[60] எனவே திருவாரூர் சுந்தரர்க்குப் பாட்டனார் ஊர்; அவர் முதல் மணம் புரிந்த ஊரும் அதுவே; அவர் அங்குத்தான் தேவாசிரிய மண்டபத்தில் இருந்த நாயன்மார்களையும் முற்பட்ட நாயன்மார் திருவுருவங்களையும் பணிந்து திருத்தொண்டத் தொகை பாடினார்.[61] இத்தகைய தொகை பாடுதற்குக் காரணமான தேவாசிரிய மண்டபம் வேறெக் கோயிலிலும் அக்காலத்தில் இருந்திலது. இச் சிறப்புடைக் காரணங்களால் திருவாரூர் சிறந்த தலமாகக் கருதப்பட்டது.

**கோயிற் பெயர்கள்:** பாடல் பெற்ற கோயில்கள் ஈசுவரம், பெருங் கோயில், ஆலக்கோயில், கரக் கோயில், ஞாழற் கோயில், கொகுடிக் கோயில், இளங்கோயில், மணிக் கோயில், தூங்கானை மாடம் எனப் பலவாகப் பெயர்களைப் பெற்றிருந்தன என்பது மூவர் திருப்பதிகங் களிலிருந்து தெரிகிறது. (1) பெருங்கோயில் என்பது மாடக் கோயில் என்றும் பெயர் பெறும். அது செய்குன்றின்மேல் கட்டப்பட்டது. அப்பர் காலத்தில் 78 பெருங்கோயில்கள் இருந்தன.[62] பெருங்கோயில்கள்

கோச்செங்கணான் எடுப்பித்தவை. இதனைத் திருமங்கையாழ்வார் வாக்கால் உணரலாம். (2) ஞாழற் கோயில் என்பது ஞாழல் மரம் இருக்கப் பெற்ற கோயில் ஆகும். திருப்பாதிரிப்புலியூர்க் கோயில் ஞாழற் கோயில் எனப் பெயர் பெற்றிருந்தது.[63] (3) கொகுடிக் கோயில் என்பது கொகுடி என்னும் ஒருவகை முல்லை நிறைந்த இடத்தில் அமைந்த கோயில் எனப் பொருள்படும். திருக்கருப்பறியலூரில் உள்ள கோயில் இப்பெயரையுடையது.[64] (4) ஆலக்கோயில் என்பது ஆலமரத்தைத் தலமாகப் பெற்ற கோயில் என்று கூறலாம். திருக்கச்சூரில் (செங்கற்பட்டுக் கருகில்) உள்ளது இப்பெயர் பெற்றது.[65] (5) இளங்கோயில் என்பது பழைய கோயிலைப் புதுப்பிக்குங்கால் அதற்கு அண்மையில் இறைவனை எழுந்தருளுவித்து வழிபாடு புரிந்த கோயில் இளங்கோயில் எனப்பட்டது. திருமீயச்சூர்க் கோயில் இப்பெயர் பெற்றது.[66] சேய்மையில் உள்ளார் தாம் வழிபடும் கடவுளைத் தம்மூர்க்கு அணித்தாக எழுந்தருளுவித்து எடுப்பித்த கோயிலும் இளங்கோயில் எனப்படும்.[67] (6) கரக் கோயில் என்பது தேர்வடிவமாகச் சக்கரங்களோடு அமைக்கப் பெற்ற கோயிலாகும். கடம்பூர்க் கோயில் இப்பெயர் பெற்றது.[68] (7) மணிக் கோயில் என்பது மணிகள் பரப்பினாற் போன்ற மேற்கூரை அமைப்புடைய விமானம் கொண்ட கோயிலாகலாம் என்று அறிஞர் சதாசிவப் பண்டாரத்தார் கருதுகிறார். உண்மை தெரியவில்லை. (8) தூங்கானை மாடம் என்பது வராஹ மிஹிரர் குறித்துள்ள பலவகை விமானங்களில் கஜப்பிரஷ்ட விமானம் கொண்ட கோயில். பெண்ணாகடம் கோயில் தூங்கானை மாடம் எனப்பட்டது.[69] பல்லவர் காலத்தில் இத்தகைய கோயில்கள் பல கட்டப்பட்டன. அவற்றுள் திருத்தணிகைக் கோயில் ஒன்றாகும். (9) ஈசுவரம் என்பது சிவன் கோயிலின் பொதுவான பெயர்.

**கோயில் ஆட்சி:** தமக்கு வேண்டிய பட்டாடைகள், நகைகள் முதலியவற்றைப் பண்டாரத்திலிருந்து கொடுக்கும்படி அருளவேண்டும் என்று சுந்தரர் நாகைக் காரோணத்திற் கடவுளை வேண்டினார்.[70] இதனால் அவர் காலத்தில் கோயில் பண்டாரம் இருந்தது என்பது தெளிவாகிறது. அப்பர்-சம்பந்தர் திருவீழிமிழலையில் பொற்காசு பெற்றமையும், வேள்வி செய்யச் சம்பந்தர் ஆவடுதுறையில் ஆயிரம் பொற் காசுகள் பெற்றமையும்[71] அவ்வக்கோயில் பண்டாரங்களில் என்பது உய்த்துணரத்தக்கது. பல்லவர் காலத்தில் கோயில் ஆட்சி செவ்வனே நடைபெற்றது என்பது முன்னதிகாரத்தில் விளக்கப்பட்டதன்றோ?

**கோயில்களில் விழாக்கள் :** ஆரூர், குறுக்கை, கோடிகா, தில்லை, மறைக்காடு, கோளிலி, மருகல், ஆமாத்தூர், புறம்பியம், ஆக்கூர், வலம்புரம், புத்தூர்,[71a] ஆவூர், மிழலை, கோலக்கா, செங்காட்டாங்குடி, நாகை, குற்றாலம், புகலி, மயிலை, களர், ஐயாறு, இடைமருதூர், திலதைப்பதி, கடவூர், அம்பர், தென்குடித்திட்டை, திருவான்மியூர், கச்சி, நல்லூர், நெல்வேலி, இடைவாய்,[71b] நறையூர், கலயநல்லூர், வெஞ்சமாக்கூடல்[71c] முதலிய ஊர்க்கோயில்களில் ஆதிரை, பூசம் முதலிய விழாக்கள் நிகழ்ந்தன. பெரிய ஊர்க் கோயில்களில் ஓர் ஆண்டில் பல விழாக்கள் நடைபெற்றன என்பது தெரிகிறது.[71d] ஆரூர், தில்லை, திருப்பத்தூர், திருவையாறு முதலிய ஊர்களில் தேர்விழாவும் நடைபெற்றது.[71e]

**கோயில்களில் திருமேனிகளும் உருவச்சிலைகளும்:** கோயில்களில் விழாக்களும் ஊர்வலங்களும் நடைபெற்றன என்பதால் கடவுளர் திருமேனிகள் இருந்தன என்பது பெறப்படும். அப்பர் - சம்பந்தர் - சுந்தரர் தமக்கு முற்பட்ட நாயன்மார்களைத் தங்கள் பதிகங்களிற் பாடியிருத்தலைக்காண, நாயன்மார் பிறந்து தொண்டு செய்து மறைந்த ஊர்க் கோயில்களில் அவர்கள் உருவச்சிலைகள் எழுப்பிப் பூசை செய்யப்பெற்று வந்தன எனக்கோடல் பொருந்தும். இங்ஙனமே தேவாசிரிய மண்டபத்தில் சுந்தரர் தொகை பாடியபொழுது 50 நாயன்மார்கட்கும் உருவச்சிலைகள் இருந்தன எனக் கருதுதல் பொருத்தமாகும்.

**கோயில்களில் இசையும் நடனமும்:** மகேந்திரன், இராசசிம்மன் போன்ற பல்லவர்கள் இவ்விரு கலைகளையும் நன்கு வளர்த்தார்கள் என்பது சென்ற அத்தியாயத்திற் கூறப்பட்டது. அவர்கள் காலத்தில் பல கோயில்களில் இக்கலைகள் வளர்க்கப்பட்டன என்பது திருமுறைகளால் தெரிகிறது. ஆரூர், திருமேற்றளி, ஆப்பாடி, ஆலங்காடு, நல்லூர், கடம்பூர், கோளிலி,[71f] வீழிமிழலை, மருகல், ஆவூர், மயிலாடுதுறை, பெருந்துறை, சிரபுரம், நெடுங்களம், பூவணம், பல்லவனீசுவரம், பழனம், கானூர், இலம்பையங்கோட்டூர், சீகாழி, பாதாளீசுரம், ஐயாறு, வாஞ்சியம், நள்ளாறு, பழுவூர், சாய்க்காடு, புள்ளிருக்கு வேளூர், ஆமாத்தூர், திருக்களர், கோட்டாறு, பாசூர், நறையூர், புகலூர், ஏடகம், தென்குடித்திட்டை, கருகாவூர், வைகாவூர், மாகறல், தேவூர், மறைக்காடு, மாணிகுழி, பரிதிநியமம், இடைவாய்,[71g] துறையூர், பனையூர், பைஞ்ஞீலி, வெஞ்சமாக்கூடல், பனங்காட்டூர், பழையனூர்[71h] முதலிய ஊர்க் கோயில்களில் பண்ணோடுபாடல்கள் பாடப்பட்டன. கோயில்களில் இசை ஏன் பயிலப்படவேண்டும்?

இறைவன் ''ஏழிசையாய் இசைப்பயனாய்''[72] இருப்பவன்; ''பண் அவனே; பண்ணின் திறனும் அவனே;''[73]

**பண்ணும்பதம் ஏழும்பல ஓசைத்தமிழ் அவையும்**
**உண்ணின்றதோர் சுவையும்உறு தாளத்தொலி பலவும்**
**-------------------------------------------**
**விண்ணும்முழு தானானிடம் வீழிம்மிழ லையே.**[74]

என்பது நாயன்மார்கண்ட உண்மை. சமயத்தத்துவங்களில் உயர்ந்தது நாததத்துவம். நாதத்திலிருந்து இசை தோன்றுகிறது. இறைவனே இசை வடிவமாக இருக்கிறான் என்பது சைவசமயக் கொள்கை. இதனால் இசையோடு தோத்திரங்களைப் பாடுவதால் இறைவன் மகிழ்வான், அருள்புரிவான் என்று சம்பந்தர் கூறியுள்ளார்.[75] கோயிலிற் சென்று அலகிடல், விளக்குப் போடுதல், மலர் தொடுத்துச் சாத்துதல் முதலியவற்றால் உண்டாகும் புண்ணியத்தைவிட இசையுடன் தோத்திரம் பாடுவது மிக்க புண்ணியத்தைத் தரும் என்று அப்பர் குறித்துள்ளது நோக்கத்தக்கது.[76] ''தமிழோடு இசை கேட்கும் இச்சையால் நித்தம் சம்பந்தர்க்குக் காசு நல்கினீர்'' என்று சுந்தரர் கடவுளை நோக்கிக் கூறியுள்ளார்.[77] இசையை இறைவன் விரும்புகின்றான் என்பதை இஃது உணர்த்துகிறதன்றோ? இந்த விவரங்கள், கோயிலில் இசை பயிலப் பட்டதன் காரணத்தை விளக்கவல்லன.

ஐயாறு, ஆரூர், நாகை, நின்றியூர்,[78] வீழிமிழலை, முதுகுன்றம், பெருந்துறை, நெடுங்களம், பூவணம், பழனம், குடமூக்கு, கானூர், இலம்பையங்கோட்டூர், சீகாழி, ஐயாறு, நள்ளாறு, ஆமாத்தூர், திருக்களர், கடம்பூர், புகலூர், மழபாடி, தென்குடித் திட்டை, மாகறல், தேவூர், நல்லூர், நெல்வேலி, பரிதிநியமம், இடைவாய்,[79] துறையூர், வெஞ்சமாக் கூடல்[80] முதலிய ஊர்க் கோவில்களில் நடனமாதர் இருந்து நடனமாடினர். வீணை, கின்னரம், குடமுழா, கொக்கரை, முழவம், குழல், பறை, தாளம், யாழ், பிடவம், கல்லலகு, சச்சரி, கொடுகொட்டி, தக்கை,[81] பேரி, தண்ணுமை, தகுணிதம், சங்கிணை, சல்லரி, தத்தளகம், துந்துமி, மொந்தை[82] தண்டு, கல்லவடம், கூடரவம்[83] முதலிய பல்வேறு இசைக்கருவிகள் கோயில்களிற் பயன்பட்டன. இவ்விவரங்களை நோக்க, இசையும், நடனமும் சிவ வழிபாட்டில் இன்றியமையாத பகுதிகளாக விளங்கின என்பது தெரிகிறது.

இசை அனைவர் உள்ளத்தையும் உருக்கவல்லது. அது குழல், யாழ், வீணை இவற்றுடன் பயிலப்படுகையில் மிக்க இனிமை பயக்கும். பக்திச் சுவை பொருந்திய பாடல்கள் இசைக் கருவிகளுடன்

பாடப்படும்பொழுது மக்கள் உள்ளங்களைக் கவரும் என்பது உறுதி. அப்பாடல்கள் மக்களது தாய் மொழியில் பாடப்பட்டமையால், மக்கள் உள்ளங்களில் அவற்றின் பொருள் பதிந்து, பக்தியை உண்டாக்கின. விழாக்காலங்களிலும் பிறகாலங்களிலும் பண்ணிசையுடன் சிவபெருமான் ஆடிய பலவகை நடனங்களையும் பிற நடன வகைகளையும் நடனமாதர் நடித்துக் காட்டினமை மக்கட்குச் செவிவிருந்தும் விழி விருந்துமாய் அமைந்தன. இவ்விரு கலைகளும் காம இன்பத்தைப் பயப்பவை எனச் சமண-பௌத்தரால் விலக்கப்பட்டன. அம்மையப்பனான மாதொரு பாகனை வழிபட்ட சைவர்கட்கு இவை வெறுப்பைத்தராது இன்பத்தையே தந்தன. இசையும் நடனமும் பொதுமக்களைக் கோயில்கட்கு இழுத்தன; உள்ளங்களைக் குழைவித்தன; கலைகளின் அருமையை உணர்த்தின; கலையே உருவான கடவுளிடம் மனத்தைச் செலுத்தின; தம்மை மறந்து ஆடவும் பாடவும் செய்தன. சிவபெருமான் ஆடிய பலவகை நடனங்கள் திருமூலரால் கூறப்பட்டன; அவை சிற்பங்களாகக் கயிலாசநாதர் கோயிலில் காட்சிளியத்தன; தேவார ஆசிரியர் காலத்தில் அவற்றை நடன மகளிர் ஆடிக்காட்டினர். இறைவனுக்கே நடராசன் என்ற பெயர் உண்டெனின் அவன் சமயம் நடனக்கலையை ஒரு பகுதியாகக் கொண்டது என்பது கூறாதே அமையுமன்றோ? துறவு நிலையில் இருந்து முத்திபெறலாம்; இன்றேல் இல்லறத்திலிருந்து கொண்டே இறைவனைப்பாடி ஆடிப்பரவுவதாலும் முத்திஅடையலாம் என்னும் பக்திமார்க்க போதனை இல்லறத்தார் உள்ளங்களைக் கவர்ந்தது. மக்கள் பண்ணிறைந்த பாடல்களைப் பாடியும் ஆடியும் இறைவனை வழிபடலாயினர். இவ்வாறு எல்லோரும் எளிதிற் பின்பற்றும்படியான பக்தி மார்க்கத்தை நாயன்மார் போதித்தமையாற்றான் சைவ சமயம் நாட்டில் நன்கு பரவலாயிற்று.

**சைவ மடங்கள் :** திருவதிகை முதலிய இடங்களில் மடங்கள் இருந்தன என்பது முன்பு கூறப்பட்டதன்றோ? சமண பௌத்த மடங்கள் யிற் சிறந்திருந்த அக்காலத்தில், அச்சமயங்களை ஒழிக்க ட்ட சைவ சமயத்தைச் சேர்ந்த இந்த மடங்களும் க்கூடங்களாகவும் சமயக் கல்லூரிகளாகவும் இருந்திருந்தல் ாடும் என்பது கூறாதே அமையுமன்றோ? கம்பவர்மன் காலத்து யூர் மடத்தில் சிறந்த அறிவாளி மடத்துத் தலைவராக இருந்தார் தை நோக்க, சைவ மடங்களில் துறவிகள் இருந்து பொதுக் யும் சமயக் கல்வியும் அளித்து வந்தனர் எனக்கோடல் நத்தமானது. அவை அப்பர் - சம்பந்தர் போலத் தலயாத்திரை ந அடியார்கள் தங்க வசதியும் அளித்தன.

**நாயன்மார் சமயபோதனை :** பௌத்தர் - சமணர் நூல்கள் பொய்ந்நூல்கள், அவற்றை நம்பாமல் சிவனை வழிபடுங்கள்; தீவினையற்று நன்மை அடைவீர்கள்.[84] எம் திருப்பதிகங்களைப் பாடிப் பயன் பெறுங்கள்.[85] திருஐந்தெழுத்து நற்பிறவியை அளிக்கும்;[86] பஞ்சாக்ஷரமே நல்ல துணையாகும்.[87] "ஐந்து இந்திரியங்களையும் அடக்குங்கள்; மனதை ஒருவழிப்படுத்தி நினையுங்கள்; ஓங்காரத்தொருவனாகிய சிவனைக் காண்பீர்கள்!!"[88]

புலனடக்கம், மனவொருமைப்பாடு உள்ள தூயவரிடம் உள்ள மலங்களை இறைவன் அகற்றுவான்; இறைவுணர்வில் ஊறிய இன்பத்தை அருள்வான்.[89] உடம்பாகிய வீட்டில் உள்ளமாகிய அகலில் உணர்ச்சியாகிய நெய்யைவிட்டு, உயிர் என்னும் திரியிட்டு, அறிவு என்னும் சுடர் ஏற்றிப் பார்த்தால் சிவனுடைய திருவடிகளைக் காணலாம்.[90]

**மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்**
**பொய்ம்மையாம் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப்**
**பாய்ச்சித்**
**தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலி யிட்டுச்**
**செம்மையுள் நிற்ப ராகில் சிவகதி விளையும் அன்றே.**[91]

"ஆடுங்கள், அழுங்கள், பாடுங்கள், வழிபடுங்கள்."[92] சம்பந்தரது திருக்கோடிகா, திருப்பதிகமும்[93] நெஞ்சுக்கு அறிவுறுத்தும் முறையிற் பாடப்பட்ட அப்பரது ஆரூர்த்திருத்தாண்டகமும்[94] மக்கட்கேற்ற சமய உபதேசமாகக் கொள்ளற்பாலன. கோயில் வழிபாடு, கோயிலில் தொண்டு செய்தல், தலயாத்திரை, அடியார் கூட்டுறவு, மாகேசுவர பூசை என்பனவும் வற்புறுத்தப்பட்டுள்ளன.[95]

**பலவகை வழிபாட்டு முறைகள் :** திருமூலர், பஞ்சாக்ஷரம் செபிப்பவர் துன்பங்களிலிருந்து இன்பம் எய்துவர் என்று கூறினார்.[96] ஐந்தெழுத்தே பிறவிக்கடலைக் கடக்கும் புணை என்று மணிவாசகர் கூறினார். அப்பர் - சம்பந்தரும் இதை வற்புறுத்தினர் என்பது முன் கூறப்பட்டது. ஐந்தெழுத்தைச் செபித்து முக்தியடைந்தவருள் சிறப்புலியும், சோமாசிமாறரும் குறிப்பிடத்தக்கவர்.[97] உருத்திர மந்திரத்தைச் செபித்து முக்தியடைந்தவர் உருத்திர பசுபதியார்.[98] கோயிலைப் பெருக்குதல், மெழுகுதல், மாலைகளைக் கட்டுதல், விளக்கெரித்தல் என்பன சிவபக்தர்கள் செய்த தொண்டுகளாகும்.[99] இத்தகைய தொண்டுகளைச் செய்தவர் பலர். அவருள் மூர்த்தியார், தண்டி, நமிநந்தி, கணம் புல்லர், முருகநாயனார், நந்தனார் என்பவர் குறிப்பிடத்தக்கவர். கோயில் கட்டும் துறையில் கோச்சோழன், காரியார்

என்பவர் குறிக்கத்தக்கவர். உண்மைச் சிவனடியார்க்குத் தொண்டு செய்தல், உண்பித்தல் (மாகேசுவர பூசை), அவர்கள் கேட்டவற்றை ஈதல் என்பன சிவத்தொண்டாகும் என்பது சைவசமயக் கொள்கை. இத்துறையில் இயற்பகையார், நரசிங்கர் முதலியோர் குறிக்கத்தக்கவர். அளப்பரிய அன்பினாலும், சைவப்பற்றின் அழுத்தத்தாலும் கண்ணை அப்பிய கண்ணப்பர், சிவநிந்தை செய்தவரை நாவறுத்த சத்திநாயனார், தந்தையைக் கொன்ற சண்டீசர் முதலியோர் அழியாப்புகழ் பெற்றனர். இவர்கள் திருமூலர் குறித்த கடுஞ் சுத்தசைவர் பட்டியலில் இடம் பெறத்தக்கவர். மனத்தாலேயே கோயில் கட்டல், பூசித்தல் என்பன பூசலார், வாயிலார் என்பவரிடம் காணப்பட்டன. சிவத்தலங்கள்தோறும் சென்று பதிகங்கள் பாடிச் சைவத்தைப் பரவச் செய்தலும் வழிபாட்டு முறையாகும். அது செய்தவர் அப்பர், சம்பந்தர், சுந்தரர் முதலியோர். இறைவருக்குப் பூசை செய்தல், உணவு படைத்தல் என்பனவும் வழிபாட்டு முறையேயாகும். அவ்வழி நின்றவர் புகழ்த்துணையார், அரிவாள் தாயர் முதலியோர். அவரவர் சக்திக்கேற்றவாறு தொண்டு செய்து பயன் பெறலாம் என்று ஆகமங்கள் கூறலாலும், அவ்வழி நிற்றல் அனைவர்க்கும் எளிதாதலாலும், பொதுமக்கள் பலவாறாகச் சைவத்தை ஆதரிக்கலாயினர் என்று கொள்ளுதல் பொருந்தும்.

**நரபலி கொடுத்து வழிபடுதல் :** சிறுத்தொண்டர் வடநாட்டிலிருந்து வந்த பைரவத்துறவியின் விருப்பப்படி தம் ஒரே மகனைக் கொன்று கறி சமைத்து அத்துறவிக்குப் படைத்ததாகப் பெரியபுராணம் கூறுகிறது. இங்ஙனம் நரபலி கொடுத்து வழிபடும் வழக்கம் அக்காலத்தில் இருந்ததா?

கி.பி. 6,7,8ஆம் நூற்றாண்டுகளில் பாசுபதர், காபாலிகர், காளாமுகர் என்பவர் பைரவர்க்கும் காளிக்கும் இரத்தத்தையும் மதுவையும் படைத்தனர்; உருத்திரன், காளி, சாமுண்டி ஆகியோர்க்கு வடஇந்தியாவில் கோவில்கள் இருந்தன என்பதும் காபாலிக பைரவாச்சாரியாரைப் பற்றிய வருணனையும் பாணர் எழுதிய ஹர்ஷ சரிதத்தில் இருக்கின்றன. எனவே, இவ்வழிபாட்டு வகைகள் பல்லவர் காலத்தில் தமிழகத்தில் இருந்திருத்தல் வேண்டும். மாமல்லபுரத்திலும், திருச்சிக் குகைக் கோயிலிலும், புள்ள மங்கைச் சிவன்கோயிலிலும் துர்க்கைக்குத் தலையை அறுத்துத்தரும் பக்தர்களைக் குறிக்கும் சிற்பங்கள் காண்கின்றன. காளிக்கு ஒருவனைப் பலியிடத் தயாராக இருப்பதைக் குறிக்கும் சிற்பமும் மாமல்லபுரத்திற் காணலாம். இச்சிற்பங்களும், சிறுத்தொண்டர் – பல்லவர் காலத்தில் பைரவர்க்கும் துர்க்கைக்கும் மனிதரைப் பலியிட்டனர் – தலைகளைக் காணிக்கையாகத் தந்தனர் என்பதை உறுதிப்படுத்துகின்றன.[100]

**அக்கால அடியவர்கள் :** அப்பர் காலத்தில் (1) விரிசடை விரதிகள், (2) அந்தணர், (3) சைவர்,[100a] (4) பாசுபதர், (5) காபாலிகர்,[101] (6) வித்தகக்கோல வெண்தலை மாலை விரதிகள் (மாவிரதிகள்), (7) சித்தர், (8) பித்தர் முதலியோர் தமிழகத்தில் இருந்தனர்.[102] இவருள் (1) விரிசடை விரதிகள் என்பவர் சடை வளர்த்துக் கொண்டிருந்த துறவிகள் எனக் கூறலாம்; (2) அந்தணர் என்பவர் பிராமணத் துறவிகள் ஆகலாம்; (3) சைவர் என்பவர் அறுவகை உட்சமயங்களுள் ஒன்றான சைவத்தைச் சேர்ந்த துறவிகள் ஆகலாம்; (4) பாசுபதர், (5) காபாலிகர் பற்றி முன்னரே கூறப்பெற்றது. (6) வெண்தலை மாலை விரதிகள் முன்னர்க்கூறப்பட்ட மாவிரதியர் ஆவர்; (7) சித்தர் என்பவர் இந்திரியங்களை அடக்கி அட்டமாசித்திகளில் வன்மை பெற்றவராவர்; (8) பித்தர் என்பவர் சிவ்நெறி ஒன்றிலேயே அழுந்திய உள்ளத்தினர்.

**நாயன்மார் காலத்தில் இருந்தவராகப் பெரிய புராணம் கூறும் அடியார்கள் இவராவர் :** (1) சிவயோகியர், (2) பிரமசாரி, (3) மாதவ வேடத்தார், (4) பைரவர். இவருள் சிவயோகியார் என்பவர் கோவணதாரி; நீறு பூசப்பெற்ற உடலினர்; பரந்து சுருண்ட தலைமயிரினர் ; திரிபுண்டரம் அணிந்த நெற்றியினர்; கையில் திருவோட்டை உடையவர்.[103] பிரமசாரி என்பவர் ஒற்றை ஆடையர்; சிறுகுடுமியினர்; திரிபுண்டர நெற்றியினர்; மான்தோல் கட்டிய பூணூலினர்; பச்சைத் தருப்பைப் புல்லாலாகிய மோதிரம் அணிந்தவர்; பூ முதலிய போகப் பொருள்களை விலக்கியவர்.[104] மாதவ வேடத்தவர், திருநீறு, உருத்திராக்கம், சடை இவற்றையுடைய திருக்கோலத்தவர்.[105] பைரவர் என்பவர் சடை முடியினர்; கொன்றை, தும்பை மலர்களைச் சடையில் அணிந்தவர்; நெற்றியில் பிறைபோன்ற பொட்டுடையவர்; சங்காலான காதணியுடையவர்; கழுத்தில் பளிங்கு மணிமாலை கட்டியவர்; கரிய சட்டை அணிந்தவர்; ருத்ராக்கத்தாலான பலவகை மாலைகளைக் கழுத்திலும் மார்பிலும் முன்கையிலும் தோளிலும் இடையிலும் கால்களிலும் தரித்தவர்; சிலம்பினைக் காலில் அணிந்தவர்; இடக்கையால் மூவிலைச் சூலத்தை மார்பில் சாத்திப் பிடித்துக் கொண்டவர்; வலக்கையில் தமருகம் உடையவர்.[106] இப்பல திறப்பட்ட சிவனடியார்கள் பல இடங்களில் இருந்த மடங்களில் இருந்து சைவத்தை வளர்த்தனர் எனக் கொள்ளலாம். சிறந்த ஒழுக்கமும் நிறைந்த கல்வியும் உடைய சமயத் தலைவர்கள் இம்மடங்களி லிருந்தனர். மடங்களின் தோற்றத்தால் இந்து சமயம் ஒரு புதிய உயிரூட்டத்தைப் பெறத்தொடங்கிய தென்னலாம்.[106a]

நாயன்மார் காலத்தில் சுத்த சன்மார்க்க சைவம் வளரத் தொடங்கியதால் காபாலிகம், பாசுபதம், காளாமுகம், பைரவம், வாமம்

முதலிய சமயங்கள் வளர்ச்சி பெறவில்லை; போதாக் குறைக்குச் சங்கரர் (கி.பி.788-820) தோன்றித் தம் அத்வைத சமயத்தை நாடெங்கும் பரப்பியதுடன், முன் சொன்ன நரபலி, கட்குடி கொண்ட இவ்வகைப் புறச் சமயங்களை வன்மையாகக் கண்டித்து, அவற்றை ஒழிக்க முற்பட்டார்.[107] இவ்விரு காரணங்களாலும் இச்சமயங்களின் செல்வாக்குப் பின் நூற்றாண்டுகளில் தமிழகத்திற் குறையலாயிற்று.

**சேரமான் பாடல்கள்:** இவர் பாடிய பொன் வண்ணத்து அந்தாதி அகப்பொருள் துறையில் பக்திச்சுவை வைத்துப் பாடப்பட்ட 100பாக்களைக் கொண்டது. இவர் தம்மைத் தலைவியாகவும், சிவனைத் தலைவனாகவும் வைத்துப் பாடியுள்ள இப்பாக்களும் திருவாரூர் மும்மணிக் கோவைப் பாடல்கள் முப்பதும் படிக்க இன்பம் பயப்பவையாகும். இவர் பாடிய திருக்கயிலாய ஞானவுலா மிக்க இனிமையும் அழகும் உடையது. சிவபிரானுடைய உலா வருதலைக் கண்ட ஏழு பருவமங்கைகளும் அவரைக் கண்டு காதல் கொண்டதாகக் கூறுவது இந்நூல். சிவன்மீது காதல் கொண்டு அவனை அடையப் பெறாமையால் வருந்திய மகளிர் அவன்மீது 'மடல்வண்ணம்' பாடுதல் மரபென்பதும்,[108] தம் காதலை உணர்த்தி வெண்பாப்பாடுதல் மரபென்பதும்[109] இந்நூலுட் கூறப்பட்டுள்ளன. எனவே, கடவுளரிடம் காதல் கொண்ட மகளிர் அக்கடவுளரைப் பற்றிப் பாடிய பாடல் நூல்கள் சிலவேனும் அக்காலத்தில் இருந்திருந்தல் வேண்டும் என்பது இவ்விவரங்களால் தெரிகிறதென்னலாம்.

**மாணிக்கவாசகர்:** இவர் மதுரையை அடுத்த வாதவூரினர்; ஆமாத்தியப் பிராமணர்; பாண்டியன் அமைச்சர். திருப்பெருந்துறையில் குதிரை வாங்கச் சென்ற இவர், அங்குக் குருவடிவில் இருந்த சிவனைக் கண்டு சீடராகி உபதேசம் பெற்றார்; குதிரை வாங்க வைத்திருந்த பொருளைக் கொண்டு கோயில் கட்டினார்; பின்னர் பாண்டியன் சீற்றத்துக்காளானார். இவரைக் காக்கச் சிவன் நரியைப் பரியாக்கியும் பிட்டுக்கு மண் சுமந்தும் திருவிளையாடல்கள் புரிந்தார். பாண்டியன் இவரது பக்திப் பெருக்கை அறிந்து வேலையிலிருந்து விடுதலை அளித்தான். பிறகு இவர் பெருந்துறை, உத்தரகோசமங்கை முதலிய பல தளிகளைத் தரிசித்து, இறுதியில் தில்லையில் தங்கித் திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் பாடினார்; ஈழத்திலிருந்து தில்லைக்கு வந்த ஈழத்தரசனது ஊமை மகளைப் பேசவைத்தார்; அவ்வரசனுடன் வந்த பௌத்த துறவியை வாதில் வென்றார் என்பன இவர் வரலாற்றுக் குறிப்புக்கள். இவர் நூல்களைக் கொண்டு அறியத்தகுவன: இவர் காலத்துப் பாண்டியன் சிறந்த சிவபக்தன்.[110] அவன் பெயர் வரகுணன். அவன் இரண்டாம் வரகுணன்

(கி.பி.862-880) என்பது அறிஞர் பலர் கருத்து.[111] மணிவாசகர்க்கு முற்பட்ட நாயன்மாரால் பாடப்பெற்ற பாண்டிநாட்டுத் தலங்கள் 14. அவை மதுரை, ஆப்பனூர், பரங்குன்றம், ஏடகம், கொடுங்குன்றம், புத்தூர், புனவாயில், இராமேசுரம், ஆடானை, கானப்பேர், பூவணம், சுழியல், குற்றாலம், நெல்வேலி என்பன. மணிவாசகராற் பாடப்பெற்ற புதிய தலங்கள் உத்தரகோசமங்கை, திருப்பெருந்துறை,[112] அரிகேசரி நல்லூர் (சின்னமனூர்), பெருங்கருணை முதலியன.[112a] இவற்றுள் அரிகேசரிநல்லூர் என்பது அரிகேசரி என்ற நெடுமாறன் பெயர் கொண்டதாகும். அங்குள்ள கோயில் அவன் பெயரனான இராசசிம்மன் கட்டியது.[113] மணிவாசகர் அக்கோயிற் பெருமானைக் 'கலையார் அரிகேசரியாய்' என்று விளித்துள்ளார். பெருங்கருணை என்பது பாண்டிய நாட்டுத் தலங்களுள் ஒன்று. சுவாமி பெயர் திருவேளைக்கார மூன்றுகை ஈசுவரம் உடைய மஹாதேவர்[113a] என்பது. இவர் காலத்தில் தில்லை முன்றிலில் பள்ளிகொண்ட பெருமாளின் சிறு கோவில் இருந்தது.[114]

மணிவாசகர் காலத்தில், சங்கரரது அத்வைதக் கொள்கை நாட்டில் மிகுதியாகப் பரப்பப்பட்டது போலும்! இவர் அதனை மிண்டிய மாயாவாதம் என்னும், 'சண்டமாருதம் சுழித்து அடித்து ஆர்க்கிறது' என்று குறித்துள்ளார். பெண்கள் பலவகை விளையாட்டுக்களின் போது இறைவனுடைய சிறப்பியல்புகளைப் பலபடியாக எடுத்துக் கூறி ஆடுவதாக இவர் பாடியுள்ளார். அவ்விளையாட்டுக்கள்-(1) அம்மானை, (2) பொற்சுண்ணம் இடித்தல், (3) தும்பியாடல், (4) தெள்ளேணம் கொட்டல், (5) சாழல், (6) திருப்பூவல்லி கொய்தல், (7) உந்திபறத்தல், (8) தோள் நோக்கம் ஆடல், (9) ஊசலாடல் என்பன.[115] இவ்வகை விளையாட்டுக்களில் இறைவன் புகழைப் பாடியாடுதல் சம்பந்தர் காலத்திலும் இருந்தது என்பது தெரிகிறது.[116]

**திருவாசகத்தின் உயிர்நாடி:** முதல் ஏழு திருமுறைகள் பண்ணோடும் தாளத்தோடும் பாடத்தக்கவை. ஆயின் திருவாசகப் பாடல்களுள் பெரும்பாலன அத்தகையவை அல்ல. முன்னவற்றுள் சமயக் கொள்கை காணப்படும்; திருவாசகத்தில் அது காணப்பெறாது; மாணிக்கவாசகர் எங்ஙனம் உழன்று உழன்று இறைவனது அருளைப் பெற்றார் என்பதே இந்நூலிற் காணப்படுவது. இது படிப்பவர் உள்ளத்தை உருக்கும் வன்மை வாய்ந்தது. "உன் குறைகளை ஒப்புக்கொண்டு கடவுளுக்கு முன் அழு; அவனை அடையலாம்" என்பது திருவாசகத்தின் உயிர் நாடிப் பகுதிகளில் ஒன்று. தம் குறைகளை உள்ளவாறு உணர்ந்து வருந்திக் கடவுள்முன் அழுதல் என்பது எல்லோருக்கும் எளிதில் இயல்வதன்று. "கடவுளிடம் என்றும்

இறவாதகாதல் பெற விரும்பும் பக்தன், அன்பை அடிப்படையாகக் கொண்ட மெய்யடியாருடன் தொடர்ந்து பழகவேண்டும்'' என்பது சைவ சித்தாந்தத்தின் சிறந்த கொள்கைகளுள் ஒன்று. இதனைச் சிவஞானபோதம் 12-ஆம் சூத்திரம் நன்கு வற்புறுத்துகிறது. மாணிக்க வாசகர் இத்தகைய அடியார் குழாத்தில் தம்மை வைக்குமாறு இறைவனை வேண்டுகிறார்.[117] இவ்விரண்டும் திருவாசகத்தின் உயிர்நாடி என்று கூறலாம். ஆன்மாவாகிய தலைவன் கடவுளாகிய தலைவியைப் பல சோதனைப் படிகளைக் கடந்து கூடுதலே, திருக்கோவையார் என்னும் நூலிற் குறிக்கப்படும் பொருளாகும். பாக்கள் இனிமையும் பொருள் அழகும் உடையவை.

### *முடிவுரை*

இது காறும் கண்ட பல செய்திகளிலிருந்து கீழ்வரும் உண்மைகளை உணரலாம்:

1. பிற்காலப் பல்லவர் காலத்தில் ஏறத்தாழ 325 கோயில்கள் பாடல் பெற்றன என்பதிலிருந்து, இக்காலத்தில் பல கோயில்கள் புதியனவாக ஏற்பட்டன என்பது தெரிகிறது.

2. பல கோயில்களில் இசையும் நடனமும் வளர்க்கப்பட்டன. இசையும் நடனமும் வழிபாட்டுக்குச் சிறந்த உறுப்புக்களாகக் கருதப்பட்டன.

3. கோயில்களில் கடவுளர் திருமேனிகள் இருந்தன; சில கோயில்களில் அவ்வத்தலத்து நாயன்மார் உருவச்சிலைகள் இருந்தன. திருவாரூர்த் தேவாசிரிய மண்டபத்தில் மட்டும் சிவபதம் அடைந்த நாயன்மார் உருவச்சிலைகள் அனைத்தும் வைக்கப்பட்டிருந்தன. விழாக் காலங்களில் வீதி விடங்கரை அம்மண்டபத்தில் எழுந்தருளச் செய்வது வழக்கம்.

4. சில கோயில்களிலேனும் ஐப்பசி ஓணவிழா, கார்த்திகை விழா, ஆதிரை விழா, தைப்பூசம், மாசிமகம், பங்குனியுத்திரம் முதலிய விழாக்கள் நடைபெற்றன. சில கோயில்களிலேனும் தேர்கள் இருந்திருக்கலாம். விழாக் காலங்களில் கடவுளர் திருமேனிகள் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டன.

5. செங்காட்டங்குடி போன்ற சில ஊர்களில் சிறுத்தொண்டர் போன்ற தனியடியார் இருந்து சைவ சமயத்தை வளர்த்து வந்தனர். அவர்கள் தலயாத்திரை செய்துவந்த அப்பர் சம்பந்தர் போன்ற சமய குரவர்க்கு உதவி செய்தனர். சமய குரவர் யாத்திரையால் ஒவ்வோர் ஊரிலிருந்த மக்களும் சமய உணர்ச்சி பெற்றனர். பண்ணுடனும் பிற

இசைக் கருவிகளுடனும் பாடப்பட்ட திருப்பதிகங்களில் மனம் கொண்டனர்.

6. சைவத்திற்கு இடையூறு செய்துவந்த சமண-பௌத்த சமயத் தலைவர், அப்பர் சம்பந்தர் முதலியோரால் அடக்கப்பட்டுச் செல்வாக்கிழந்தனர்.

7. நாயன்மாருள் பிராமணர் முதல் பறையர் ஈறாக இருந்தனர். ஒரே சமயத்தைச் சேர்ந்த அவருள் வேறுபாடுகள் கருதப்படவில்லை. அனைவரும் பக்தி ஒன்றுக்கே மதிப்பீந்தனர்.

8. நாயன்மார் வீட்டுப் பெண்மணிகள் சைவத்தில் மிக்க பற்றுக்கொண்டனர்; தம் கணவருடன் சமயவளர்ச்சிக்காக ஒத்துழைத்தனர். அக்காலப் பெண்கள் அம்மானை முதலிய பலவகை விளையாட்டுக்களிலும் சிவன் சிறப்பியல்புகளைக் குறிக்கும் பாக்களைப் பாடினர். திலகவதியார், மங்கயைர்க்கரசியார், காரைக்கால் அம்மையார் முதலியோர் பக்தி குறிப்பிடத்தக்கது.

9. சைவசமயத்தைச் சேர்ந்த பாசுபதர், காபாலிகர் முதலிய பல பிரிவினர் தமிழகத்தில் இருந்தனர். அவருள் காபாலிகளும் வாம மார்க்கத்தினரும் பைரவர்க்கும் காளிக்கும் நரபலி கொடுத்து வந்தனர். ஆயின், இவர்கள் செல்வாக்குத் தூய சைவ வளர்ச்சியாலும் சங்கரர் போராட்டத்தாலும் குறைந்துவிட்டது.

10. ஐந்தெழுத்தைச் செபித்தல், அகத்திலேயே கடவுளை வழிபடல், அர்ச்சனைபுரிந்து அமுதுபடைத்து வழிபடல், பாடல்களைப்பாடி ஆடுதல் முதலிய பலவகை வழிபாட்டு முறைகள் இருந்தன. அடியார்க்கு உணவு படைத்தல், அடியார் வேண்டியன தருதல் என்பது சிறந்த வழிபாடாகக் கருதப்பட்டது.

11. மடங்கள் கோயில்களைச் சார்ந்திருந்தன. அவற்றில் பொதுக் கல்வியும் சமயக்கல்வியும் தரப்பட்டன. தலயாத்திரை செய்யும் அடியார்கள் உண்டியும் உறையுளும் பெறும் இடங்களாகவும் அவை இருந்தன.

12. 'அவரவர் தகுதிக்கு ஏற்றவாறு கடவுளை வழிபடலாம், கடவுள் அருள்புரிவான்' என்று, நாயன்மார் செய்த உபதேசம் எல்லா மக்களுக்கும் வாழ்க்கையில் நம்பிக்கை அளித்தது. அத்துடன் பாடல் - ஆடல் - கோயில் விழா - தலயாத்திரை - அடியாரைப் பேணல் முதலியன மக்கள் உள்ளங்களை ஈர்த்தன. நாயன்மார்கள் பாடல்களும் மக்கள் மனங்களைக் கொள்ளைகொண்டன. சைவம் நன்னெறியில் வளரலாயிற்று.

## குறிப்பு விளக்கம்

1. இவ்வாசிரியர் வரைந்துள்ள பெரிய புராண ஆராய்ச்சிற் காண்க.
2. அப்பர் பாடிய க்ஷேத்திரக் கோவை.
3. சிலப்பதிகாரம், காதை 10, வரி 53, 64-67.
4. சம்பந்தர் புராணம், 621-630.
5. சிலப்பதிகாரம், காதை 10.
6. பெரிய புராண ஆராய்ச்சி, பக், 99-101.
7. சைவ சமயத் தொடக்கமும்... ... ... பக். 180-181.
8. பெரிய புராணத்தில் இவர் மரபு கூறப்படவில்லை எனினும், இவர் பிராமணராக இருத்தல் வேண்டும் என்பது முன்பே விளக்கப்பட்டது.
9. நாயன்மார் பெயர்களைக்கொண்டு அடிக்குறிப்பில் வரும் செய்யுள் எண்கள் அந்தந்த நாயனார் புராணத்தில் உள்ள செய்யுள் எண்கள் எனக் கொள்க. செ.3.
10. செ. 5-9.
11. செ. 2-7.
12. செ. 3-4. இப்பயிற்சி ஆகம விதி பற்றித் தரப்பட்டதென்பது ஊகித்தறியத்தக்கது. சமய விதிகள் எந்த அளவு சாத்திரோக்தமாகப் பின் பற்றப்பட்டன என்பது இதிலிருந்து நன்கறியலாம்.
13. செ. 3.
14. செ. 2-3.
15. செ. 6-8.
16. செ. 4-6.
17. செ. 2-10.
18. செ. 3.
19. செ. 13-75.
20. செ. 3-5.
21. செ. 24-162.
22. செ. 114.
23. செ. 13-15.
24. செ. 2.
25. செ. 1-2 9,11 .
26. செ. 3-4.
27. செ. 2 -8.
28. செ. 3-4.
29. செ. 2-30.
30. செ. 1- 2.
31. செ. 8,9,30.
32. செ. 6-9.
33. செ. 3-4.
34. செ. 3-10.

35. செ. 1-4, 9, 10.
36. செ. 5-8.
37. இங்குக் குறியாது விட்ட உருத்திர பசுபதி நாயனார், பூசலார் போன்ற நாயன்மார்கள் தம்மளவில் பக்திமான்களாயிருந்து பேறுபெற்றவர் ஆதலின் இங்குக் குறிக்கப் பெற்றிலர்.
38. அப்பர் புராணம், செ. 43-44., 62-70.
39. செ. 603-870.
40. இளையான் குடிமாறர் புராணம், 13.
41. குங்குலியர் புராணம், 9.
42. கலையர் புராணம், 12-13.
43. கலிக்கம்பர் புராணம், 5-8.
44. சம்பந்தர் புராணம், செ. 495.
45. நீலநக்கர் புராணம், 30.
46. அப்பூதியடிகள் புராணம், 20-41.
47. சம்பந்தர் புராணம், 1114.
48. கலிக்காமர் புராணம், 39.
48a. ப. 514, செ. 10.
48b. நான் இக்கோயிலை 10-5-48-இல் பார்வையிட்டேன்.
49. பல்லவர் ஆட்சியும்... ... ... ப, 231.
50. அம்மடம் இருந்த இடத்தில் இன்றும் சமணர் சிலையும் சிதைவுகளும் இருக்கக் காணலாம். நான் இவ்விடத்தைப் பார்வையிட்டேன் (10-5-50).
51. சம்பந்தர் புராணம், 978-982.
52. அப்பர் புராணம், 294-'8.
53. சம்பந்தர் புராணம், 914-926.
54. மேலது. 697-855, புறநானூற்றுக்காலத்தில் சமண பௌத்த சமயங்களைக் கௌணியன் விண்ணந்தாயனும் அவன் முன்னோரும் வெறுத்தனர். அவர்களுடன் வாதிட்டனர் என்பது முன்பே கூறப்பட்டது. அதே கவுணியர் மரபில் வந்த சம்பந்தர் அவ்விரண்டு சமயங்களையும் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் அழிக்கக் காரணமாயிருந்தனர் என்னும் உண்மை இங்கு அறியத்தக்கது.
55. கங்கர் வரலாறு, பக். 202, 212, 272.
56. பல்லவர் ஆட்சியும்... ... ... பக். 170-'2.
57. திருமாலை, 8.
57a பல்லவர் ஆட்சியும்... ... ...பக், 209-10,181(அடிக்குறிப்பு. 49)
57b. பண்டைத் தக்கணத்தில் சமய நிகழ்ச்சிகள் (புதுக்கோட்டை வரலாற்று மாநாட்டில் 1920இல் K.V.S. அய்யர் படித்த கட்டுரை.)
58. தடுத்தாட்கொண்ட புராணம், 83; அமர் நீதியார், 4; அப்பர் புராணம், 62, 187, 231, 247, 274, 389; சம்பந்தர் புராணம், 473,512,532, 590, 676, 998, 1024; திருமூலர் புராணம், 18; சேரமான் புராணம், 3; கலியர் புராணம்,3.
59. அப்பர் புராணம், 389-390.

59a. சைவ சமயத் தோற்றமும்... ... ...பக். 308-313.
60. S.I.I.4.p.153.
61. தடுத்தாட்கொண்ட புராணம் 189-201
62. அப்பர் தேவாரம் ப. 463, செ.5
63. S.I.I.7.744.
64. சம்பந்தர் தேவாரம், ப. 270.செ.10.
65. சுந்தரர் தேவாரம், ப.171. செ. 2-3.
66. அப்பர் தேவாரம், ப. 178. செ.1.
67. தமிழ்ப் பொழில், 15. ப. 89.
68. மேலது. ப. 190, செ.1.
69. அப்பர் தேவாரம், ப. 157, செ. 1-2.
70. மேலது ப. 249, செ. 5.
71. சம்பந்தர் புராணம், 424-'5, 564-'70.
71a. அப்பர் தேவாரம், பக். 35-36, 150,173,77,166,176,246,290,329, 337,356,435,473.
71b. சம்பந்தர் தேவாரம் பக். 14, 33, 38, 99, 137, 156, 266, 295, 303, 313, 415, 440, 457,482,514,528,547,558,570-, 626.
71c. சுந்தரர் தேவாரம் பக், 245,58,72,95.
71d. சம்பந்தர் தேவாரம், பக். 295-6; அப்பர் பக் - 35-'6, 150,173,366.
71e. அப்பர் தேவாரம், பக். 36,166,473; சம்பந்தர் தேவாரம், பக். 207, செ.5.
71f. அப்பர் தேவாரம், பக்.36,67,74,103,145,190,192,246.
71g. சம்பந்தர் தேவாரம், பக். 6,10,13,62,67,68,85,104,105,108, 117, 124, 129, 171, 202, 232, 273, 274, 286, 289, 298, 301, 304, 305, 319, 366, 373, 477, 482, 498, 539, 540, 544, 547, 553, 591, 625.
71h. சுந்தரர், பக். 9, 49,58,89,95, 183, 210,258.
72. சுந்தரர் தேவாரம், ப.200, செ.10.
73. அப்பர்தேவாரம், ப.422, செ.1.
74. சம்பந்தர் தேவாரம், ப.18, செ.4.
75. ப. 538, செ.1.
76. ப.116, செ. 3.
77. ப, 53, செ. 8.
78. அப்பர், பக்.7,8,36,152,196
79. சம்பந்தர், பக்.6,10, 20, 68, 85, 104, 108, 117, 124, 129, 207, 273, 298, 301, 304, 333, 373, 472, 540, 544, 558, 573, 591, 625.
80. சுந்தரர், ப. 9, 10, 95 , 249.
81. அப்பர்தேவாரம், பக். 170, 286, 10, 103, 125, 139, 153, 244, 339, 355, 372, 373,476.
82. சுந்தரர் தேவாரம், பக். 72, 89, 292, - 293
83. சம்பந்தர் தேவாரம் பக். 337, 552,557.
84. சம்பந்தர் தேவாரம், ப. 575, செ. 10; ப.593, செ. 10; ப. 26, செ. 10; ப. 29, செ.2; ப. 37, செ.4.

85. சம்பந்தர், சுந்தரர் பாடிய ஒவ்வொரு பதிகத்திலும் கடைசிப் பாடல்.
86. அப்பர் தேவாரம், ப. 20, செ.6.
87. "நற்றுணையாவது நமசிவாயவே"-அப்பர்; "அஞ்செழுத்துப் புணை பிடித்துக் கிடக்கின்றேனை." -திருவாசகம், 31.
88. அப்பர், ப.42, செ.9.
89. மேலது. ப.52, செ. 9.
90. மேலது. ப. 113, செ.4
91. மேலது. ப. 114, செ.2.
92. சம்பந்தர், ப.56-57, செ.3.

"அழுதால் உன்னைப் பெறலாமே" (செ.94) என்னும் திருவாசகத் தொடர் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

93. மேலது. பக். 384.'388.
94. மெலது. பக். 377. '378.
95. அப்பர் தேவாரம், பக்.70, செ.10; 116, செ.3; 170, செ. 9; 173 செ.9, 295, செ.8; 518, செ.5; சம்பந்தர் தேவாரம், பக்.18, செ.3; 269, செ.1.
96. திருமந்திரம். செ. 2711.
97. சிறப்புலியார் புராணம், 5; சோமாசிமாறர் 4,3.
98. உருத்திரர் புராணம், 6-7; சிதம்பரத்தில் சிவனுக்குமுன் ருத்ரமந்தரம், செபித்தவனுக்கு நிலம் மானியமாக அளிக்கப்பட்டது. S.I.I.IV. 631.
99. அப்பர் தேவாரம், ப.116, செ.3.
100. பல்லவராட்சியும்... ... ... பக்.180-'5.

100a. கங்கநாட்டில் ஆடையற்ற துறவிகளான கூர்ச்சகர், நிர்க்கதர், கொரவர் (குருவர்) என்ற சைவத் துறவிகள் (பாசுபதர் போலவும் காஷ்மீரப் பிராம்மணர் போலவும் வாழ்ந்தனர் (கங்கர் வரலாறு, பக்.190) என்று கூறப்பட்டுள்ளதைக் காண, அப்பரால் குறிக்கப்பட்ட அந்தணர், இக்காஷ்மீர் பிராமணத் துறவிகள் என்றும் சைவர் என்பவர் குரவர் என்ற துறவிகள் என்றும் உத்தேசமாகக் கொள்ளலாம். இராஷ்டிரகூட மூன்றாம் கோவிந்தன். (கி.பி.804) துங்கபத்தரைக் கரையில் கொரவன் (குரவன்?) என்ற சைவ குருவுக்கு நில தானம் செய்தான் என்னம் செய்தி கருதத்தக்கது (E.I.p120.) நரசிங்க முனையரையர் வீட்டுக்கு உண்ணவந்த ஆடையற்ற அடியார் (செ.5)மேலே சொல்லப்பட்ட கூர்ச்சகத் துறவிகள் போன்றவராகலாம்.

திருவொற்றியூர் மடத்துத் தலைவரான சதுராண் பண்டிதர் நிரஞ்சன குரவர்க்கு மாணவர் என்பதும் அவர்கள் காபாலிகர் என்பதும் அறியத் தக்கன. (181of1912).

101. அப்பர் காலத்தில் காஞ்சியில இருந்த பாசுபதரும் காபாலிகரும் நெறி வழுவியிருந்தனர் என்பது மகேந்திரவர்மன் வரைந்துள்ள மத்த விலாசப் பிரகசனத்திலிருந்து தெரிகிறது. மத்தவிலாசப் பிரகசனம், பக். 10, 22.
102. அப்பர் தேவாரம், ப.34, செ.3; ப.35, செ.1; ப.238, செ.5.
103. திருநீலகண்டர் புராணம், 11-12.
104. அமர்நீதி நாயனார் புராணம், 6-10.
105. திருக்குறிப்பு... ... - 116, C.K. சு. பெ. பு. தொகுதி 2, ப.1520

106. சிறுத்தொண்டர் புராணம், 25-35.

106a பண்டைத் தட்சிணத்தில் சமய நிகழ்ச்சிகள், ப.12.

107. இந்து உட்சமயங்கள், பக்.66-69.

108. பொன் வண்ணத் தக்காதி ''தன்னமர் தோழியர்கள் சூழத் தவிசேறிப் பின்னுமோர் காமரம் யாழமைத்து-மன்னுவிடவண்ணக் கண்டத்து வேதியன்மேலிட்ட மடல்வண்ணம் பாடும் பொழுது... ... ...'' (மடந்தை)

109. மேலது ''கண்ணவனை யல்லது காணா செவியவன

' , , , , , , , ,

' , , , , , , , , -றெழிலுடைய

வெண்பா விரித்துரைக்கும் போழ்தில்'' (பேரிளம் பெண்).

110. திருக்கோவையார், 306, 327.

111. சீநிவாச பிள்ளை, தமிழ் வரலாறு, பக். 69, 75; S.V.o.I. vol.4, Part 2, and P. 152-182 (1943); தமிழ்ப் பொழில், தொகுதி 12, பக். 441-6.

112. இஃது அப்பராற் குறிக்கப்பெற்ற வைப்புத்தலமாகும்.

112a குன்றக்குடிக் குகைக்கோயில் ஆகிய மாசிலீசுவரமும் அதற்கருகில் உள்ள பிள்ளையார்பட்டிக்குகைக்கோயிலும் கி.பி. 7,8ஆம் நூற்றாண்டினவாயினும் பாடல் பெற்றவையல்ல. - A.R.E. 1936.-37. P. 59.

113. 428, 432, 441of 1907.

113a. 401 of 407.

114. திருக்கோவையார், 86.

115. இவற்றுள் ஒவ்வோர் ஆட்டத்தைப் பற்றிய விவரத்தையும் தருமபுர ஆதினத்தார் வெளியிட்டுள்ள திருவாசகப் பதிப்பிற் காணலாம். ப. 41-48.

116. 'தருந்தடக்கை முத்தழலோர் மனைகள்தொறும் இறைவனது தன்மை பாடிக் கருத்தடங்கண்ணார் கழல்பந் தம்மானைப் பாட்டயரும் கழுமலமே!' ப. 205, செ.2.

117. ''அடியேனுன் அடியார் நடுவுள் இருக்கு மருளைப் புரியாய்.''- செ. 376, 382, 383. இக்கருத்துடன் பாடப்பட்டதே திருத்தொண்டத்தொகை என்பது இங்கு அறியத்தக்கது. இக்கருத்துக் கொண்டே பட்டினத்தாரும் ''நல்லார் இலக்கணமும்'' என்று தொடங்கும் செய்யுளில் முதற்கண் அடியார் கூட்டுறவைக் கூறியிருத்தல் கண்டுகொள்க.

# 7. சோழர்காலச் சைவசமயம்

(கி.பி. 900-1300)

## சிவன் கோயில்கள்

### *சோழர்கால இந்தியாவில் சைவசமயம்*

**காஷ்மீரம் - நேபாளம் :** சோழர்கள் பேரரசை ஏற்படுத்தி ஆண்ட நானூறு ஆண்டுக் காலமும் (கி.பி. 900-1300) இந்தியா முழுவதும் சைவசமயம் நன்கு வளர்ந்த காலமாகும். கி.பி. 10-ஆம் நூற்றாண்டு முடியக் காஷ்மீரில் சுமார் 70 சிவன் கோயில்கள் தோன்றி வளர்ச்சிபெற்றன. கோயில்களை அடுத்து மடங்களும் தோன்றி வளர்ந்தன.[1] நேபாள நாடு அசோகர்க்கு முன்பிருந்தே பெரிய சைவமடம் பெற்ற நாடாக இருந்தது. அங்குள்ள பசுபதி கோயிலும் அதனைச் சார்ந்த பெரியமடமும் ஆசாரியர் பலரைத் தோற்றுவித்தன. அவருள் ஒருவரே ஏறத்தாழக் கி.பி. 1300-இல் வாழ்ந்த சண்டேசுவரர் என்பவர். அவர் கிருத்திய ரத்நாகரம், கிருத்திய சிந்தாமணி என்ற சைவ நூல்களைச் செய்தவர்.[2]

**சாளுக்கியர் :** கூர்ச்சரம், கத்தியவார் இவற்றையும் இவற்றைச் சுற்றியுள்ள பகுதியையும் ஆண்ட சாளுக்கியர் (கி.பி. 900-1300) சிறந்த சிவபக்தர்களாக இருந்தார்கள். உலகப்புகழ்பெற்ற சோமநாதபுரம் கோயில், ஜயசிம்ம சித்த ராஜன் கட்டிய சித்தேசுவரம், மண்டளீ நகரில் மூலராஜன் கட்டிய மூலேசுவரம், ஜயசிம்மன் கட்டிய ருத்ர-மஹாகாளம் என்பன சிறந்த சிவத்தலங்களாக விளங்கின. சாளுக்கிய மன்னர் லகுலீச பாசுபத ஆசாரியர்களைத் தாங்கள் கட்டிய மடங்களில் தலைவர்களாக வைத்தனர். அவர்களிடம் தீட்சைபெற்றுத் தங்களைப் 'பரம மாஹேசுவரர்' என்று கூறிக்கொண்டனர். தங்கள் கல்வெட்டுத் தொடக்கத்தில் ''ஓம் நமசிவாய'' என்று எழுதினர். இவர்கள் ஆட்சியில் லகுலீசர் தோன்றிய காரோணநகரும் அவர் சமயத்தவரான லகுலீச பாசுபதரும் சிறப்புற்றனர்.[3]

**பரமாரர் :** கூர்ச்சரம், மாளவம், இராஜபுதனம் இவற்றை ஆண்ட பரமார (கி.பி! 800-1300) அரசருட் பெரும்பாலர் சைவர். அவர்கள் நாட்டைச் சேர்ந்த நருமதையாற்றில் உள்ள மந்ததா என்னும் தீவில்

இருந்த சிவன் கோயில் மிக்க பழமையும் பெருமையும் உடையது. அது சித்தீச்சரம் எனப் பெயர் பெற்றது. பரமாரர் கல்வெட்டுக்களில் காணப்படும் சிவன் பெயர்களுள் பவானிபதி, ஓங்காரதேவர் என்பனவே பலவாகக் காண்கின்றன. உச்சைனியில் இருந்த மகாகாளம் கோயில் மிக்க சிறப்புற்றது. கௌட தேசத்துச் சைவாசாரியர்கள் இராஜகுருமாராக இருந்தனர்.[4]

**சந்திராத்ரையர் (கி.பி. 830-1250):** இவர்கள் பண்டில் கண்டை ஆண்டவர்கள்; சிறந்த சிவபக்தர்கள்; தங்களைப் பரமமாகேசுவரர் என்று கூறிக்கொண்டவர்கள்; இம்மரபரசனான கீர்த்திவர்மன் காலத்திற்றான் (11-ஆம் நூற்றாண்டு) கிருஷ்ண மிஸ்ரா என்பவர் பிரபோத சந்திரோதயம் என்னும் சைவநூலைச் செய்தனர். இவ்வரசர்களின் பெயர்களுள் த்ரைலோக்கிய மல்லன், த்ரைலோக்கிய வர்மன் என்பன குறிக்கத்தக்கவை.[5] இவர்கள் கல்வெட்டுக்களிற் பெரும்பாலானவை "ஓம் நமசிவாய"என்பதையே தொடக்கமாகக் கொண்டவை. இவர்கள் நாட்டில் வைத்தியநாதர் கோயில், மரகதேசுவரர் கோயில் சிறப்புற்றவை; பின் குறித்த கோயிலில் பரண லிங்கமும் மரகத லிங்கமும் இருந்தன.[6]

**சாகமானர்கள் (கி.பி. 500-1200):** இவர்கள் பஞ்சாப், இராசபுதனம், குசரத் பகுதிகளை ஆண்டவர்கள்; சூரியனை வணங்கினார்கள்; எனினும் சிறந்த சிவபக்தர்கள். ருத்ராணி என்ற அரசி (கி.பி 12-ஆம் நூற்றாண்டில்) புஷ்கரம் என்ற ஆற்றங்கரையில் ஆயிரம் லிங்கங்களைத் தாபித்தாள்; அவள் மகன் கயிலாசம் போன்ற பெரிய சிவன் கோயிலைப் புஷ்கர நகரில் எடுப்பித்தான். இவர்கள் நாட்டில் புராணமகாதேவர் கோயில், சித்தீச்சரம், கபாலீசுவரர் கோயில் என்பன சிறப்புற்றவை. கோயில்களை அடுத்து மடங்கள் இருந்தன. அவற்றில் லகுலீச பாசுபதத் துறவிகள் இருந்தனர்.[7]

**ஹெய்ஹயர் (கி.பி. 250-1400):** இவர்கள் நடுமாகாணத்தை யும் ஐக்கிய மாகாணத்தையும் ஆண்டார்கள். கார்த்தவீரிய அர்ச்சுனன் மரபினர்; சிலகாலம் சிற்றரசராயும் சிலகாலம் பேரரசராயும் இடம்விட்டு இடம் சென்று நாடு கண்டு ஆண்டவருமாவர். இவர்கள் பல பிரிவினராகி, வட இந்தியாவில் பல இடங்களை ஆண்டனர். இவருள் கங்கைக்கும் நருமதைக்கும் இடைப்பட்ட ஒன்பது லட்சம் கிராமங்களைக் கொண்ட தாஹள நாட்டை ஆண்டவர் சிறந்தவராவர். அவர்கள் தலைநகர் திரிபுரீ என்பது. அவர்கள் ஆமர்த்தக மடத்துத் தலைவராக இருந்த துர்வாஸஸ் என்னும் துறவியின் வழிவந்த சைவாசாரியர்களை ஆதரித்தனர்; அவர்களுக்கு மடங்களைக்

கட்டித்தந்து, தங்கள் இராஜ குருக்களாகக் கொண்டனர். அவருட் சிறந்தவர் சத்பாவ சம்பு என்பவர். ஹெய்ஹய (கலசூரி) அரசனான யுவமகாராசன் I கி .பி. 940-இல் சோண்ணயாற்றங்கரையில் சிவன் கோயிலையும் மடத்தையும் அமைத்து, சத்பாத சம்புவிடம் ஒப்புவித்தான்; மூன்று லட்சம் கிராமங்களையும் அவருக்குத் தானமாக அளித்தான். ஆசிரியர் கோளகீ மடத்தை அங்கு ஏற்படுத்தினார். 'கோளகிரி' என்பதன் மரூஉவாகக் 'கோளகி' இருக்கலாம். அம்மலை தாஹள நாட்டில் உள்ளது. அம்மடத்து ஆசிரியர் பாதுகாப்புக்காக மூன்று லட்சம் கிராமங்களின் வருவாய் பயன்பட்டது. ஈசானசிவன், ருத்ரசம்பு, மத்தமயூரநாதர், இருதய சிவன், அகோரசிவன், விசுவேசுவரசம்பு முதலிய பலர் ஆசாரியராக இருந்தனர். இவருள் விசுவேசுவரசம்பு என்பவர் மிக்க புகழ் பெற்றவர். அவர் கலசூரி அரசர்க்கும் காகதீய அரசர்க்கும் தீக்ஷா-குருவாக விளங்கினார். கலசூரி அரசர்கள் தங்களைப் பரம மாகேசுவரர்கள் என்று கூறிக்கொண்டனர். அவர்கள் கல்வெட்டுக்கள் "ஓம் நமசிவாய" என்ற தொடக்கத்தை உடையவை. தாஹள நாட்டில் ஒவ்வொரு கோயிலும் மடமும் சேர்ந்திருந்தன. மத்தமயூரப் பிரிவைச்சேர்ந்த துறவிகள் ஒவ்வொரு மடத்திலும் தலைவராக இருந்தனர்.[8]

விந்த மலைக்குத் தென்பால் இருந்த இராஷ்டிரகூடர்கள் எல்லோராக் குகைகளில் அமைத்த கயிலாசநாதர் கோயிலும் வேறு சில கோயில்களும் அவர்கள் சைவ விரோதிகள் அல்லர் என்பதை உணர்த்துவன. இராஷ்டிரகூடர்க்குப் பின் வந்த சாளுக்கியர் காலத்திலும் பம்பாய் மாகாணத்தில் சைவம் ஓரளவு வளர்ச்சியடைந்து வந்தது.

வாரங்கல்லைத் தலைநகராய்க்கொண்டு அரசாண்ட காக தீயர்களுள் பலர் சைவர். அவருட் சிறந்தவனே முன்சொன்ன விசுவேசுவர சம்புவிடம் தீக்ஷை பெற்ற கணபதி என்ற அரசன்.

இவ்விவரங்களால், சோழப் பேரரசு ஏற்பட்ட காலத்திலும் அதன் பின்னரும் பொதுவாக இந்தியாவிலும், சிறப்பாக வட இந்தியாவிலும் சைவம் நல்ல வளர்ச்சி பெற்றது என்பதை அறியலாம். இச்சூழ்நிலையும் சோழநாட்டில் சைவம் வளரக் காரணமாயிருந்தவற்றுள் ஒன்றாகும்.

**சோழர் சமயநிலை:** சேர-சோழ-பாண்டியருள் சைவத்தில் மிகவும் அழுத்தமான பற்றுடையவரும் நூற்றுக்கணக்கான சிவன் கோயில்களைக் கட்டியவரும் சோழரேயாவர். கோச்செங்கணானைப் போல 70 சிவன் கோயில்களைக் கட்டிய சேரனோ, பாண்டியனோ

இல்லை அல்லவா? மேலும் பல்லவர்க்கடங்கி முடியிழந்த காலத்திலும் பாண்டியனையும் பாண்டிய நாட்டையுமே சைவமாகச் செய்யவல்ல மங்கையர்க்கரசியாரைப் பெற்றவன் சோழன் எனின், சோழரது சைவப்பற்றை என்னென்பது! அழுத்தமான சைவப் பற்றுடைய அவர்கள் பல்லவரை முறியடித்துச் சோழப் பேரரசை ஏற்படுத்திய பிறகு சைவத்தை வளர்ப்பதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தனர் என்பதில் வியப்பில்லை அல்லவா?

## சோழ அரசர்கள்

விசயாலயன் (கி.பி. 800-871)

ஆதித்த சோழன் I (871 - 907)

பராந்தகன் I (907 - 953)

| இராசாதித்தன் | கண்டராதித்தன் (949-957) | அரிஞ்சயன் (956-957) |
|---|---|---|
| | உத்தம சோழன் என்ற மதுராந்தகன் (973-985) | சுந்தர சோழன் என்ற பராந்தகன் (956-973) |

| ஆதித்தன் II என்ற பார்த்திவேந்திர கரிகாலன் (956-969) | இராசராசன் I (985 - 1014) |
|---|---|
| | இராசேந்திரன் I (1012-1044) |

இராசேந்திரன் I

| இராசாதிராசன் I (1018-1054) | இராசேந்திரன் II (1052-1064) | வீரராசேந்திரன் (1063-1069) |
|---|---|---|
| | இராசமகேந்திரன் (1060-1063) | அதிராசேந்திரன் (1068-1070) |
| | சாளுக்கிய சோழனான குலோத்துங்கன் I (1070-1120) | |

விக்கிரம சோழன்
(1120-1135)
|
குலோத்துங்கன் II
(1133 - 1150)
|
இராசராசன் II (1146 -1173)
|
இராசாதிராசன் II (1163 -1179)
|
குலோத்துங்கன் III (1178- 1218)
|
இராசராசன் III (1216 -1256)
|
இராசேந்திரன் III (1246-1280)

இச் சோழ மன்னர்கள் துங்கபத்திரையாறு முதல் கன்னி முனைவரையுள்ள தென் இந்தியாவை ஆண்டவர்கள். ஆதித்தன் பேரரசனான காலத்தில் தமிழகத்தில், முன் அத்தியாயத்திற் சொன்ன, பாடல்பெற்ற கோயில்கள் இருந்தன; பாடல் பெறாத (பல்லவர் காலக்) கோயில்களும் இருந்தன.[8a] இவ்விரு திறத்துக் கோயில்களும் சோழர் காலத்தில் புதுப்பிக்கப்பெற்றன. அந்நிலையில் ஆதித்தன் முதலிய சோழ அரசர்கள் அவரவர் ஆட்சிக்காலத்தில் புதியனவாக எடுப்பித்த கோயில்கள் பல.[8b] இவர்கள் ஆட்சிக்கு அடங்கிய சிற்றரசர்கள் புதியனவாகக் கட்டிய கோயில்கள் பல.[8c] இவையனைத்தும் சோழர் காலத்திற் சிறப்புற்றுச் சமயம் வளர்க்கும் நிலையங்களாக விளங்கின. இவை அங்ஙனம் விளங்க, அரசாங்க அலுவலர் செய்த திருப்பணிகள் பல.[8d] சோழ மாதேவியரும், சிற்றரசர் மனைவியரும், அரசாங்க அலுவலர் மனைவியரும் செய்த திருப்பணிகள் பல. துறவிகள் முதல் சாதாரண குடிமகன் ஈறாக இருந்த மக்கள் செய்த திருப்பணிகள் பல. இவை அனைத்தையும் விளக்க இஃது இடமின்மையின், முக்கியமான சிலருடைய சிறந்த சமயப் பணிகளை மட்டும் இங்குக் குறிப்பிடுவோம்.

**ஆதித்த சோழன்:** இவன் செய்த திருப்பணிகளுட் சிறந்தது காவிரியின் இரண்டு கரைகளிலும் சிவன் கோயில்களைக் கட்டினமை.[9] அஃதாவது, பழைய கோயில்களைப் புதுப்பித்தமையாகும். பாடல் பெற்ற கோயில்கள் அழியத்தக்க மரம், மண் முதலியவற்றால் ஆனமையால், அவை அழியாமல் இருக்கவேண்டி, அவற்றைக் கற்றளிகளாக மாற்றினான் என்பதே கருத்து. இங்ஙனம் ஆதித்தனால் தொடங்கப்பட்ட இத் திருப்பணி, சோழ அரசர்களாலும் அரசமாதேவியராலும் பிறராலும் அவர்கள் ஆட்சி முடிய நடைபெற்று

வந்தது என்பதைக் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. சமய வளர்ச்சிக்குத் தாயகம் கோயில்கள். அவை என்றும் அழியாமல் இருந்தாற்றான் சமயம் வளர முடியும். ஆதலாற்றான் ஆதித்தன் கோயில்களைக் கற்றளிகளாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டான்; கோயில் கருவறையும் விமானமும் கற்றளியாக மாற்றப்பட்டன. இங்ஙனம் ஆதித்தன் கற்றளியாக்கியதே திருப்புறம்பயத்தில் உள்ள சாட்சிநாதர் கோயில். அஃது அவன் பெருவெற்றிக்குக் காரணமான போர் நடந்த இடத்தில் இருத்தலின், அதைத் தன் காலத்திலேயே கற்றளியாக மாற்றித் தன் பெயர் இட்டான் போலும்! அஃது அவன் கால முதல் 'ஆதித்தேச்சுரம்' எனக் குறிக்கப்பட்டது.[10]

**ஆதித்தன் மகனான முதற்பராந்தகன் சிறந்த சிவபக்தன்;** பண்டித வத்ஸலன். இவன் செய்த திருப்பணிகளில் மிக்க சிறப்புடையது தில்லைச் சிற்றம்பலத்தைப் பொன் வேய்ந்தது ஆகும்.[11] பராந்தகன் மூத்தமகனான இராஜாதித்தனால் சுந்தரர் பிறந்த திருநாவலூர் சிறப்புற்றது. அவன் அவ்வூர்க் கோயிலில் ஒரு புதிய கோயிலைக் கட்டினான். அஃது இராசாதித்தேசுவரம் எனப்பட்டது. அதற்கு அவன் தாயாரும் அரசாங்க அலுவலரும் நிவந்தங்கள் விடுத்தனர்.[12] இராஜாதித்தன் தம்பியான கண்டராதித்தர் மிகச் சிறந்த சிவனடியார். அவர் கவிபாடும் ஆற்றல் உடையவர். அவர் தில்லைப் பெருமான்மீது பத்துப்பாக்கள் பாடியுள்ளார்; அவை 9-ஆம் திருமுறையிற் சேர்க்கப்பட்டுள்ளன. அவர் திருப்பழனத்திற்குப் பக்கத்தில் கண்டராதித்த சதுர்வேதி மங்கலம் என்ற ஊரை உண்டாக்கினார். அங்குள்ள சிவன் கோயில் அவர் காலத்ததாகும்.

**செம்பியன் மாதேவியார்:** கண்டராதித்தர் மனைவியார் செம்பியன் மாதேவியார். இவர் இராசராசன் I காலம் வரை வாழ்ந்தவராதலால் பல்லாண்டுகள் இருந்தவர் என்பது தெரிகிறது. இவர் செய்துள்ள வியத்தகு திருப்பணிகள் இந்திய வரலாற்றில் வேறு எந்த அரசியும் செய்யாத அளவினவாகும். இவர் ஆதித்தன் மேற்கொண்ட முறையைப் பின்பற்றி, பாடல் பெற்ற கோயில்கள் சிலவற்றைக் கற்றளிகளாக மாற்றினார். அவை திருத்துருத்தி, திருக்கோடிகா, ஆரூர் அரநெறி, திருவக்கரை, திருமுதுகுன்றம், தென்குரங்காடுதுறை, நல்லம், நாங்கூர் என்பன.[13] இவரால் நிலதானமும், பொன் வெள்ளிப் பாத்திரங்களும் நகைகளும் விளக்குத்தானமும் பெற்ற கோயில்கள் பல. அவற்றுள் திருமணஞ்சேரி, ஐயாறு, திருச்சேயலூர், முதுகுன்றம், ஒத்தூர், தலைச்சங்காடு, நறையூர்,

ஆரூர், செம்பியன் மாதேவி, திருப்புறம்பியம், திருவெண்காடு, வடகுரங்காடுதுறை, தென்னேரி, திருக்களித்திட்டை, திருமங்கலம், தவத்துறை, பந்தணைநல்லூர், திருவிளக்குடி, திருவியலூர், வடதிருமுல்லைவாயில், திருநாகேச்சுவரம், கற்குடி, உடையார்குடி என்பன குறிக்கத்தக்கவை.[14] இங்ஙனம் செயற்கரிய திருப்பணிகள் செய்த இந்த அம்மையார் செம்பியன் மாதேவி என்று தம் பெயரால் ஓர் ஊரை நிறுவிச் சிவன் கோயிலைக் கட்டினார். அதில் இவர் கண்டராதித்தரைச் சிவலிங்கமாகப் பூசித்தலை உணர்த்தும் படிமம் காணத்தக்கது.

**இராசராசன் I:** தன் காலம்வரை தமிழகத்தில் ஏற்பட்டிராத பெரிய அளவில் மிக்க அற்புத வேலைப்பாடுகள் கொண்ட கோயிலை அமைத்தவன் இராசராச சோழனேயாவன். இவன் ஆறு ஆண்டுகள் அரும்பாடுபட்டு அக்கோயிலைக் கட்டுவித்தான்; அதில் கடவுளருடைய - நாயன்மாருடைய திருமேனிகளை எழுந்தருளச் செய்தான்; ஒவ்வொன்றுக்கும் விலையுயர்ந்த நகைகள் அளித்தான்; பூசை - விழாவிற்காகப் பல கிராமங்களை மானியமாக விட்டான். இவனைப் பின்பற்றி அரச குடும்பத்தினரும் அரசாங்க அலுவலரும் ஏராளமான தருமங்கள் செய்தனர். அக்கோயிலில் இசை, நடனங்களை வளர்க்க 400 பதியிலார் தமிழகத்தின் பல கோயில்களிலிருந்து குடியேற்றப்பட்டனர். ஒவ்வொருத்திக்கும் ஒரு வீடும் ஒரு வேலி நிலமும் தரப்பட்டன. திருப்பதிகம் ஓத 48 பேர் பல கோவில்களிலிருந்து குடியேற்றப்பட்டனர். ஆரியம் பாடச் சிலர் நியமனம் பெற்றனர். இவ்வாறே கோயிற் பணிகளை நன்கு கவனித்துச் செய்யப் பல கோயில்களிலிருந்து பலர் தஞ்சையிற் குடியேற்றப் பட்டனர். இந்த விவரங்கள் எல்லாம் தஞ்சை இராஜராஜேசுவரத்தில் உள்ள கல்வெட்டுக்களால் நன்கறியலாம்.[15]

**இராசராசனும் திருமுறைகளும் :** இவன் திருநாரையூர் - நம்பியாண்டார் நம்பியைக் கொண்டு தில்லையில் அடக்கம் செய்யப்பட்டிருந்த முதல் ஏழு திருமுறைகளைத் தொகுப்பித்தவன். இவன் 'சிவபாதசேகரன்' என்று பெயர் பெற்றான். இவன் காலமுதல் திருமுறைகள் நாடெங்கும் பரவலாயின. இவனைப் பின்பற்றி அரசரும் பிறரும் கோயில்களைக் கட்டலாயினர்.

**இராசேந்திரனும் கங்கை கொண்ட சோழேச்சுரமும்:** தஞ்சை இராஜராஜேசுவரத்தைப் பின்பற்றிக் கட்டப்பட்டது, இராஜராஜன் மகனான இராஜேந்திரன் I கட்டிய கங்கைகொண்ட சோழேச்சுரமாகும்.

இராசேந்திரன், திருச்சி உடையார்பாளையம் தாலுகாவில் பெரிய நகரம் ஒன்றை நிறுவினான்; அந்நகரத்தில் தஞ்சைப் பெரிய கோயிலைப்போலப் பெரிய கோயிலைக் கட்டினான். அதுவே கங்கைகொண்ட சோழேச்சுரம் என்பது. அஃது அமைப்பிலும் அழகிலும் வேலைப்பாட்டிலும் தஞ்சைப் பெரிய கோயிலை ஒத்திருப்பது: அக்கோயில் முதல் இராசேந்திரன் கால முதல் சோழராட்சி வீழ்ச்சியுறும்வரை மிகச் சிறந்த நிலையில் இருந்தது.[16]

இராசேந்திரன் மூத்த மகனான இராசாதிராசன் மன்னார் குடியில் ஜயங்கொண்ட சோழேசுவரத்தையும் இராஜராஜேசுவரத்தையும் கட்டினான்; குடந்தைக் காரோணம் என்ற கோயிலைப் புதுப்பித்தான்.[17]

**முதற் குலோத்துங்கன் :** இவன் திருநீற்றுச் சோழன் எனவும் பரம மகேசுவரன்[18] எனவும் கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டலால் தீட்சைபெற்ற சைவன் என்பதும் சிறந்த பக்திமான் என்பதும் அறியலாம். இவன் காலமுதல் வேங்கிநாட்டுத் திராக்ஷாராமம் - பீமேசுவரர் கோயில் சிறப்படையத் தொடங்கியது.[19] கும்பகோணத்திற்குப் பக்கத்தில் உள்ள சூரியனார் கோயில் இவன் காலத்திற்கட்டப்பட்டது. இவன் கன்னோசியை ஆண்ட காஹத்வாலர் நட்புடையவனாதலின், அவர்கள் வழிபட்ட சூரியனையும் இவன் தன் நாட்டிற் கோவில்கட்டி வழிபட ஏற்பாடு செய்தான்.[20] குலோத்துங்கன் தில்லையில் கூத்தப்பெருமான் ஊர்வலத்தைச் சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்தான் என்பது தில்லையுலா என்னும் நூலால் நன்கு தெரிகிறது. சமயகுரவர் நால்வர் தேர்கள் முன் சென்றன. சேரமான் பெருமாள், வரகுணபாண்டியன் இவர்கள் சேவிப்பச் சிவன் உலாப்போனான். அனைவர்க்கும் முன்பாகக் குலோத்துங்கன் குதிரைமீது சென்றான். தில்லைச் சிற்றம்பலம் 'நமசிவாய' என்னும் பஞ்சாட்சரம் பொறிக்கப்பட்ட பொன்னோடுகள் போடப்பெற்றதாம்.[21]

**விக்கிரம சோழன் :** இவன் தில்லைக் கோயிலுக்குப் பெருஞ் சிறப்புச் செய்தான்; தன் சிற்றரசர் கொணர்ந்த திறைப் பொருளின் பெரும்பகுதியை அக்கோயிலைப் புதுப்பிக்கவும் பெரிதாக்கவும் செலவிட்டான்; பொன்னம்பலம் சூழ் திருமாளிகை, கோபுரவாசல், கூடசாலைகள், பலிபீடம், தேர் இவற்றைப் பொன் வேய்ந்தான்; தன் பெயரால் 'திருவிக்கிரமன் திருவீதி'யும் மாளிகையும் அமைத்தான்; நடராசர் உலாப்போகச் சிறப்பான ஏற்பாடுகள் செய்தான். பல பொன் தட்டுகள் செய்தளித்தான்.[22] இவன் ஒட்டக்கூத்தன் மாணவன்; அவரால் உலாக் கொண்டவன்.

**குலோத்துங்கன் II:** இவன் விக்கிரம சோழனால் தொடங்கப்பெற்ற தில்லைப் திருப்பணிகளை முடித்தான்; மேலும் பல திருப்பணிகள் செய்தான்; எழுநிலைக் கோபுரங்களை அமைத்தான். அம்மனுக்குத் திருமாளிகை அமைத்தான். சிறப்பாகப் பேரம்பலத்தைப் பொன்வேய்ந்தான்.[23] இவன் நடராசர் பாததாமரையில் உள்ள தேனைப் பருகும் வண்டு என்று கல்வெட்டுக் கூறுகிறது. இவன் தில்லைத் திருமுன்றிலில் இருந்த பெருமாள் சிலையை அப்புறப் படுத்திவிட்டான்.[24] இவன் திருவாரூர்க் கோவிலில் இருந்த அப்பர், சம்பந்தர், சுந்தரர் படிமங்கட்குப் பூசை நடக்கத் தானம் அளித்தவன்.[25] இவன் அநபாயன் என்ற சிறப்புப்பெயர் கொண்டவன்; ஒட்டக்கூத்தர் மாணவன்; அவரால் உலாவும் பிள்ளைத் தமிழும் பாடப்பெற்றவன். சேக்கிழாரைக் கொண்டு பெரியபுராணம் பாடச்செய்தபெருந்தகை இவனே.[26]

**இராசராசன் II:** இவன் கட்டியதே சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த தாராசுரத்து ஐராவதேசுவரர் கோயில். 'இராஜராஜபுரத்து – இராஜராஜேசுவரம்' என்பது அதன் பழைய பெயர். இவனும் ஒட்டக்கூத்தர் மாணவன்; அவரால் உலாவிலும் தக்கயாகப்பரணியிலும் பாராட்டப் பெற்றவன்.

**குலோத்துங்கன் III:** இவன் திருவிடைமருதூர்க்கருகில் திரிபுவனவீரேசுவரம் என்ற பெரிய சிவன் கோயிலைக் கட்டினவன்; தில்லையில் முகமண்டபம், கோபுரம், அம்மன் திருச்சுற்று இவற்றைக் கட்டினவன் அல்லது பழுது பார்த்தவன்; காஞ்சி ஏகாம்பரர் கோயில், மதுரைச் சிவன் கோயில், திருவிடைமருதூர்க் கோயில், தாராசுரத்தில் உள்ள ஐராவதேசுவரர் கோயில், திருவாரூர்ப் பூங்கோயில் இவற்றில் திருப்பணிகள் செய்தவன்.[27] 'நம் தோழன் திரிபுவனவீரதேவன்' என்று இவனைச் சிவபிரான் குறிப்பிட்டதாகத் திருவாரூர்க் கல்வெட்டுக் கூறுகிறது.[28] இவன் காலத்திலும் இவன் பின்னவர் காலங்களிலும் திருமுறைகள் பாதுகாக்கக் குகைகளும், சைவ சமயப் பிரசாரத்திற் காகவும் சமயப் பணிகட்காகவும் மடங்களும் நாட்டிற் பெருகின.

**அரச மாதேவியரும் திருப்பணிகளும் :** ஆதித்த சோழன் தொடங்கிய சைவத் திருப்பணிகள் அவன் பின்னவர் தொடர்ந்து வளர்த்தவாறே, ஆதித்தன் மனைவி தொடங்கிய திருப்பணிகள் பின்வந்த சோழ மாதேவியர் தொடர்ந்து செய்யலாயினர். அவருள் ஒரு சிலர் பெயர்களும் திருப்பணி பெற்ற கோயிற் பெயர்களும் கீழே காண்க:-

| திருப்பணி செய்தவர் | கோயில் | சான்று |
|---|---|---|
| 1. ஆதித்தன் மனைவி | திருப்பூந்துருத்தி | 105 of 1930-31, |
| 2. முதற் பராந்தகன் மகள் | திருவூரல் | 245 of 1921 |
| 3. செம்பியன் மாதேவியார் | முன்பே கூறப்பட்டது | |
| 4. உத்தம சோழன் மனைவியர் எழுவர் | செம்பியன் மாதேவி | ARE,1925-26 P.104 |
| 5. முதல் இராசராசன் மனைவியர் | திருவெண்காடு<br>திருவிசலூர் | 117 A of 1896<br>19 of 1907 |
| | திருவையாறு | 154,155,156 of 1918 |
| 6. முதல் இராசேந்திரன் மகள் | திருவலஞ்சுழி | 632 of 1902 |
| 7. முதல் இராசேந்திரன் மனைவியர் இருவர் | திருவிசலூர் | 348,349 of 1907 |
| 8. முதல் இராசேந்திரன் மூன்றாம் மனைவி | உடையார்குடி | 624 of 1921 |
| 9. முதற்குலோத்துங்கன் மனைவியர் | திருவிடைமருதூர்<br>ஆர்ப்பாக்கம் | 304 of 1907<br>138 of 1923 |
| | காஞ்சிபுரம் | 39, 45 of 1921 |
| 10. முதற்குலோத்துங்கன் சகோதரிகள் | சிதம்பரம் | 117,119 of 1888 |
| 11. விக்ரம சோழன் மனைவியர் | திருவிடைமருதூர் | 136 of 1895 |
| 12. இரண்டாம் குலோத்துங்கன் மனைவியர் | திருமழபாடி | 85 of 1895 |
| 13. இரண்டாம் இராசராசன் மனைவி | திட்டைக்குடி | 16 of 1903 |

| | | | |
|---|---|---|---|
| 14. | மூன்றாம் இராசேந்திரன் மனைவி | திருவெண்ணெய் நல்லூர் | 427 of 1921 |

முதற் பராந்தகன் காலத்தில் சோணாட்டின் பெரும் பகுதியைக் கைப்பற்றிய **கன்னரதேவன்** பல கோயில்களைக் கட்டினான். அவற்றுள் ஒன்று காவேரிப்பாக்கத்தில் உள்ள காலப்பிரியர் கோயில்.[29]

**சிற்றரசரும் திருப்பணிகளும்:** சோழப் பேரரசர்க்கு அடங்கிய சிற்றரசர் பலர். அவர்களும் அவர்கள் தேவியரும் சோழப்பேரரசைப் பின்பற்றித் தமிழகத்தில் பல கோயில்களில் பலவகைத் திருப்பணிகள் செய்துள்ளனர். மாதிரியாக ஒவ்வொரு சிற்றரசர் - அவர் திருப்பணி செய்த கோயில்மட்டும் இங்குக் குறிக்கப்படும்.

| | **கோயில்** | **சிற்றரசர்** | |
|---|---|---|---|
| 1. | சிதம்பரம் | நுளம்பாதிராசன் | 303 of 1913 |
| 2. | திருப்பாசூர் | யாதவராயன் | 149 of 1930 |
| 3. | மடம் (வட ஆற்காடு) | சாம்புவராயன் | 238 of 1919 |
| 4. | நல்லூர் | வாணகோவரையர் | 47 of 1911 |
| 5. | காளத்தி | பொத்தப்பிச் சோழன் | 104 of 1922 |
| 6. | திருமணஞ்சேரி | மிழலைநாட்டுத் தலைவன் | 28 of 1914 |
| 7. | காஞ்சி | வைதும்ப மகாராசன் | 4 of 1893 |
| 8. | அண்ணாமலை | சேதிராயன் | 497 of 1902 |
| 9. | நெல்லூர் | மழவராயன் | 200 of 1894 |
| 10. | அண்ணாமலை | காடவராயன் மனைவி | 488a of 1902 |
| 11. | ,, ,, | இலக்குமண தேவ்ரும் அவர் மனைவியும் | 500, 510 of 1902 |
| 12. | திருநாவலூர் | முனைய தரையர் | 338 of 1902 |

| | | | |
|---|---|---|---|
| 13. | திருப்பழனம் | விஜயலாய முத்தரையன் | 184 of 1928 |
| 14. | கீழூர் | கிளியூர் மலையமான் | 251 of 1902 |

**கோப்பெருஞ்சிங்கன் திருப்பணிகள் :** இச்சிற்றரசன் பல்லவ மரபில் வந்தவன். இவன் நடுநாட்டில் உள்ள சேந்தமங்கலத்தை [30] ஆண்டு வந்தான்; பையப்பையத் தன் படை வலியைப் பெருக்கி, மூன்றாம் இராசராசனையே சிறைப்படுத்தியவன். இவன் வீரத்திற் சிறந்திருந்தாற் போலவே சிவ பக்தியிலும் சிறந்து விளங்கினான். இவன் சிதம்பரம் தெற்குக் கோபுரத்தைக் கட்டினான்;[31] காவிரித் தென்கரையில் உள்ள கோயில்கட்கு யாத்திரை செய்து ஆக்கூர்க் கோயிலைப் புதுப்பித்தான்;[32] விருத்தாசலம் கோயிலுக்கு நந்தவனம் வைக்கவும் பூசைகட்கும் பொருள் உதவினான்;[33] திருவெண்ணெய் நல்லூர்க் கோயில் விமானத்தைப் புதுக்கினான்;[34] திருக்கழுக்குன்றம், பிரம்மதேசம் இவற்றில் உள்ள கோயில்கட்குத் தானங்கள் அளித்தான்; [35] திருவண்ணாமலைக் கோயிலுக்கு இவனும் இவன் அரசியும் தானங்கள் அளித்தனர்.[36] இவன் மகனான மஹாராஜசிம்மன் சிதம்பரம் கிழக்குக் கோபுரத்தைக் கட்டினான்; திரிபுராந்தகம், திராக்ஷாராமம், காளத்தி, காஞ்சி, திருவதிகை, மதுரை இவ்விடங்களில் உள்ள சிவன் கோயில்கட்கு நிபந்தங்கள் விடுத்தான்.[37]

**அரசியல் அலுவலாளர் செய்த திருப்பணிகள் :** இவை கணக்கில் அடங்காதவை. ஆயினும் மாதிரிக்குச் சில காண்க :

| | | | |
|---|---|---|---|
| 1. | பல்லவராயன் பேட்டை | இரண்டாம் இராசராசன் அமைச்சன் | 434 of 1924 |
| 2. | குடிமல்லம் | யாதவராயர் பிரதானி | 219 of 1903 |
| 3. | காளத்தி | நெல்லூர்ச் சித்தியரையர் பிரதானி | 105 of 1922 |

**காளிங்கராயன் திருப்பணிகள் :** முதல் குலோத்துங்கன் சேனைத்தலைவனான **நரலோக வீரன்** என்ற **காளிங்கராயன்** செய்துள்ள திருப்பணிகள் அளவிறந்தன. இவன் மிகச் சிறந்த சிவபக்தன்; சித்தலிங்க மடத்தில் சிவனுக்குக் கற்றளி எடுத்தான்;[38] திரிபுவனை, திருப்புகலூர் இந்த இடத்துக் கோயில்களில் மண்டபங்கள் அமைத்தான்; வேறு தானங்களும் செய்தான்.[39] இவன் தில்லையிற்

செய்துள்ள திருப்பணிகள் மிகப்பல. அவற்றுள் சிறப்பாகக் குறிக்கத்தக்கவை - (1) தில்லைக்கும் கடலுக்கும் நடுவில் அகன்ற சாலையை அமைத்தமை, (2) கடற்கரையில் மாசிமகத்தின் போது கடவுள் தங்க மண்டபம் அமைத்தமை, (3) நூற்றுக்கால் மண்டபம் கோயிலில் அமைத்தமை, (4) மூவர் தேவாரத்தையும் செப்பேடுகளில் எழுதுவித்தமை, (5) தேவாரம் ஓத மண்டபம் ஒன்று அமைத்தமை என்பன.[40] இவன் திருவதிகையிலும் பல திருப்பணிகள் செய்துள்ளான். அவற்றுள் முன்போலச் சிறப்பாகக் குறிக்கத்தக்கவை - (1) நூற்றுக்கால் மண்டபம் கட்டினமை, (2) அப்பர்க்குத் தனிக் கோயிலைக் கட்டினமை, (3) அப்பர் மடத்திற்கு 48 ஆயிரம் குழி நிலத்தை அளித்தமை, (4) நாடகசாலை அமைத்தமை என்பன.[41]

**குடிகளும் திருப்பணிகளும் :** இங்ஙனம் பேரரசர் - சிற்றரசர் - அரசாங்க அலுவலர் செய்த திருப்பணிகளால் தூண்டப்பட்ட வணிகர் முதலிய குடிமக்களும் தங்கள் சக்திக்கியன்றவாறு ஒவ்வொரு கோயிலிலும் தானங்கள் செய்துள்ளனர். இங்கு மாதிரியாகச் சில காண்க:

| | | | |
|---|---|---|---|
| 1. | திருவிளக்குடி | வணிகர் கழகம் | 131 of 1926 |
| 2. | திருப்பாசூர் | வணிகர் குழுக்கள் | 120 of 1930 |
| 3. | திருச்சிற்றேமம் | மலைமண்டலத்துக் குதிரைவாணிகன் | 182 of 1926 |
| 4. | திருப்புகலூர் - | அரண்மனைப் பணிப்பெண் | 88 of 1928 |
| 5. | திருவிடைமருதூர் | தேவரடியாள் | 299 of 1907 |
| 6. | காளத்தி | சேனைத் தலைவனின் வேலையாட்கள் | 90 of 1922 |
| 7. | காஞ்சி | ஒரு சாதாரணப் பெண் தன் நகைகளை விற்றுக் கோயிலுக்கு நிலம் வாங்கிவிட்டாள் | 431 of 1919 |

இதுகாறும் கூறப்பெற்றவற்றால், சோழர் காலத்தில் அரசர் முதல் சாதாரண குடிமகன் ஈறாக இருந்த அனைவரும் சமயத் தொண்டில் ஈடுபட்டிருந்தனர் என்பதை நன்கு அறியலாம்.

## கோயில்களின் வளர்ச்சி

பல்லவர்களைப் பின்பற்றி ஆதித்தனும் அவன்மரபினரும் பழைய கோயில்களைக் கற்றளிகளாக்க முற்பட்டனர் என்பது முன்னர்க் கூறப்பட்டது. பாடல் பெற்ற கோயில்களிற் பல, பாறையே இல்லாத தஞ்சை, திருச்சி மாவட்டங்களைச் சேர்ந்தவை என்பது நினைவில் இருப்பின், அவற்றைக் கற்றளிகளாக்க அவர்கள் எவ்வளவு பாடுபட்டிருத்தல் வேண்டும் என்பது நன்கு புலனாகும். மலைகள் உள்ள மாவட்டங்களிலிருந்து பாறைகளை வெட்டிக் கொணர்ந்து பழைய கோயில்கள் அனைத்தையும் குறிப்பிட்ட காலத்திற்குள் கற்றளிகளாக்க முடியவில்லை; ஒவ்வொரு கோயிலின் எல்லாப் பகுதிகளையும் கற்களால் அமைப்பதாயின், கற்கள் மிகுதியாகச் செலவாகும். இவை அனைத்தையும் உளங்கொண்டே சோழரும் சிற்றரசரும் பிறரும் பழைய கோயிலின் கருவறையையும் விமானத்தையுமே முதலிற் கற்களால் அமைக்கத் தொடங்கினர். அவர்கள் பாடல் பெற்ற கோயில்களைக் கற்றளிகள் ஆக்குவதிலேயே பெருங்கவனத்தைச் செலுத்தினர். திருவிடைமருதூர், ஆமாத்தூர், செந்துறை, ஆவடுதுறை, விசயமங்கை, ஆலந்துறை, அரிசிற்கரைப்புத்தூர், மழபாடி, ஒற்றியூர், வைகாவூர், நீடூர், பழுவூர், பெருந்துறை, அறையணி நல்லூர், வக்கரை, திருப்பாலைவனம், மாகறல், வேள்விக்குடி[42] முதலிய பல கோயில்கள் கற்றளிகளாக மாறின.

ஒவ்வொரு சிவன் கோயிலின் சொத்துக்களைக் கண்காணிக்கும் முக்கிய அதிகாரி சண்டேசுவரர். அவர் பெயராலேயே கோயில் வரவு - செலவுக் கணக்குகள் எழுதுவதும், விலைகொள்வதும், விற்பதும் நடைபெற்று வந்தன. ஆதலால் முதல் திருச்சுற்றில் அவருக்கு மட்டும் இறைவன் கருவறையை அடுத்துக் கோயில் கட்டுவது வழக்கம். அக்கோயிலும் சோழர் காலத்தில் கற்றளியாக்கப்பட்டது.[43]

ஒரு கோயில் கற்றளியாவதற்கு முன் அதன் அடிப்படைக் கற்களிலோ, மண்டபத் தூண்களிலோ, பிற இடங்களிலோ முற்பட்ட கல்வெட்டுக்கள் இருக்குமாயின், அவற்றைப் படியெடுத்துக்கொண்டு திருப்பணி முடிந்தபிறகு, புதிய கற்சுவர்களில் அவற்றைப் பொறித்து முன்னோர் அறத்தைப் பாதுகாக்கும் முறை சோழர்காலத்தில் இருந்தது.[44]

சாதாரணமாக ஒவ்வொரு கோயிலும் கருவறை, நடுமண்டபம் இவற்றைப் பெற்றிருக்கும்; பின்னர் முகமண்டபம் அமைந்தது. கோயிலைச் சுற்றிலும் முதல் திருச்சுற்றும் மதிலும் அமைந்தன.[45] முன் சொன்னபடி முதல் திருச்சுற்றில் சண்டீசர்க்குத் தனிக்கோயில்

அமைந்தது. அத்திருச் சுற்றில் வலம் வரும் முறையில் தென்கிழக்கில் சூரியன், தென்மேற்கில் கணேசர், சப்த கன்னியர், மேற்கில் சுப்பிரமணியர், வடமேற்கில் ஜேஷ்டர், வடக்கே சண்டேசுவரர், வடகிழக்கில் சந்திரன் இடம் பெற்றிருந்தனர். இத்திருச்சுற்றுக் கோயில்கள் சில கோயில்களில் தனித்தும், மதிலை ஒட்டி அமைந்த கட்டத்திற்குள்ளும் இருந்தன. மதிலில் ஒன்று முதல் நான்கு வாயில்கள் வரை கோயிலுக்கேற்றவாறு அமைந்தன. வாசல்மீது சிறிய கோபுரங்கள் அமைந்தன. இராஜராஜன் - இராஜேந்திரன் காலம்வரை கருவரைக்குமேல் உள்ள விமானமே வானளாவக் கட்டப்பட்டது. ஆயின், பிற்காலங்களில் விமானம் தாழ்த்தப்பட்டுக் கோபுரங்கள் உயர்த்தப்பட்டன. கோயிலைச் சுற்றிலும், சில இடங்களில் கோயிலுக்குள்ளும் நந்தவனங்கள் ஏற்பட்டன.[46] அவ்வாறே திருக்குளங்களும்,[47] கவனிப்பு மிகுந்த கோயில்களில் இரண்டாம் திருச்சுற்றும் மூன்றாம் திருச்சுற்றும் கட்டப்பட்டன.[48] அச்சுற்றுக்களில் அரசர் சிற்றரசர் முதலியோர் எடுப்பித்த சிறிய கோயில்கள் நாளடைவில் இடம்பெற்றன.[49] திருவீரட்டான முடையார் கோயிலுள் காலகாலதேவர், கூத்தாடுந்தேவர், குலோத்துங்க சோழீச்சுரமுடையார், விக்கிரம சோழீச்சுரமுடையார் கோவில்கள் இருந்தன என்று ஒரு கல்வெட்டு (40 of 1906) அறிவிக்கிறது.

பல்லவர் காலத்தும் முற்காலச் சோழர் காலத்தும் அம்மனுக்குச் சிவன் கோயிலில் தனிக்கோயில் ஏற்படவில்லை; அம்மன் இறைவன் சந்நிதியிலேயே 'போக சக்தி அம்மன்' எனத் தனி இடம் பெற்றிருந்தாள். இராசராசன் இப்போக சக்தி அம்மனை உமாபரமேசுவரி என்று குறிப்பிட்டான். கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் முதல் இராசேந்திரனது எண்ணாயிரம் கல்வெட்டே முதல் முதலாக அம்மன் தனிக் கோயிலைப் பற்றித் திருச்சுற்றாலையில் உள்ள பரிவார ஆலயங்களைப் பற்றிக் கூறுமிடத்துக் குறிக்கிறது. அதன்பிறகே அம்மனுக்குத் தனிக் கோயில்கள் எடுக்கப்பட்டன.[50] சோழர் ஆட்சிமுடியப் பல கோவில்களில் அம்மன் கோயில்கள் புதியனவாக ஏற்பட்டன என்பதைப் பல கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.[51]

கோயில்கள் செல்வாக்கிற் பெருகப் பெருக, அவற்றுள் பல மண்டபங்கள் ஏற்பட்டன. செங்காட்டங்குடியில் சிறுத்தொண்ட நம்பி மண்டபம்,[52] திருவெற்றியூரில் இருந்த வக்காணிக்கும் மண்டபம், 'மண்ணைக் கொண்ட சோழன்,' 'இராஜராஜன்' 'இராஜேந்திரன்' என்ற பெயர்களைக் கொண்ட மண்டபங்கள், வியாகர்ணதான - வியாக்யான மண்டபம் என்பன குறிக்கத்தக்கன.[53] பின்னது இலக்கணம் கற்பிக்க ஏற்பட்ட மண்டபமாகும். நடன மண்டபம்,[54] நாடகமண்டபம்,[55] திருப்பதியம் பாடவும் எழுதவும் பயன்பட்ட திருக்கைக் கோட்டி

மண்டபம்,[56] நூற்றுக்கால் மண்டபம்,[57] யாகசாலை[58] என்பனவும் குறிக்கத்தக்கன. சாதாரண மண்டபங்களைப் பெற்ற கோயில்களும் பல.[59] திருவக்கரையில் ஆயிரக்கால் மண்டபம் இருந்தது.[60] இம்மண்டபங்கள் குறைவின்றிக் கட்டி முடிக்க, அவசியம் நேருமாயின், தம் தலையை அறுத்துப் பலியிடவும் மக்கள் தயாராயிருந்தனர் என்பது தெரிகிறது.[61] சில கோயில்களில் மாளிகைகள் இருந்தன.[62] நீடூர்க்கோயிலில் இருந்த மாளிகை 'புராண நூல் விரிக்கும் புரிசை மாளிகை' எனப் பெயர் பெற்றது.[63] 'திருமாளிகைத் தேவர்,' 'மாளிகை மடத்து முதலியார்' என்னும் பெயர்களைக் காண, இம்மாளிகைகள் சைவ சமயப் பெரியோர்கள் தங்கியிருக்கவும் மக்கட்குச் சமயபோதனை வழங்கவும் பயன்பட்டவை எனக் கருதுதல் பொருத்தமாகலாம். பல பெரிய கோயில்களில் மடங்கள் இருந்தன. அவற்றில் சைவ சாத்திரங்களில் வல்ல துறவிகளும் சாத்திரமாணவர்களும் இருந்தனர். அத்தகைய மடங்கள் இருந்த கோயில்களில் 'சரசுவதி பண்டாரம்' என்ற நூல் நிலையம் இருந்தது என்பது தெரிகிறது.[64]

பல்லவர் காலத்தில் செங்கற் கோயில்களாகவும் சிறிய உருவினவாயும் இருந்த பல கோயில்கள் சோழர் காலத்தில் இங்ஙனம் கற்றளிகளாகவும் பெரிய உருவினவாகவும் மாறியதற்குச் சோழர்காலச் சைவ சமய வளர்ச்சியே காரணமாகும். அவற்றைக் கற்றளிகளாக மாற்றிய கல்தச்சர்களின் பக்தியும் தொழில் திறமையும் பாராட்டத்தக்கன அல்லவா? சோழர்கள் அத்தச்சர்களைப் பாராட்டினர்; நிலங்களை மானியமாக வழங்கினர்.[65] திருவாவடுதுறைக் கோயிலைக் கட்டிய கற்றளிப்பிச்சன் உருவம் அக்கோயிலில் இன்றும் இருக்கக் காணலாம்.[66]

**கோயில் ஆட்சி :** அரசர் முதல் சாதாரணக் குடிமகன் ஈறாக அனைவருமே கோயிலைத் தம் உயிராகக் கருதி, அதில் திருநந்தா விளக்கு எரிக்கவும், பூசை செய்யவும், விழாச் செய்யவும் ஏராளமான நிலங்களையும் தோட்டங்களையும் பொன்னையும் நகைகளையும் பொன் - வெள்ளிப்பாத்திரங்களையும் பூசை முதலியவற்றுக்குரிய செப்பு முதலிய உலோகப் பாத்திரங்களையும் கால்நடைகளையும் பிறவற்றையும் மிகுதியாக வழங்கினர். இவற்றைக் கவனித்துப் பாதுகாக்கவும் நிலங்கள் முதலியவற்றைக் குத்தகைக்கு விட்டு வசூலிக்கவும் கோவில் பரிவாரத்தார் அனைவர் வேலைகளையும் மேற்பார்க்கவும் அதிகாரிகள் இருக்கவேண்டும் அல்லவா? அதிகாரிகள் இல்லாவிடில் அனைத்தும் பாழாகிவிடுமே!

செய்யூர், பெரியபாளையம், அகத்தியான் பள்ளிக் கோயில் போன்ற சிறிய கோயில்கள் அர்ச்சகர் பொறுப்பிலேயே

விடப்பட்டிருந்தன.[67] மாகேசுவரர் என்ற சைவத் துறவிகள் ஆட்சியில் சில கோயில்கள் இருந்தன.[68] திருக்களர் கோயில் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் ஆண்டார்கள் ஆட்சியில் இருந்தது; மூன்றாம் இராஜராஜன் காலத்தில் மாகேசுவரர் ஆட்சிக்கு மாற்றப்பட்டது.[69] சில கோயில்கள் கோயிலைச் சார்ந்த மடத்துத் தலைவர்கள் ஆட்சியில் இருந்தன.[70] சில கோயில்கள் ஊரவையார் மேற்பார்வையில் இருந்தன.[71] நடுத்தர வருவாயுள்ள பெரிய கோயிலில் கோயிலுக்கென்றே தனி ஆட்சிக்குழு இருந்தது. அக்குழுவினர் 'ஸ்ரீகாரியம் செய்வர்,' 'கோயில் கணப் பெருமக்கள்,' 'பாத மூலத்தார்'[72] எனப் பலவாறு பெயர் பெற்றிருந்தனர். அக்குழுவினருள் ஊரவையார், மாகேசுவரர், மடம் (இருப்பின் அதன்) தலைவர் என்பவர் இடம் பெற்றிருந்தனர்.[73] சில கோயில்களின் ஆட்சி ஊரவை, கோயில் ஆட்சிக்குழு, ருத்ரமாகேசுவரர் ஆகிய மூவரிடமும் இருந்தது.[74] சில பெரிய கோயில்கள் தனிப்பட்ட அதிகாரிகள் மேற்பார்வையில் இருந்தன. அவர்கள் ஊரவையார்க்குக் கட்டுப்பட்டிருந்தனர்.[75] வேறு சில பெரிய கோயில்களில் இருந்த அதிகாரிகள் கோயில் ஆட்சிக் குழுவினர், ஊரவையார் இவருடன் சேர்ந்து கோயில் காரியங்களைக் கவனித்தனர்.[76] கோயில் ஆட்சி ஒரு குழுவினரிடம் அல்லது ஊரவையாரிடம் இருந்தாற் போலவே கோயிலிலுள்ள நடுக்கோயில் (சிறப்புடைக் கோயில்) ஒரு குழுவினர் ஆட்சியில் இருத்தலும் உண்டு. அக்குழுவினர் கோயிற் பணத்திலிருந்து கடன் தருவர்; கடன் பெறுவர்; கோயிற் பணிகளைக் கவனிப்பர்.[77] கோயிலைப் பற்றிய மிக முக்கியமான செய்திகள் அரசன் பார்வைக்குக் கொண்டு செல்லப்படுதலும் உண்டு.[78] கோயிலில் இருந்த பொக்கிஷ சாலை 'ஸ்ரீபண்டாரம்' எனப்பட்டது. அது பற்றிய கணக்குப் புத்தகம் 'ஸ்ரீ பண்டாரப் பொத்தகம்' எனப்பட்டது.[79] அப்பண்டார அதிகாரிகள் 'சிவ பண்டாரிகள்' எனப்பட்டனர்.[80] நடுக்கோயில் ஆட்சி போலவே முழுக் கோயில் ஆட்சி நடத்துவோரும் இருந்தனர். அவர்கள் கோயில் நிலங்களை விற்கவும் நிலங்களை வாங்கவும் உரிமை பெற்றிருந்தனர்.[81] கோயிலுக்கு அவரவர் செய்த தானப் பத்திரங்கள் (மூல ஓலைகள்) சிவ பண்டாரத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டன; அதே சமயத்தில் அவை கோயிற் சுவரிலும் வெட்டுவிக்கப்பட்டன.[82] கோயிலைச் சேர்ந்த தேவரடியார் முதலிய மக்கட்கும் பசுக்கள் முதலிய கால்நடைகட்கும் சூல்ப்பொறி பொறிக்கப்பட்டிருந்தது.[83]

எல்லாக் கோயில்களின் வரவு - செலவுக் கணக்குகளும் அரசாங்க அதிகாரிகளால் ஆண்டுதோறும் தணிக்கை செய்யப்பட்டன. மதுராந்தகன் கண்டராதித்தன், காழி ஆதித்தன், அருமொழி மூவேந்த வேளார் முதலிய அரசாங்க அலுவலர் பலருடைய பெயர்கள்

கல்வெட்டுக்களிற் காண்கின்றன.[84] இந்த அதிகாரிகள், கோயில் கணப் பெருமக்கள், ஊரவையார் என்பவர் முன்னிலையில் கோயில் நகைகளைக் கணக்கிட்டு, மதிப்பிட்டுக் குறித்துக் கொண்டனர்;[85] கோவில் கணக்குகளைப் பார்வையிட்டனர்; கோயில் பணத்தைக் கையாண்டவர் - சொன்னபடி கோயிலுக்கு நெல் முதலியவற்றைக் கொடுக்கத் தவறிய குத்தகையாளர் இவர்தம் நிலங்களை - வீடுகளைப் பறிமுதல் செய்தனர். குற்றவாளிகள் 'சிவத்துரோகிகள்,' 'ஊர்த்துரோகி கள்' என்று ஏசப்பட்டனர்.[86]

**எளிய கோயில்கள் கவனிக்கப்பட்ட முறை :** இராமநதீச்சுரம் கருங்கல் திருப்பணியற்றது. அது முதற் குலோத்துங்கன் காலத்திலும் செங்கற்களாலேயே புதுப்பிக்கப்பட்டது. அதனால் அதற்குரிய பத்திரங்கள் திருச்செங்காட்டங்குடிக் கோயிற் சுவரில் வெட்டப்பட்டன.[87] பிறகு பூசை முதலியன நடைபெற இரண்டாம் குலோத்துங்கன் நிலமளித்தான்.[88] பிறகு மூன்றாம் இராசராசன் காலத்தில் கோயில் பூசைக்கு முட்டுப்பாடு ஏற்பட்டதால் கோயில் மாகேசுவரரும் தானத்தாரும் சிதம்பரம் கோயில் ஆட்சியாளரை (மாகேசுவரரை)ச் சந்தித்து உதவி கேட்டனர். அவர்கள் அவை கூட்டி, சேர, சோழ, பாண்டிய, சயங்கொண்ட சோழ மண்டலங்களில் உள்ள குறிப்பிட்ட கோயிற் பணியாட்கள் முன்போலவே ஆளுக்கு ஆண்டுக்கு 20 காசு வீதம் கொடுக்கவேண்டும் என்று முடிவு செய்தனர்; சூலப்பொறி பொறிக்கப் பெற்றவரும் 20 காசு ஆண்டுக்குச் செலுத்த வேண்டும்; பிற சிற்றூர்களில் உள்ள மாகேசுவரரும் பிராமணரும் (பொதுவாக) பத்துக் காசு செலுத்தவேண்டும். இங்ஙனம் செலுத்தப் பெறும் பணம் கொண்டு கோயிலைப் பழுது பார்க்கக் கடவர் என்றும் முடிவு செய்தனர்.[89]

**இத்தீர்மானத்திலிருந்து நாம் அறியத்தகுவன இரண்டு :** (1) எளிய கோயில்கள் பொருள் உதவி பெற்ற முறை; (2) தில்லை மாகேசுவரர்க்கு அக்காலத் தமிழகக் கோயில்களில் இருந்த செல்வாக்கு.[90]

முன் சொன்ன திட்டமான கோயில் ஆட்சியில்[91] பொதுமக்கட்கு நம்பிக்கை ஏற்பட ஏற்பட, அவர்கள் கோயில்கட்கு மிகுதியாக நிபந்தங்கள் விடுத்தனர்; கோயில்கள் செல்வ வளத்திற் பெருகின; பக்தர்களின் அறங்கள் குறைவின்றி நடந்தன. கோயில் பரிவாரத்தார் தத்தம் கடமையான தொழில்களைச் செவ்வனே செய்தனர். கோயில் களில் சமயத் தொடர்பான ஆடல் - பாடல் - நாடகம் - திருமுறை முதலியன ஓதல் - சமயபோதனை என்பன காலந்தவறாது நடை பெற்றன. இவை பற்றிய விவரங்களை அடுத்த பகுதியிற் காணலாம்.

## குறிப்பு விளக்கம்

1. வடநாட்டு அரசர் மரபின் வரலாறு, தொகுதி I, பக். 120-130.
2. மேலது, 195, 216.
3. மேலது, தொகுதி II, பக். 942-1041.
4. மேலது, தொகுதி II, பக். 873-907.
5. இது தமிழ்நாட்டில் உள்ள 'திரைலோக்ய சுந்தரம்' என்னும் தலத்தை நினைப்பூட்டுகிறது - ஒன்பதாம் திருமுறை.
6. வடநாட்டு அரசர் மரபின் வரலாறு, தொகுதி II. 680 - 727.
7. மேலது, பக். 1058-1085.
8. மேலது, பக். 762-800.

8a. 49 of 1888, 359 of 1917, 325 of 1901, 212 of 1903, 255 of 1916, 183, 184 of 1929.30, 221of 1937, 168 of 1938, 393 of 1924, 367 of 1909 etc.,

8b. இவற்றுள் சிறப்பானவை இப்பகுதியிற் குறிக்கப்படும்.

8c. 129 of 1919, 394 of 1924, 382 of 1905, 279 of 1901, 359 of 1903, 476 of 1925, 753 of 1905, 304 of 1017, 414 of 1902, 231 of 1931, E.C.IV.93, 534 of 1921, 40 of 1905, 128 of 1896, 163 of 1897, 434 of 1924, 352 of 1909, "C' 73 of 1916, 262 of 1913, 93 of 1918, 467 of 1922, 140 of 1927, 8 of 1900, 479 of 1907, 458 of 1913, 37 of 1925, 400 of 1913, 393 of 1925, 64 of 1931, 49 of 909, 159 of 1923, 254 of 1922, 401 of 1903, 312 of 1913, 119 of 1906, 518 of 1902, 458 of 483, 1907, 504 of 1912, 10 of 1914, 343, 429 of 1922, 261 of 1923, 355 of 1924, 75 of 1926 etc.

9. E.I. 15. P. 47.
10. 80 of 1897.
11. A.R.E.1906, P. 69; கண்டராதித்தர் - திருவிசைப்பா, 8.
12. 333 of 350 of 1902.
13. 130 of 1926, 36 of 1931, 571 of 1904, 200 of 1904, 47 of 1918, 357 of 1907, 626 of 1909, 75 of 1926.
14. 21 of 1914, 250 of 1894, 250, 262 of 263 of 1923; 48 of 1918, 104 of 1900, 204 of 1925,156, 159 of 1908, 570 of 1904, 479, 497, 498 of 1925, 338 of 1927, 444 of 1918, 362 of 1907, 199 of 1901, 297 of 1908, 251 of 1930, 503 of 1930, 71 of 1931, 128 of 1926, 28 of 1907, 669 of 1904, 219 of 1911, 459 of 1908, 540 of 1920.see also A.R.E. 1926, PP. 104 105.
15. S.I.I.Vol. II, Parts T 1-3.
16. S.I.I. Iv. 522 - 530.
17. A.R.E. 1937, 2-11.
18. 312 of 1901; S.I.I. 1.39.
19. 194, 341, 344 of 1893.
20. A,R,E. 1927, PP. 79 - 80.
21. தமிழ்ப் பொழில், தொகுதிகள் 12 - 13.
22. S.I.I.III. PP. 183-4.

23. மூவருலா, பக். 31, 58; பெ.பு. பக். 2, செ 8; 350 of 1927.
24. 363 of 1907.
25. S.I.I.IV. 397.
26. பெ. பு. ஆராய்ச்சி, பக். 22 - 31.
27. A.R.E. 1908, PP. 67.68.
28. 554 of 1904.
29. 382 & 1905; A.R.E. 1906, P.70.
30. நான் இவ்விடத்தை 28-5-50-இல் பார்வையிட்டேன்.
31. 463 of 1902.
32. 229 of 1921.
33. 73,83 of 1918.
34. 486 of1921.
35. 181 of 1894, 170 of 1918.
36. 500, 508, 513 of 1902.
37. 197, 198, 202 of 1905; A.R.E. 1906 P. 64; இவன் மஹாராஜசிம்மன் கோப் பெருங்சிங்கனே எனக் கொள்வாரும் உளர். colas, vol. 2, Part I p. 193.
38. 367 of 1909.
39. 207 of 1923, 175 of 1919, 97 of 1928.
40. 120 of 1888; S.I.I.IV. 225.
41. 369 of 1921; செந்தமிழ், 23, பக். 93.100'25 பாக்கள்.
42. 199 of 1907, 413 of 1903, 316 of 1903; 126, 143 of 1925, 165 of 1929, 358 of 1903, 282 of 1908, 92 of 1895, 126 of 1912, 51 of 1914, 534 of 1921, 393 of 1924, 134 of 1932, 387 of 1902, 200 of 1904, 313 of 1929, 224 of 1901, 139 of 1926 etc.
43. 658 of 1909.
44. 199 of 1907; A.R.E. 1911 P. 72; 1913, P. III and 1922-23, P. 106.
45. 357 of 1907; 314 - 55 of 1908; 224 of 1901.
46. 222 of 1911, 149 of 1928, 144 of 1937, 216, 260 of 1907, 135 of 1925, 94 of 1925, 319 of 1903, 218 of 1926, 69 of 1897, 249 of 1907, 49 of 1980, 120 of 1926, 18 of 1922, 155 of 1912, 45 of 1925, 128 of 1930, 330 of 1918, 457, 458 of 1902, 254 of 1925, 120, 125 of 1922 etc.
47. 475 of 1912, 393 of 1925.
48. 516 of 1920, 72 of 1913.
49. தமிழ்ப் பொழில், 23, பக்.155; 325, 335 of 1902; 200 of 1904; A.R.E-1913, P.86.
50. சோழர் கோயிற்பணிகள், பக்.13-14.
51. 429 of 1912, 701 of 1909, 226 of 1901, 28 of 1914, 400 of 1913, 182 of 1926, 504 of 1912, 184 of 1928, 351 of 1911 etc.
52. 57 of 1913.

53. A.R.E. 1913, P.86.
54. 152 of 1925, 154 of 1895.
55. 199 of 1907, 157 of 1905, 398 of 1921, 152 of 1925, 253, 254, of 1914.
56. 203 of 1908, 414, 454 of 1909, 10, 381 of 1918, 350 of 1929 etc.
57. S.I.I.4. 225; 369 of 1921 etc.
58. 369 of 1921.
59. 400 of 1939, 254 of 1922, 119 of 1906, 429 of 1922, 645 of 1902.
60. 190 of 1904.
61. 119 of 1906.
62. 429 of 1922, 535 of 1921
63. 535 of 1921.
64. 277 of 1913; திருமுக்கூடல், எண்ணாயிரம், திரிபுவனை, திருவொற்றியூர், வேம்பற்றூர், திருஆவடுதுறை என்ற இடங்களில் கல்லூரிகள் இருந்தமையால் அங்கு பலவகை சாத்திர நூல்களைக்கொண்ட நூல் நிலையங்கள் இருந்திருக்கலாம்.
65. 357 of 1904, 70 of 1913, 403 of 1908 and S.I.I.2 - 66.
66. 132 of 1925.
67. 449 of 1902, 309 of 1908, 505 of 1904.
68. 486 of 1922.
69. S.I.I.3 - 260.
70. 101, 121 of 1925.
71. 362 of 1917, 160 of 1929, 332 of 1910.
72. S.I.I. 6-323; 206 of 1915; S.I.I.5-686.
73. 47 of 1910, 100 of 1906.
74. 152, 210 of 1929.
75. 160 of 1929, 605 of 1920, 210 of 1921, 21 of 1922, 271 of 1927.
76. 152, 154 of 1895.
77. A.R.E. 1922, P.117.
78. 201, 206 of 1919.
79. 327 of 1921.
80. S.I.I.I. 146.
81. A.R.E. 1922, P.117.
82. 299, 326 of 1913.
83. 543 of 1921; 537 of 1922.
84. 282 of 1906 109 of 1914, 28 of 1819, 240 of 1931 etc.
85. 210 of 1929, S.I.I. 3 - 211.
86. 189 of 1929, 57 of 1914.
87. 65 of 1918; A.R.E. 1913, P.111.
88. 533 of 1922.

89. 537 of 1922; A.R.E. 1923, p.107.

90. கோச்சோழன் காலமுதல் தில்லை எவ்வாறு சைவ சமயத்தின் உயிர்நாடித் தலமாக வளர்ந்து வந்தது என்பது முன்பு விளக்கப்பட்டது. தில்லைக் கோயிலில் மட்டும் திருமுறைகள் அடக்கம் செய்யப்பட்டதிலிருந்து ஏனைய கோயில்கட்கு நடுநாயகமானது என்பதை நன்கறியலாம். எல்லாக் கோயில் கடவுளரும் நடுயாமப் பூசையின்போது தில்லையில் ஒடுக்கமாகின்றனர். ஆதலின் எல்லாக் கோயில்களிலும் இரவு 10மணிக்குள் அர்த்தயாமப் பூசை முடித்துவிடவேண்டும் என்பதும் சரியாகப் பத்து மணிக்கே தில்லையில் அர்த்தயாமப் பூசை தொடக்கப்பெறுதலும் தில்லையின் முதன்மையை வலியுறுத்தும் சான்றாகும். தமிழகத்துச் செங்குந்தருக்குள்-அவர்கள் எங்கு இருப்பினும் பந்தியில் தாம்பூலம் தரும்பொழுது, சிதம்பரத்தைச் சேர்ந்தவர்க்கு முதல் தாம்பூலம் கொடுக்கும் வழக்கமும் பிறவும் இங்கு நினைவு கூர்தற்குரியன.

91. Vide A.R.E. 1918, P.145; A.R.E. 1922, PP.116-7 for more information on Temple-Administration.

# 8. கோயில்கள்-மடங்கள்: சமய நிகழ்ச்சிகள்

## கோயில்களில் சிற்பங்கள்

சோழர்காலச் சிற்பிகளின் வேலைத்திறனை உணர்த்த வல்ல கோயில்கள் தஞ்சை-இராசராசேசுவரம், கங்கை கொண்ட சோழேசுவரம், இராசராசபுரம் இராசராசேசுவரம், திருபுவன வீரேசுவரம் என்பன. இக்கோயில்களில் உள்ள பிட்சாடனர், தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர், அர்த்தநாரீசர், சூலதேவர், கலியாணசுந்தரர், மகிஷாசுரமர்த்தினி, திருமால், பிரமன் முதலியவர்களை உணர்த்தும் சிற்பங்கள் கண்ணையும் கருத்தையும் ஈர்ப்பனவாகும். இவற்றைப் பார்க்கும் மக்கள் இவற்றின் வேலைப்பாட்டைவியப்பதுடன், இவை கடவுளரின் பல்வேறு நிலைகளை உணர்த்தும் அறிகுறிகள் என்று கருதிச் சமய அறிவு பெறுதல் இயற்கை. உருவம் உள்ளத்திற் பதிகின்றது போல அருவம் பதிவதில்லை அல்லவா. ஆதலின் மக்கட்குச் சமயப்பற்றையும் அறிவையும் உண்டாக்கச் சமயத் தொடர்பான சிற்பங்களும் ஓவியங்களும் உலோகத்திருமேனிகளும் கோயில்களில் தேவைப்பட்டன.

### *தாராசுரத்தில் கடவுளர் சிற்பங்கள்*

சுவாமி கோயில் கோபுரத்தின் அடிப்பகுதியில் பல புரைகள் காலியாக உள்ளன. அவற்றின்மேல் கல்வெட்டெழுத்துக் காணப் படுகிறது. அப்பெயர்களைக்காண, அப்பெயர்களைக்கொண்ட திரு வுருவங்கள் அங்கு இருந்தன என்பது தெளிவு. அப்பெயர்கள் வருமாறு: (1) ஆதிசண்டேசுவரர், (2) கங்காதேவி, (3) மகாசாஸ்தா, (4) ருத்ராணி, (5)வைஷ்ணவி, (6) பிரம்மரணி, (7) ஸ்ரீநந்திகேசுவரதேவர், (8) பெரியதேவர், (9) சரந்தியாதித சக்தி, (10) சாந்திசக்தி, (11) வித்யாசக்தி, (12)பிரதிஷ்டாசக்தி, (13) நிர்விருத்தி சக்தி, (14) ஸ்ரீதேவி, (15) துர்க்கா தேவி, (16) பத்மநிதி, (17) சூரியதேவர், (18) சுப்பிரமணியதேவர், (19) க்ஷேத்திரபாலர், (20) சரசுவதி, (21) ஈசானதேவர்.[1] இவை தனித்தனி உருவச்சிலைகள் ஆதலின்,

பிறரால் எடுத்துச் செல்லப்பட்டன போலும்! இவற்றைக் கண்டு களிக்க நாம் பேறு பெறவில்லை. ஆயினும் இவை சோழர்கால மக்களை இன்புறுத்தியிருக்குமென்பதில் ஐயமில்லை.

### கங்கைகொண்ட சோழபுரச் சிற்பங்கள்

தமிழ்நாட்டில் இன்று பழுதுபட்டுள்ள கோயில்களில் கங்கைகொண்ட சோழேச்சரம் ஒன்று. ஆயினும் அதன் சிற்பங்கள் இன்று செய்தாற்போலப் பேரழகுடன் காண்கின்றன.[2] அவற்றுள் குறிக்கத்தக்கது விசாரசருமர் சண்டீசப்பதம் பெற்றதை விளக்கும் சிற்பமாகும். சிவன் உமாதேவியுடன் இருந்து விசாரசருமர் முடியிற் கொன்றைமாலையைச் சூட்டி அவருக்குச் சண்டீசப்பதம் (சிவன் கோயில் சொத்துக்களைக் கண்காணிக்கும் முக்கிய அதிகாரி என்னும் பதவி) கொடுக்கும் காட்சியைக் குறிப்பது. அதற்கு வலப்புறம் கணநாதர் ஆடிப்பாடிக் களிப்பதும், இடப்புறம் பசுக்கள் (வேதங்களைக் குறிப்பன போலும்!) நிற்றலும் காட்டப்பட்டுள்ளன. நடு மண்டபச் சுவரிலும் சண்டீசர் வரலாறு நான்கு வரிசைகளில் செதுக்கப் பட்டுள்ளதால், இக்கோயிலைக் கட்டிய முதலாம் இராசேந்திரன் காலத்திற்றான் இச்சிற்பங்களும் செதுக்கப்பட்டிருத்தல் வேண்டும் எனக் கருதுதல் தவறாகாது. இவற்றுள் மேற்சொன்ன பெருஞ்சிற்பம், பின்வந்த சேக்கிழார் உள்ளத்தைக் கவர்ந்தது. அவர் இதற்கு விளக்கம் என்று சொல்லும் முறையில் இரண்டு செய்யுட்களைச் சண்டீசர் வரலாற்றிற் பாடியுள்ளார்.[3] இவ்வழகிய சிற்பம் சோழர்கால மக்கட்குச் சண்டீசர் வரலாற்றை உணர்த்திப் பக்தியின் சிறப்பை நன்கு பதியச் செய்திருக்கும் அன்றோ?

### கீழைக் கடம்பூர்ச் சிற்பங்கள்

'கடம்பூர் - இளங்கோயில்' என்று அப்பராற் பாடப்பட்ட கோயில் இன்று அழிந்து கிடக்கிறது.[4] அதன் கருவறையின் மூன்றுபுறச் சுவர்களிலும் உருவச்சிலைகள் வைக்கப்பட்டிருந்த புரைகள் வெட்டப்பட்டுள. ஆயின் அவற்றில் சிலைகள் இல்லை. புரைகளின் கீழே, அங்கு வைக்கப்பட்டிருந்த சிலைகளின் பெயர்கள் வெட்டப்பட்டுள்ளன. அவற்றுள் அழிந்தனபோக இன்று படிக்கத் தக்கனவாயுள்ள சில. அவை, (1) ஆனை உரித்த தேவர், (2) லிங்க புராணதேவர், (3) சந்திரசேகரதேவர், (4) சந்தியா நிருத்ததேவர், (5) கால்காலதேவர், (6) அர்த்தநாரீசதேவர், (7) ஆனையாண்டதேவர் (கணபதி?), (8) அறுவர் அமுதை ஆண்டார் (சுப்பிரமணியர்), (9) உலகாண்ட மூர்த்தி, (மூர்த்திநாயனார்) (10) முருகாண்டார்,

(முருகநாயனார்) (11) திருக்குறிப்புத் தொண்டர், (12) தண்டிப்பெருமாள் என்பன. கல்வெட்டெழுத்துக்கள் முதலாம் இராசராசன் காலத்தனவாகக் காண்கின்றன.[5] இச்சிற்பங்கள் அக்காலத்திற் பிராகாரத்தைச் சுற்றிவந்த மக்கட்கு மிகுந்த உணர்ச்சியை ஊட்டியிருக்குமென்று நம்பலாம்.

### மேலைக் கடம்பூர்ச் சிற்பங்கள்

மேற்சொன்ன கோயிலுக்கு ஒருகல் தொலைவில் உள்ள கடம்பூர் - கரக்கோயில் தேர்வடிவமாகச் சக்கரங்களோடு அமைக்கப்பெற்ற கோவில். இதன் கருவறையின் புறச்சுவர்களில் மிகச்சிறிய வடிவில் நாயன்மார் வரலாற்றுச் செய்திகளைக் குறிக்கும் சிற்பங்கள் காண்கின்றன. அவற்றுள் காரைக்காலம்மையார் தலைகீழாகநடந்து செல்லலைக் குறிப்பது ஒன்றாகும்.[6]

### பெரிய புராணச் சிற்பங்கள்

இராசராசபுரத்து - இராசராசேசுவரத்தில் இறைவன் கருவறையின் புறச்சுவர்களில் நாயன்மார் வரலாற்று நிகழ்ச்சிகள் சிற்பங்களாகக் காண்கின்றன. ஒவ்வொன்றன் கீழும் கல்வெட்டுக் காண்கிறது.[7] இச்சிற்பங்களும் கல்வெட்டு விளக்கங்களும் அக்காலப் பொதுமக்கள் நாயன்மார் வரலாறுகளைப் பற்றி ஓரளவேனும் அறியத் துணை புரிந்திருத்தல் வேண்டும் அல்லவா?

இராசராசபுரத்து - இராசராசேசுவரம் இரண்டாம் இராசராசனால் கட்டப்பட்டது என்பது முன் அத்தியாயத்திற் கூறப்பட்டது. அவன் இரண்டாம் குலோத்துங்கன் மகன்; தன் தந்தையின் அமைச்சரான சேக்கிழாரையும் அவர் இயற்றிய பெரிய புராணத்தையும் நன்கறிந்தவன். ஆதலின் அப்பெருமகன் தான் கட்டிய கோயிலிற் சுவாமியின் கருவறைப் புறச்சுவர்கள் மூன்றிலும் பெரிய புராணத்திற் குறிக்கப்பெற்ற நாயன்மார் வரலாற்று நிகழ்ச்சிகளைச் சிற்பங்களாகச் செய்வித்துக் கீழே விளக்கமும் வெட்டுவித்தான் போலும்!

### தஞ்சைப் பெரிய கோயில் ஓவியங்கள்

தஞ்சைப் பெரிய கோயிலின் மூல அறையின் புறச் சுவர்களில் சோழர் கால ஓவியங்கள் காண்கின்றன. அவை முற்றும் வெளிப்படுத்தப்படவில்லை. வெளிப்பட்டவை சிலவே. அவற்றுள் குறிக்கத்தக்கவை பின்வருவன : (1) சிவபிரான் மான் தோல்மீது யோகத்தில் இருக்கிறார். அவரைச் சுற்றிலும் சிவ கணங்கள்

காண்கின்றன. (2) ஒரு மண்டபத்திற் பலர் இருக்கின்றனர். அவர்கட்கு நடுவில் ஒரு கிழவரும் இளைஞரும் நிற்கின்றனர். கிழவர் முதுகு வளைந்தவர். அவரது ஒரு கையில் தாளங்குடையும் மற்றொருகையில் ஓலையும் வைத்திருக்கிறார். இளைஞர் அடக்கத்துடன் நிற்கிறார். கூட்டத்தார் முகங்களில் வியப்பும் திகைப்பும் மாறிமாறித் தோன்றுகின்றன. கூட்டத்தினர்க்கு வலப்பக்கம் ஒரு கோவில் விமானம் தெரிகிறது. மண்டபத்தில் கூடியிருந்தவர் அவசரமாக அக்கோவிலுள் நுழைகின்றனர். இந்த இரண்டாம் ஓவியம் சிவன் சுந்தரரைத் தடுத்தாட் கொண்ட வரலாற்றை விளக்குவது. (3) அடுத்த ஓவியத்தில் வெள்ளானை பூணிட்ட நான்கு கொம்புகளுடன் காண்கிறது. அதன்மீது தாடியுடைய இளைஞர் இவர்ந்து செல்லுகிறார். அவர் கைகளில் தாளம் இருக்கிறது. அவருக்கு வலப்பக்கம் விரைந்து செல்லும் குதிரை ஒன்று தெரிகிறது. அதன்மீது ஒருவர் காண்கிறார். முன்னவர் சுந்தரர்; பின்னவர் சேரமான் பெருமாள். இருவரும் கயிலை செல்லும் காட்சி இது. (4) இவ்விருவர் ஓவியங்கட்கும் மேல்புற மூலைகள் இரண்டில் கந்தர்வர் பலர் காண்கின்றனர். அவருள் சிலர் சுந்தரர் மீதும் சேரமான் மீதும் மலர்களைப் பொழிகின்றனர்; பலர் வாத்தியங்களை ஒலிக்கின்றனர். இவ்வோவியங்கள் சோழர்கால மக்கட்குச் சுந்தரர் வரலாற்றின் முக்கியமான இருபகுதிகளை விளக்கியவையாகும். (5) முதற் பராந்தகன் காலத்தில், திரிபுர சம்ஹாரத்தைத் திருப்பூந்துருத்திச் சிற்பம் ஒன்று அழகுறக் காட்டுகிறது.[8] அதற்கும் தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ள திரிபுர சம்ஹார ஓவியத்திற்கும் வேறுபாடில்லை.

சமயத் தொடர்பான இந்த ஓவியங்கள் அக் கால ஓவியம் வல்லாரது சமய அறிவையும் நுண்கலைத் திறனையும் நன்கு உணர்த்துவன. உள்ளத்தில் அழுந்திய சமய உணர்ச்சி இல்லையாயின், ஓவியர் இவ் வழகிய ஓவியங்களைத் தீட்டியிருத்தல் இயலாது; சிற்பிகள் மேற்சொன்ன சண்டீச அநுக்கிரக மூர்த்தியின் சிற்பத்தைக் கண்கவர் நிலையில் அமைத்திருக்க முடியாது. இன்றைக்கு ஏறத்தாழ 900 ஆண்டுகட்கு முற்பட்டவையான இவை இன்றும் உயிரோவியங் களாகக் காட்சி தருவதற்குக் காரணம், அக் கலைஞரிடம் காணப்பட்ட கலையுணர்வுடன் கூடிய சமயப் பற்றேயாகும்.

### கடவுளர் திருமேனிகள்

பிட்சாடணர், கங்காதரர், கல்யாணசுந்தரர், கிராதார்ச்சுனீயா, பஞ்சதேவர், லிங்கபுராண தேவர், உமாசகிதர், நடராசர், தட்சிணாமூர்த்தி, ஸ்ரீ கண்டர், ரிஷபவாகனதேவர், பைரவர் என்ற

சிவனைக் குறிக்கும் பல மூர்த்தங்கள் தஞ்சை - இராசராசேசுவரத்தில் வைக்கப்பட்டன.[9] இவையன்றிக் கணபதி, சுப்பிரமணியன், மகாவிஷ்ணு, சூரியன் திருமேனிகளும் வைக்கப்பட்டன.[10] அம்மன்களுள் காலப்பிடாரி, துர்க்கா - பரமேசுவரி, ஏமளத்து - துர்க்கையார், ஓங்கார சுந்தரி என்பவர் பூசிக்கப்பட்டனர்.[11] சப்தமாதர், சரசுவதி, மகாசாஸ்தர் முதலியவர் திருமேனிகளும் கோயில்களில் பூசிக்கப்பட்டன.[12]

### கோயில் விழாக்கள்

சோழர்காலக் கோயில்கள் பலவற்றில் சித்திரை, வைகாசி, ஆனி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி மாதங்களில் அந்தந்த மாதத்திற்குரிய விழாக்கள் சிறப்பாக நடைபெற்றன என்பது கல்வெட்டுக்களால் தெரிகிறது.[13] விழாக்களில் இறைவன் தன் பரிவாரங்களுடன் ஊர்வலமாக வருதலை முன் சொல்லப்பட்ட தில்லையுலா நன்கு சித்திரித்துள்ளது. அடியார்களின் படிமங்களும் ஊர்வலத்திற் கொண்டு செல்லப்பட்டன. உலாவின்போது திருமுறை ஓதப்பட்டது. வேதமும் ஓதப்பட்டது. கோயிலைச் சேர்ந்த நடனமாதர் நடனமாடினர்.[14] மாசிமகம் போன்ற குறிப்பிட்ட விழாக் காலங்களில் பக்கத்தில் உள்ள ஆற்றுக்கோ, கடலுக்கோ இறைவனைக் கொண்டு சென்று நீராட்டப் புதிய சாலைகளை அமைத்தனர் என்பதும் தெரிகிறது.[15]

### நாயன்மார்க்குப் பூசையும் விழாக்களும்

பல்லவர் காலத்தில் நாயன்மார்கள் வாழ்ந்து மறைந்த இடங்களில் இருந்த கோயில்களிலேனும் அவர்களுடைய உருவச் சிலைகளும் செப்புப்படிமங்களும் எழுந்தருளப் பெற்றிருத்தல் வேண்டும்; சிறப்பாகச் சுந்தரர் திருத்தொண்டத்தொகை பாட உதவியாகத் தேவாசிரிய மண்டபத்தில் காலஞ்சென்ற நாயன்மார்களின் படிமங்கள் இருந்திருத்தல் வேண்டும் என்பன முன் அத்தியாயத்தில் குறிக்கப்பட்டன. இங்ஙனம் நாயன்மார்க்கு உருவச்சிலைகள் அமைப்பதும், தனிச்சிறு கோயில்கள் அமைப்பதும் செப்புப் படிமங்கள் எடுப்பதும் அவற்றுக்குப் பூசை - விழாக்கள் செய்வதும் சோழர் காலத்தில் பெருகலாயின என்பது கல்வெட்டுக்களால் அறியப்படுகிறது. இடச்சுருக்கம் கருதிச் சில கோயிற் பெயர்களை மட்டும் இங்குக் குறித்தல் சாலும் :

| | | | |
|---|---|---|---|
| 1. | திருவதிகை | திருவாகீசுவரம் (கோயில்) | 368 of 1921 |
| 2. | குஹூர் | நம்பி ஆரூரன் (மூர்த்தம்) | 299of1917 |
| 3. | செங்காட்டங்குடி | சிறுத்தொண்ட நம்பி (மூர்த்தம்) | 59 of 1913 |
| 4. | திருப்புகலூர் | திருநாவுக்கரசு (மூர்த்தம்) | 68 of 1928 |
| 5. | தஞ்சை இராச ராசேசுவரம் | சண்டீசர் வரலாறு உணர்த்தும் நான்கு திருவுருவங்கள் | S.I.I.ii.29 |
| 6. | ” | நம்பி ஆரூரர், நங்கை பரவையார், அப்பர், சம்பந்தர் திருமேனிகள் | S.I.I.ii. 38 |
| 7. | ” | ‘தத்தா, நமரேகாண்’ என்ற மிலாடுடையார் படிமம் | S.I.I.ii. 40 |
| 8. | ” | சிறுத்தொண்டர் வரலாறு உணர்த்தும் ஐந்து திருமேனிகள் | S.I.I. ii. 43 |
| 9. | திருநாகேஸ்வரம் | மிலாடுடையார் பள்ளி (கோயில்) | A.R.E. 1912 P.62 |
| 10. | மழபாடி | அப்பர், சுந்தரர், சம்பந்தர் திருமேனிகள் | 37 of 1920 |
| 11. | திருநல்லம் | சண்டீசர் கோயில் | 658 of 1909 |
| 12. | ஆரூர் | சுந்தரர், பரவையார் திருமேனிகள் | S.I.I. 7. 485. |
| 13. | பதூர் | சம்பந்தர் சிலை | 412 of 1922 |
| 14. | கழுமலம் | சம்பந்தர் கோயில் | 375 of 1918 |

| | | | |
|---|---|---|---|
| 15. | கழுமலம் | சம்பந்தர், மங்கையர்க்கரசியார் சிலைகள் | 375 of 1918 |
| 16. | திருவாய்மூர் | அப்பர் | 137 of 1934 |
| 17. | திருக்கடவூர் | குங்குலியக் கலயர் | 25 of 1906 |
| 18. | தீர்த்தநகரி | அப்பர் | 121 of 1904 |
| 19. | உசாத்தானம் | அப்பர் கோயில் | 186 of 1908 |
| 20. | ” | சம்பந்தர்கோயில் | 216 of 1908 |
| 21. | அச்சிறுபாக்கம் | அப்பர் சிலை | 137 of 1933-'4 |
| 22. | தஞ்சைப் பெரிய கோயில் | சண்டீசர் கோயில் | S.I.I.ii. 60 |
| 23. | குடந்தை - கீழ்க்கோட்டம் | சம்பந்தர் கோயில் | 258of 1911 |
| 24. | கொள்ளம்புதூர் | திருநீலகண்ட யாழ்ப்பாணர் சிலை | 254 of1917 |
| 25. | திருக்கோடிகா | சண்டீசர் கோயில் | 49 of 1930-31 |
| | | மாணிக்க வாசகர் சிலை | 53 of 1930-31 |
| 26. | திருவலஞ்சுழி | மாணிக்க வாசகர், கண்ணப்பர் சிலைகள் | 628 of 1902 |
| 27. | மருத நல்லூர் | மாணிக்கவாசகர் சிலை | 285 of 1927 |
| 28. | வழுவூர் | மாணிக்கவாசகர் சிலை | 421 of 1912 |
| 29. | சிதம்பரம் | திருத்தொண்டத் தொகை ஈசுவரம் | 262 of 1973 |
| 30. | திருக்கச்சூர் | அப்பர் சிலை | 316 of 1909 |
| 31. | அகத்தியமலை | அப்பர் சிலை | 559 of 1906 |
| 32. | ஆச்சாபுரம் | சம்பந்தர், சொக்கியார், (அவர் மனைவி?) | 527 of 1918 |
| 33. | தலை ஞாயிறு | சம்பந்தர் சிலை | 149 of 1927 |

| | | | |
|---|---|---|---|
| 34. | திருமழ பாடி | சம்பந்தர் சிலை | 76 of 1920 |
| 35. | திருவீழி மிழலை | மாணிக்க வாசகர் சிலை | 409 of 1908 |
| 36. | திருப்பாலை வனம் | காரைக்காலம்மையார் சிலை | 329 of 1929 |
| 37. | திருவரத் துறை | சம்பந்தர் சிலை | 221 of 1929 |
| 38. | திருப்பாலைத் துறை | சம்பந்தர் கோயில் | 437 of 1912 |
| 39. | கோயில் தேவராயன் பேட்டை | அப்பர் சிலை | 278 of 1923 |
| 40. | களத்தூர் | சண்டீசர் சிலை | 334 of 1911 |
| 41. | கோளிலி | அதிபத்தர் சிலை | த.பொழில் 23.6. II |
| 42. | நீடூர் | சேரமான் பெருமாள் கோயில் | 535 of 1921 |
| 43. | ஒற்றியூர் | 63 நாயன்மார் சிலைகள் | 137 of 1912 |
| 44. | செம்பொனார் கோயில் | 63 நாயன்மார் சிலைகள் | 171 of 1925 |
| 45. | ஆடுதுறை | 63 நாயன்மார் சிலைகள் | 35 of 1913; A.R.E. 1913, P.115 |

## கோயில்களில் அரசர்கள்

அரசனும் குடிமக்களும் சந்திக்கக் கூடிய ஒரே இடம் அக்காலத்திற் கோயிலாகவே இருந்தது. சோழ அரசர்கள் சிறந்த கோயில் விழாக்களை நேரிற் கண்டு களித்தனர். விக்ரம சோழன் திருவாரூரில் தேவாசிரிய மண்டபத்தில் இருந்துகொண்டு சித்திரைத் திருநாளைக் கவனித்தான்.[16] இரண்டாம் இராசராசன் திருவொற்றியூரில் நடை பெற்ற பங்குனி உத்திர விழாவிற் கலந்து கொண்டான்.[17] மூன்றாம் குலோத்துங்கன் திருவொற்றியூர்க் கோயிலில் இருந்த இராசராசனின் (மண்டபத்தில்) இருந்து கொண்டு ஆனி விழாவைக் கவனித்தான்.[18] அதே திருவொற்றியூரில் நடந்த ஆவணித் திருநாளில் மூன்றாம் இராசராசன் கலந்துகொண்டான்.[19] இங்ஙனம் கோயில் விழாக்களில் அரசர்கள் பங்கு கொண்டமை பொது மக்கள் கொண்டிருந்த சமயப்பற்றுக்கு ஊக்கம் அளிப்பதாக இருந்தது.

தமிழகத்துக் கோயில்களைக் காணவும் விழாக்களைத் தரிசிக்கவும் காஷ்மீரம் முதலிய வட நாடுகளிலிருந்தும் யாத்ரிகர் வந்தனர் என்பதைக் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன.[20]

## ஆடலும் பாடலும்

குறிப்பிட்ட நாட்களிலும் விழாக் காலங்களிலும் ஊர்வலத்திலும் ஆடல்பாடல்கள் நிகழ்ந்தன. இராசராசன் தான் கட்டிய பெரிய கோயிலில், தமிழ் நாடு முழுவதிலும் இருந்த பல கோயில்களிலிருந்து ஆடல் - பாடல்களில் வல்ல நானூறு பேரை ஆடல் பாடல்கள் நிகழ்த்த வரவழைத்தான் எனின், அவன் காலத்திலேயே கோயில்களில் ஆடலும் பாடலும் உயரிய நிலையில் இருந்தன என்பதை நன்கு அறியலாம்.[21] சோழர் காலத்தில் பெரும்பாலான கோயில்களில் ஆடலும் பாடலும் வல்ல பெண்கள் இருந்தனர் என்பதைப் பல கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன.[22] கோயில்களில் தமிழ்க்கூத்து, ஆரியக்கூத்து, சாக்கைக் கூத்து, சாந்திக் கூத்து என்பன ஆடப்பட்டன.[23] நடனக்கலை ஆசிரியர் கூத்தரசன், நிருத்தப்பேரரையன், நட்டுவ ஆசான் எனப் பலவாறு பெயர் பெற்றனர்.[24] அவர்கள் பெற்றிருந்த காணி கூத்தக்காணி, நட்டுவக் காணி, எனப்பட்டன.[25] திருவிடைமருதூரில் தளியிலார்க்கும் தேவரடியார்க்கும் பாட்டுக் கற்பிக்கப் பாணன் இருந்தான். அவன் பெற்றிருந்த காணி 'பாணப் பேறு' எனப்பட்டது.[26] முதலாம் இராசராசன் திருநீலகண்ட யாழ்ப்பாணரது மரபில் வந்த பாணரைக் கொண்டு திருப்பதிகங்கட்குப் பண் வகுக்கச் செய்தான்[27] என்பதையும் காண, சோழர் காலத்தில் பாணர் இருந்து தமிழ் இசையை வளர்த்து வந்தனர் என்பது தெரிகிறது. திருவொற்றியூர்க் கோயிலில் பதியிலார் சொக்கம், சந்திக் குணிப்பம் என்பவற்றை ஆடிக்காட்டும் பொழுது ரிஷபத்தளியிலார் வாய்ப்பாட்டுப் பாடினர். பின்னவர் வரிக்கோலமும் அகமார்க்கமும் ஆடிக் காட்டினர். பதியிலார் சில குறிப்பிட்ட திருப்பதியம், திருவெம்பாவைப் பாக்களை நடிப்பின் வாயிலாக வெளிப்படுத்தியதோடு பல பாக்களையும் பாடினர். இவர்கள் நடித்தவற்றுள் சந்திக்குணிப்பம், இடவு, மலைவு, அகமார்க்கம், செந்தூக்கு என்பன குறிப்பிடத்தக்கவை. இவை இன்னவை என்பது இப்பொழுது விளங்கவில்லை.[28] இவ்விவரங்களால் திருமுறைப் பாக்கள் இசையுடனும் நடனத்துடனும் பயிலப்பட்டன என்பதை அறியலாம். ஆடலிலும் பாடலிலும் நன்முறையிற் பயிற்சிபெற்ற இந்த இசைவாணிகள் சமயத் தொடர்பான பாக்களைப் பாடி, அவற்றை நடனத்திலும் அமைத்துக் காட்டினமை மக்கள் உள்ளங்களைக் கொள்ளை கொண்டிருக்கலாம். மேலும் மக்கள் உள்ளங்களில்

சமயப்பற்றை இவை நன்றாக ஊட்டியிருத்தல் வேண்டும். இந் நடன மங்கையர் சிறந்த அழகிகள்; கண்ணைக் கவரத்தக்க ஆடையணிகளையும் கூந்தல் ஒப்பனையையும் பெற்றவர்கள். இவர்களைப் பற்றி ஓரளவு அறியத் தஞ்சைப் பெரியகோயில் ஓவியங்கள் துணை புரியலாம். சோழர் காலத்தில் இருந்த அரிய நடனவகைகள் எல்லாம் தில்லைக் கோயிற் கிழக்குக் கோபுரத்திற் சிறக்கக் காணலாம்.[29] அவை அக்கால நடனக் கலையின் உயர்வை நன்கு உணர்த்தவல்லவை.

### *நாடகம்*

நாடகத்தையே ஒரு பகுதியாகக் கொண்டு தமிழ் மொழி வழங்கும் நாட்டில் நாடகங்கள் நடந்தன எனக் கூறல் மிகை. சோழர் காலத்தில் ஆண்டு தோறும் வைகாசி விழாவில் தஞ்சைப் பெரிய கோயிலில் இராசராசேசுர நாடகம் நடித்துக் காட்டப்பட்டது. நடித்த விசயராசேந்திர - ஆசாரியனுக்கு ஆண்டுதோறும் 120 கலம் நெல் தரப்பட்டது. இராசராசன் கட்டிய பெரிய கோயில் பற்றிய நாடகமாக அஃது இருக்கலாம்.[30] விக்கிரமாதித்த ஆசாரியன் என்ற இராசராச நாடகப் பெரியன் என்பவன் பந்தணைநல்லூரில் நட்டுவப்பங்கு, மெய்மட்டிப்பங்கு (நாடகக் காணி?) இவற்றைப் பெற்றவனாய் இருந்தான் என்று அவ்வூர்க் கல்வெட்டுக் கூறுவதால், இராசராச நாடகம் (முதலாம் இராசராசனைப் பற்றியது) என ஒன்று இருந்தது; அந்நாடகம் நடிக்கப்பட்டது என்பன அறியலாம். இந்நூல் அவ்வரசனது வரலாற்றை நாடக முறையில் எழுதப் பெற்றதாகும்.[31] முதற் குலோத்துங்கன் காலத்தில் பூம்புலியூர் நாடகம் என்ற ஒன்று செய்யப்பட்டது; செய்தவனுக்குப் பரிசு தரப்பட்டது.[32] அது திருப்பாதிரிப்புலியூரைப் பற்றியது. அம்மன் கன்னிகையாக இருந்து சிவனை வழிபட்டமை, அப்பர் சமணராய் இருந்தமை, பின் சைவரானமை, சமணருடைய கொடுமைகட்கு ஆளானமை, பிறகு கடலில் மிதந்து கரை சேர்ந்து, அவ்வூர்க் கோயிலில் பதிகம் பாடினமை, மகேந்திரன் அங்கிருந்த சமணப் பள்ளியை இடித்துக் குணபர ஈசுவரம் கட்டினமை போன்றவற்றைக் காட்சிகளாகக் கொண்ட நூலாக இருக்கலாம். அது நடிக்கப் பெற்றமைக்குச் சான்று இல்லையாயினும், சமயப் பற்று மிக்கிருந்த அக்காலத்தில் அது நடிக்கப்பட்டதெனக் கருதுதல் தவறாகாது. இங்ஙனம் சைவ அரசர்களையும் நாயன்மார்களையும் பற்றிய நாடகங்கள் சிலவேனும் அக்காலத்தில் நடிக்கப் பட்டன எனக் கொள்ளலாம்.

## தேவரடியார்

கோயில்களில் இருந்து தொண்டாற்றிய மாதருள் தேவரடியார் ஒருவகையினர். இவர்கள் கோயிலில் திருவலகிடல், திருமெழுகிடல், படையல் அரிசியைத் தூய்மைப் படுத்தல், திருப்பதியம் பாடல் முதலிய பணிகளைச் செய்து வந்தனர். மேலும் இவர்கள் திருநீற்றுத் தட்டும், புஷ்பத்தளிகை என்பவற்றையும் விழாக் காலங்களில் எடுத்துச்செல்வர்; அம்மனை அலங்காரப்படுத்தி மண்டபத்தில் வைக்கும் பொழுது கவரி வீசுவர்.[33] சுவாமிக்கு அல்லது அம்மனுக்குக் கவரி வீச இருந்த பெண்கள் "கவரிப் பிணா" எனப்பட்டனர்.[34] முதற் குலோத்துங்கனது 49-ஆம் ஆட்சியாண்டில் பாணபுரத்தில் இருந்த அச்சப்பிடாரன் கணபதி நம்பி என்ற படைத் தலைவன் திருவல்லம் சிவபெருமானுக்குத் தன் குடும்பப் பெண்கள் சிலரைத் தேவரடியாராக விட்டான். அவர்கள் சூலப்பொறி பொறிக்கப்பெற்றுக் கோயில் பணியிற் சேர்க்கப்பட்டனர். தேவரடியாரது சிறப்பு இதிலிருந்து நன்கு உணரப்படுமன்றோ?[35] தேவரடியாருள் சிலர் நடனமாடவும் அறிந்திருந்தனர்.[36]

## தளியிலார்

இவர்களை இராசராசன் தளிச்சேரிப் பெண்டுகள் என்று குறிப்பிட்டான். இவர்கள் கோயிலுக்கு வெளியே குடும்பமாக வாழ்ந்தவர்; இசை - நடனங்களில் வல்லவர். இவர்கள் சைவ - வைணவக் கோயில்கள் என்ற வேறுபாடின்றி வேலை செய்தவர்கள்.[37] இவருள் சிவன் கோயிற்பணி செய்தவர் 'ரிஷபத்தளியிலார்'[38] என்றும் (இடபப்பொறி பொறித்தவர்கள் அல்லது சிவன் கோயிற் பெண்டுகள் எனப் பொருள் படலாம்), வைணவக் கோயில்களில் இருந்தவர் 'ஸ்ரீ வைஷ்ணவ மாணிக்கம்'[39] எனவும் பெயர் பெற்றனர் என்று கருதக் கல்வெட்டுக்கள் இடந்தருகின்றன. இவர்கள் இராசராசன் காலத்தில் ஆடல் - பாடல்களில் முனைந்திருந்தனர்; பின்னர்த் திருப்பதிகங்கள் பாடவும் தொடங்கினர்; சோழர் ஆட்சியின் இறுதியில் தேவரடியாரைப் போலக் கவரி வீசல் முதலிய பணிகளையும் மேற்கொண்டனர்.[40]

## கோயில்களில் திருமுறைகள்

இராசராசன் திருமுறைகளைச் செம்மைப்படுத்தற்கு முன்பே திருவல்லம், எறும்பியூர், பழூர், ஆவடுதுறை, தவத்துறை ஆத்தூர், குமாரவயலூர், அந்துவநல்லூர் முதலிய சில ஊர்க் கோயில்களில் திருப்பதிகங்கள் ஓதப்பட்டன.[41] இராசராசன் கட்டிய தஞ்சைப் பெரிய

கோயிலில் திருப்பதிகம் ஓத 48 பேர் பல கோயில்களிலிருந்தும் வர வழைக்கப்பட்டனர் என்பதால், அவரவர் வந்த கோயிலிலும் முன்னரே திருப்பதிகம் ஓதப்பட்டு வந்ததென்பது புலனாகும். அவை திருவிடைமருதூர், ஆனைக்கா, வெண்காடு, தில்லை முதலியன.[42] பிற்பட்ட சோழர் காலத்தில் குஹுர், பிரம்மதேசம், முதுகுன்றம், வீழிமிழலை, நல்லம், கடைமுடி, மாறன்பாடி, ஒற்றியூர், தென்னேரி, உடையலூர், துக்கச்சி, சோற்றுத்துறை, எல்வானாசூர், ஆமாத்தூர், தில்லையாடி, புறவார் பனங்காட்டூர், கழுமலம், இடைவாய், வழுவூர், புகலூர், எண்ணாயிரம், தில்லையாளிநல்லூர் முதலிய ஊர்க் கோயில்களில் திருப்பதியம், திருச்சாழல் முதலியன ஓதப்பட்டன.[43]

திருப்பதிகங்களைப் பிராமணர்,[44] தேவரடியார்,[45] பிடாரர் (ஓதுவார்)[46] ஓதினர்; உடுக்கை, மத்தளம், தாளம் இவற்றுடன் ஓதினர்; சில கோயில்களில் காலையிலும், சிலவற்றில் காலை மாலைகளிலும், வேறு சிலவற்றில் மூன்று வேளையும், விழா நாட்களிலும் ஓதினர். மார்கழி மாதத்தில் திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை என்பன கோயில்களில் பாடப்பட்டன. சுருங்கக்கூறின், நாயன்மார் பாடிய அருட்பாடல்கள் அவர்களுக்குப் பிற்பட்ட சோழர் காலத்தில் பெருஞ்சிறப்புற்றன.

### *இச்சிறப்புக்குக் காரணம் என்ன?*

**இராசராசன் நம்பியைக்கொண்டு** திருமுறைகளை வகுத்தபிறகே நாட்டில் அவற்றின் செல்வாக்கு மிகுதியாயிற்று. அவனோ தான் கட்டிய கோயிலில் 48 ஓதுவார்களை நியமித்தான். பின்னர்ப் பல கோயில்களிலும் திருப்பதிகங்கள் ஓதுவார் நியமனம் பெற்றனர். அவர்கள் பெற்ற காணி 'திருப்பதியக்காணி' எனப்பட்டது.[47] முதலாம் இராசேந்திரன் காலத்தில் தேவார ஓதுவார்க்குத் தலைவனாகவோ, அவர்களை மேற்பார்க்கவோ 'தேவார நாயகம்' என்று ஓர் அதிகாரி இருந்தான்.[48] அதே அரசன் ஆட்சியில் தில்லையில் மாசித்திங்கள் விழாவில் திருத்தொண்டத்தொகை பாடப்பட்டது.[49] முன் சொன்ன நரலோக வீரன் மூவர் திருமுறைகளையும் செப்பேடுகளில் எழுதிவைத்தான்; சம்பந்தர் தேவாரம் ஓதத் தனிமண்டபம் கட்டுவித்தான். திருமுறைகளை அடிப்படையாகக் கொண்ட பெரிய புராணம் செய்யப்பட்ட பிறகு, நாயன்மார் வரலாறுகள் நாட்டில் நன்கு பரவியதால், திருமுறைகளைப் போற்றுவார் தொகை மிகுதிப்பட்டது. நாயன்மார் சிற்பங்களும் சிலைகளும் கோயில்களில் இடம் பெற்றன; பெறவே, திருமுறைகள் பல கோயில்களிலும் படியெடுத்து வைக்கப்பட்டன; கோயிலில் பாதுகாப்பான இடங்களில் (குகைகளில்)

வைத்துப் போற்றப்பட்டன. அக்குகைகளுள் குறுக்கை - திருஞான சம்பந்தன் குகை, தோணிபுரத்து - தேவாரச் செல்வன் குகை என்பன குறிக்கத்தக்கன.[50] பின் சொன்ன குகையின் தலைவர் முதலியார் - திருவையாறுடையார், திருப்பதிகம் ஓதுவார் பலரைத் தயாரித்தவர். அவர் மாணவர்களே இடைவாய் முதலிய இடங்களில் ஓதுவாராக இருந்தனர்.[51] பலகோயில்களில் அவற்றைப் பாதுகாத்தல், அவற்றுக்குப் பூசையிடல், அழிந்தவற்றைப் புதுப்பித்தல், பாடுதல், பிறர்க்குக் கற்பித்தல் இவற்றைச் செய்ய அறிஞர் இருந்தனர். அவர்கள் 'தமிழ் விரகர்' எனப்பட்டனர். அவர்கள் திருமுறைகள் ஓதிய மண்டபம் 'திருக்கைக்கோட்டி' எனப்பட்டது. அம்மண்டபம் கழுமலம், உசாத்தானம், வீழிமிழலை, காராயில், இடைவாய், திருப்பாலைவனம் முதலிய ஊர்க்கோயில்களில் இருந்தது.[52]

### *கோயில்களில் படித்து விளக்கப்பட்ட சமயநூல்கள்*

மக்களுக்குச் சைவப்பற்றை உண்டாக்கவும் ஒழுக்க வாழ்க்கையை வளர்க்கவும் கோயில்களில் பல நூல்கள் படித்து விளக்கப்பட்டன. அவற்றுள் குறிக்கத்தக்கன பின்வருவன :

| | நூலின் பெயர் | படிக்கப்பட்ட இடம் | சான்று |
|---|---|---|---|
| 1. | பாரதம் | செந்தலை | 63 of 1897 |
| 2. | பிராபகரம்[53] | திருக்கோட்டியூர் | 333 of 1923 |
| 3. | ,, | குடந்தைக்காரோணம் | 233 of 1911 |
| 4. | இராசராச விசயம் | திருப்பூந்துருத்தி | 120 of 1931 |
| 5. | சிவதருமம்[54] | திருநாகேசுவரம் | 214 of 1911 |
| 6. | ,, | திருவாலீசுவரம் | 327 of 1916 |
| 7. | ,, | புறவார் பனங்காட்டூர் | 321 of 1917 |
| 8. | ,, | ஒற்றியூர் | ARE. 1913, P. 86 |
| 9. | பாரதம், இராமாயணம், புராணங்கள் | புள்ளலூர் | 48 of 1923 |
| 10. | ,, | திருத்தங்கால் | 546 of 1922 |
| 11. | திருஞானம்[55] | வாலீசுவரம் | 359 of 1916 |
| 12. | சோம சித்தாந்தம்[56] | ஒற்றியூர் | 403 of 1896 |

### வேறு சில நூல்கள்

இவையன்றி முதலாம் குலோத்துங்க சோழன் சரிதை, கன்னிவன புராணம், வல்லை அந்தாதி[57] என்பன கல்வெட்டுக்களிற் கூறப்பட்ட நூல்களுட் சில. சிறந்த சிவபக்தனான முதல் இராசராசன் வரலாறு திருப்பூந்துருத்திக் கோயிலிற் படிக்கப்பட்டாற் போலவே திருநீற்றுச் சோழனான முதற்குலோத்துங்கன் வீரத்தையும், சிவப்பற்றையும் விளக்கும் வரலாறு கோயில்களிற் படிக்கப்பட்ட தெனக் கோடலில் தவறில்லை. அம்மன் கன்னிகையாக இருந்து பாதிரிவனத்தில் சிவனை வழிபட்ட வரலாறும் அப்பர் வரலாறும் கூறுவதாக இருக்கக்கூடிய கன்னிவனபுராணம் அவ்வூர்க் கோயிலிலும் வேறு சில கோயில்களிலும் படிக்கப்பட்டிருக்கலாம். திருவல்லத்து ஈசனைப் பற்றிய வல்லை அந்தாதி அவ்வூர்க் கோயிலிலேனும் பாடப் பட்டிருக்கலாம். இந்நூலாசியர்கட்கு நிலம் வழங்கப் பட்டமையை நோக்க, அவர்தம் நூல்கள் பாராட்டப்பட்டன என்பது தெளிவு.

### ஆளுடைய நம்பி ஸ்ரீ புராணம்

இரண்டாம் இராசாதிராசன் (1166 - 1182) 9ஆம் ஆட்சியாண்டில் பங்குனி உத்தரத்து ஆறாந்திருநாளில் படம்பக்க நாயகதேவர் திருமகிழின் கீழ்த் திருவோலக்கம் செய்து எழுந்தருளியிருந்தபோது ஆளுடைய நம்பி ஸ்ரீ புராணம் படிக்கப்பட்டது. இதனை இரண்டாம் இராசராசனும் கேட்டான்,[58] என்று ஒற்றியூர்க் கல்வெட்டுக் கூறுகிறது. இங்குக் குறித்த புராணம் யாது?

சேக்கிழார் (கி.பி. 1133 - 1150) தாம் பாடிய நூலை 'மாக்கதை'[59] என்கிறார். இதனால், அது 'கொங்குவேள்மாக்கதை' போன்றதொரு, அஃதாவது, ஒருவரைப்பற்றிய காவியம் என்பது புலப்படும். சேக்கிழார் தமது நூலுக்குத் 'திருத்தொண்டர் புராணம்'[60] என்று பெயர் குறித்தனர். 'திருத்தொண்டர்' என்ற பெயர் சுந்தரரையே குறிப்பதாகும் என்பது சேக்கிழார் கருத்து என்பதை, "சைவ முதல் திருத்தொண்டர் தம்பிரான் தோழனார் நம்பி"[61] என்பதனால் அறியலாம். இது பற்றியே சேக்கிழார் தமது நூலைப் பெருங்காவிய இலக்கணம் பொருந்த நாட்டுச் சிறப்பு, நகரச்சிறப்பு முதலியவை அமைத்தும், சுந்தரரர் வரலாற்றை ஒரே தொடர்பாகக் கூறாது நூலின் முதல் - இடை - கடை என்னும் முப்பகுதிகளில் வைத்தும், சுந்தரராற் குறிக்கப்பட்ட நாயன்மார் வரலாறுகளை இடையிடையே வைத்தும் முடித்துள்ளார். இதனால் சுந்தரரர் புராணமே 'திருத் தொண்டர் புராணம்' என்பது அறியத்தகும்.

திருநாவுக்கரசு 'ஆளுடைய அரசு' என்றும், திருஞானசம்பந்தர் 'ஆளுடைய பிள்ளையார்' என்றும் வழங்கப்பெற்றவாறே, சுந்தரர் 'ஆளுடைய நம்பி' எனப்பட்டார். 'ஆளுடை நம்பி - திருத்தொண்டர் (சுந்தரரர்): ஸ்ரீ-திரு. ஆளுடை நம்பி ஸ்ரீ புராணம் என்பதைத் 'திருத் தொண்டர் திருப்புராணம்' என்றும் கூறலாம். இவ்வழக்குத் 'திருமுருகன் திருமடம்'[62] என்றாற் போன்றது. எனவே, சேக்கிழார் தந்த திருத்தொண்டர் புராணம் என்ற நூலே ஆளுடை நம்பி ஸ்ரீ புராணம் என்று பின்னர் வழக்குப் பெற்றதென்னலாம். மேற்கூறிய கல்வெட்டின் காலம் சேக்கிழார்க்கு ஏறத்தாழ 20 அல்லது 25 ஆண்டுகள் பிற்பட்டதே ஆதலாலும், சுந்தரரைப்பற்றிய வேறு தனி நூல் ஒன்று அக்காலத்தில் தமிழிலோ - வடமொழியிலோ வழங்கியதாகச் சான்று இன்மை யாலும்,[63] ஒற்றியூர்க் கோயிலிற் படிக்கப்பெற்றது, சேக்கிழார் இயற்றிய பெரிய புராணமே எனக்கோடல் பொருந்துவதாகும்.

## குறிப்பு விளக்கம்

1. A.R.E. 1908 P.69.
2. நான் இக்கோயிலை 25-4 '43இல் பார்வையிட்டேன்.
3. சண்டீசர் புராணம், 56, 57.
4. நான் இக் கோயிலை 27.4.'43இல் பார்வையிட்டேன்
5. தமிழ்ப் பொழில், 16, பக். 234.
6. நான் இக் கோயிலை 27.4.'43இல் பார்வையிட்டேன்.
7. A.R.E. 1920 Plates I முதல் VI; நான் இக் கோயிலை 31.3.' 49இல் பார்வையிட்டேன்.
8. 92 of 1931; நான் இவ்விரண்டு கோயில்களையும் பார்வையிட்டேன்.
9. S.I.I.II. 25,30, 32, 34, 39, 43, 48, 50.
10. 606 of 1902, 177 of 1907, 118, 1914.
11. 207 of 1919.
12. 705 of 1909, 131 of 1892, 335 of 1917.
13. 28 of 1918, 187 of 1925, 285 of 1912, 211 of 1912; 250 of 1926, 291 of 1904, 98 of 1920, 248 of 1907, 268 of 1921, 2 of 1914.
14. 370 of 1909.
15. S.I.I.4. 225, 228 of 1925, 45 of 1914.
16. 164 of 1894.
17. 371 of 1911.
18. 368 of 1911.
19. 211 of 1912.
20. A.R.E. 1936-' 37, P.70.
21. S.I.I.2.66.
22. 116 of 1926, 617 of 1920, 272 of 1923, 141 of 1900, 187 of 1908 164 of 1894, 152 of 1925, 321 of 1917, 29 of 1918, 92 of 1916, 107, 179 of 1929, 1930, 211 of 1912, 370 of 1909, 397 of 1922, 14 of 1919, 211 of 1912, 528 of 1902, 330 of 1929, 504 of 1912, 338 of 1911.
23. 120 of 1925, 250 of 1926, 154 of 1895, 254 of 1914; A.R.E. 1924-25, P.82.
24. 23 of 1895, 255 of 1925, 206 of 1931.
25. 206 of 1931, S.I.I.2 - 66.
26. 141 of 1895, S,I.I. 5.705.
27. திருமுறை கண்ட புராணம், செ. 31.34,
28. A.R.E. 1913, P.P. 118, 127.
29. A.R.E. 1914, P.P. 74-83, Plates I. முதல் IV.
30. S.I.I.2.67.
31. த. பொழில், 23, பக். 152 - 3.
32. 129 of 1902.
33. 128, 212 of 1912.

34. 117 of 1910; 149 of 1936 "பெண்ணும் பிணாவும் மக்கட்குரிய" - தொல். சூ. 616.
35. A.R.E. 1922, P.102.
36. 212. of 1912.
37. S.I.I. 2-66.
38. 212 of 1912.
39. 183 of 1923.
40. S.I.I.2.66; 141 of 1895, 212 of 1912; A.R.E- 1913, P.P. 104, 118, 127 - 8.
41. 129 of 1914, 349 of 1918, 139 of 1925, 99 of 1927, 373 of 1903; 149 of 1937, S.I.I. 3.139.
42. S.I.I. 2.65.
43. 275 of 1917, 199 of 1915, 40 of 1918, 423 of 1908, 624 of 1909, 96 of 1925, 97 of 1932, 128 of 1912, 224 of 1922, 306 of 1927, 6 of 1918, 194 of 1931, 165 of 1906; S.I.I. 8. 749; 236 of 1925, 321 of 1917, 10 of 1918; 421 of 1912, 93 of 1928, 343 of 1917, 236 of 1925.
44. 99 of 1929.
45. 128 of 1912.
46. S.I.I. 2.65.
47. 236 of 1925.
48. 97 of 1932.
49. S.I.I. 4.223.
50. 233 of 1917, 10 of 1918.
51. 10 of 1918.
52. 381 of 1918, 203 of 1908, 414, 454 of 1909, 10 of 1918, 350 of 1929.
53. பூர்வ மீமாம்சை சூத்திரங்கட்குரிய உரைகளில் இது சிறப்புடைய ஒன்று. இவ்வுரையால் 'பிரபாகர மதம்' என்ற புதிய தத்துவம் உண்டாயிற்று. இதனைக் கண்டறிந்தவர் பிரபாகர். இவர் குமரில பட்டர்க்கு மாணவர். எனவே, இவர் காலம் ஏறத்தாழக் கி.பி. 8ஆம் நூற்றாண்டின் தொடக்கம் என்னலாம் - A.R.E. 1912, P. 58.
54. சிவதருமம் - 18 உட்புராணங்களில் ஒன்று.
55. கோளகி (கோள்கிகிரி) மடத்துச் சைவாசாரியர் ஒருவர் செய்த நூலாகலாம்.
56. காபாலிக சமயத்தைப்பற்றிக் கூறும் நூல். A.R.E. 1912, P.61.
57. 198 of 1919, 128 of 1902, 233 of 1921.
58. 403 of 1906; S.I.I.5, 1358.
59. பெ. பு. பாயிரம், 3.
60. மேலது, செ, 10.
61. தடுத்தாட்கொண்ட புராணம், செ. 171.
62. 88 of 1928.
63. 'உடையநம்பி விலாசம்' என்று சுந்தரரைப் பற்றிய தனி நூல் ஒன்று (அச்சாகவில்லை) தெலுங்கில் உண்டு - பசவபுராணம், முகவுரை.

# 9. மடங்களும் குகைகளும்

**மடங்கள் :** பல்லவர் காலத்தில் மடங்கள் சில இருந்து சமயக் கல்வியையும் ஒழுக்கக் கல்வியையும் அளித்தன - அடியார் தங்குமிடங்களாக உதவின - அறச்சாலைகளாகவும் இருந்தன என்பது முன்பே கூறப்பட்டது. சோழர் காலத்தில் கோயில்கள் - விழாக்கள் முதலியன வளர்ச்சி பெற்றாற்போலவே, மடங்களும் மிகப்பலவாகப் பெருகின. அவற்றுட் சில இறைவன் பெயர் கொண்டவை; சில சோழ அரசர் - சிற்றரசர் பெயர்கள் கொண்டவை; பல நாயன்மார் பெயர்கள் கொண்டவை; வேறு சில பலதிறப்பட்ட பெயர்களைக் கொண்டவை. இடச் சுருக்கம் கருதி, ஈண்டு ஒவ்வொரு வகையிலும் சிலவற்றின் பெயர்கள் தரப்படுகின்றன.

### *1. இறைவன் பெயர்கொண்ட மடங்கள் :*

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆவடுதுறை | திருநீல்விடங்கன் - மடம் | 144 of 1925 |
| 2. | ” | சிவலோக நாயகன் - மடம் | 148 of 1925 |
| 3. | ” | சர்வதேவன் - மடம் | 103 of 1925 |
| 4. | ” | சங்கரதேவன் - அறச்சாலை | 159 of 1925 |
| 5. | ” | பஞ்சநதிவாணன் - மடம் | 67 of 1926 |
| 6. | திருவீழிமிழலை | அழகிய திருச்சிற்றம்பல முடையான் - மடம் | 392 of 1909 |
| 7. | சீகாழி | திருமுறைத் தேவாரச் செல்வன் - மடம் | 158 of 1911 |
| 8. | உசாத் தானம் | கூத்தாடு நாயனார் - மடம் | 218 of 1908 |

### *2. அரசர் - சிற்றரசர் பெயர்கொண்ட மடங்கள் :*

| | | | |
|---|---|---|---|
| 1. | திருநனிபள்ளி | அருமொழிதேவன் - மடம் | 186 of 1925 |
| 2. | ஒற்றியூர் | இராசேந்திர சோழன் - மடம் | 132 of 1912 |
| 3. | ஒற்றியூர் | குலோத்துங்க சோழன் - மடம் | 200 of 1912 |

| | | | |
|---|---|---|---|
| 4. | உடையார்குடி | இராசேந்திர சோழன் - மடம் | 622 of 1921 |
| 5. | உசாத்தானம் | வாணராயன் - மடம் | 211 of 1908 |
| 6. | வாலீசுவரம் | வீரபாண்டியன் - மடம் | 357 of 1916 |

### 3. நாயன்மார் பெயர்கொண்ட மடங்கள் :

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமங்கலம் | பரஞ்சோதி - மடம் | 246 of 1930 |
| 2. | கற்குடி | திருவாகீசம் - இராஜேந்திர சோழன் - மடம் | 467 of 1908 |
| 3. | மதுராந்தகம் | தில்லைவாழ் அந்தணர் - மடம் | 404 of 1922 |
| 4. | திருப்புகலூர் | நம்பி திருமுருகன் - திருமடம் | 88 of 1928 |
| 5. | கழுக்குன்றம் | நமிநந்தியடிகள் மடம் | 179 of 1894 |
| 6. | திருவதிகை | வாகீச - மடம் | 49 of 1903 |
| 7. | ” | திருநாவுக்கரச தேவர் - மடம் | 382 of 1921 |
| 8. | திரிபுவனை | ” ” | 203 of 1909 |
| 9. | திருமணஞ்சேரி | பரசமயகோளரி - மடம் | 534 of 1918 |
| 10. | பழையாறை | திருஞான சம்பந்தன் - திருமடம் | 392 of 1908 |
| 11. | திருவீழிமிழலை | திருநாவுக்கரசர் - மடம் | 402 of 1909 |
| 12. | திருப்பாலைத்துறை | திருநாவுக்கரச தேவன் - மடம் | 583 of 1909 |
| 13. | விசயமங்கை | திருத்தொண்டத் தொகையான் - திருமடம் | 192 of 1929 |
| 14. | திருப்புத்தூர் (பா.நாடு) | திருத்தொண்டத் தொகை யான் - திருமடம் | 104, 116 of 1908 |
| 15. | ” | திருஞானசம்பந்தன் - திருமடம் | 129 of 1908 |

| | | | |
|---|---|---|---|
| 16. | அறையணி நல்லூர் | திருஞானசம்பந்தன் - திருமடம் | 174 of 1935 |
| 17. | செங்காட்டங்குடி | சிறுத்தொண்டன் - திருமடம் | 76 of 1922 |
| 18. | வலிவலம் | திருமூலதேவர் - திருமடம் | 116 of 1911 |
| 19. | காஞ்சி | சுந்தரப் பெருமாள் - மடம் | S.I.I. 1.87. |
| 20. | நொடியூர் | திருஞானசம்பந்தன் - திருமடம் | 199 of 1932-33 |

### *4. பல பெயர்களைக் கொண்ட மடங்கள் :*

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆவடுதுறை | திருவீதி - மடம் | 147 of 1925 |
| 2. | ,, | பிரமாண வாசகன் - மடம் | 155 of 1925 |
| 3. | ,, | நாற்பத்தெண்ணாயிரவன் - மடம்[1] | 150 of 1925 |
| 4. | ,, | பெருந்திருவாட்டி - அறச்சாலை | 71 of 1926 |
| 5. | ,, | முந்நூற்று - இருபத்து நால்வன் | 158 of 1925 |
| 6.[1a] | திராக்ஷாராமம் | பன்மாகேசுவர - மடம் | 344 of 1893 |
| 7. | அண்ணாமலை | தன்மவாணிகர் - மடம் | 547 of 1902 |
| 8. | தேவராயன் பேட்டை | மநுவிளங்கம் பிள்ளை பெற்றாள் - மடம் | 278 of1923 |
| 9. | சிதம்பரம் | அறப்பெருஞ் செல்விச் சாலை | 266 of 1913 |
| 10. | சீகாழி | திருமுறைத் தேவாரச் செல்வன் - மடம் | 158 of 1911 |
| 11. | வெண்ணெய் நல்லூர் | திருவேதம் - அழகிய திருமடம் | 35 of 1922 |
| 12. | திருவாட் போக்கி | எழுநூற்றுவன் - திருமடம் | 179 of 1914 |

| | | | |
|---|---|---|---|
| 13. | திருக்கோடிகா | ஐந்நூற்றெண்மன்-திருமடம் | 60 of 1930 |
| 14. | திருவாரூர் | நாலாயிரவன் - திருமடம் | 477 of 1912 |
| 15. | சதுர்வேதி மங்கலம் | சோழன்வாசல் திறந்தான் - மடம் | 312of1927-'28 |
| 16. | திருப்புறம்பியம் | மடம் (தலைவர் - ஆண்டார் கடியாபரணர்) | 353 of 1917 |
| 17. | திருவாலங்காடு | வண்ணார - மாதேவ - ஆண்டான் - மடம் | 93 of 1926 |
| 18. | திருப்புகலூர் | மடம் - (மருத்துவ சாலையுடன்) | 97 of 1928 |
| 19. | கோட்டூர் | மடம் (தலைவர் - திருமாளி கைப் பிச்சன்) | 446 of 1912 |
| 20. | திருவையாறு | மடம்(தலைவர் - சதாசிவ - பட்டாரர்) | 121 of 1925 |
| 21. | திருப்பாலைவனம் | அன்பர்க்கடியார் - மடம் | 350of1928-'29 |

இவையன்றிச் சாய்க்காடு, திருவல்லம், திருமுதுகுன்றம், கோயிற்காடு, கோமல், திருப்பாம்புரம், அச்சுதமங்கம், திருவிடைக்கழி முதலிய பல கோயில்களைச் சார்ந்து மடங்கள் இருந்தன.[1b]

**கோமடம் :** லகுலீச பாசுபதர் எனப்படும் **காளாமுகர்** குஜரத் நாட்டில் காரோகணத்தில் தங்கள் தலைமை - ஆசாரிய பீடத்தை உடையவர்கள். அவர்கள் ஏறத்தாழக் கி.பி. 5, 6-ஆம் நூற்றாண்டுகளிலிருந்தே தமிழகத்தில் இருந்து வந்தனர் என்பது முன்பே கூறப்பட்டது. கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் கொடும்பாளூர் அரசனான விக்ரம கேசரி தன் பெயராலும், தன் மனைவியர் இருவர் பெயராலும் கோயில்கள் மூன்று கட்டினான்; ஒரு பெரிய மடத்தை வித்தியாராசி, தபோராசி என்ற சைவாசாரியார் மாணவரான மல்லிகார்ச்சுனருக்கு அளித்தான்; 11 கிராமங்களையும் தானமாக உதவினான். இவர்கள் மடம் இருந்த இடத்தில் சிதைந்த கன்னட மொழிக் கல்வெட்டுக்கள் காணப்படலால், இவர்கள் கன்னட நாட்டிலிருந்து வந்திருக்கலாம். அக்காலத்தில் கன்னட நாட்டில் இராஷ்டிரகூடர் ஆட்சியில் காளாமுகர் ஓரளவு செல்வாக்குப் பெற்றிருந்தார்கள்.[2]

காளாமுகர் வட இந்தியாவிலும் டெக்கானிலும் பரவிப் பல மடங்களை ஏற்படுத்திக் கொண்டனர். அவற்றுள் கோமடம் என்பது ஒன்று. அம்மடத்துறவிகளான சைவராசி, ஞானராசி என்ற பண்டிதர்கள் செங்கற்பட்டை அடுத்த களத்தூர்க் கோயில், ஆலக்கோயில் என்ற கோயில்களை அடுத்து மடங்களைக் கட்டி வாழலாயினர்.[3] பரஞ்சோதி - பண்டிதர் என்ற மற்றொரு காளாமுகத் துறவியின் சிலை ஆலக் கோயிற் சுவரில் இருக்கிறது.[4] திருவலஞ்சுழியிலும் பந்தணை நல்லூரிலும் கோமடத்துத் துறவிகள் இருந்து சைவ சமயப் பணிசெய்து வந்தனர்.[5]

**காபாலிகர் மடம் :** திருவொற்றியூரில் காராணை விடங்கர் இருந்ததால், அங்குக் காளாமுகர் செல்வாக்கு இருந்தது என்பது முன்பு கூறப்பட்டது. ஆயின், அக்கோயிலில் சோழர் காலத்தில் காபாலிகர் செல்வாக்கு மிகுந்திருந்ததைக் கல்வெட்டுக்களிற் காண்கிறோம். கன்னரதேவன் காலத்தில் (950. கி.பி.) சேரநாட்டுச் சிற்றரசர் மரபில் வந்த ஒருவர் நிரஞ்சன குரவர் என்பவரிடம் உபதேசம் பெற்றுச் சதுரானன - பண்டிதர் என்ற பெயருடன் திருவொற்றியூரில் மடத்தை ஏற்படுத்திக் கொண்டார். அவர் இராஜாதித்தன் கன்னர - தேவன் இவர்களிடம் செல்வாக்கு மிகுந்தவர். அவருக்குப் பின்வந்த மடத்துத் தலைவர் அனைவரும் 'சதுரானன - பண்டிதர்' என்றே பெயர் பெற்றனர்.[6] அவர்கள் மடத்து ஆட்சியிற் பங்கு கொண்டனர். இரண்டாம் இராசாதிராசன் முன் சொல்லப்பட்ட ஆளுடைய நம்பி ஸ்ரீ புராணம் கேட்டபோது சதுரானன - பண்டிதரும், காபாலிகரது சோமசித்தாந்தத்தை எடுத்துரைக்கும் வாகீச பண்டிதரும் உடன் இருந்தனர் என்று கல்வெட்டுக் கூறுகிறது. கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் கிருஷ்ணமிஸ்ரரால் எழுதப்பெற்ற பிரபோத சந்திரோதயம் என்ற தத்துவ நாடக நூலில் காபாலிகன் காட்சியளிக்கிறான். அவன் மனித எலும்புகளாலான மாலைய அணிந்தவன் - சுடுகாட்டில் வாழ்பவன் - மண்டை யோட்டில் உணவு உண்பவன் - பல வகை மந்திர மாயங்களில் வல்லவன் - இவ்வாறு அவன் நாடகத்தில் அறிமுகப் படுத்தப்படுகிறான். காபாலிகர் நரபலியிட்டுப் பைரவக் கடவுளை வணங்குபவர்;[8] குடித்தல், சோரம்போதல் பழக்கங்களாக வுடையவர்.[9] சோமசித்தாந்தம் ஒருவகைச் சக்தி வணக்கத்தைத் தன்னகத்தே கொண்டதாகலாம். இக்காபாலிகர் சேர்க்கையாற்றான் அங்குள்ள துர்க்கைக்கு மதுவும் ஊனும் படைக்கப்பட்டு வந்தன. அப்பழக்கம் சமீபகாலம் வரை தொடர்ந்து நடந்து வந்தது என்பது நன்கு புலனாகிறது.[10]

**வீரசைவ மடம் :** வீரசைவ மதம் திருமூலர் காலத்தில் இருந்தது என்பது 4-ஆம் அத்தியாயத்திற் கூறப்பட்டது. அம்மதம் பன்னிரண்டாம் நூற்றாண்டின் இடையில் கல்யாணபுரத் தரசனான பிச்சலன் (1156 - 1170) அமைச்சரான பசவர் என்பவரால், புதுப்பிக்கப்பட்டது. வீரசைவம் சமணரைச் சைவராக்கவும், சைவர்க்குத் திட்டமான சமயநெறி வகுக்கவும், சைவர் ஒரு துறையில் வாழவும் பாடுபட்டது.[11] சைவத் துறவிகள் 'மாகேசுவரர்' என்றாற்போல, வீர சைவத் துறவிகள் 'வீர - மாகேசுவரர்' எனப்பட்டனர்.

குடந்தையம் பதியில் கோதிலாப் பெரிய
மடந்தனில் வாழ்வீர மயேச்சுரர் வாழியே

என்பது தக்க யாகப் பரணியில்[12] கூறப்பட்டுள்ளது. இந்நூலைப் பாடிய ஒட்டக்கூத்தர் விக்கிரமசோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராஜராசன் இவர்தம் காலத்தவர். ஆதலின் அவர் காலமாகிய 12-ஆம் நூற்றாண்டில் கும்பகோணத்தில் வீரசைவ மடம் ஒன்று இருந்தது என்பது தெரிகிறது. அது கட்டட அளவிற் பெரியதாயிருந்தது பற்றியோ, அல்லது பல கிளை மடங்கட்குத் தலைமை மடமாக இருந்தது பற்றியோ, ஒட்டக்கூத்தர் அதனைப் 'பெரிய மடம்' என்றார்.

**கோளகிமடத்துச் சிவாசாரியார் :** இந்த மடத்தைப் பற்றியும் இதன் ஆசாரியாரைப் பற்றியும் 7-ஆம் அத்தியாத்திற் கூறப்பட்டது. இம்மடத்தினர் பாசுபதம் - லகுலீச பாசுபதம் - காளாமுகம் என்னும் சைவப் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள். இப்பிரிவுகளைச் சேர்ந்த பிரமசாரிகளே கோளகிமடத்தில் வேதங்கள், ஆகமங்கள், தர்க்கம் முதலியன கற்றனர். மூன்று லட்சம் கிராமங்களின் வருவாயைக் கொண்டு ஏற்பட்ட மடமாதலின், அதிலிருந்து நூற்றுக் கணக்கான துறவிகள் படித்தனர். அவர்கள் காஷ்மீரம், காசி, வங்கம், கேரளம், கர்நாடகம் முதலிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள். அவர்கள் பின்னர் காசி, திரிபுராந்தகம், தமிழகம் முதலிய இடங்களிற் பரவி மடங்களை ஏற்படுத்திக் கொண்டனர். அவற்றுள் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் தென்னாட்டில் இருந்த மடங்கள் சில. அவற்றுள் இருந்த ஆசாரியர்கள் பல சந்தானங்களைச் சேர்ந்தவர்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பா சமுத்திரத்தை அடுத்த வாலீசுவரம் என்னும் ஊரில் இரண்டு சந்தான ஆசாரியர்கள் இருந்தனர். ஞானாமிர்த சந்தானத்தைச் சேர்ந்த புகலிப் பெருமாள் என்பவர் கோயிலில் 'திரு ஞானம்' என்னும் நூலைப் பாடினார்.[13] அதே சந்தானத்தைச் சேர்ந்த அகோர தேவர் உடன் இருந்தார்.[14] கோளகி மடத்து - ஜீயர் சந்தானத்தைச் சேர்ந்த அகோர

தேவர் ஒருவர்.[15] இவ்வாசிரியர் மடங்கள் பாண்டி மன்னர்களால் ஆதரிக்கப் பெற்றவை.

திருச்செந்தூர்த் தாலூகாவில் உள்ள ஆற்றூரில் கி.பி. 1250-இல் கோளகி - மடம் இருந்தது. அவ்வூர்க் கோயிலில் திரு ஞானத்தைப் பாடத் தென் மடங்கள் பலவற்றிலிருந்து பதினொரு சீடர்கள் நியமனம் பெற்றிருந்தனர். அப்பல மடங்களில் தலைவர்கள் பல சந்தானங்களைச் சேர்ந்தவர்கள். அவர்கள் விஷகண்ட தேவர் சந்தானத்தைச் சேர்ந்த எல்லையில்லா தேவர், பட்ட வீர சந்தானத்தைச் சேர்ந்த மகாதேவர்,திருவாரூர் மடத்தைச் சேர்ந்த சிவபாதயிருதயர், அஸ்திரதேவர், பிட்சாமட சந்தானத்தைச் சேர்ந்த இர்ராவளர் - பசுபதி தேவர், மதுரை மடத்தைச் சேர்ந்த நீலகண்டதேவர், திருநெல்வேலி - அழகிய நாயக சந்தானத்தைச் சேர்ந்த உய்யக்கொண்ட தேவர், திருநெல்வேலி மடத்தைச் சேர்ந்த அணுக்க வன்றொண்டர் என்பவராவர். இவ்விவரங்களிலிருந்து, கோளகி மடங்கள் பல சந்தானங்களை உடையவை என்பதும், திருவாரூர், மதுரை, திருநெல்வேலி முதலிய இடங்களில் கோளகி மடங்கள் இருந்தன என்பதும், பிக்ஷாமடமும் கோளகி - மடத்தைச் சேர்ந்ததே என்பதும் அறியலாம்.

திருஞானம் என்பது எதுபற்றிப் பேசுவது, அதன் ஆசிரியர் யாவர் என்பன போன்ற செய்திகள் அறியக் கூடவில்லை. ஆயினும், அது சமயச் சிறப்புடைய நூலாகும் என்பதில் ஐயமில்லை.[16]

கோளகி மடத்தைச் சேர்ந்த விசுவேசுர - சம்பு தட்சிணத்தில் ஏற்படுத்திய மடத்தைப் பற்றிய விவரங்களை அறியின், தமிழகத்தில் இருந்த அச்சார்புடைய மடங்கள் இந்நிலையில் இருந்திருத்தல் கூடும் என்பதை ஒருவாறு உணரலாம். அவர் மந்தரம் என்ற இடத்தில் விசுவேசுவரர்க்குக் கோவில் எடுப்பித்தார்; சைவமடத்தையும், மருத்துவ விடுதியையும், உணவுச்சாலையையும் அமைத்தார்; பிராமணர் பலரைக் குடியேற்றினார். அவ்விடத்திற்கு விசுவேசுவர கோளகி என்று பெயரிட்டார். அவ்விடத்தில் (ஊரிலும் மடத்திலும்) இருந்தவர் இவராவர்;- முதல் மூன்று வேதங்களையும் கற்பிக்க ஆசிரியர் மூவர், இலக்கியம், ஆகமம், தர்க்கம் ஆகியவற்றைக் கற்பிக்க ஆசிரியர் ஐவர், மருத்துவர் ஒருவர், கணக்கர் ஒருவர், கோயிற்பணிகளைக் கவனிக்க நடனமாதர் பதின்மர், மேளம் முதலிய வாத்தியக்காரர் எண்மர், காஷ்மீரப் பாடகன் ஒருவன், பாடுமகளிர் பதினான்கு பேர், ஆடு மகளிர் அறுவர், பார்ப்பன சமையற்காரர் இருவர், பணிமக்கள் நால்வர், மடத்திலும், உணவுச் சாலையிலும் வேலை

பார்க்கப் பிராமணர் அறுவர், சோழ நாட்டிலிருந்து சென்ற 'வீரபத்திரர்' என்று பெயர் பெற்ற கிராமக் காவலர் பதின்மர், 'வீர முஷ்டிகள்' என்று பெயர் பெற்ற கிராமப் பணிமக்கள் இருபதின்மர். இவர்கள் இருபதின்மரும் கொல்லத் தொழில், வீடு கட்டும் தொழில், மூங்கில் வேலை, மட்பாண்டத் தொழில், தச்சுத் தொழில், நாவிதத் தொழில் முதலிய தொழில்களை அறிந்தவர்கள். அறுபது திராவிட பிராமணக் குடும்பங்கள் அக்கிராமத்தில் குடியேறினர். காளாமுகப் பாசுபதரே அங்கிருந்த மடத்தில் மாணர்வகளாகச் சேர்க்கப்பட்டனர்.[17]

மடத்தில் பொதுக்கல்வியும் சமயக்கல்வியும் கற்பிக்க ஆசிரியர்கள், இசை - நடனக்கலைகளை வளர்க்கப் பாடகிகள், நடனமாதர் - வாத்தியக்காரர், மருத்துவர் பலவகைப் பணிபுரிபவர் எனப்பலர் இருந்தனர் என்பது மேற் சொல்லப்பட்ட விவரங் களிலிருந்து அறியலாம்.

**வாரணாசிக் கொல்லாமடம் :** இவர்கள் மேற்சொன்ன கோளகி மடத்துப் படித்த லக்ஷாத்யாயராவளர் என்பவர் சந்தானத்தைச் சேர்ந்தவர்கள். இவருள் ஞானசிவ - ராவளர் என்பவர்க்கு மாணவரான ஓங்கார சிவ - ராவளர் என்பவர் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் திருப்பாசூரில் இருந்தார்.[18] பாண்டிநாட்டுப் பிரான்மலையில் மேற்சொன்ன சந்தானத்தைச் சேர்ந்த தேசிகேந்திரர் என்பவர் மாணவரான ஈசானசிவ - ராவளர் ஒரு மடத்தைக் கட்டிக் குடியேறினார். மாறவர்மன் சுந்தரபாண்டியன் அம்மடத்திற்கு நிலங்களை அளித்தான்.[19] ஓய்சள அரசனான வீர இராமநாதன் திருவானைக்காவில் ஒரு மடம் அமைத்து, லக்ஷாத்யாயராவளர் என்பவர்தம் மாணவரும் சைவசித்தாந்தப் பேராசிரியருமான தத்புருஷசிவாசாரியர் என்பவரைத் தலைவராக அமர்த்தினான். (21 of 1891) இதனால் இச்சந்தான ஆசாரிகள் தொடர்ந்து இருந்து வந்தமை தெளிவாகும்.[20]

**வாரணாசி - பிக்ஷாமடம் :** இவர்களும் கோளகி மடத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருத இடமுண்டு.[21] இம்மடத்தைச் சேர்ந்த - ராவளர் ஒருவர் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் பந்தனை நல்லூரில் இருந்ததாகக் கல்வெட்டுக் குறிக்கிறது.[22] சுமார் கி.பி. 1281-இல் திருப்பத்தூரில் பிக்ஷாமடத்துச் சைவாசாரியரான ராஜேந்திரத்து - முதலியார் சைவப் பிரகாசர் என்பவர் ஒரு மடத்தை நிறுவித் தலைவரானார். அது சைவப் பிரகாசன் - மடம் எனப் பெயர்பெற்றது.[23] கிருஷ்ணதேவராயர் காலத்தில் தேவிகாபுரத்தில் (வட ஆர்க்காடு மாவட்டம்) பிக்ஷா - மடம் ஒன்று இருந்தது என்றும், அதன் தலைவர் ஈசான சிவாசாரியார் என்றும் கல்வெட்டுக்

கூறலாலும்,[24] திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மணப்படை வீடு என்னும் இடத்திலும் இம்மடத்துச் சைவாசாரியர்கள் இருந்தனர் ஆதலாலும், இம்மடத்து ஆசாரியர்கள் நீண்ட காலம் தமிழகத்தின் சில பகுதிகளிலேனும் தங்கிச் சமயத் தொண்டு செய்துவந்தனர் என்று கூறலாம்.[25]

**சோழ மன்னர்தம் இராஜ குருக்கள் :** சோழ அரசர்கள் அழுத்தமான சிவ பக்தர்கள். ஆதலால் திருமந்திரத்திற் கூறியபடி தீட்சை பெற்ற சிவனடியாராக இருந்திருத்தல் வேண்டும் என்று நினைத்தல் பொருத்தமாகும். அங்ஙனமாயின், அவர்கட்கு ஆசாரிய ஸ்தானத்தில் **இராஜ குருக்கள்** இருந்திருத்தல் வேண்டும். பரமார அரசனான அர்ச்சுனவர்மனுக்கு கௌடதேசத்து மதனன் என்பவர் ராஜகுருவாக அமைந்தாற் போல[26] சிவபாத சேகரனான் இராஜராஜனுக்கு **ஈசான சிவபண்டிதர்** இராஜ - குருவாக இருந்தார்.[27] அவன் மகனான இராஜேந்திரனுக்கு **சர்வசிவ - பண்டிதர்** இராஜ - குருவாக இருந்தார்.[28] முதல் இராஜாதிராஜனால் 'குருதேவர்' என்று மதிக்கப் பெற்ற ஒருவர் அவன் கல்வெட்டுக்களில் காண்கிறார்.[29] முதற் குலோத்துங்கன் தன் குருதேவர் சொன்னபடி 108 சதுர் வேதிகட்கு ஒரு கிராமத்தைப் பிரமேதேயமாக விட்டான்.[30] விக்கிரம சோழன் காலத்தில் இருந்த **சுவாமிதேவர் ஸ்ரீ கண்டசிவன்** அவனது குருவாக இருக்கலாம். ஸ்ரீ கண்ட சம்புவின் மகனாரான சோமேசுவரர் என்ற ஈசுவர சிவன் என்பவர் மூன்றாம் குலோத்துங்கனுடைய இராஜகுருவாவர். இவர் சிவதரிசனத்தில் தேர்ச்சி பெற்றவர்; 18 வித்தைகளில் வல்லவர்; உபநிடதங்களில் உள்ள சிவநெறியை விளக்கியவர்; **சித்தாந்த ரத்நாகரம்** என்ற நூலின் ஆசிரியர்.[31] இவரே 'சுவாமி - தேவர்' எனப்பட்டவர். அரசன் திருக்கடவூர்க் கோயிலுக்கு இருவரை அர்ச்சகராக நியமித்த கட்டளையை இச் சாமி தேவர் மாற்றி வேறு இருவரை நியமித்தனர், அதை அரசன் ஆமோதித்தான்[32] என்பதிலிருந்து, இந்த இராஜ குருக்கள் சோழ அரசர்களிடம் பெற்றிருந்த செல்வாக்கை அறியலாம்.

இராஜ ராஜன் குருவான ஈசானசிவன் **சித்தாந்தசாரம்** என்ற நூலை எழுதியவர். திரிலோசன சிவாசாரியர் என்பவர் **சித்தாந்த சாராவளி** எழுதியவர்.[33] முதல் இராஜேந்திரன் கங்கைக் கரையிலிருந்து சைவாசாரியர்களைத் தமிழகத்திற் குடியேற்றினான் என்று சித்தாந்த சாராவளியின் முகப்பில் கூறப்பட்டுள்ளது. 'சம்பு', 'சிவன்' என்ற முடிவுகளைக் கொண்ட பெயர்கள் கோளகி மடத்துச் சிவாச்சாரியரிடமே 10 ஆம் நூற்றாண்டு முதல் காணப்படலாலும், சோழர் காலத்தில் கல

சூரியர், காகதீயர், மாளுவர், தெலுங்குச் சோழர் இவர்கட்குக் கோளகி மடத்தாரே தீக்ஷா - குருக்களாக இருந்தமையாலும், சோழருடைய இராஜ - குருக்கள் கோளகி வம்சத்துச் சைவாசாரியர்கள் என்று கோடல் தவறாகாது. தாராசுரத்து - இராஜராஜேசுவரத்தில் 108 சைவாசாரியர்களுடைய சிறு உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் கீழ்வரும் சில பெயர்கள் மட்டும் செதுக்கப்பட்டுள்ளன :

24. நாங்கூருடையான் மாதேவரான தத்புருஷசிவா.

25. நாங்...... செய்ய பாதத்தரான அகோரசிவா.

26. நல்லாவூர்ப் பொன்னம்பலத்தாரான ஈசான சிவா.

33. ஆயம்பூருடையாரான சதாசிவா.

34. காவரமங்கமுடையாரான சந்திரசேகரரான ஆனந்தசிவா.

35. ஐயூருடையார் - திருமறைக்காடுடை யாரான ஈசானசிவா.

39. வேற்குடையார்... தத்புருஷசிவா.

40. கொற்றங்குடையாரான - சிவகருணாலயரான - ஈசானசிவா.

54. மண்ணக்குடையார் - மால்தேவரான - வைராக்கிய சிவா.

55. வடுகக்குடையார் - ஆநந்தக் கூத்தரான - ஈசானசிவா.

70. ...... சதாசிவா.

100. ...... பொன்னம்பலக் கூத்தரான தர்மசிவா.

107. பெருவேளூர்க் கிழவர்......... தர்மசிவா.

108. மழவச்சமுடையார் - திருச் செம்பொன்பள்ளி உடையார்.[34]

சோழப் பேரரசன் கட்டிய கோயிலில் இச் சைவாசாரியர் உருவங்கள் சிற்பங்களாக இருத்தலால், இவர்கள் சோழர் காலத்தில் சிறப்புப் பெற்ற சிவாசாரியர்களாக இருந்திருத்தல் வேண்டும் என்று கொள்ளலாம். இவற்றில் சில முன் சொன்ன இராஜ - குருக்கள் சிலைகளாகவும் இருக்கலாம். இவர்கள் மடங்களில் வாழ்ந்தார்களோ, தனிப்பட இருந்தார்களோ, உண்மை தெரியவில்லை. இப்பெருமக்களாலும் முன்சொன்ன இராஜ - குருக்களாலும் சைவசமயம் தமிழ்நாட்டில் நன்கு வளர்ச்சி பெற்ற தென்னல் மிகையாகாது.

## தமிழ்ச் சைவ மடங்கள்

**திருச்சத்திமுற்றத்து முதலியார் சந்தானம் :** ஏறத்தாழக் கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் முதற் பகுதியில் சில புதிய மடங்கள் தோன்றின. அவற்றுள் தலை சிறந்தது திருச்சத்தி முற்றத்துத் திருஞான சம்பந்தன் திருமடம் என்பது. அம்மடம் எப்பொழுது உண்டாயிற்று என்பது தெரியவில்லை. அம்மடத்தைச் சேர்ந்த **ஆண்டார் - பருதிப் பெருமாள்** என்பவர் சந்தானத்தில் வந்தவருள் ஒருவர் திருச்சத்திமுற்றத்து **முதலியார்;** அவரது சந்தானத்தைச் சேர்ந்த கிளைமடங்கள் ஆனைக்கா, உசாத்தானம், வீழி மிழலை, வலிவலம் என்னும் இடங்களில் தோன்றின. திருச்சத்தி முற்றத்து முதலியார் சந்தானத்தைச் சேர்ந்த நமசிவாய தேவருடைய சீடர்கள் திருவானைக்காவில் நாற்பத்தெண்ணாயிரவன் திருமடத்தில் இருந்தனர்.[35] அம்முதலியார் சந்தானத்தைச் சேர்ந்த பரிபூரண சிவாசாரியார் என்பவர் உசாத்தானத்தில் இருந்த கூத்தாடு நாயனார் - மடத்துத் தலைவராக் இருந்தார்.[36] தவப் பெருமாள் என்ற ஞான சிவாசாரியார் என்பவர் வீழிமிழலையில் அழகிய திருச்சிற்றம்பலமுடையார் - மடத்துக்கு நிலமளித்தார்.[37] அதே சந்தானத்தைச் சேர்ந்த சோமநாததேவர் என்ற எதிரொப்பிலாதார் என்பவர் வலிவலத்தில் இருந்த தவப்பெருமாள் - திருமடத்தின் தலைவராக இருந்தார்.[38]

### *மாளிகை மடத்து முதலியார் சந்தானம் :*

திருவிடைமருதூரில் 'மாளிகைமடம்' என்று ஒன்று இருந்தது. அஃது எப்பொழுது உண்டாயிற்று என்று கூறமுடியவில்லை. ஆனால் மூன்றாம் இராஜராஜன் காலத்தில் (கி.பி. 1240-இல்) அம்மாளிகை மடத்து முதலியார் சந்தானத்தைச் சேர்ந்த தத்தன் - உடையார் - ஈசான தேவர் என்பவர் நல்லூரில் இருந்தார். அவருடைய மாணவி அவர்க்கு ஒரு மடத்தையும், நிலங்களையும் அளித்தார்.[39]

பெரும்பற்றப்புலியூர் நம்பி கி.பி. 13-ஆம் நூற்றாண்டினர் என்று கொள்ளலாம்.[40] அவர் தில்லையில் இருந்த மாளிகை மடத்துத் தலைவரான வெண்காடார்க்கு மாணவரான விநாயகன் என்பவர் தமக்கு ஞானாசிரியர் என்று கூறுகிறார்.[41] இதனால் நம்பியின் காலத்தில் தில்லையில் மாளிகைமடம் ஒன்று இருந்தது என்பது தெரிகிறது. இம்மாளிகை மடத்துத் தலைவர் ஒருவர் பிற்கால நூல்களாகிய வேதாரணியப் புராணப் பாயிரத்திலும், திருக்கானப்பேர்ப்புராணம் பாயிரத்திலும் துதிக்கப் பெற்றுள்ளனர்.[42] இத்துதிகளால், மாளிகை மடத்து ஆசாரியர்கள் சைவ ஞான நூல்களில் வல்லவர்கள் என்பதும், அவர்களிடம் நம்பி போன்றார் பலர் படித்துப் பெரும் புலமையும் ஞானமும் பெற்றனர் என்பதும் தெளிவாகின்றன.

**செண்பைக்குடி முதலியார் சந்தானம் :** திருவானைக்காவில் மூன்றாம் இராசேந்திரன் காலத்தில் (கி.பி. 1250) ஆண்டார் - **எம்பிரானார் - திருமடம்** என ஒன்று இருந்தது. அது செண்பைக்குடி முதலியார் சந்தானத்தைச் சேர்ந்தது.[43] திருச்சத்தி முற்றத்து - முதலியார் சந்தானத்தைச் சேர்ந்த கிளைமடம் திருவானைக்காவில் இருந்தது போல, செண்பைக்குடி முதலியார் சந்தானமடம் ஒன்றும் திருவானைக்காவில் இருந்ததெனத் தெரிதலால், அதன் தலைமை மடம் செண்பக் குடியில் இருந்ததென்பது போதரும்.

**திருவாரூர் - ஆசார மழகியான் - திருமடம் :** மாறவர்மன் குலசேகர பாண்டியன் (கி.பி. 1236) காலத்தில் திருவாரூரில் ஆசார மழகியான் - திருமடம் என்று ஒன்று இருந்தது. அதன் கிளை பாண்டி நாட்டுத் திருப்புத்தூரில் திருஞான சம்பந்தன் - திருமடம் என்ற பெயருடன் இருந்தது. அதன் தலைவர் ஸ்ரீ கண்ட சிவன் என்பவர். இவையும் முதலியார் மடங்களேயாகும்.[44] மூன்றாம் இராசேந்திரன் காலத்தில் கோவந்தபுத்தூரில் திருத்தொண்டத்தொகையான் - திருமடம் இருந்தது. அதன் கிளை தில்லையில் இருந்தது.[45] பாண்டி நாட்டுத் திருப்புத்தூரில் சுமார் கி.பி. 1280-இல் இதேபெயர் கொண்ட மடம் ஒன்று இருந்தது.[46]

**மருதப் பெருமாள் சந்தானம் :** ஆண்டார் - மருதப் பெருமாள் - சந்தானத்தைச் சேர்ந்த நமசிவாய தேவர் என்பவர் ஏறத்தாழக் கி.பி. 1230-இல் செங்காட்டங்குடியில் சிறுத்தொண்டன் - திருமடத்தைக் கட்டினார். அதற்கு நிலம் தானம் செய்யப்பட்டது.[47] இச்சந்தானத் திற்குத் தலைமை மடம் எது என்பது விளங்கவில்லை.

## *இலக்கியத்தில் மடங்கள்*

இதுகாறும் கல்வெட்டுக்களிற் குறிக்கப்பெற்ற மடங்களைப் பற்றிக் கூறப்பெற்றது. இனிச் சைவ சித்தாந்த நூல்கள் கூறும் மடங்களைப் பற்றிக் காண்போம். திருவண்ணாமலைக் கல்வெட்டிற் குறிக்கப்பட்டுள்ள திருவெண்ணெய் நல்லூர் - மெய்கண்ட தேவனே சிவஞானபோதம் செய்த மெய்கண்ட தேவராகலாம்; அவர் கி.பி. 1232-இல் வாழ்ந்தவர் என்று ஆராய்ச்சி அறிஞரான R.கோபிநாதராவ் கூறியுள்ளார்.[48] மெய்கண்ட தேவரது சிவஞான போதத்திற்கு முன்னரே திருவியலூர் உய்யவந்த[49] தேவ நாயனார் என்பவர் **திருவுந்தியார்** என்னும் சைவ சித்தாந்த நூலைச் செய்தார். அவருடைய மாணவர்க்கு மாணவரான திருக்கடவூர் - உய்ய வந்த தேவ நாயனார் என்பவர் **திருக்களிற்றுப் படியார்** என்னும் மற்றொரு சைவசித்தாந்த நூலைச் செய்தனர். மெய்கண்டாரது தந்தையார்க்குச் சைவ ஆசாரியராக

இருந்தவர் திருத்துறையூர் மடத்தில் இருந்த அருள் நந்தி சிவாசாரியார் என்பவர். அவர் தமது முதியவயதில் மெய்கண்டார்க்கு முதல் மாணவரானவர். இவ்விவரங்களை நோக்க, மெய்கண்டார்க்கு முன்பே நாட்டில் சைவ சித்தாந்த மடங்கள் திருத்துறையூரிலும் திருவிசலூரிலும் இருந்திருத்தல் வேண்டும், என்பது தெரிகிறது. இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் (கி.பி.1115) திருத்துறையூரில் **சிவானந்த மகாமுனி** என்பவர் மிக்க செல்வாக்குடையவராக இருந்தார்.[50] முதற் குலோத்துங்கன் காலத்தில் கன்னிவன புராணம் பாடிய பரசமய கோளரி மகாமுனிவரைப் போலச் சிவானந்த மகாமுனிவரும் சைவப் பெரியார் என்பதில் ஐயமில்லையாதலாலும், இவர் வாழ்ந்த திருத்துறையூரிலேயே அருள்நந்தி சிவாசாரியர் பிற்பட இருந்தவராதலாலும், பல சீடர்களுக்கு ஆசாரியராக இருந்தமையாலும், மெய்கண்டார் காலத்தில் மிக்க முதியவராக இருந்தமையாலும், அவர் முன் சொன்ன சிவானந்த மாமுனிவருக்கு மாணவராக இருக்கலாம் என்று கருத இடந்தருகிறது.

மெய்கண்டாருக்கு 49 மாணவர்கள். அவருள் **அருள் நந்தி சிவாசாரியார்** முதல்வர். அவர் சிவஞான சித்தியார், இருபா இருபஃது என்ற சைவ சித்தாந்த சாத்திரங்களைச் செய்தவர். மற்றொரு மாணவரான **மனவாசகம் கடந்தார்** என்பவர் உண்மை விளக்கம் என்ற சித்தாந்த நூலைச் செய்தார். **அருள் நந்தி சிவாசாரியர்** மாணவருட் சிறந்தவர் **மறைஞான சம்பந்தர்** என்பவர். இவர் தில்லையில் இருந்து சமயத் தொண்டு செய்தவர். இவர் மாணவரே சிவப்பிரகாசம் முதலிய சைவ சித்தாந்த நூல்கள் எட்டினைச் செய்த **உமாபதி சிவாசாரியார்** என்பவர். அவர் கொற்றவன் குடியில் மடத்தைத் தாபித்துப் பலர்க்குச் சித்தாந்த பாடங்களைக் கற்பித்து வந்தார்.[51] மெய்கண்டார் கால முதல் அவர் சீடர்கள் பல இடங்களிற் பரவி மடங்களை ஏற்படுத்திக்கொண்டு சைவ சமயத்தை வளர்க்க முற்பட்டனர் என்பதையும், மெய்கண்டார் வாழ்ந்த 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்துதான் மேலே சொல்லப்பட்ட முதலியார் மடங்கள் பல இடங்களில் திடீரெனத் தோன்றலாயின என்பதையும், மெய்கண்டார் பிறந்த பொழுது பிரம்ம சூத்திரத்திற்குச் செய்யப்பட்ட பேருரைகளான நீலகண்ட பாஷ்யம், சங்கர பாஷ்யம், இராமாநுஜ பாஷ்யம், மாத்வபாஷ்யம் என்பன நாட்டிற் பரவிச் சமயக் கொள்கைகளைப் பற்றிப் பெருங் குழப்பத்தை விளைத்தன; அக்குழப்ப நிலையைச் செம்மைப்படுத்தி உண்மைச் சைவ சித்தாந்தத்தை நிலைநாட்டவே மெய்கண்டார் தோன்றினார்[52] என்பதையும் நன்கு சிந்தித்தால், முன் சொல்லப்பட்ட பலவகைச் சைவமடங்கள் மெய்கண்டார் மாணவர்களால் ஏற்படுத்தப்பட்டனவாக இருக்கலாமோ என்று கருத இடந்தருகிறது.[53] கல்வெட்டாராய்ச்சி

யாளர்கள் கீழ்வருமாறு கூறியுள்ளது. நமது ஊகத்தை உறுதிப்படுத்துவது காண்க.

"இவ்வாறு சைவசமயம் படிப்படியாகச் சோழமன்னர் ஆதரவில் வளர்ச்சி பெற்றிருந்தது. கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல மடங்கள் சைவத்துறவிகளின் தலைமையில் தோன்றின. அவை பெரும்பாலான தமிழ் மக்களிடம் செல்வாக்கைப் பெற்றன. சங்கரர் சண்டமாருதப் பிரசங்கம் செய்த நாடு இது. அவர் பக்தி வழிபாட்டை வற்புறுத்தினார்; அதே சமயத்தில் சாத்திரங்களில் கூறப்பட்டுள்ள சாதி ஆசாரங்களை வற்புறுத்தவில்லை; அன்பே சிவம் என்று வற்புறுத்தினார். இதனால் பெரும்பாலான மக்கள் சைவசமயத்தைத் தழுவினர். இச்சைவக் கொள்கை வைதிகப் பிராமணரிடம் செல்வாக்குப் பெறவில்லை. இங்ஙனம் சைவம் பொது மக்களிடையில் செல்வாக்குப் பெற்றதால், நாட்டில் பல மடங்கள் தோன்றின. அம்மடங்கள் சம்பந்தர், திருநாவுக்கரசர் முதலிய சைவ சமய குரவர்களின் பெயர்களைத் தாங்கின."[54]

மெய்கண்டாருடைய முதல் மாணவர் பரம்பரையில் வந்த நமசிவாய தேசிகரால் ஏற்படுத்தப்பட்டது, திருவாவடுதுறை ஆதீனம். அதே பரம்பரையில் வந்த ஞானசம்பந்த தேசிகரால் உண்டானது தருமபுரமடம்.[55] இவை இரண்டும் பல கோயில்களின் ஆட்சியைக் கவனிப்பதுடன் பொதுக்கல்வி - சமயக்கல்வி நிலையங்களை நடத்தி வருதலைக்காண்கிறோம். இங்ஙனமே பண்டைத் தமிழர் மடங்களும் இருந்தன என்று நாம் கருதலாம். மடத்தில் வேலை செய்யச் சூலமுத்திரையிடப்பெற்ற ஆண்களும் பெண்களும் இருந்தனர்[56] என்பதையும், மடத்திற்கு 36 பேர் ஒரே சமயத்தில் மட அடிமைகளாக விற்கப்பட்டனர்[57] என்பதையும் நோக்க, மடத்தில் பலவகை வேலைகளைக் கவனிக்க இத்தனை மக்களும் தேவைப்பட்டனர் என்பதை அறியலாம்; அதனால் மடத்தில் சமயத் தொடர்பான பல செயல்கள் கவனிக்கப்பட்டுவந்தன என்பது தெரிகிறது.

ஏறத்தாழக் கி.பி. பத்தாம் நூற்றாண்டிலிருந்து கோயிலை அடுத்து மடம் ஏற்பட்டு வந்தது. இம்மடங்கள் சமுதாயத்தில் மிக்க செல்வாக்கைப் பெற்றன; பெரும்பாலான இடங்களில் கோயில் ஆட்சியையும் கவனித்தன. யாத்திரிகர் மடங்களில் தங்கியிருக்க வசதி அளிக்கப்பட்டது. ஒழுக்கத்தையும் சமய அறிவையும் புகட்ட இம்மடங்கள் பயன்பட்டன. பல சாத்திரங்களைக் கற்பிக்க மடங்களில் ஆசிரியர்கள்[58] இருந்தனர். நோயாளிகளுக்கு மடத்திலிருந்து மருந்தும் கொடுக்கப்பட்டது. சேர நாட்டு மடம் ஒன்று விலங்குகளுக்கு மருத்துவமும் அளித்தது.[59]

**குகைகள்** : மூன்றாம் குலோத்துங்கன் காலமுதல் பல கோவில்களில் **குகைகள்** என்னும் ஒரு வகை மடங்கள் இருந்தன என்பது தெரிகிறது. அவற்றுள் கீழ்வருவன குறிக்கத் தக்கவை.

| | | | |
|---|---|---|---|
| 1. | திருத்துறைப் பூண்டி | குகை | 471 of 1912 |
| 2. | குறுக்கை | திருஞானசம்பந்தன் - குகை | 233 of 1917 |
| 3. | சீகாழி | திருமுறைத்தேவாரச் செல்வன் - குகை | 10 of 1918 |
| 4. | திருவிடைவாய் | திருத்தொண்டத் தொகையான் - குகை | 10 of 1918 |
| 5. | திருப்புகலூர் | குகை | 87 of 1927 |
| 6. | திருமாகாளம் | பொலி சாத்தழகியான் - குகை | 24 of 1917 |
| 7. | திருமணஞ்சேரி | ஆலால சுந்தரன் - குகை | 28 of 1914 |
| 8. | முணியூர் | திருஞானசம்பந்தன் - குகை | 156 of 1911 |
| 9. | சிதம்பரம் | குகை | 48 of 1935-36 |
| 10. | சதுர்வேதிமங்கலம் (இராமநாதபுர மாவட்டம்) | திருஞானசம்பந்தன் - குகை | 311 of 1928 |

இக்குகைகள் பெரும்பாலும் சிவன் கோயில்களுக்குள் கட்டப்பட்டவை; பாதுகாப்பு மிக்கவை; திருமுறைகளில் வல்ல சைவத்துறவிகளைத் தலைவர்களாகப் பெற்றவை. திருச்சிற்றம்பலமுடைய முதலியார், தவசி - தம்பிரான் தோழர், புகலிவேந்தர், இருதயதேவர் என்ற பெயர்களைக் கொண்ட துறவிகள் சில குகைகட்குத் தலைவர்களாக இருந்தார்கள். சீகாழியில் இருந்த குகையில் முதலியார் - திருவையாறுடையார் என்பவர் இருந்தார். அவருடைய சீடர்கள் திருமுறைகளைப் பண்ணுடன் பாடுவதில் சமர்த்தர். அவர்கள் திருவிடைவாய்க் கோயிற் குகையில் திருமுறைகளை ஓதினார்கள். சில குகைகளில் தவசிகள், ஆண்டார்கள், யாத்ரிகர் என்பவர் உண்பிக்கப்பட்டனர். மூன்றாம் குலோத்துங்கன் 22-ஆம் ஆட்சியாண்டில் (சுமார் கி.பி. 1200-இல்) 'குகையிடி கலகம்' தோன்றியது. அஃது எதற்காக, யாரால், ஏற்பட்டது;[60] அக்கலகம்

திருத்துறைப்பூண்டியில் மட்டும் நடந்ததா, நாடு முழுவதுமே நடந்ததா என்பன தெரியவில்லை. ஆனால் மூன்றாம் குலோத்துங்கற்குப் பிற்பட்ட காலத்திற்றான் குகைகள் மிகுதிப்பட்டன என்பது கல்வெட்டுக்களால் தெரிகிறது.

''முன் சொன்ன மடங்களும் இக்குகைகளும் பொதுக் கல்வியையும் சமயக்கல்வியையும் வளர்க்கப் பாடுபட்டன. திருப்பதிகம் ஓதுவாரைத் தயாரித்தலும் இவற்றின் கொள்கைகளிற் சிறந்ததாகும்.''[61]

### *மக்கள்கொண்ட நாயன்மார் பெயர்கள் :*✱

பல்லவர் காலத்தில் சைவத்தொண்டு செய்து மறைந்த நாயன்மார்களின் வரலாறுகள் - சோழர்காலத்தில் திருத்தொண்டத் தொகை, நம்பியாண்டார்நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி, சேக்கிழார் பாடிய திருத்தொண்டர் புராணம், சைவத்திருமுறைகள் இவற்றால் நாட்டில் நன்கு பரவின. பல கோயில்களில் நாயன்மார் உருவச் சிலைகள் பூசிக்கப்பட்டன; விழாக்கள் நடைபெற்றன. இவற்றால் பொதுமக்கள் நாயன்மார்களின் பெயர்களையும் வரலாறுகளையும் நன்கறிந்திருந்தனர் என்பதும், அப்பெருமக்கள் பெயர்களைத் தாங்கள் தாங்கி மகிழ்ந்தனர் என்பதும் பல கல்வெட்டுக்களால் அறியப்படும் செய்தியாகும். இடமஞ்சி இங்குச் சில பெயர்களை மட்டும் குறிப்போம். அப்பெயர்கள் அரசாங்க அலுவலர் முதல் சாதாரண மக்கள் வரையிற் கொண்டிருந்த பெயர்கள் ஆகும்.

| | | |
|---|---|---|
| 1. | அழகன் ஞானசம்பந்தன் | 216 of 1912 |
| 2. | புகலி வேந்தன் | 97 of 1916 |
| 3. | பரசமயகோளரி மாமுனி | S.I.I.7. 752 |
| 4. | வாகீசர் | 98 of 1926 |
| 5. | திருவெண்காட்டு நங்கை | 412 of 1922 |
| 6. | மூர்க்கன் ஐயாறன் | S.I.I.2. 94 |
| 7. | பரவை நங்கையார் | 680 of 1917 |
| 8. | பரவை நங்கை என்ற வன்தொண்டத்தாதி | 520 of 1921 |
| 9. | கண்ணப்பன் | S.I.I.5. 468 |
| 10. | பூதி மாதேவடிகள் (கன்னரதேவன் மனைவி) | 356 of 1903 |
| 11. | புகழ்த்துணை அடிகள் | 168 of 1904 |

| | | |
|---|---|---|
| 12. | சேத்தன் காரி | 151 of 1937 |
| 13. | அமர புயங்கன் என்ற கோட்புலி | செந்தமிழ் 17,P.316 |
| 14. | அரிவாள் தாயன் | 70 of 1897 |
| 15. | சத்தி அரையர் | 49 of 1918 |
| 16. | சேரமான் சோழன் (துறவி) | 87 of 1928 |
| 17. | ஆலால சுந்தரப் பல்லவரையன் | 375 of 1918 |
| 18. | நாவலூர் உடையான் | 381 of 1924 |
| 19. | ஆரூரான் பொன்னம்பலத்தடிகள் (உத்தம சோழன் மனைவி) | 47 of 1925 |
| 20. | நம்பி ஆரூரன் | 275 of 1917 |
| 21. | அணுக்க வன்தொண்டன் | 524 of 1938 |
| 22. | திருச்சிற்றம்பலம் உடைய நம்பி | 72 of 1927 |
| 23. | கலயன் குமரன் என்ற தம்பிரான் தோழன் | 216 of 1925 |
| 24. | சேரமான் தோழன் திருநீலகண்டன் | 27 of 1914 |
| 25. | தண்டி அடிகளார் | 236 of 1926 |
| 26. | திருநீலகண்டன் | 670 of 1919 |
| 27. | இளையான்குடி கிழவன் | 376 of 1909 |
| 28. | பரஞ்சோதி என்ற அகோரசிவன் | 172 of 1911 |
| 29. | சிறுத்தொண்டநம்பி | S.S.I. 3. 209 |
| 30. | நம்பிகலியன் | 503 of 1922 |
| 31. | தில்லைமூவாயிர வேளான் | 455 of 1902 |
| 32. | குங்குலியக்கலய நாயனார் (துறவி) | 40 of 1914 |
| 33. | சிவஞான சம்பந்த தலைக்கோலி (நடனமகள்) | 231 of 1932-33 |
| 34. | மாணிக்கவாசகன் | 258 of 1911 |

***நாயன்மார் பெயர்கொண்ட இடங்கள் :***

| | | |
|---|---|---|
| 1. | கண்ணப்பதேவர் கமுகந்தோப்பு | 125 of 1922 |
| 2. | திருஞான சம்பந்தநல்லூர் | 180 of 1925 |

| | | |
|---|---|---|
| 3. | திருஞான சம்பந்த மங்கலம் | 376 of 1918 |
| 4. | திருநாவுக்கரைய நல்லூர் | 380 of 1918 |

இவையன்றி,

| | | |
|---|---|---|
| 1. | தேவாரம் அழகியான் | 228 of 1929 |
| 2. | ஆண்டார் - திருத்தொண்டத் தொகையார் | 174 of 1931 |
| 3. | திருமுறைத் தேவாரச் செல்வன் | 10 of 1918 |
| 4. | திருத்தொண்டத்தொகை நல்லூர் | 346 of 1911 |
| 5. | ,, மங்கலம் | 54 of 1906 |

என்ற பெயர்கள், மக்கள் திருத்தொண்டத் தொகையிடத்தும் பிற திருமுறைகளிடத்தும் வைத்திருந்த மதிப்பைக் காட்டுகின்றன அல்லவா?

### *கடவுளர் பெயர்கள்கொண்ட மக்கள், இடங்கள், பொருள்கள் :*

அக்கால மக்கள் இவ்வாறே தங்கட்கும் இடங்கட்கும் வேறு பொருள்களுக்கும் சிவபெருமானுடைய - அம்மனுடைய பல பெயர்களை இட்டு வழங்கினர். அவற்றுட் சில வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | பொன்னம்பலத்தடிகள் | 47 of 1925 |
| 2. | ஆடவல்லான் (மரக்கால்) | S.S.I.2. 65 |
| 3. | சிவன் தில்லைநாயகன் | S.I.I. 3.209 |
| 4. | திருச்சிற்றம்பலம் உடையான் | 374 of 1918 |
| 5. | ,, ,, (கோவில் மண்டபம்) | 214 of 1911 |
| 6. | மடந்தைபாகன் | 258 of 1911 |
| 7. | சிவலோகநாதன் | 217 of 1912 |
| 8. | படம்பக்க நாயகன் | 98 of 1912 |
| 9. | எம்பிரானார் மடம் | 584 of 1909 |
| 10. | மறைக்காடன் பதஞ்சலி | 87 of 1932 |
| 11. | பொன்னம்பலக்கூத்தன் | த.பொழில், 12 |
| 12. | திருவுடையான் கோதண்டன் | பக். 297-8 |
| 13. | திருவாளன் மூவேந்த வேளான் | |
| 14. | தில்லை வீதி விடங்கன் (அளவை) | 21 of 1922 |
| 15. | 'ஆட்கொண்ட' நாச்சி (கோப்பெருஞ்சிங்கன் மகள்) | 480, 481 of 1921 |

| | | |
|---|---|---|
| 16. | வீதிவிடங்கன் | 185 of 1936-37 |
| 17. | திருக்காளத்தி தேவன் | N.I.R.8 |
| 18. | அறம் வளர்த்தாள் சாநி (பார்ப்பனி) | 227 of 1929 |
| 19. | நமச்சிவாய | 141 of 1925 |
| 20. | ஈசான மங்கலம் | 324 of 1903 |
| 21. | வீதிவிடங்கச் சதுர்வேதி மங்கலம் | 179 of 1925 |
| 22. | தில்லைவிடங்க நல்லூர் | 373 of 1918 |
| 23. | தாயன் சந்திரசேகரன் | 374 of 1918 |
| 24. | தக்ஷிணாமூர்த்தி பட்டன் | 377 of 1918 |
| 25. | மாதேவ பட்டன் | ,, |
| 26. | திருநட்டப்பெருமான் | ,, |
| 27. | சிவதேவன் | 381 of 1918 |
| 28. | வீரபத்திரன் | ,, |
| 29. | ரிஷபதேவன் | 381 of 1918 |
| 30. | சதாசிவன், சிவக்கொழுந்து சீராளன், எடுத்தபாதம், தில்லைக்கரசு, பெண்ணோர் பாகன், ஐயாறன், தில்லைக்கூத்தன், அம்பலத்தாடி. | S.I.I.2.65 |
| 31. | பேரம்பலக்கூத்தன் | 353 of 1928-29 |
| 32. | கச்சியேகம்பன் | 405 of 1928-29 |
| 33. | வண்டுவார்குழலி | 194 of 1927-28 |

திருத்தொண்டத் தொகை தோன்றக் காரணமாயிருந்த தேவாசிரிய மண்டபம், சிதம்பரத்தில் உள்ள திருக்களிற்றுப்படி என்பனவும் மக்கள், நாழியின் பெயர்களாக விளங்கின :

| | | |
|---|---|---|
| 1. | தேவாசிரியன் (அளவைப் பெயர்) | 69, 89 of 1918 |
| 2. | திருக்களிற்றுப்படி நம்பி[62] (கி.பி. 1175, ஒருவன் பெயர்) | 496 of 1927-'30 |

இப்பெயர்களுடன் மட்டும் அக்காலச் சைவமக்கள் நின்றிலர். திருமுறைகளை நன்கு படித்த பழக்கத்தால், நாயன்மார் பயன்படுத்திய சொற்றொடர்களைப் பாராட்டி மக்கட்கும் ஊர்கட்கும் பிறவற்றுக்கும்

பெயர்களாக வழங்கி மகிழ்ந்தனர் என்பதும் கல்வெட்டுக்களால் தெரிகிறது. அவற்றுள் சில இங்கு காண்க :

1. சிவாயநமவென்று **நீறணிந்தேன்**-
அப்பர் தே. பக். 141, செ. 6.
**நீறணிந்தான்** சேதிராயன் 291of 1912

2. **நச்சு வார்க் கினியர்** போலும் நாகையீச்
சுரவ னாரே. - அப்பர் தே, பக். 110 செ. 1
**நச்சினார்க்கினியன்** தில்லையம்பல மூவேந்த வேளான் -
S.I.I.6.34

3. மழபாடி **வயிரத்தூணே** என்றென்றே
நானரற்றி'' - அப்பர் தே. பக். 396, 1-10
ஆனை மங்கலமுடையான் பஞ்சந்தி
**வயிரத்தூண்** பக்கல் விலைகொண்ட...... - S.I.I.5. 632

4. **மறையணி நாவினானை**
மறப்பிலார் மனத்துளானை
- அப்பர் தேவாரம் பக். 91-1
பெருமருதூர் **மறையணி நாவினான்**
பட்டன் - S.I.I. 5: 634

5. ஆனசொல் மாலையோதும் அடி
யார்கள் வானில் அரசாள்வர்
**ஆணை நமதே** - சம்பந்தர் தே. பக். 362, 10.

**ஆணை நமதே** என்ற இத் தொடரைப் பாராட்டிய நம்பியாண்டார் நம்பி தாம் பாடிய ஆளுடைய பிள்ளையார் திருத்தொகையில், **'ஆணை நமதென்ன வல்லான்'** (வரி 45) என்று சம்பந்தரைப் பாராட்டியுள்ளார். இவை இரண்டும் மக்கள் உள்ளத்தை ஈர்த்துப்பிள்ளைகட்குப் பெயர் வைக்கத் தூண்டின என்பது 'பட்டமுடையார் **ஆணை நமதென்ற பெருமாள்**' (S.I.I. 8. 442) என்ற கல்வெட்டுத் தொடரிலிருந்து அறியக் கிடக்கிறது.

6. **பொன்னார் மேனியனே** புலித்தோலை
யரைக்கசைத்து - சுந்தரர் தே. பக். 78.1
**பொன்னார் மேனி** விளாகம் - S.I.I.5. 632

7. பட்டினத்தார் திருவிடை மருதூர் மும்மணிக்கோவையில் (செ. 28) 'வித்தகப் பாடல் **முத்திறத்தடியார்**' என்று குறித்துள்ளார். திருப்புறம்பியக் கல்வெட்டு ஒன்றில்,

'**முத்திறத்தடியார்** அமுது செய்தருளத் தானம்' என்ற தொடர் காண்கிறது.[63]

8. **மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும்**

அடியேன்- திருத்தொண்டத் தொகை.

உலகாண்ட மூர்த்தி - இப்பெயர் கடம்பூர் இளங்கோயிலில் மூர்த்தி நாயனார் சிலையிருந்த புரையினடியில் வெட்டப்பட்டது.

9. கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் (1216 - 1256) திருவெண்ணெய் நல்லூர்க் கோயில் ''பிச்சனென்று பாடச் சொன்னான்'' என்ற பெயர் கொண்ட வெள்ளி ஊதுகொம்புகள் இருந்தன. இத் தொடர் சுந்தரரைத் தடுத்தாட்கொண்ட வரலாற்றுள் ஒரு நிகழ்ச்சி. இது பெரியபுராணத்துள் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

10. திருக்கடவூர்க் கோயிலுக்குச் சோழர்கால மக்கள் அளித்துள்ள திருநந்தாவிளக்குகள் மிகப்பல. இவ்வளவு விளக்குகள் அளிக்கப்பெற்றகோவிலைக்காண்டல் அருமை.

**விரும்பிநல் விளக்குத் தூபம்**
**விதியினால் இடவல் லார்க்குக்**
**கரும்பினிற் கட்டி போல்வார்**
**கடவூர்வீ ரட்ட னாரே.**

என்னும் அப்பரது திருவாக்கை எண்ணியே அவை அளிக்கப் பெற்றனவாதல் வேண்டும்.[64] இன்றும் அக் கோயிலில் ஆண்டுக் கொருமுறை லக்ஷம் விளக்குகள் ஏற்றும் வழக்கம் இருந்து வருவது குறிக்கத்தக்கது.

மூன்றாம் இராசராசன் ஆட்சிக்காலத்தில் ஹொய்சள - வீர நரசிம்ம தேவன் படையெடுத்துவந்து கோயில்களை அழித்துச் சிலைகளை எடுத்துச்சென்றான். அதனால் திருவரத்துறைக்கோயிலில் தேவாரமழகியான் என்பவன் ஆட்கொண்ட -நாயகர், அம்மன், திருவாதவூர்ப் பெருமான் சிலைகளை அமைத்தான்.[65] திருவிளக்குடியில் இருந்த சிலைகள் திருச்சத்தி முற்றம் கோயிலில் வைக்கப்பட்டிருந்தன. படையெடுப்புக்குப்பின் அவை கொண்டு வரப்பட்டு முன்போலப் பூசை முதலியன நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டது.[66] அப்படையெடுப்பால் கோடிக் குழகர் கோயில் பழுதுற்றது. படையெடுப்புக்குப்பின்னர் அக்கோயில் புதுப்பிக் கப்பட்டது.[67] இவ்வுண்மைகளிலிருந்து அக்காலத் தமிழ் மக்களின் சமயப்பற்றை நன்கறியலாம்.

## குறிப்பு விளக்கம்

1. மதுரையில் சிவனடியார் நாற்பத்தெண்ணாயிரவர் இருந்து சிவத்தொண்டுகள் செய்து வந்தனர் என்பது (நம்பி திருவிளையாடல் - கடவுள் வாழ்த்து 22) தெரிகிறது. 'நாற்பத்தெண்ணாயிரவர்' என்பது தில்லை மூவாயிரவர்; திருப்பெருந்துறை முந்நூற்றுவர், திருவாக்கூர் ஆயிரவர், திருவீழிமிழலையர் ஐந்நூற்றுவர் என்பன போன்றவை குழுஉப் பெயர் என்றும், இக் குழுவினர் சிதம்பரம், திருவானைக்கா, திருப்பூவனம் முதலிய இடங்களில் இருந்து திருத்தொண்டு புரிந்தனர் என்றும் தெரிகின்றன. தக்கயாகப்பரணி, கண்ணி 219 உரை. ஒரு நடனப் பெண் தனக்கு "நாற்பத்தொண்ணாயிர மாணிக்கம்" என்று பெயர் வைத்துக் கொண்டிருந்தாள் என்பது, அவள் அச் சிவகணத்தாரிடம் கொண்டிருந்த பெரும் பக்தியை உணர்த்துகிறது. 202,14 of 1929-'30.

1a. 'முந்நூற்று இருபத்து நால்வன்' என்று உணவுச் சாலையின் பெயர் இருப்பது. அஃதிருக்கும் ஊரளவயின் எண்ணிக்கையைக் குறிப்பதாகலாம். - A.R.E. 1925, P.83.

1b. 269 of 1911, 232 of 1921, 63 of 1918, 243 of 1925, 40 of 1925, 86 of 1911, 409 of 1925, 276 of 1925.

2. 129 of 1907, A.R.E. 1908, PP. 75-'6; -நான் இவ்வூரைப் பார்வையிட்டேன்.

3. 352, 357 of 1911.

4. A.R.E. 1912, P. 60.

5. 192 of 1928; 74 of 1930 - 31.

6. 368, 371 of 1911; 211, 246 of 1912.

7. 371 of 1912; S.I.I.5. 1358.

8. இக்கோயிலில் பைரவர்க்குத் தனிக் கோயில் உண்டு. நான் இதனைப் பார்வையிட்டேன்.

9. மத்த விலாசப் பிரகசனம்.

10. A.R.E. 1912, P.61.

11. இந்து உட்சமயங்கள், ப. 73.

12 ப. 309; இம்மடம் மகாமகக் குளத்தின் வடகரையில் உள்ள வீர சைவ மடம் - டாக்டர் சாமிநாதையர்.

13. 359 of 1916.

14. 361 of 1916.

15. 364 of 1916.

16. A.R.E. 1929-30, p. 77.

17. A.R.E. 1917, p. 124.

18. 111 of 1930.

19. 209, 211 of 1924.

20. A.R.E. 1929-'30, p.80.

21. 178 of 1935 - 36; A.R.E. 1935-36, P.82.

22. 72 of 1930-31.

23. 164, 173 of 1935-36.

24. 352 of 1912.

25. 443 of 1909; A.R.E. 1935-36, P.82.

26. வட இந்திய... ... ...2, ப. 897.
27. S.I.I.2.90.
28. மேலது, 20.
29. 413 of 1902.
30. 301 of 1907; colas.vol 2, part I, P.P. 221, 222.
31. 190 of 1907; A.R.E. 1908 pP. 67-8.
32. 40 of 1906.
33. S.I.I. 3. P.22; A.R.E. 1908. P.68.
34. சோழர் கோயிற்பணிகள், ப. 106.
35. 586 of 1908. இன்று இம் மடம் சங்கராச்சாரியார் மடமாக இருக்கிறது. A.R.E. 1809, P.E. 104-'5.
36. 218 of 1908; A.R.E. 1911, P. 75.
37. 392 of 1908.
38. 108, 109 of 1911.
39. 49 of 1911; A.R.E. 1909, P 75.
40. 133 of 1908; த. பொழில் 12, ப. 201.
41. நம்பி திருவிளையாடல், வாழ்த்து 23.
42. மேலது முகவுரை, ப. 20.
43. 584 of 1908.
44. 129 of 1908; A.R.E. 1909, P. 104.
45. 192 of 1929.
46. 104 of 1908.
47. 76 of 1922.
48. செந்தமிழ். 3, பக். 189-190.
49. கி.பி. 1213ஆம் ஆண்டுக் கல்வெட்டில் பாலறாவாயன் உய்ய வந்தான் (149 of 1932-33) என்ற பெயர் காணப்படலால், 'உய்யவந்த தேவர்' என்பது அக் கால வழக்கொடு பொருந்திய பெயரே என்பது அறிக.
50. 380 of 1908.
51. சந்தானாசாரியார் சரிதம், பக். 17-31.
52. மேலது, பக் 6-7.
53. பிற்பட்ட நாயக்கர் காலத்தில் வில்லியனூரில் மெய்கண்ட சந்ததி மடம் ஒன்று இருந்தது. அதனில் திருவக்கரை மெய்ஞ்ஞான மாமுனி மாணவர் ஒருவர் தலைவராயிருந்தார் - 206, 207 of 1936-37.
54. A.R.E. 1909, P. 103.
55. சந்தானாசாரியார் சரிதம்; ப. 17.
56. 76, 216 - 219, 409 of 1925; 91 of 1926.
57. 90 of 1916.
58. A.R.E. 1923, P. 110.
59. A.R.E. 1928-29, P.78.
60. "இக் குகையிடி கலகம் அப்பிராமண சைவ மடங்கள்மீது பிராமணர்களால் தூண்டப்பட்டதாக இருத்தல் வேண்டும். ஆயினும் அப்பிராமண மடங்கள் அழிந்துபடவில்லை. இவை மூன்றாம் இராசராசன் காலத்திலும்

பிற்காலத்திலும் சிற்றரசர் ஆதரவிலும் தனிப்பட்டவர் ஆதரவிலும் நன்கு செழித்து வளர்ந்தன"- A.R.E.1913, P.112.

61. சோழர், தொகுதி 2, பகுதி 1, பக். 470-1.

★இப் பகுதிக் கெனத்தனி அதிகாரம் வகுக்க முடியாமையின் இங்குச் சேர்க்கப்பட்டது.

62. மெய்கண்டார் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியினர் என்பது முன்பே கூறப்பட்டது. அவருக்கு முற்பட்டது திருக்களிற்றுப் படியார் என்னும் சைவசித்தாந்த சாத்திரம்; அந் நூல் தில்லையில் உள்ள திருக்களிற்றுப் படியில் வைக்கப்பெற்றுச் சிறந்த நூலென மதிக்கப்பட்டது என்பது வரலாறு (சந்தானாசிரியர் சரிதம், ப. 33). இங்குக் குறிக்கப்பட்ட பெயர் சுமார் கி.பி. 1175-இல் வழங்கிய பெயராகும். அதனால் அந் நூலின் பெயரையோ, அல்லது அப்படியின் பெயரையோ (அதன் சிறப்புக் கருதி) மக்கட்கு இட்டு வழங்கலாயினர் போலும்!

63. தமிழ்ப் பொழில் 16, ப. 343.

64. மேலது. 23 ப. 60.

65. 228 of 1929.

66. 141 of 1926.

67. 501 of 1904.

# 10. சோழர் காலச் சைவ இலக்கியம்

## *சைவத் திருமுறைகள்*

**சை**வத் திருமுறைகள் பன்னிரண்டில், அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் பாடிய முதல் எட்டுத்திருமுறைகளும் 10-ஆம் திருமுறையாகிய திருமந்திரமும் பல்லவர் காலத்தவை. 11-ஆம் திருமுறையில் உள்ள காரைக்கால் அம்மையார், ஐயடிகள், சேரமான் பெருமாள், நக்கீரதேவர், பரணதேவர், கபிலதேவர், கல்லாடதேவர் ஆகியோர் இயற்றிய பாடல்களும் பல்லவர் காலத்தவை. அவை நீங்கலாகவுள்ள 11-ஆம் திருமுறைப் பாடல்களும் 9-ஆம் திருமுறையும் சேக்கிழார் இயற்றிய பெரிய புராணமாகிய 12-ஆம் திருமுறையும் சோழர் காலத்திற் செய்யப்பட்ட திருமுறைகளாகும்.

ஒன்பதாந்திருமுறையில் ஒன்பது அடியார்கள் பாடிய பாடல்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பாவும் 'திருவிசைப்பா' எனப்படும். ஒன்பது அடியாராவார் - திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பி காடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலி அமுதனார், புருஷோத்தம நம்பி, சேதிராயர் என்பர். **(1) திருமாளிகைத் தேவர்** திருவிடை மருதூர், மாளிகை மடத்தைச் சேர்ந்தவர்.[1] இவர் தில்லையைப் பற்றியே நான்கு திருவிசைப்பாக்கள் பாடியுள்ளார். **(2) சேந்தனார்** திருவீழிமிழலையில் வாழ்ந்தவர்; தில்லையில் இருந்தபோது தேர் ஓரிடத்தில் நின்றுவிட்டதைக்கண்டு திருப்பல்லாண்டு பாடி அதனைப் போகச் செய்தனர் என்பர். இவர், திருவீழிமிழலை, திருவாவடுதுறை, திருவிடைக்கழிமீது மூன்று திருவிசைப்பாக்களும், தில்லைமீது திருப்பல்லாண்டும் பாடியுள்ளார். தில்லையில், மூவாயிரவர் இருந்தாற்போலத் திருவீழிமிழலையில் ஐந்நூற்றுவர் இருந்தனர் என்று இவர் குறித்துள்ளார்.[2] **(3) கருவூர்த் தேவர்** முதலாம் இராசராசன் காலத்தவர்; தஞ்சைப் பெரிய கோவிலின் லிங்கத்தை ஆவுடையாரில் அசையாது பொருத்திய பெரியார். இவர் சமாதி அப்பெரிய கோயில் திருச்சுற்றில் இருக்கின்றது.[3] இவர் தில்லை, திருக்களந்தை - ஆதித்தேசுவரம், கீழ்க்கோட்டூர் - மணியம்பலம், திருமுகத்தலை, திரைலோக்கிய சுந்தரம், கங்கைகொண்ட சோழேச்சுரம், திருப்பூவணம்,

திருச்சாட்டியக்குடி, தஞ்சை ராசராசேசுவரம், திருவிடைமருதூர் ஆகிய பத்துத்தலங்களில் பத்துத் திருவிசைப்பாக்கள் பாடியுள்ளார். (4) **பூந்துருந்திநம்பி காடநம்பி** என்பவர் திருப்பூந்துருத்தியில் பிறந்தவர். இவர் திருவாரூர், தில்லை என்னும் இருபதிகள் மீது இரண்டு திருவிசைப்பாக்கள் பாடியுள்ளார். இவர் கணம்புல்லர், கண்ணப்பர், ஆரூர் நாவுக்கரசர், சம்பந்தர், சேரமான் பெருமான், சுந்தரர் ஆகிய நாயன்மார்களைத் தம் பாக்களில் பாராட்டியுள்ளார்.[4] (5) **கண்டராதித்தர்** முதற்பராந்தக சோழனின் மகனார். இவர் மனைவியாரே சைவத்திருப்பணிகளை மிகப்பலவாகச் செய்த செம்பியன் மாதேவியார். கண்டராதித்தர் தில்லையைப்பற்றியே ஒரு திருவிசைப்பாப் பாடியுள்ளார். இவர், தம் தந்தை சிற்றம்பலத்தைப் பொன் வேய்ந்தான் என்பதைக் குறித்துள்ளார்.[5] (6) **வேணாட்டடிகள்** என்பவர் தென் திருவாங்கூர்ப் பகுதியை (வேள்நாட்டை)ச் சேர்ந்தவர். இவரும் தில்லையைப் பற்றியே ஒரு திருவிசைப்பாப் பாடியுள்ளார். (7) **திருவாலி அமுதனார்** சீகாழியை அடுத்துள்ள திருவாலி என்னும் ஊரைச் சேர்ந்தவர்; நான்கு திருவிசைப்பாக்கள் தில்லையைப்பற்றியே பாடியுள்ளார். 'தென்னன் தமிழும் இசையும் கலந்த சிற்றம்பலம்'[6] என்று குறித்தலிலிருந்து, இவருடைய தமிழ்ச்சுவையும் இசை அறிவும் அறியற்பாலன. (8) **புருஷோத்தம நம்பி** என்பவர் தில்லை ஒன்றைப்பற்றியே இரண்டு திருவிசைப்பாக்கள் பாடியுள்ளார். (9) **சேதிராயர்** என்னும் பட்டம் திருக்கோவலூர் மன்னர்களே பூண்டிருந்தனர். ஆதலின் இவர், பல்லவர் காலத்து மெய்ப்பொருள் நாயனாரைப்போல சோழர் காலத்திருந்த திருக்கோவலூர் மன்னராகக் கருதுதல் தகும். இவர் தில்லையைப்பற்றி ஒரே திருவிசைப்பாப் பாடியுள்ளார். இது முன் சொன்ன சேந்தனாரது திருப்பல்லாண்டு நூலின் இறுதியில் வைக்கப்பட்டுள்ளது.

ஒன்பதாந் திருமுறையில் பல பாக்கள் தில்லையைப் பற்றியே காண்பதற்கு என்ன காரணம்? ஐந்து தொழில் இயற்றுவதற்கு ஏதுவாகிய திருநடனம் செய்யப்படும் ஒளி நிலையமாகத் தில்லை விளங்குவதால், அதனை எல்லாத் தலங்களிலும் உயர்ந்ததாகச் சைவ நூல்கள் கூறும்.[7] அத்துடன், முதற் பராந்தகன் காலமுதல் சோழர்கள் தில்லையைப் பல்லாற்றானும் சிறப்பித்து வந்ததும், தில்லைப் பெருமானைத் தம் குலநாயகன் எனக் கூறிவந்ததும் தில்லையைச் சோழர் காலத்தில் உயர்த்திவிட்டன. இத்தகைய காரணங்களாற்றான் தில்லை மேற்சொன்ன ஆசிரியர்களால் பெரிதும் போற்றப்பட்ட தென்னலாம்.

## 11-ஆந் திருமுறை

இத்திருமுறையில் குறிப்பிட்டுள்ள இளம்பெருமான் அடிகள், அதிரா அடிகள், பட்டினத்துப் பிள்ளையார், நம்பி ஆண்டார் நம்பி என்னும் நால்வர் பாடிய நூல்களே சோழர் காலத்தவை. ஆதலின் அவற்றுள் ஒவ்வொன்றைப் பற்றிய விவரங்களை இங்கு காண்போம்.

**(1) இளம்பெருமான் அடிகள் :** 'பெருமான் அடிகள்' என்பது தேவரத்தில் சிவபிரானைக் குறிக்கிறது; கல்வெட்டுக்களில் பெரும்பாலும் பக்தி மிகுந்த முடியரசனைக் குறிக்கிறது.[8] 'இளம்பெருமான் அடிகள்' என்பது இளவரசனைக் குறிப்பதாகும். இங்கு கூறப்பட்ட சைவப்பெரியார் எந்த அரச மரபினர் என்பது தெரிய வழியில்லை. இவர் சிவபெருமான்மீது மும்மணிக்கோவை ஒன்று பாடியுள்ளார். அந்நூலில் உள்ள முப்பது பாக்களும் சுவைபயப்பவை.

**(2) அதிரா அடிகள் :** இவர் பெயர் அதிரா(ஜேந்திர) - அடிகள் என வழங்கப்பெற்று, அப்பெயர் நாளடைவில் மருவி, 'அதிரா அடிகள்' என ஆயிற்றோ, என்று கருத இடமுண்டாகிறது. இவர் விநாயகர்மீது 'மூத்த பிள்ளையார் - திருமும்மணிக் கோவை' என்னும் ஒரு நூல் பாடியுள்ளார். முப்பது செய்யுட்களில் 23 தான் அச்சிடப்பட்டுள்ளன; எஞ்சிய பாக்கள் அழிந்துவிட்டன.

**(3) பட்டினத்துப் பிள்ளையார் :** இவர் காவிரிப்பூம் பட்டினத்தைச் சேர்ந்த திருவெண்காட்டினர். இவர் (1) கோயில் - நான்மணிமாலை, (2) திருக்கழுமல - மும்மணிக்கோவை, (3) திருவிடைமருதூர் - மும்மணிக் கோவை, (4) திரு ஏகம்பமுடையார் - திரு அந்நாதி, (5) திருவொற்றியூர் - ஒருபா - ஒரு பஃது என்னும் ஐந்து நூல்களைப் பாடியுள்ளார். கோயில் நான்மணிமாலையில்.

> **...............................நின்**
> **தமர்பெயர் எழுதிய வரிநெடும் புத்தகத்**
> **தென்னையும் எழுத வேண்டுவன்[9]**

எனவரும் அடிகள் உள்ளத்தை ஈர்க்கத்தக்கவை.

திருக்கழுமல மும்மணிக் கோவையில் சம்பந்தர் ஞானப்பால் உண்ட வரலாறு கூறப்பட்டுள்ளது.[10] திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில் பிறசமயத்தார் செயல்களும் சைவர் வாழ்க்கையும் அழகுறக் கூறப்பட்டுள.[11] அதே கோவையில் வரகுண பாண்டியனுடைய சிவபக்தி விரிவாகக் கூறிப் பாராட்டப் பட்டுள்ளது.[12]. சண்டீசர், சிறுத்தொண்டர், சாக்கியர், அப்பர்,

சம்பந்தர், சுந்தரர் மாணிக்கவாசகரும் பாராட்டப்பட்டுள்ளனர்.[13] திருவேகம்பமுடையார் - திருவந்தாதி ஏறத்தாழ மூவர் பாடிய 'க்ஷேத்திரக் கோவை' போல அமைந்துள்ளது. ஒவ்வொரு சமயத்தவரும் வணங்கும் கடவுளாக இருந்து அவ்வவரை ஆட்கொள்வதாகக் கூறும் பகுதி ஒருபா - ஒரு பஃதில் சிறந்த பகுதியாகும்.[14]

**(4) நம்பி ஆண்டார் நம்பி :** இவர் முதலாம் இராசராசன் வேண்டுகோள்படி திரு முறைகளைத் தொகுத்தவர் என்பது முன்னர்க் கூறப்பட்டது. இவர் பத்துச் சிறுநூல்களைப் பாடியுள்ளார். அவற்றுள் ஆறு சம்பந்தரைப் பற்றியவை. அவை (1) சம்பந்தர் - திருவந்தாதி, (2) சம்பந்தர் - திருச்சண்ப - விருத்தம், (3) சம்பந்தர் - திருமும்மணிக் கோவை, (4) சம்பந்தர் - திருவுலா மாலை, (5) சம்பந்தர் - திருக்கலம்பகம், (6) சம்பந்தர் - திருத்தொகை என்பன. இந்த ஆறிலும் சம்பந்தர் வரலாற்றுக் குறிப்புக்கள் அனைத்தும் அடங்கிவிட்டன. (7) திருநாவுக்கரசர் - திரு ஏகாதச மாலையில் அப்பரைப் பற்றிய சிறந்த வரலாற்றுக் குறிப்புக்கள் காண்கின்றன. (8) கோவில் - திருப்பண்ணியர் விருத்தத்தில் கண்ணப்பர், சேரமான், சுந்தரர், சாக்கியர், அதிபத்தர், கலிக்காமர், மாணிக்கவாசகர், வரகுண பாண்டியன் ஆகியோர் குறிக்கப்பட்டுளர்.[15] (9) விநாயகர் - திரு - இரட்டைமணி மாலை இருபது செய்யுட்களைக் கொண்டது. (10) திருத்தொண்டர் - திரு - அந்தாதி என்பது சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையைப் பின்பற்றி விரித்துப் பாடப்பட்ட நூலாகும். அதில் 63 நாயன்மார் வரலாற்றுக் குறிப்புகளும் ஒன்பது தொகை அடியார் பற்றிய குறிப்புக்களும் காண்கின்றன. இந்த அந்தாதி சேக்கிழாரது பெரிய புராணத்திற்குச் சிறந்த அடிப்படை நூலாகும்.

## *12 - ஆந் திருமுறை*

இது சுந்தரர் வரலாற்றையும் அவரால் திருத்தொண்டத் தொகையில் குறிக்கப்பெற்ற அடியார் வரலாறுகளையும் கூறும் பெருங் காவியமாகும்; ஏறத்தாழ 4,250 செய்யுட்களை உடையது. தமிழ் நாட்டில் சைவ சமயம்பற்றிச் செய்யப்பெற்ற முதற்காவியம் இதுவேயாகும். இது 'திருமுறைகளையும், கன்ன பரம்பரைச் செய்திகளையும், நாயன்மார் வரலாறுகளை அங்கங்கே குறிக்கும் தில்லை உலாப்போன்ற பிற நூல்களையும் சமண - பௌத்த சமய நூல்களையும் நாயன்மார் பற்றிய கல்வெட்டு சிற்ப - ஓவியச் சான்றுகளையும் உறு கருவிகளாக்கொண்டு செய்யப்பெற்றது. இது மொழி பெயர்ப்பு நூலன்று. நூலாசிரியர் காலத்தில் நடந்த வரலாறும்

அன்று; அவர்க்கு முன்னர் ஏறத்தாழக் கி.பி. 300 முதல் 900 வரை இருந்த நாயன்மார்களைப் பற்றிய வரலாறு. நாயன்மாரோ, வடக்கே காம்பிலியிலிருந்து தெற்கே மதுரை வரையிற் பல நாடுகளில் வாழ்ந்தவராவர் - பல காலங்களிற் பரந்துபட்டு வாழ்ந்தவராவர். பலசாதியார் ஆவர். அப்பெருமக்களுடைய பிறப்பிடம், சாதி, செய்த சமயத் தொண்டு முதலிய செய்திகளைத் திருமுறைகளை மட்டும் நம்பி எடுக்காமல், தாமும் நன்கு விசாரித்து, பல இடங்கட்கும் நேரிற்சென்று ஆராய்ந்து யாவற்றையும் திரட்டிக்கொண்ட பிறகே நூல் பாடினார் எனக் கருத அவர் நூலிற் பல சான்றுகள் உள.[16] அப்பர் புராணத்தில் குணபர ஈசுவரத்தையும் சிறுத்தொண்டர் புராணத்தில் வாதாபிப் படையெடுப்பையும் அவர் கூறியிராவிடில், இன்று அப்பர் - சம்பந்தர் காலத்தை அறிய வேறு வழியில்லை. சேக்கிழார் சிறந்த சைவர்; பெரும் புலவர்; இவற்றுடன் சோழப் பெருநாட்டின் முதலமைச்சர் ஆதலின், அவரது காவியத்தில் இலக்கிய நயம் - வரலாற்று உண்மைகள் - சைவ சித்தாந்தக் கருத்துக்கள் என்பன அங்கங்கே மிளிர்கின்றன.

சங்க காலத்திற்குப் பிறகு தமிழராய சோழராட்சியில் தமிழ்நாட்டு நாயன்மாரைப் பற்றித் தமிழர் பாடிய தமிழ்க்காவியம் இஃது ஒன்றே என்பது கவனிக்கத்தக்கது. இதன்கண் பிராமணர் முதல் பறையர் ஈறாகவுள்ள பல சாதிமக்களின் பழக்கவழக்கங்கள், பேச்சு முறைகள், நாட்டின் பெரும்பிரிவுகள் - உட்பிரிவுகள், நாட்டு ஆட்சிமுறை, சமண - பௌத்த - சைவ சமயக்கருத்துக்கள் இன்ன பிறவும் விளக்கமாகத் தரப்பட்டுள்ளன. இதன்கண் கிடைக்கும் இச்செய்திகள் சோழர்கால இலக்கியங்கள் எதனிலும் கிடைக்கா. ஒருபக்கம் பல்லவர் கால வரலாற்றையும் மற்றொரு பக்கம் சோழர்கால நாட்டு நிலையையும் மொழி நிலையையும், சைவசமய நிலையையும் உள்ளடக்கிக் கொண்டுள்ள இந்நூல், தமிழர் நற்பேற்றின் பயனாய்த் தோன்றியதென்னல் மிகையன்று. இந்நூலிருந்து சேக்கிழாருடைய இலக்கியப் புலமை, இலக்கணப் புலமை, திருமுறைப் புலமை, இசை - நடனம் - மருத்துவம் - வான நூல் முதலிய பல்கலைப் புலமை சைவ சித்தாந்த அறிவு முதலியவற்றை நன்கறியலாம்.[17] இவை விரிப்பிற்பெருகும்.[18] பெரியபுராணம் ஏற்பட்ட பின்னரே 63 நாயன்மார்கட்கும் சிற்பங்கள் ஏற்பட்டன; கோயில் தோறும் சிலைகள் ஏற்பட்டன; விழாக்கள் பெருகின என்னும் விவரங்களைச் சோழர்காலக் கோயில்களிலிருந்தும் கல்வெட்டுக் களிலிருந்தும் நன்கறியலாம்.

### தக்கயாகப் பரணி

இது மூவருலாப் பாடிய ஒட்டக்கூத்தர் பாடியது. மூவருலாக் கொண்டு விக்கிரமசோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன் திருப்பணிகளையும் சைவப்பற்றையும் உணர்தல்போல, இத்தக்கயாகப் பரணிகொண்டு, சோழர்காலச் சைவத்தைப் பற்றிய சில விவரங்களை அறியலாம். சைவத்தின் உட்பிரிவுகளுள் ஒன்றான பைரவ மதத்தின் செயல்கள் இதில் கூறப்பட்டுள்ளன. பைரவர் தங்கள் தலைகளை அரிந்து துர்க்கையை வழிப்பட்டனர்; பைரவி மந்திரத்தைச் செபித்தனர்.[19] சம்பந்தர் முருகனது அவதாரம் என்ற கருத்துத் தக்கயாகப்பரணி செய்த காலத்தில் இருந்தது போலும்! அவர் சமணரை வென்றமை, சமணர் தாமே கழுவேறினமை என்பன பற்றிய விவரங்கள் தரப்பட்டுள்ளன.[20] சிவாகமம், சைவம் ஆறு பிரிவுகளை உடையது, சைவ யோகிகள் இலக்கணம் என்பன பற்றிய குறிப்புக்களும் தரப்பட்டுள்ளன.[21] சுத்த சைவரே மாகேசுவரர் என்பவர் என்பதும், சூல முத்திரையிட்டுச் சைவராக்குதல், மழுவைப் பொறித்து மாகேசுவரர் ஆக்குதல் என்பனவும் குறிக்கப்பட்டுள்ளன.[22] இந்த நூலின் மூலமும் உரையும் மிகச் சிறந்தவையாகும்.

### கல்லாடம்

இதன் ஆசிரியர் கல்லாடர் என்பவர். இவர் காலம் ஏறத்தாழக் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு என்னலாம்.[23] இவர், மாணிக்க வாசகர் பாடிய திருக்கோவையாரின் சிறப்பை உலகிற்கு அறிவிக்க, அதிலிருந்து 100 செய்யுட்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றின் பொருள் இக்கல்லாடத்தில் காணும்படி அமைத்து நூறு அகவற் பாக்களைப் பாடியுள்ளார். ஆதலின், இது கோவை நூல் என்று கூறத்தகும். இவர் தம் பாக்களில் சிவபிரானுடைய திருவிளையாடல்கள் பலவற்றைக் குறித்துள்ளார். நம்பி திரு விளையாடல் சோழர் காலத்து நூல் என்று கூறத்தக்க சான்று இன்மையின்,[24] திருவிளையாடல்களைக் கூறும் உத்தர புராணம் என்னும் வடமொழி நூலே இவர்க்கு முற்பட்டதாகும். அதனைக் கொண்டே இவர் திருவிளையாடல்களைக் குறித்தனர் என்று கொள்ளலாம்.[25] இந்நூலின் செய்யுள் நடை கடினமாதலால் இதனைப் படிப்பவர் தொகை மிகக் குறைவு. ஒவ்வொரு செய்யுளிலும் சிவபிரான் திருவிளையாடல் அல்லது வேறு வகைச் சிறப்புக் கூறப்பட்டுள்ளது. கடவுளைப் புகழாதாருடைய உள்ளம் தீவினையாகிய இருள் நிறைந்தது; திருநீறு நல்வினையை உண்டாக்கும்; சிவபெருமான் திருவடிகளை உள்ளத்திற் கொள்ளாதவர் கூடா வொழுக்கத்தினர்; சிவன்

எல்லா உயிர்களிடத்தும் கலந்திருப்பவன்; அனைத்தும் உணர்கின்ற பேரறிவு, அனைத்தும் தன் வயத்தே யுடைமை, பேரருள் உடைமை, முடிவில்லாத ஆற்றல், தோற்றமில்லாத தன்மை, பாசமின்மை, குற்றமற்றதன்மை, விகாரமின்மை என்னும் எட்டுக் குணங்களையும் உடையவன் சிவன் என்பன போன்ற சமயக் கருத்துக்கள்[26] பல இந்நூலில் ஆங்காங்கு கூறப்பட்டுள்ளன.

## தில்லை - உலா

இஃது இன்றளவும் அச்சேறாத நூல்; சிதைந்த நிலையில் முற்றுப் பெறாதிருப்பது. இது தமிழ்ப் பொழிலில் வெளியிடப்பட்டது;[27] தில்லையில் உள்ள கூத்தப்பிரான் உலாவினை விளக்கிக் கூறும் நூல். இது தில்லையைப் பற்றிய நூலாயினும், திருநீற்றுச் சோழன் ஒருவனைப் பற்றியே கூறி, அவன் சந்ததியார் செய்த திருப்பணிகளையோ அவர்கள் பெயரையோ குறியாமையின், திருநீற்றுச் சோழன் காலத்தில் செய்யப்பட்டதெனக் கருதலாம். இறைவனது உலாவில் திருநீற்றுச் சோழன் குதிரைமீது முன்சென்றதாகவும், பிறகு சேரமான் பெருமான், வரகுணன், நால்வர் படிமங்கள் தேர்களில் சென்றதாகவும், அவற்றுக்குப் பிறகு இறைவன் சென்றதாகவும் உலாக் கூறுகிறது. ஆதிசிவாகமப்படி தில்லையில் பூசை நடந்தது. சிற்றம்பலப் பொன்தகடு ஒவ்வொன்றின்மீதும் 'சிவாயநம' என்னும் ஐந்து எழுத்துக்களும் பொறிக்கப்பட்டிருந்தன[28] என்பன குறிப்பிடத்தக்கவை. இந்நூலில் சமயாசார்ரியர் நால்வர், சேரமான் பெருமாள், கோட்புலி, சிறுத்தொண்டர், சண்டீசர் பற்றிய அருட் செயல்கள் காண்கின்றன.[29]

## சைவ சித்தாந்த சாத்திரங்கள்[30]

(1) திருவுந்தியார், (2) திருக்களிற்றுப்படியார், (3) சிவஞானபோதம், (4) சிவஞானசித்தியார், (5) இருபா - இருபஃது, (6) உண்மை விளக்கம், (7) சிவப்பிரகாசம், (8) திருவருட்பயன், (9) வினா - வெண்பா, (10) போற்றிப் பஃறொடை, (11) கொடிக்கவி, (12) நெஞ்சு விடுதூது, (13) உண்மை நெறி விளக்கம், (14) சங்கற்ப நிராகரணம் என்பன. இவை ஒவ்வொன்றைப் பற்றியும் இடச்சுருக்கம் கருதி, ஓரளவு இங்கு கூறலாம்.

### 1. திருவுந்தியார்

இது சிவஞான போதத்திற்கு முற்பட்ட நூல், இதனைச் செய்தவர் திருவியலூர் உய்யவந்த தேவநாயனார்.[31] இந்நூல், சிவஞான

போதத்தைப் போலச் சித்தாந்தக் கருத்துக்களைக் கோவைப்படக் கூறாது, அவ்வப்போது ஆசிரியர்க்குத் தோன்றிய உணர்ச்சி அனுபவத்தைக் கூறும் 45 செய்யுட்களை யுடையது. ஆயின், இவ்வநுபவப்பாடல்கள், சமய சாத்திரங்கள் போலவே, கடவுள் - உயிர் - உலகம் என்னும் மூன்று பொருள்களின் இலக்கணத்தையும், பயன்களையும், பயன் அடையும் நெறிகளையும் விளக்குவனவாகும்.

### கடவுள் நிலை

பரம்பொருள் சொல்லையும் மனத்தையும் கடந்து நிற்பது; இயற்கையாகவே மலம் அற்றது; அறிதற்கு அரியது; ஆயினும், உயிர்கள் உய்யுமாறு கருணையாக விளங்குவது; அவ்வருள் காரணமாக அருவத்திலிருந்து உருவமாக வெளிப்படுவது. அது தானாகவே அவ்வுருவைக் கொள்ளும். அப்பரம் பொருள் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் உயிர்கட்குக் கூட்டுவது; பாவனைக்கு அப்பாற்பட்டது; ஆன்ம அறிவால் அறியப்படாதது; உயிர்களைப் பக்குவப்படுத்துவதற்காகக் கள்ளனைப்போல மறைந்து நின்று தியானம் - மந்திரம் - சைவ வேடம் இவற்றால் உயிர்களை நல்வழிப்படச் செய்வது; பக்குவம் முதிர்ந்தபோது குருவடிவில் வெளிப்பட்டு, தீட்சை செய்து, உண்மை ஞானத்தை உணர்த்துவது; உயிர்கள் செய்தவத்திற்குப் பயன் அளிப்பது; தன் தன்மை அருளி உயிர்களை வீடுபெறச்செய்வது.[32]

### உயிரின் இயல்பு.

உயிர்கள் பல. அவை பாச பந்தத்தால் கட்டுப்பட்டவை; முத்தி நிலையில் பாசம் என்னும் மலம் அற்று நிற்பவை. மெஞ்ஞான நிஷ்டை கூடிய மக்கள் பிறவிப்பெருங்கடல் நீந்தினவராவர். அவர்கள் ஞானக்கண்ணால் நோக்கும் இயல்பினர்; கசிந்த உள்ளமுடையவர்; ஆதலின் கடவுளை உணரும் சக்தி பெற்றவராவர். முத்தி நிலையிற் சிவமாந்தன்மை பெற்றவராயினும் உயிர்கள் உயிர்களே.[33]

### சிவமாந்தன்மை பெற வழி

மக்கள் மலம் நீங்கி நிற்றற்கு முயற்சி, சிவன்பால் மறவாத அன்புடைமை, சிவத்தைப் பற்றியே எண்ணியிருத்தல் என்பவை வழிகள் ஆகும். இவற்றால் உலகின்பாற்செல்லும் பற்றுச் சிவத்தின்பால் செல்லும்; வழிபாடு உறுதிப்படும். அந்நிலையில் சிவம் குருவாக வந்து, சிவதீட்சை செய்து, சிவஞானம் சேர்க்கும். அதனால் திருவருட் சக்தி மனத்தின்கண் பொருந்தியிருக்கும்.[34]

### முக்தி நிலை

இது சொல்லொணா இயல்புடையது; அறிவிற்கு எட்டாத உயர் நிலையது; திருவருள் பெற்றவர், இன்புறு நிலையடைவர். இந்நிலை அடைந்தோரே 'தொண்டர்' எனப்படுவர்; நனவில் தூய மேல் நிலையில் இருப்பவர். அவர்கட்குச் சிற்றின்பமும் பேரின்பமாகும். அவர்கள் பித்தரைப்போலக் காணப்படுவர். ஆயின், அவர்கள் கருத்தும் உயிரும் இறைவன் நினைவை விட்டு நீங்கா இயல்பின.[35]

### 2. திருக்களிற்றுப் படியார்

இதுவும் சிவஞான போதத்திற்கு முற்பட்ட நூல். இதனைச் செய்தவர் மேற்சொன்ன உய்யவந்த தேவநாயனார் மாணவர்க்கு மாணவர். இவர் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் என்னும் பெயர் கொண்டவர்.[36] இந்நூல் நூறு வெண்பாக்களை உடையது; திருவுந்தியாரின் கருத்தைச் செவ்வையாக விளக்குவது. இது பொன்னம்பலத்திலுள்ள திருக்களிற்றுப்படியில் வைக்கப்பட்டுப் பாராட்டப்பட்டதாதலின் 'திருக்களிற்றுப்படியார்' எனக் காரணப் பெயர் பெற்றது.[37] இந்நூலில், 63 நாயன்மார் வரலாறுகளிலிருந்தும் உதாரணங்கள் தந்து வல்வினை, மெல்வினை என்பன விளக்கப்பட்டுள்ளன; சாத்திர விளக்கங்கள் சில உவமைகளால் தெரிவிக்கப்படுகின்றன; திருக்குறட்பாக்கள் சிலவற்றை மேற்கோளாகக் கொண்டு அவற்றின் பொருளை விளக்கும் செய்யுட்கள் இன்பம் பயப்பன.[38]

### இறை

பரம்பொருள் சத்தி – சிவமாக விளங்கும். அவ்வாறு விளங்குவது உலகிற்குத் தாயும் தந்தையும் ஆகிய நிலையாகும்.[39] தூய பொன்னின் நிறம், நகைகளாக மாறிய போதிலும் பொற்கட்டியாய் நின்ற போதும் ஒரு தன்மையாய் விளங்குதல் போல, இறைவன் உலகில் அத்துவிதமாகக் கலந்து ஒன்றன்றாய் இரண்டன்றாய் நிற்பன்.[40] கடல் நீரிலிருந்து உப்பு விளைவது போல, இறைவன் அருளாலே திருமேனி கொள்வான். இவ்வாறு கொள்ளும் திருமேனிகளில் ஆசிரியத் திருமேனி சிறப்புடையது. கடல் நீரை முகந்து சென்று நன்னீர் பொழியும் முகில் போல – ஆசிரியனாக வெளிப்படும் இறைவன் அநுபவப்பயனை அறிவுரையாக உபதேசிப்பன்.[41] இறைவன் மெய்ஞ்ஞானிகளைச் சார்ந்து ஆவேசித்து நின்று உபதேசித்ததும் உண்டு. இவ்வுபதேசம் மெய்ஞ்ஞானிகளது செயலன்று; இறைவனது செயலே ஆகும்.[42] மலம்

எல்லாம் நாற்றம் உடையனவாயினும், தூய்மை பொருந்திய பசுவின் சாணம் பிறமலங்களை எல்லாம் நீக்குதல் போல - ஆசிரியர் மக்களுள் ஒருவனே எனினும், சிவன் அவனை நிலைக்களமாகக் கோடலால், அவன் பிறவியை ஒழிக்க வல்லவனாவன்.[43] கடலகத்தே அலைகளால் அலைபுறாது ஆடும்படி நின்றவர்க்கும் கடலின் ஆழத்தையும் அகலத்தையும் அளத்தல் அரிது. அதுபோலக் கடவுள் அருளைப் பெற்றவராயினும், அவர்கள் அவனது முழுப் பெருமையை அறிந்தவராகார்.[44]

## உயிர்

உயிர்கள் தம் அறிவில் சிவம் விளங்க, தலைவனையும் (கடவுளையும்) தம்மையும் உணரும்; உணர்ந்த பிறகு உடலுடன் இருப்பினும் பற்று நீங்கப் பெற்றுச் செத்தாரைப் போலத் திரியும்; அவை சிவன் வயப்பட்டு நிற்குமாதலால் மீண்டும் உலக நிகழ்ச்சிகளிற் புகா.[45] ஆற்று நீர் கடலிற்கலந்து கடல் நீராகி மீண்டும் ஆற்றின் படுகையில் மேலேறினும் உப்புத்தன்மை மாறுவதில்லை. அதுபோல, சிவத்தோடு ஒன்றி நிற்கும் மெஞ்ஞானிகளுடைய அறி - செயற் கருவிகள் மாயை நிலையில் நில்லாமல் சிவகரணமாக விளங்கும்.[46] அவர்களது பற்றற்ற நிலை, மணியின் கண் தூங்கும் நாக்கிற்கு ஒப்பாகும்.[47] படிகம் தன்னைச் சார்ந்துள்ள பொருளினது நிறத்தைக் காட்டும்; தனது நிறத்தைக் காட்டாது. அதுபோல, உலகத்தைச் சார்ந்து அவ்வண்ணமாயிருத்தலும்; முத்தி நிலையில் இறைவனைத் தழுவி நின்று அவன் வண்ணமாக இருத்தலும் உயிர்கள் நிலையாகும்.[48]

## சாதனம்

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன உயிர்கட்குச் சாதன நெறிகளாகும். சிவனறம் வல்வினை, மெல்வினை என இருவகைப்படும். இறைவனைத் துணை என்று கருதி ஒழுகுவதும், பூசை, தியானம், பாடல், ஆடல் முதலியன நிகழ்த்துவதும் மெல்வினை எனப்படும்.[49] சிறுத்தொண்டர் பிள்ளையை அரிந்ததும், சண்டீசர் தந்தையைக் கொன்றதும், அரிவாள் தாயர் தம் கழுத்தையே அரிய முயன்றதும் வல்வினைச் சிவனறம் ஆகும்.[50] திருவுருவ வழிபாடும் ஆறு ஆதாரங்களில் இறைவனை நினைத்துத் தியானித்தலும் 'ஆதாரயோகம்' எனப்படும். இறைவனை அகண்டமாய் அருள்வெளியில் மௌனமாக இருந்து வழிபட்டு அவனோடு ஒற்றுமையுற்று நிற்றல் 'நிராதாரயோகம்' எனப்படும்.[51] ஐந்தெழுத்து (பஞ்சாக்ஷரம்) இறைவனைக் காட்டும் இயல்புடையது. நாத

தத்துவத்திற்கு அப்பாலுள்ள இறைவனை யோக முடிவில் கேட்கும் சிலம்பொலிவழியே சென்று அடைய முயல வேண்டும்.[52] 'நான் பிரமம்' என்பது மயக்க உணர்ச்சியேயாகும்.[53] உயிரினிடம் சிவவடிவமாகிய ஞானத்தைக் கண்டு வணங்கிச் சிவபெருமானுக்கு அன்பு நீரால் திரு மஞ்சனம் ஆட்டி தன்னை, அவனுக்கு வாடாத ஒரு மலராகச் சாத்தி வழிபடின், பிறவி ஒழியும்.[54] அறிவு நெறியும், அன்பு நெறியும், பிறப்பை அறுக்க வல்லவை.[55]

## இறைவனை அணைந்தோர் இலக்கணம்

இறைவனை அணைந்தவரே அடியார் ஆவர். ஆலமரத்தைத் தன்னகத்தே அடக்கிய வித்து போலத் திருவருளைத் தன்னகத்தே அடக்கியவர் அடியார்.[56] இறைவன் பெருமையை அடியார் அறிவார்; அடியார் பெருமையை இறைவன் அறிவான். இதற்குக் கண்ணப்பரும் காளத்தியப்பருமே சான்றாவர்.[57] இறைவன் பக்திவலையிற் படுபவன் என்பது சேந்தனார் அமுது படைத்த வரலாற்றிலிருந்து தெளியலாம்.[58] ஞானநெறி நின்றவர்க்குக் காலம், இடம், திசை, இருக்கை என்பன இல்லை.[59] சிவஞானமும் சிவயோகமும் வித்தும் முளையும் போல்வன.[60]

## 3. சிவஞான போதம்

இது மேற்சொன்ன 14 சாத்திரங்களில் தலை சிறந்தது; சித்தாந்த உண்மைகள் கோவைபடச் செய்யப்பட்ட செந்தமிழ் நூல். திருவெண்ணெய்நல்லூர் - மெய்கண்ட தேவர் என்னும் வேளாள அறிஞர் செய்தது; உரைநடைப் பகுதியும் செய்யுட்பகுதியும் உடையது. உரைநடைப் பகுதி மேற்கோள்களையும் ஏதுக்களையும் உடையது; செய்யுட் பகுதி 12 சூத்திரங்களாகவும் 81 வெண்பாக்களாகவும் உள்ளது. இப்பன்னிரண்டு சூத்திரங்களும் ரௌரவ ஆகமத்தில் உள்ள 12 வடமொழிச் சூத்திரங்களின் மொழிபெயர்ப்பு என்பது டாக்டர் ரமண சாஸ்திரி போன்ற ஒரு சார் அறிஞர் கருத்து.[61] சுவாமி வேதாசலம், கா. சுப்பிரமணிய பிள்ளை போன்ற அறிஞர்கள் அது முதல் நூலே என்று கருதுகின்றனர்.[62] தென்னிந்திய சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் தலைவராகவுள்ள ம. பாலசுப்பிரமணிய முதலியார், (பி.ஏ.,பி.எல்.), சிவஞான போதம் மொழி பெயர்ப்பன்று என்பதற்கு 120 காரணங்கள் காட்டி 1949இல் சிறுநூல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.[63]

மெய்கண்டார் கி.பி. 13ஆம் நூற்றாண்டின் முன்பகுதியில் வாழ்ந்தவர் என்பது சென்ற பகுதியிற் கூறப்பட்டது. இவர் பரஞ்சோதி

மாமுனிவர் என்னும் பெரியாரிடம் ஞானோபதேசம் பெற்றவர்.[64] இவரது நூலில் உள்ள முதல் மூன்று சூத்திரங்கள் பிரமாண - இயல் எனவும், அடுத்த மூன்றும் இலக்கண இயல் எனவும், அடுத்த மூன்று சூத்திரங்கள் சாதன இயல் எனவும், கடைசி மூன்றும் பயன் - இயல் என்றும் பெயர் பெறும்.

பிரமாண இயல் பதி, பாசம், பசு என்னும் மூன்றும் உண்மை என்பதை மூன்று சூத்திரங்களால் விளக்கும். இலக்கண இயல் பசு, பாசம், பதி என்னும் மூன்றன் இலக்கணங்களை முறையே மூன்று சூத்திரங்களால் விளக்கும். சாதன இயல் என்பது அடைதற்குரியவர் உயிர்கள் என்பதையும், இறைவன் திருமேனி கொண்டு ஞானம் உணர்த்தலையும், அங்ஙனம் ஞானம் கைவரப்பெற்ற உயிர் ஐந்தெழுத்தோதிப் பயன்பெறலையும் முறையே மூன்று சூத்திரங்களால் விளக்கும். பய்ன் இயல் என்பது பாசநீக்கம், சிவப்பேறு, சிவப்பேற்றினை நிலைநிறுத்த நிகழ்வன இன்னவை என்பன முறையே மூன்று சூத்திரங்களில் விளக்கும். இவ் வுண்மைகள் யாவும் தருக்கமுறையில் நிலைநிறுத்தப்பட்டுள்ளன.

### பிரமாண இயல்

முதற் சூத்திரத்தில் கடவுள் உண்மையும், அவர் எல்லாவற்றையும் ஒடுக்கி மீளத் தோற்றுவிக்கும் முதல் பெருமானாகிய சிவன் என்பதும் கூறப்பட்டுள்ளன. கடவுள் உயிர்களுடன் அத்துவிதமாக நின்று அவைகட்கு வினைப்பயனை ஊட்டும் முறையும், உயிர்கட்டு மலபந்தத்தால் பிறப்பு இறப்பு நிகழும் முறையும் 2-ஆம் சூத்திரத்திற் கூறப்பட்டுள்ளன. மூன்றாம் சூத்திரம் உயிர் சூன்யத்தை அறிவது, பருவுடல், அறிகருவிகள், நுண்ணுடல், பிராணவாயு முதலியவற்றிற்கு வேறானது. தானே அறிவதின்றி உணர்த்த உணர்வது, உடற் காரணங்கள் கூடியிருப்பினும் அவற்றிற்கு வேறாய் நின்று அறிவது என்பன குறிப்பிடப்பட்டுள்ளன.

### இலக்கண இயல்

உட்கரணங்கள் ஆகும் சித்தம், மனம், அகங்காரம், புத்தி என்பவற்றுள் ஒன்று அன்றாய், வேறாய் நிற்பது உயிர். அது அநாதிகால முதலே ஆணவ மலத்திற்கட்டுண்டு கிடப்பது. புற அகக்கருவிகளும் உயிரும், அமைச்சும் அரசும் போல விளங்குவன. உயிர்கட்கு அக்கருவிகள் துணை செய்வன. இவையாவும் தொழிற்படுங்காலம் உயிர்கட்கு 'நனவுநிலை' எனப்படும். இவற்றுட் சில குறைந்த காலம்

உயிர்கட்குக் 'கனவுநிலை; மேலும் சில குறைந்தபொழுது 'உறக்கநிலை' எனப்படும்; இவையாவும் நீங்கி உயிர் தன்னிலை நின்றபோது 'பேருறக்கநிலை' எனப்படும். உயிரின் அகங்காரம் ஒடுங்கிய நிலை 'உயிர்ப்பு அடக்கம்' எனப்படும். இவை அனைத்தும் நான்காம் சூத்திரத்துட் கூறப்பட்டுள்ள செய்திகள்.

கருவிகள் அறிவற்றன ஆதலின் தம்மையும் அறியா; தம்மைச் செலுத்தும் உயிரினையும் அறியா; அவைபோல உயிர்களும் தம்மை அறியா; தம்மைச் செலுத்தும் இறைவனையும் அறியா என்பது ஐந்தாம் சூத்திரத்துப் பொருளாகும்.

சத்து, அசத்து என்னும் இரு மொழிகட்கும் இலக்கணம் உரைப்பது ஆறாம் சூத்திரம். 'சத்து' என்றும் கேடின்றி விளங்கும் பொருள். எனவே, இறை ஒன்றே, அவ்விலக்கணத்திற்கு இலக்கியமாகும். ஆயினும், சைவ சித்தாந்தத்தில் முப்பொருள்களாகிய இறை, உயிர், உலகம் என்பன என்றும் பொருள்களாக ஒப்புக்கொள்ளப்பட்டவை. ஆதலின் அவை மூன்றும் 'சத்தே' ஆகும். உயிரும் உலகமும் விகாரமடைகின்றமையின் அசத்தாதல் பெறப்படும். இம்மூன்றினையும் வேறு பிரித்து அறிதற்கு அவை முறையே சிவ - சத்து, சத - சத்து, சட - சத்து என்று குறிக்கப்பட்டன, இவற்றின் விளக்கம் விரிவஞ்சி விடுகின்றாம்.

### *சாதன இயல்*

சார்ந்ததன் வண்ணமாதல் உயிரின் சிறப்பிலக்கணம். அஃது அசத்தாகிய உலகத்தையும், சத்தாகிய பரம்பொருளையும் அறிய வல்லது; அசத்தை விட்டுச்சத்தைப் பற்றக் கூடியது என்பது ஏழாம் சூத்திரத்தில் விளக்கப்படுகிறது. உயிர்களின் தவத்தால் இறைவன் குருபரன் வடிவங்கொண்டுவந்து, பக்குவம் உடையார்க்கு ஞானத்தை உணர்த்தித் தன்பால் அவர்களைச் சேர்ப்பன் என்பதை எட்டாம் சூத்திரம் விளக்குவதாகும், ஞானம் பெற்றவர் ஐந்தெழுத்து ஓதி ஞானநிலையைக் காக்கவேண்டும் என்பது ஒன்பதாம் சூத்திரத்திற் கூறப்படுகிறது.

### *பயன் இயல்*

அவ்வாறு ஞானத்தைப் பேணும் உயிர்கள் இறைவன் தம்முடன் ஒற்றித்து நிற்றலால் பாசநீக்கம் பெறும் என்பது 10ஆம் சூத்திரத்துள் விளக்கப்படுகிறது. இறைவன் உயிர்கட்குத் துணையாக நின்று சிவப்பேறு அல்லது முத்தி நிலையைக்காட்டுவான்; அவை காணுமாறு

உதவியும் செய்வான் என்பது 11ஆம் சூத்திரத்தில் கூறப்படுகிறது. சீவன் முக்தர்கள் மலநீக்கக் கருத்துடையவராய், அடியார் இணக்கம் உடையவராய், சிவவேடத்தையும், சிவன் கோயிலையும் வழிபடும் நியமம் உடையவராய் நிற்பர் என்பது 12ஆம் சூத்திரத்தில் விளக்கப்படுகிறது.

## 4. சிவஞான சித்தியார்

இதனையும் அடுத்துவரும் இருபா இருபஃது என்னும் நூலையும் இயற்றியவர் மெய்கண்டார் முதல் மாணவராகிய அருள் - நந்தி - சிவாசாரியார் என்பவர். சிவஞான சித்தியார் என்னும் நூல் சிவஞான போதத்தின் வழி நூல்; பரபக்கம், சுபக்கம் என்னும் இரண்டு பெரும் பிரிவுகளை உடையது. சிவஞானபோதத்துள் அவையடக்கம் கூறிய ஒரே பாட்டினை அடிப்படையாகக் கொண்டு பரபக்கம் தோன்றியது. சுபக்கம், சிவஞான போதத்தின் 12 சூத்திரங்களின் பொருளை 12 அதிகாரங்களில் விரித்து விளக்குவது.

சிவ ஆகமப் பிரமாணங்களை ஒப்புக்கொள்ளாத சமயங்கள் புறச்சமயங்கள் எனப்பட்டன. வைதிகச் சார்பில்லாத சமயங்களை 'புறப்புறச் சமயங்கள்' எனவும், வைதிகச் சார்புடையவை 'புறச்சமயங்கள்' எனவும் கூறப்பட்டன. புறப்புறச் சமயிகளுள் உலகாயதர், சௌத்ராந்திகர் - யோகசாரர் - மாத்யமிகர் - வைபாடிகள் ஆகிய நால்வகைப் பௌத்தர், நிகண்டவாதிகள், ஆசீவகர் என்னும் இருவகைச் சமணர் அடங்குவர். பட்டாச்சாரியர் மதம், பிரபாமகரமதம் என்னும் இருவகை மீமாச்சக மதமும், சத்தப்பிரம வாதம் -மாயாவாதம் - பாற்கரிய வாதம் - கிரீடப் பிரமவாதம் என்னும் நால்வகை ஏகான்ம - வாதமும் பாஞ்சராத்ரிகம் என்னும் வைணவ மதமும் புறச்சமயத்துள் அடங்கும். இவர் அனைவருடைய சமயக் கொள்கைகளைக் கூறி, சித்தாந்தத்துடன் முரண்வனவற்றை மறுத்துச் சித்தாந்தத்தை நிலை நிறுத்துவதே 'பரபக்கம்' என்பது. இது 301 செய்யுட்களைக் கொண்டது.

சுபக்கத்தில் சிவஞான போதப் பொருளே விரித்துரைக்கப் படுதலின், அதுபற்றிய விவரம் இங்குத் தேவை இல்லை. இப்பகுதி 328 செய்யுட்கள் கொண்டது. சித்தியாரின் பெருமையை, "சிவனுக்கு மேல் தெய்வமில்லை. சித்திக்கு விஞ்சிய நூலில்லை" என்னும் பழமொழியாலும், தாயுமானவர் பாராட்டுரையாலும்[65] நன்குணரலாம்.

## 5. இருபா - இருபஃது

இது, தம் ஞான - குருவாகிய மெய்கண்டாரை முன்னிலையாக்கி, வினாவுதல் போலவும், அவர் விடை கூறுதல் போலவும் சித்தாந்தக் கருத்துக்களை 20 செய்யுட்களில் கூறும் நூல். ஆணவத்தின் எட்டு இயல்பும், மாயையின் ஏழு இயல்பும், கர்மத்தின் ஆறு இயல்பும் இதன்கண் கூறப்பட்டுள. சைவத் திருமுறைகளுள் விளங்கும் அருள் தொடர்களாகிய, ''காண்பாரார் கண்ணுதலாய் - காட்டாக்காலே'' ''உன்னிலுன்னும் உன்னாவிடில் விட்டிடும்,''[66] என்பவற்றுக்கு விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. ''இருநிலனாய்த் தீயாகி'' என்று தொடங்கும் அப்பர் திருத்தாண்டகத்திற்கும்,[67] ''ஆட்பா லவர்க்கருளும் ஆதிமாண்பும்,''[68] என்னும் திருஞானசம்பந்தர் திருப்பாசுரத்திற்கும் பொருள் விளக்கம் பாராட்டத்தகும் முறையிற் செய்யப்பட்டுள்ளது. இச் சிறு நூல் மெய்கண்டாரது பெருஞ் சிறப்பினை அறிவிக்கும் பெருமையுடையது.

## 6. உண்மை விளக்கம்

இது, மெய்கண்ட தேவரது மற்றொரு மாணவரான திரு வதிகை - மனவாசகம் கடந்தார் என்பவர் செய்தது; 53 வெண்பாக்களை யுடையது; இது முப்பத்தாறு தத்துவங்களையும்,[69] ஆணவம் இருவினை என்பவற்றின் இயல்பையும்,[70] ஆன்மாவின் இயல்பையும்,[71] கடவுளின் இயல்பையும்,[72] ஐந்தெழுத்தின் உண்மையையும்,[73] தம் ஆசிரியரிடத்துத் தமக்கு விளக்கும்படி வினவ, ஆசிரியர் விடையளித்தது போலச் செய்யப்பட்ட நூலாகும். முத்தியிலும் மூன்று பொருளாகும் இறை, உயிர், உலகம் உண்டு என்று விளக்கும் பெருமையுடையது இந் நூல்.[74]

## உமாபதி சிவாசாரியர் இயற்றிய 8 நூல்கள்

**1. சிவப்பிரகாசம் :** இது சிவஞான போதத்திற்குச் சார்பு நூலாகும். இதன் பாயிரத்துள் திருக்கயிலாய பரம்பரை ஆசிரியர்கள் இன்னார் என்பதும், சைவ நூல்களின் இயல்பும், தீட்சை வகைகளும் சுருக்கமாகவும் விளக்கமாகவும் ஓதப்பட்டுள்ளன. நூலின் அவையடக்கத்தில் நூல்களை ஆராய்ந்து உண்மை தெரியும் முறை நன்கு விளக்கப்பட்டுள்ளது. பழமைபற்றி ஒன்றை நன்றென்றும் புதுமை பற்றி ஒன்றைத் தீதென்றும் கொள்ளுதல் தவறு என்பது ஆசிரியர் கருத்து.

இந்நூல் நூறு விருத்தங்களை உடையது. இதில், சைவ சித்தாந்த அத்வைத நிலை - உடலும் உயிரும், கண்ணொளியும் கதிரொளியும், உயிரறிவும் கண்ணொளியும் போல இரண்டறக் கலத்தல் என்று விளக்கப்பட்டுள்ளது.[75] ஆணவம், கன்மம், வினைப்பயன் வரும்வழிகள், மாயையின் பிரிவுகள் நன்கு விளக்கப்பட்டுள்ளன.[76] பல சமயத்தாரின் முக்திபேதங்கள்[77a] வகுத்துக்கூறி, அவற்றிற்கு மேலதாய்ச் சித்தாந்த முத்தி விளங்கும் முறைமை உணர்த்தப் பட்டுள்ளது.

**2. திருவருட் பயன் :** இது குறள் வெண்பாக்களால் ஆயது; பத்து அதிகாரங்களை உடையது. ஒவ்வோர் அதிகாரத்தும் பத்துக் குறள்கள் உண்டு. இறைவனது இயல்பு கூறும் முதல் அதிகாரம் பதிமுது நிலை என்னும் பெயருடையது. ஏனைய அதிகாரங்களின் பெயர்களும் இவ்வாறே அவை கூறும் பொருளின் இயல்பை விளக்கும் தன்மையன. அவை உயிரவை நிலை, இருள்மல நிலை, அருளது நிலை, அருளுறு நிலை, அறியுநெறி, உயிர் விளக்கம், இன்புறு நிலை, ஐந்தெழுத்தருள் நிலை, அணைந்தோர் தன்மை என்பன.

**3. வினா வெண்பா :** இது பதின்மூன்று பாக்களால் ஆகியது. இஃது, ஆசிரியர் தம் குருவாகிய மறைஞான சம்பந்தரிடம் சாத்திரவுண்மைகளைக் கேட்டுத் தெளியும் முறையில் அமைந்தது. இருளும் ஒளியும் ஓரிடத்திற்கூடல் அரிது என விதந்து, தன்பால் இறைவன் நின்ற வியப்பை அறிவிக்கும் பாடலும்,[77] காண்பான், காட்சி, காட்டப்படும் பொருள் என்னும் மூவகை உணர்ச்சியை நீத்தவர், முத்தி நிலையை அடைவர் எனக் குறிக்கும் திருப்பாட்டும்[78] நுட்பம் செறிந்தவை.

**4. போற்றிப் பஃறொடை வெண்பா :** இது, உயிர் தொழிற்படும் முறைமை உணர்த்தும் வாயிலாகத் தமக்குச் சிவஞானம் நல்கி சிவாநுபவம் ஈந்த குருவைப் பஃறொடை வெண்பாவினால் வாழ்த்திய நூலாகும். இறைவனது பரநிலையும்,[79] அவனது பொது நிலையாகும் ஐந்தொழில் நடத்தும் திறமும்,[80] உயிர்களை மறைத்து நிற்கும் ஆணவத்தின் இயல்பும்,[81] அதனை ஒழிக்க வேண்டி இறைவன் சேர்க்கும் மாயை காரியமாகும் உடற்கருவிகள், போகங்கள், உலகங்கள் இவற்றின் பேருதவியும்,[82] உயிர்கள் கர்ப்பவாசத்திலும் உலகிலும் துன்புறும் துன்பநிலைகளும்,[83] பிறகு வினைக்கு ஈடாக நேரும் மறுமைப் பயன்களும்,[84] பின்னைப் பிறவியில் கூடிய இருவினையொப்பு முதலிய பக்குவ நிலைகளும்,[85] இறைவன் மூவகை உயிர்கட்கு அருளுந்திறமும்,[86] உயிர்கள் சிவஞானம் பெற்றுச்

சரியை முதலிய நெறிகளில் ஒழுகி அடைந்த சிவப்பேற்றின் நிலையும்,[87] 'நாமே பிரமம்' என்பதன் இழிவும்,[88] சைவ சித்தாந்த முத்திப் பெரு நிலையும்[89] முறையாக நன்கு விளக்கப்பட்டுள்ளன.

**5. கொடிக்கவி :** இது மிகச் சிறிய நூல் 4 வெண்பாக்களால் ஆகியது. ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம் என்ற பகுதி[90] இன்புறத்தக்கது. ஐந்தெழுத்தின் நுட்பம் இறுதி வெண்பாவிற் குறிக்கப்பட்டுள்ளது.[91] இது தில்லையிற் கொடியேறும் பொருட்டுப் பாடிய நூலாதலின் 'கொடிக்கவி' எனப்பெயர் பெற்றது.

**6. நெஞ்சுவிடு தூது :** இஃது ஆசிரியர் தமது உள்ளத்தை மறைஞான சம்பந்தர் பால் மாலை வாங்கும்படி தூது விடுமுகத்தால் பல நூல்களின் பொருள் முடிபையும் விளக்குவது; கலிவெண்பாவினால் ஆகியது; 129 கண்ணிகளை உடையது. தசாங்கம் விரித்துரைக்கும் பகுதி[92] படித்து இன்புறத்தக்கது. ஞானாசாரியன் பாச நீக்கம் செய்யும் திறத்தினை விளக்கும் பகுதியும்,[93] கத்தும் சமயர் புன்னெறிகளில் விழாது செல்லும் திறமும்[94] குறிக்கத்தக்கவை.

**7. உண்மை நெறி விளக்கம் :** இது தத்துவ ரூபம், தத்துவக் காட்சி, தத்துவ சுத்தி, ஆன்ம வடிவம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் என்னும் பத்துக் காரியங்களை இனிது விளக்கும் நூல். இத் தசகாரியம் பற்றிய குறிப்புகள் முன்சொன்ன சிவப்பிரகாசத்தில் உள்ளன. அவற்றின் விரிவே இந் நூலாகும்.

**8. சங்கற்ப நிராகரணம் :** இது அகச் சமயங்கள் பலவற்றின் கொள்கைகளைக் கூறி, அவற்றைச் சித்தாந்தப் பார்வையால் மறுக்கும் நூல். சிவஞான சித்தியார் - பரபக்கமும் இந் நூலும் சித்தாந்த சைவத்தின் வேறான சமயக் கொள்கை வேறுபாடுகளை அறிதற்கு மிகவும் பயன்படுகின்றன. நிமித்த காரண பரிணாமவாதி சங்கற்பத்தில் அப்பர், சம்பந்தர் திருப்பதிகங்கள், திருவாசகம், திருவிசைப்பா, காரைக்கால் அம்மையார் அற்புதத் திருவந்தாதி எடுத்தாளப்பட்டன. சைவசித்தாந்த நிலையே பல்லாற்றானும் மிகச் சிறந்தது என்பதை இச் சிறு நூல் நன்கு விளக்குகிறது.

## குறிப்பு விளக்கம்

1. ஒன்பதாந்திருமுறை, முகவுரை, ப. 3.
2. மேலது; ப. 120, செ. 9.
3. சோழர் கோயிற் பணிகள், பக். 53-54.
4. மேலது, ப. 175-6, செ. 2-5.
5. மேலது, ப. 180, செ. 8.
6. மேலது, ப. 191, செ. 2.
7. சந்தானாசிரியர் சரிதம், ப. 24.
8. 17 of 1899.
9. செ. 4.
10. செ. 1.
11. செ. 19.
12. செ. 28.
13. செ. 25,28.
14. செ. 2.
15. செ. 20,40,68; 31,32,40,54,58,62.
16. பெரியபுராண ஆராய்ச்சி; சி.கே.சு. முதலியார், சேக்கிழார்.
17. பெ.பு. ஆராய்ச்சி, அதி, 11.
18. இந்நூற் பெருமையை உள்ளவாறு அறிய விரும்புவோர் C.K.சுப்பிரமணிய முதலியார் வெளியிட்டுள்ள பெரிய புராணப் பேருரையைக் கொண்டு நன்கு அறியலாம். அத்தகைய விரிவான பேருரை இதற்குத் தேவைப்படுகிற தெனின், இதன் அருமை பெருமைகளை என்னென்பது!
19. தக்கயாகப் பரணி. 51.
20. மேலது, 182,185,170,218; 169-220.
21. மேலது, 79,194,791.
22. மேலது, 567,367,487.
23. தமிழ்ப் பொழில் 12, ப. 316.
24. மேலது, 14, பக். 81-88.
25. மேலது, 12, பக். 318-9.
26. செ. 1,13,36,64,85.
27. தொகுதி 12,13.
28. க. 6-8, 42.
29. க. 66, 90-6, 130, 109-110, 157-8, 197-202, 167, 216-7.
30. இந் நூற்கள் 14இல் சிவப்பிரகாசம் முதல் சங்கற்ப நிராகரணம் வரையுள்ள 8 நூல்களைச் செய்தவர் உமாபதி சிவாசாரியார் என்பவர். அவர் இயற்றிய கடைசி நூலும் பதினான்கு சாத்திரங்களிற் கடைசி நூலும் சங்கற்ப நிராகரணம் என்பது. அது கி.பி. 1313இல் செய்யப்பட்டதாக அதன் ஆசிரியரே கூறியுள்ளார். அவர் செய்த ஏனைய நூல்களின் காலம் பதின்மூன்றாம் நூற்றாண்டின் கடைசி அல்லது 14ஆம் நூற்றாண்டின் தொடக்கமாக இருக்கலாம். நாம் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட காலம் கி.பி. 1300-உடன் முடிவதாயினும், 14 சாத்திரங்களையும் பற்றிக் கூறாது விடுதல்

முறையன்றாதனின், உமாபதி சிவாசாரியாருடைய 8 நூல்களும் இங்கு ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

31. இந்நூல் கி.பி. 1147இல் செய்யப்பட்டதென்பர். சித்தாந்த சாத்திரம் ப. 669.
32. செ. 1,5,9,12,13,20,22.
33. செ. 2,3,7,11,36.
34. செ. 8,10,14,16, 18,19, 21,23,, 25, 27-8, 34, 37-40.
35. செ. 4,6,29,30,31,33-5.
36. இவர் காலம் கி.பி. 1177 என்பர் சித்தாந்த சாத்திரம், ப. 669.
37. சந்தானாசிரியர் சரிதம், ப. 33.
38. "சார்புணர்ந்து சார்பு கெடவொழுகி னென்றமையாற்
சார்புணர்தல் தானே தியானமுமாம் - சார்பு
கெடவொழுகி னல்ல சமாதியுமாங் கேதம்
படவருவ தில்லைவினைப் பற்று" - செ. 34.

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை யென்றமையால்
வேண்டினஃ தொன்றுமே வேண்டுவது - வேண்டினது
வேண்டாமை வேண்டவரு மென்றமையால் வேண்டிடுக
வேண்டாமை வேண்டுமவன் பால்" - செ. 45.

39. செ. 1.
40. செ. 79.
41. செ. 90.
42. செ. 66.
43. செ. 7.
44. செ. 90.
45. செ. 47.
46. செ. 11.
47. செ. 32.
48. செ. 97.
49. செ. 16-18.
50. செ. 18-20.
51. செ. 22.
52. செ. 25-33.
53. செ. 85.
54. செ. 44.
55. செ. 100.
56. செ. 57.
57. செ. 52.
58. செ. 53. 'சேந்தனார் அமுது' என்று இப்பொழுதும் 'திருவாதிரை-களி' என்று தில்லைப் பெருமாற்கு நிவேதிப்பது வழக்கம்.
59. செ. 27-30.
60. செ. 57.

61. Colas, 2, Part1, P. 538, including Foot-note No. 43.
62. சந்தானாசிரியர் சரிதம், பக், 45-73; சிவஞானபோதம், பக். 11-27.
63. ஒரு பிரதி விலை 2 அணா.
64. சிவஞானபோதம், முகவுரை.
65. எந்நாட்கண்ணி, குருமரபின் வணக்கம், 5.
66. தேவாரம், சாமிநாத பண்டிதர் பதிப்பு, ப. 1244.
67. அப்பர் தே. ப. 510, செ. 1.
68. சம்பந்தர் தே. ப. 511 செ. 4,2.
69. செ. 4-21.
70. செ. 22.
71. செ. 23-26.
72. செ. 27-29.
73. செ. 30-44.
74. செ. 50.

"முத்திதனின் மூன்று முதலும் மொழியக்கேள்;
சுத்தஅனு போகத்தைத் துய்த்தல்அணு - மெத்தவே
இன்பங் கொடுத்தல்இறை இத்தைவிளை வித்தல்மலம்
அன்புடனே கண்டுகொள்ளப் பா." செ.50.

75. செ. 7.
76. செ. 20,28,21,22.
76a. செ. 50.
77. செ. 1.
78. செ. 11.
79. க. 1,4.
80. க. 5.
81. க. 6-10.
82. க. 11-14.
83. க. 15-40.
84. க. 41-54.
85. க. 55-59.
86. க. 60-71.
87. க. 72-88.
88. க. 89.
89. க. 90-94.
90. செ. 1.
91. செ. 4.
92. க. 39-79.
93. க. 90-99.
94. க.107-119.

# 11. சைவ சித்தாந்த வளர்ச்சி

(திருமூலர் காலமுதல் உமாபதிசிவம் வரை)

*முன்னுரை*

சைவத் தமிழ் நூல்களுட் சிறந்தன பன்னிரண்டு திருமுறைகளும் பதினான்கு சாத்திரங்களுமே யாகும். முன்னவற்றில் சித்தாந்த கருத்துக்கள் ஆங்காங்கு விரவியுள்ளன; பின்னவற்றில் அவை நிரல்படக் கூறப்பட்டுள்ளன. இந் நூற்களிற் காலத்தால் முற்பட்டது திருமூலர் செய்த **திருமந்திரம்** என்பது முன்னரே கூறப்பட்டது. 'சைவசித்தாந்தம்' என்னும் பெயரைக் கூறும் முதல் தமிழ் நூல் திருமந்திரமே யாகும்.

**கற்பன கற்றுக் கலைமண்ணு மெய்யோக**
**முற்பத ஞான முறைமுறை நண்ணியே**
**தொற்பத மேவித் துரிசற்று மேலான**
**தற்பரங் கண்டுளோர் சைவசித் தாந்தரே.**

இதற்குப் பின் இராஜசிம்ம பல்லவனது கயிலாசநாதர் கோயிற் கல்வெட்டில் 'சைவசித்தாந்தம்' என்பது கேட்கப்படுகிறது.[2] சைவசித்தாந்தம், சிவாகமங்களின் பொருளாகக் கருதப்படுகிறது. சிவநெறிச் சார்பான நுட்பமான முடிபுகளையுடையது சைவசித்தாந்தம் எனப்படும்.

**முப்பொருள்கள் :** சைவசித்தாந்த சாத்திரங்கள் இறை, உயிர், உலகம் என்னும் மூன்றையும்பற்றி மிகுதியாகப் பேசும். இவற்றுள் உலகம் ஒன்றே காணப்படும் பொருள். அதனைக் கொண்டு மற்ற இரண்டையும் அறிய வேண்டும். உலகம் கடல் - மலை - சூரியன் - சந்திரன் முதலிய பல பொருள்களாக இருக்கிறது. இங்ஙனம் பிரிவுகளையுடையது காரியப் பொருளாகும். இக் காரியப் பொருள் ஒரு கருத்தா இன்றித் தோன்றமுடியாததலின், கருத்தாவாகிய இறை உண்டு என்பது உணரப்படும். இக் கருத்து,

குசவனைப் போலெங்கள் கோனந்தி வேண்டில்
அசையில் உலகம் அதுஇது வாமே.[3]

என்னும் திருமந்திரத்திலும், சிவஞானபோதம் முதற் சூத்திரத்தும், சிவஞான சித்தியார் முதல் விருத்தத்தும் விளங்குதல் காணலாம். இதனால் உலகம் காரியப்படுத்தப்படுவது என்பதும், காரியப்படுத்துபவர் கடவுள் என்பதும் பெறப்பட்டன. கடவுள் உயிர்கள் பொருட்டே இவ்வாறு காரியப்படுத்துகிறார். எனவே, இறை, உயிர், உயிர்கள் பொருட்டு இறையால் படைக்கப்படும் உலகம் என்னும் மூன்றும் ஒரு காலத்தனவாய் எக்காலத்தும் இருப்பவையாகும். இதனை,

**பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்**
**பதியினைப் போற்பசு பாசம் அநாதி.[4]**

எனத் திருமூலர் குறித்தல் காணலாம். இக் கருத்து சிவஞானபோதம் நான்காம் சூத்திரத்தும் காணப்படுகிறது.

உலகம் உயிர்களின் பொருட்டுத் தோற்றப்படுவானேன்? உயிர்களின் வினையாகிய கன்மமலத்தைப் பக்குவப்படுத்தவும் அறியாமையாகிய ஆணவ மலத்தைப் போக்கவும் இறைவன் உயிர்கள் பொருட்டு உலகத்தை அழிக்கின்றான்; மீளவும் படைக்கின்றான். ஆக்கல், அளித்தல், அழித்தல் என்னும் முத்தொழிலும் உயிர்கள் பொருட்டே இறைவனால் நிகழ்த்தப்படுகின்றன. இதனை,

**''தோற்ற நிலையிறுதிப் பொருளாய்வந்த மருந்தவன்காண்''[5]**

**என்னும் அப்பர் வாக்கும் உறுதிப்படுத்தல் காணலாம்.**

**அத்துவிதம் அல்லது சுத்தாத்துவிதம் :** இவ்வாறு முத்தொழிலைப் புரியும் இறைவன் எங்கும் நிறைந்துள்ள தன்மையால் உருவமின்றி அருவமாய் இருப்பான். உருவற்ற உயிர் உருவமுள்ள உடலை இயக்குதல் போல - உருவமற்ற கடவுள் உருவமுள்ள பொருள்களை இயக்குகின்றான். அவன் எல்லாப் பொருள்களிலும் ஊடுருவி நிற்பவன்; ஒன்றாய் - பலவாய்த் திகழும் இயல்பினன். இவ்வியல்பினைத் திருமூலர்,

**பரத்திலே ஒன்றாய் உள்ளாய்ப் புறமாகி**
**வரத்தினுள் மாயவ னாய்அய னாகித்**
**தரத்தினுள் தான்பல தன்மைய னாகி[6]**

எனக் குறித்தார். நச்சினார்க்கினியர் அகரத்தின் சிறப்பியல்பை உவமையில் வைத்து விளக்குகையில், ''இறைவன் ஒன்றேயாய் நிற்குந் தன்மையும் பலவுயிர்க்கும் தானேயாய் அவற்றின் அளவாய் நிற்குந் தன்மையும் போல'' என்றார்.[7] இவ்விளக்கம்,

**அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி**
**பகவன் முதற்றே உலகு**

என்னும் முதல் திருக்குறளாலும் அறியலாம்.

**அகரம்முத லின்எழுத் தாகிநின்றாய்[8]**

எனச் சுந்தரரும்,

**அக்கரங்கள் இன்றாம் அகர வுயிரின்றேல்[9]**

என மெய்கண்டாரும்,

**அக்கரங்கட் கெல்லாம் அகரவுயிர் நின்றாற்போல்**
**மிக்க உயிர்க்குயிராய் மேவினோம்[10]**

என மனவாசகங்கடந்தாரும்,

**அகர வுயிர்போல் அறிவாகி எங்கும்**
**நிகரிலிறை நிற்கும் நிறைந்து[11]**

என உமாபதி சிவமும் இறைவன் நிற்கும் நிலையைத் தெளிவாகக் கூறியுள்ளனர். இந்த நிலையே 'அத்வைதம்' என்பது. இறைவன் தானாய், வேறாய், உடனாகும் தன்மையன். இவ்விறைத் தன்மையைச் சம்பந்தர்,

**ஈறாய்முதல் ஒன்றாயிரு பெண்ஆண் குணமூன்றாய்**
**மாறாமறை நான்காய்வரு பூதம்அவை ஐந்தாய்**
**ஆறாய்சுவை ஏழோசையோ டெட்டுத்திசை தானாய்**
**வேறாய்உடன் ஆனான்இடம் வீழிம்மிழ லையே.[12]**

என நன்கு விளக்கியுள்ளார். இதனையே, ''அவையே தானேயாய்'' என்னும் சிவஞானபோதச் சூத்திரமும்[12] விளக்குகிறது.

**ஐந்தொழிலும் ஐந்தெழுத்தும் :** இவ்வாறு எங்கும் நிறைந்துள்ள இறைவன் உயிர்களிடம் கொண்ட கருணையால் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களைச் செய்கிறான். அத்தொழில்களைச் செய்யும் இறைவனைக் கூத்தப் பெருமானாக முன்னோர் உருவகித்தனர். அப்பெருமானுடைய கரங்களில் உள்ள படைகளும் பிறவும் ஐந்தொழிலையே உணர்த்துகின்றன என்பர்.

**அரன்துடி தோற்றம் அமைத்தல் திதியாம்**
**அரனங்கி தன்னில் அறையிற்சங் காரம்**

**அரனுற் றணைப்பில் அமருந்திரோ தாயி**
**அரனடி என்றும் அனுக்கிரகம் என்னே**[14]

என்னும் திருமந்திரப் பாடலும்,

**தோற்றம் துடியதனில் தோயுந் திதிஅமைப்பில்**
**சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா**
**ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி**
**நான்ற மலர்ப்பதத்தே நாடு.**[15]

என்னும் உண்மை விளக்கப் பாடலும் இதனையே விளக்குவன.

கூத்தப்பிரான் திருவடிவம், இறைவன் திருநாமமாகிய ஐந்தெழுத்தின் வடிவமென்று திருமூலர் கூறுவர் :

**மருவுந் துடியுடன் மன்னிய வீச்சு**
**மருவிய அப்பும் அனலுடன் கையும்**
**கருவின் மிதித்த கமலப் பதமும்**
**உருவில் சிவாய நமவென வோதே.**[16]

இக்கருத்தையே உண்மை விளக்கமும்,

**சேர்க்கும் துடி*சி*கரம் சிக்கனவா வீசுகரம்**
**ஆர்க்கும் *ய*கரம் அபயகரம் - பார்க்கிலிறைக்**
**கங்கி *ந*கரம் அடிக்கீழ் முயலகனார்**
**தங்கும் *ம*கரமது தான்**[17]

என்று கூறுகிறது.

**உயிர்கள் :** இறைவனுடைய இவ்வைந் தொழில்களால் நலம் பெறுவன எல்லாவகை உயிர்களுமேயாம். அவை எண்பத்து நான்கு நூறாயிர பேதமாக உள்ளன என்று சம்பந்தர் கூறுகிறார் :

**உரைசேரும் எண்பத்து நான்குநூ றாயிரமாம் யோனி பேதம்**

**நிரைசேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே**
**நின்றான்.**[18]

இதனையே அருணந்தி சிவாசாரியார் தமது சித்தியாரில்,

**அண்டசம் சுவேத சங்கள் உற்பிச்சம் சராயுசத்தோ**
**டெண்டரு நாலெண் பத்து நான்குநூ றாயிரத்தால்**
**உண்டுபல் யோனி எல்லாம்**[19]

என்று குறித்திருத்தல் காண்க.

இவ்வுயிர்கள் யாவும் தத்தம் வினைகாரணமாகப் பலவகைப் பிறவிகளைப் பெறுகின்றன. "புல்லாகிப் பூடாகி........ எல்லாப் பிறப்பும்

பிறந்திளைத்தேன்''[20] என்று மாணிக்கவாசகர் கூறுதல் இதற்கேற்ற சான்றாகும். உயிர்களிடத்துள்ள ஆணவம், கன்மம், மாயை என்னும் மூவகைக் குற்றங்களுள் **ஆணவம்** என்னும் மலமாகிய அழுக்கைப் போக்கவே பிறவிகள் வருவன. திருமூலர் 'இந்த ஆணவத்தை விட்டவர் மெய்ஞ்ஞானிகள்'[21] என்கிறார். அப்பர் ஆணவத்தை, 'மூலநோய்' என்கிறார்;

**மூலநோய் தீர்த்த முதல்வன் கண்டாய்**[22]

இவ் ஆணவம் அறியாமையிற் புகுத்தும் என்பது அப்பர் கருத்து. அந்த அறியாமையைப் போக்கும் மருந்து இறைவனே என்பதை அப்பர், ''மம்மர் அறுக்கும் மருந்து கண்டாய்.''[23] எனக் குறிக்கிறார்.

**கன்மம்** என்னும் அழுக்கு உயிர்கள் செய்த வினைகளின் சேர்க்கை. அதன் வழியாய் உடல், அதன் கண் நிற்கும் கருவிகள், அவை நுகரும் போகங்கள், அவை விளங்கும் உலகம் என்பன உண்டாகின்றன. இவையாவும் **மாயை**யின் காரியங்கள். எனவே, ஆணவ அழுக்கைப் போக்கப் பிற அழுக்குகள் சேர்க்கப்படுகின்றன. அழுக்கினைப் போக்க அழுக்கு உதவுமோ? திருமூலர்,

**ஆகும் உபாயமே அன்றி அழுக்கற்று**
**மோகம் அறச்சுத்த னாதற்கு மூலமே**
**ஆகும் அறுவை அழுக்கேற்றி யேற்றல்போல்**
**ஆகுவ தெல்லாம் அருட்பாச மாகுமே.**[24]

என்று பதில் கூறுதல் காண்க.

**எழுமுடல் கரண மாதி இவைமலம் மலம லத்தாற்**
**கழுவுவ னென்று சொன்ன காரணம் என்னை என்னில்,**
**செழுநவ அறுவை சாணி உவர்செறி வித்த ழுக்கை**
**முழுவதும் கழிப்பன் மாயை கொடுமலம் ஒழிப்பன் முன்னோன்**

என வரும் சிவஞான சித்தியார் பாடலும்[25] கவனிக்கத்தக்கது.

ஆணவத்தை அறுக்க உடம்பு இன்றியமையாதது. சுவரை வைத்துக் கொண்டுதானே சித்திரம் எழுத வேண்டும்? இவ்வுடம்பின் நன்மையைத் திருமூலர்,

**உடம்பார் அழியில் உயிரார் அழிவர்**
**திடம்பட மெஞ்ஞானம் சேரவு மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே**[26]

என்று கூறினார். உடலின் நற்பயனை,

**சிரக்கண் வாய்செவி மூக்குயர் காயமாகித் தீவினை தீர்த்த எம்மான்**[27]

என்று சுந்தரர் குறித்தனர்.

**உயிரின் மூன்று நிலைகள் :** உடலைப் பெறுகின்ற உயிர் மூன்று நிலைகளை உடையது. உடலைப் பெறுவதற்கு முற்பட்டநிலை **கேவலநிலை;** உடல் பெற்று வாழ்கின்ற நிலை **சகலநிலை;** உடல்பெற்றிருந்தும் பற்றற்ற நிலை **சுத்தநிலை** எனப்படும். கேவலநிலை என்பது ஆணவத்துடன் கட்டுப்பட்டு, அறியாமை மூடி, உணர்வும் செயலும் அற்றநிலை. சிவன் தன் சக்திமூலமாகக் 'கலை' என்னும் தத்துவம் கொண்டு ஆணவத்தைச் சிறிது நீக்கி, உயிரின் செயலாற்றலை எழுப்பி அறிவுபெறச் செய்து, பற்றினையும் கூர்ந்து வளரச் செய்து, உடம்போடு புணத்திய பிறகு தோன்றும் நிலையே சகலநிலை. உயிர் உடலில் வாழும் போது, பிறவித் துன்பத்துக்கு ஏது உலகப்பற்றே என்பதைத் தெளிந்து, பற்றற்ற உணர்வும் செயலும் இறையருளால் ஆக்கிக்கொள்ளும் நிலையே **சுத்தநிலை** என்பது. இவற்றை,

**அறிவி லாதவெ னைப்புகுந் தாண்டுகொண்**
**டறிவதை யருளிமேல்**
**நெறியெ லாம்புல மாக்கிய எந்தையைப்**
**பந்தனை அறுப்பானை**[28]

என்று மாணிக்கவாசகர் தெளிவுறக் குறித்தல் காணலாம். சுத்தநிலையை,

உடம்போடு
............. செத்திட் டிருப்பர் சிவயோகி யர்களே

என்று திருமூலர்[29] குறித்தனர். உயிரின் இம்மூன்று நிலைகளும் சிவஞானபோதத்து 4,5,6ஆம் சூத்திரங்களில் முறையே விளக்கப்பட்டுள்ளன. சகல நிலையில் நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படக்கம் என்னும் ஐந்து அவத்தைகள் உண்டு. இவற்றைத் திருமூலர் முதல் உமாபதிசிவம் வரை அனைவரும் விளக்கிச் செல்கின்றனர்.

இறை 'சிவசத்' என்றும், உயிர் 'சதசத்' என்றும், உலகம் 'சடசத் என்றும் சொல்லப்படும்.[30] இம்மூன்றையும் சிவஞான போதத்து 6,7ஆம் சூத்திரங்கள் விளக்குகின்றன. 'சத்' என்பது இறையைக்

குறிப்பது; 'அசத்' என்பது அறிவற்ற உலகைக் குறிப்பது; 'சத்-அசத்' என்பது உயிரைக் குறிப்பது. உயிர் இறைவனையும் உலகத்தையும் சேர்ந்திருப்பது. உயிர் இறையைச் சார்ந்துள்ளபோது உலகம் நீங்கியிருக்கும்; உலகத்தைச் சார்ந்துள்ளபோது இறையை மறந்து ஆணவத்துடன் கலந்திருக்கும். உலகம் அறிவற்றதாதலின் இறையை அறியாது; உயிர் சிற்றறிவுடைமையின் முற்றறிவுடைய இறையை யறியாது; இறைவன் திருவருள் வசமாக உயிர்நிற்கும் போதுதான் இறைவனை அறிதல் கூடும். இதனை,

**விண்ணினைச் சென்றணு காவியன் மேகங்கள்**
**கண்ணினைச் சென்றணு காப்பல காட்சிகள்**
**எண்ணினைச் சென்றணு காம லெனப்படும்**
**அண்ணலைச் சென்றணு காப்பசு பாசமே**[31]

என்று திருமூலர் விளங்கவுரைத்தார்.

**உயிர்களை இறைவன் ஆட்கொள்ளும் வகை :** உயிர்கள் தம் பக்குவநிலை ஒட்டியே இறைவன் திருவருளைப் பெறமுடியும். உயிர்கள் இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் என்பவற்றை அடைதலால் பக்குவநிலை ஏற்படும்.

**இருவினை நேரொப்பில் இன்னருட் சத்தி**
**குருவென வந்து குணம்பல நீக்கித்**
**தருமெனும் ஞானத்தால் தன்செயல் அற்றால்**
**திரிமலம் தீர்ந்து சிவனவன் ஆமே.**[32]

**இருட்டறை மூலை இருந்த குமரி**
**குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்துக்**
**குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி**
**மருட்டி யவனை மணம்புரிந் தாளே.**[33]

என்னும் திருமந்திரப் பாடல்கள் இருவினை ஒப்பு, சத்திநிபாதம் என்பவற்றை விளக்குகின்றன. இவற்றின் விரிவெல்லாம் சிவஞான போதம் 8-ஆம் சூத்திரத்திற்குச் சிவஞான முனிவர் செய்த பேருரையிற் காணலாம்.

பக்குவநிலைபெற்ற உயிர்கட்கு இறைவன் குருவடிவாக வந்து உண்மை உணர்த்தி உயிர்களைத் தன்வசமாக்குகிறான் என்பது மேற்சொன்ன முதல் செய்யுளால் தெரிகிறது. இதனைத் திருமூலர்,

**பத்திப் பணித்துப் பரவும் அடிநல்கி**
**சுத்த வுரையால் துரிசறச் சோதித்துச்**

**சத்தும் அசத்தும் சதசத்தும் காட்டலால்**
**சித்தம் இறையே சிவகுரு வாமே**[34]

என்னும் செய்யுளில் நன்கு விளக்குகிறார்.

மாணிக்கவாசகர்,
**அருபரத் தொருவன் அவனியில் வந்து**
**குருபரன் ஆகி அருளிய பெருமையும்**[35]

என்றும்,

**''என்னுடைய குருவே''**[36] என்று சுந்தரரும் குறித்தமை காண்க.

இறைவன் இங்ஙனம் குருவாக வந்து, தான் தலைவனாம் தன்மையை உணர்த்தி, உயிர்களை அடிமை கொள்ளுவன். இதனை அப்பர் நன்கு தெரிவிக்கிறார் :

**என்னை யேதும் அறிந்திலன் எம்பிரான்**
**தன்னை நானுமுன் னேதும் அறிந்திலேன்**
**என்னைத் தன்னடி யானென் றறிதலும்**
**தன்னை நானும் பிரானென் றறிந்தெனே.**[37]

மாணிக்கவாசகரும் தம்மை இறைவன் ஆண்டுகொண்ட முறைமையால் உணரும் நிலையை நன்கு விளக்குகிறார் :

**பவனெம் பிரான்பனி மாமதிக் கண்ணிவிண் ணோர்பெருமான்**
**சிவனெம் பிரானென்னை யாண்டுகொண் டானென்**
**சிறுமைகண்டும்**
**அவனெம் பிரானென்ன நானடி யேனென்ன இப்பரிசே**
**புவனெம் பிரான்தெரி யும்பரி சாவ தியம்புகவே.**[38]

சிவஞானபோதம் 8-ஆம் சூத்திரத்தில், ''குருபரன் தோன்றி உயிரை நோக்கி, 'நீ நின் பெருந்தகைமை அறியாது மயங்கி இடர்ப்பட்டனை. நின் பெருந்தகைமை இத்தகையது' என்று உணர்த்தி அறிவுறுத்துவன்'' என்பது குறிக்கப்பட்டுள்ளது.

இதுகாறும் கூறியவற்றால், இறைவன் உயிர்கட்கு உடலைக்கூட்டி, வினைப்போகம் துய்க்கச் செய்து, மலத்தைக் கழிக்கச் செய்தலும், பக்குவம் வந்தபோது வெளிப்பட்டுக் குருபரனாகி உண்மை ஞானத்தை உணர்த்தலும் அவனது அருள் தன்மையால் நிகழ்வன என்பது பெறப்பட்டது. இவ்வருள் தன்மையாலேதான் சாக்கியர் சைவ சமயமே பெரிதென்பதும் இறைவனே துணை என்பதும் நன்குணர்ந்தார் :

**செய்வினையும் செய்வானும் அதன்பயனும் கொடுப்பானும்**
**மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள் எனக்கொண்டே**
**இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக் கில்லையென**
**உய்வகையால் பொருள் சிவன்என் றருளாலே**
**உணர்ந்தறிந்தார்.**[39]

இறைவனது துணைச் சிறப்பினை,

**துணையென்று நான்தொழப் பட்டவொண் சுடரை**
**முத்தியும் ஞானமும் வானவர் அறியா**
**முறைமுறை பலபல நெறிகளும் காட்டிக்**
**கற்பனை கற்பித்த கடவுளை**

என்று சுந்தரர்[40] அனுபவித்துக் கூறியிருந்தலைக் கொண்டும் அறியலாம்.

**உண்மை ஞானம் பெற்ற உயிர்களின் ஒழுகலாறு :** இறைவன் அருளால் உண்மைஞானம் பெற்ற உயிர்கள் அவனடியைச் சாரும் நெறிகளில் ஒழுகவேண்டும். அதுவே **'தவநெறி'** எனப்படும். இறைவனருளால் ஆட்கொள்ளப்பட்ட சுந்தரரும் திருத்துறையூர்ப் பதிகத்தில் ''தலைவா, உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே''[41] என்று கூறியது காண்க. சைவ சமயக் குரவர்கள் சென்று காட்டிய நெறி தவநெறியாகும். அவர்கள் நாளும் திருக்கோயில் சென்று இறைவனை வழிபடும் நியமம் உடையவர்கள்.

**நாடு நகரமும் நற்றிருக் கோயிலும்**
**தேடித் திரிந்து சிவபெரு மானென்று**
**பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்**
**கூடிய நெஞ்சத்துக் கோவிலாக் கொள்வனே.**[42]

என்று திருமூலர் உயிர்கட்கு அறிவுறுத்தல் காண்க. உயிர்கள் சைவாகமங்களிற் குறித்த சரியை, கிரியை, யோகம், ஞானப்படிகளைப் பின்பற்றி, அவற்றின் பயனைப் பெற வேண்டும்.

**பத்தன் கிரியை சரியை பயில்வுற்றுச்**
**சுத்த அருளால் துரிசற்ற யோகத்தில்**
**உய்த்த நெறியுற் றுணர்கின்ற ஞானத்தால்**
**சித்தங் குருவரு ளாற்சிவ மாகுமே.**[43]

என்றார் திருமூலர். வெறும் ஞானம் பெறுதல் பயனில்லை. அதனால் விளைந்த அன்புநெறி, இறைவனோடு பொருந்துவதற்குச் சிறந்த சாதனமாயிற்று. அன்புநெறிக்கு அறிவு நெறி துணையாகும். இவ்விருவகை நெறியிற் பெறுவது முத்திநிலை.

**முத்திநிலை :** 'யான் - எனது' என்னும் செருக்கற்று இறைவனது பேரின்ப நிலையில் ஒடுங்கி நிற்றலே 'முத்தி நிலை' என்பது.

> ............... பிணி மேய்ந்திருந்த
> **இருகாற் குரம்பை யிதுநா னுடைய திதுபிரிந்தால்**
> **தருவாய் எனக்குன் திருவடிக் கீழோர் தலைமறைவே.**[44]

என்று அப்பர் வேண்டிய முத்திநிலை இதுதான். இந் நிலை அடைந்தோர் இறைவனை விட்டு நீங்காத்திறத்தினர். அவர் செய்யும் செயல்கள் யாவும் இறைவன் செயல்களே ஆகும். அவர்கட்கு விளங்கும் கரணங்கள் யாவும் சிவ கரணங்களாக மாறி நிற்பன.

> **கூறும் நாவே முதலாகக் கூறும் கரணம் எல்லாம் நீ**[45]

என்று மணிவாசகர் கூறுதல் காண்க. இத்தகைய அன்பர்க்கு நேரும் ஊறுகளை இறைவனே ஏற்பன். இதனை,

> **தமக்கன்பு பட்டவர் பாரமும் பூண்பர்**[46]

என்னும் அப்பர் திருவாக்கால் அறியலாம்.

இம் முத்தர் நாளும் ஐந்தெழுத்தினை மறவாதவர்கள்; அதனைப் பிறவிக் கடலைக் கடக்கும் தெப்பமாகக் கருதுபவர்கள். சுந்தரர் வெயிலில் வந்த தளர்வுநீங்க ஐந்தெழுத்தோதினார்[47] என்றும், தண்டியடிகள் நாடோறும் ஐந்தெழுத்து ஓதினார்[48] என்றும் சேக்கிழார் கூறுவர். இவ்வைந்தெழுத்தின் சிறப்புக்கள் சிவஞானபோதம் 9–ஆம் சூத்திரத்திலும், திருவருட்பயன் 'அஞ்செழுத்தருள் நிலை' யிலும் விரித்துரைக்கப்பட்டுள்ளன.

இம் முத்தர்கள், 'அணைந்தோர்' என்றும், 'அடியார்' என்றும், 'சீவன் முக்தர்கள்' என்றும் பெயர் பெறுவர். இவர்கள் கூட்டமே, 'அடியார் கூட்டம்' அல்லது 'திருக்கூட்டம்' என்பது. முத்தர்கட்கு இக் கூட்டம் தேவையானது என்பதை,

> **இணங்கத்தன் சீரடியார் கூட்டமும் வைத்து**[49]

என்ற மணிவாசகர் உரையால் அறிக. இவர்கள் இறைவனது திருவேடத்தையும் திருக்கோயிலையும் சிவனெனக் கருதும் இயல்பினர். இவ் விவரங்கள் சிவஞானபோதம் 12–ஆம் சூத்திரத்தும் குறிக்கப்பட்டன. இவ்வடியாரது பெருமையைச் சுந்தரர் திருத்தொண்டத் தொகையும் அது பாடநேர்ந்த சந்தர்ப்பமுமே நன்கு விளக்கவல்லவை.[50] சேக்கிழாரும் இவ்வடியார் பெருமையைப் பல பாக்களில் விளக்கினார்.[51]

## குறிப்பு விளக்கம்

1. திருமந்திரம், 1421.
2. S.I.I.1. 24, 25.
3. செ. 443.
4. செ. 115.
5. அப்பர் தேவாரம், பக். 448,செ.2.
6. செ. 111.
7. தொல், எழுத்து. சூ. 8ம் உரையும்.
8. சுந்தரர் தே. ப. 223, செ.7.
9. சிவஞானபோதம், சூ. 2. செ. 3.
10. உண்மை விளக்கம், செ. 29.
11. திருவருட்பயன், செ. 1.
12. சம்பந்தர் தே. ப. 18, செ. 2.
13. சூ.2.
14. திருமந்திரம் 2799.
15. செ. 35
16. செ. 2798.
17. செ. 33.
18. ப. 211, செ.4.
19. செ. 179.
20. சிவபுராணம், வரி. 26-31.
21. செ. 494.
22. ப. 361, செ. 9
23. மேலது, செ. 8.
24. செ. 2422.
25. செ. 142.
26. செ. 724.
27. ப. 159, செ.9.
28. திருச்சதகம், 32.
29. செ. 121.
30. திருமந்திரம், 1420.
31. செ. 1436.
32. திருமந்திரம், 1527.
33. மேலது. 1514.
34. செ. 1573
35. போற்றித் திருவகவல், வரி. 75-6.
36. ப. 184, செ.4.
37. ப. 294, செ.8
38. திருச்சதகம், 9.
39. சாக்கியர் புராணம், 5.
40. ப. 20, செ. 2.
41. ப. 8, செ.1.
42. செ. 1445.
43. செ. 1455.
44. ப. 161. செ. 2.
45. குழைத்தபத்து, செ. 5.
46. ப. 29, செ.2.
47. ஏயர்கோன் புராணம், 158.
48. தண்டியடிகள் புராணம், 3.
49. திருப்பூவல்லி, 7.
50. தடுத்தாட்கொண்ட புராணம், 189-203.
51. பெ. பு. திருக்கூட்டச் சிறப்பு, 6-9.

# 12. சைவரது சமுதாய வாழ்க்கை

**கல்வி:** 1. பல்லவர் காலத்திலும் சோழர் காலத்திலும் பல வடமொழிக் கல்லூரிகள் இருந்தன என்பது முன்னரே கூறப்பட்டது. பல்லவ அரசர்கள் பலர் வட மொழியிற் சிறந்த புலமை பெற்றிருந்தனர்; பாரவி, தண்டி போன்ற வடமொழிப் புலவர்களை ஆதரித்தனர் என்பன முன்னர்க் கூறப்பட்டன. மூன்றாம் நந்திவர்மனும் அபராசிதவர்மனும் சிறந்த தமிழறிஞர்கள் என்பதும், பின்வந்த சோழர்கள் தமிழறிஞர்கள் என்பதும், அவருள் விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன், ஒட்டக்கூத்தர் மாணவர் என்பதும், மூன்றாம் குலோத்துங்கன் கம்பர் முதலிய புலவர்களுடன் பழகிய தமிழறிஞன் என்பதும் சென்ற பகுதிகளிற் கூறப்பட்ட செய்திகளேயாகும். பல்லவர் காலத்தில் தமிழ்க் கல்வி எங்ஙனம் இருந்ததென்பதை விளக்க, ஐயடிகள் காடவர்கோன், காரைக்கால் அம்மையார், கபில தேவர் முதலிய அடியார்கள், அப்பர், சம்பந்தர், சுந்தரர், சேரமான் பெருமாள், மணிவாசகர் முதலியோர் அருட்பாடல்களும் நந்திக்கலம்பகம், பாரத வெண்பா முதலிய இலக்கிய நூல்களுமே சிறந்த சான்றாகும். கண்டராதித்தர், இரண்டாம் குலோத்துங்கன் முதலிய சோழர்கள் கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்தனர் என்பதும், முதலாம் இராசேந்திரன் 'பண்டித சோழன்' எனப்பாராட்டப் பெற்றவன் என்பதும் சைவ அரசர்கள் பெற்றிருந்த புலமையை நன்குணர்த்தும்.

2. ஐந்து வயதில் மயிர்நீக்கிக் கல்வி தொடங்குதல் வழக்கம்.[1] பிராமணராயின் பூணூற் சடங்கு செய்த பிறகே கல்வி தொடங்கப்பெறும்.[2] மயிர் நீக்குதல் சைவ சடங்குகள் பதினாறனுள் ஒன்று. இப் பதினாறும் ஒவ்வொரு ஞானப் பொருளைக் குறிப்பன எனவும், அவற்றுள் மயிர் நீக்குதல் சிவப்பிரசாதத்தின் உயர்வைக் குறிப்பதெனவும் சிவாகமம் கூறும்.[3] கல்வி, நற்பொருள்களை வெள்ளம் போலப் பெருக உதவி-அறிவு விளங்கச் செய்தலால் மனம் சுருண்டிருந்த நிலையை நீக்கி மலரச் செய்யும் இயல்புடையது என்று அக் காலத்தவர் கருதினர்.[4] அவர்கள் இலக்கியக் கல்வியும், சிவம் முயன்றடையும் தெய்வக் கலைகள் பலவும்[5] கற்றனர். பின்னவை வேதம், சிவாகமம், வேதாங்கம், புராணம், இதிகாசம், ஆயுர் வேதம் முதலியன.[6]

3. சைவர்கள் பொதுக்கல்வியும் சமயக்கல்வியும் மருத்துவம் வான நூற்கலை முதலிய பல்கலைக் கல்வியும் கற்றிருந்தனர் என்பது சேக்கிழார் பெரியபுராணங்கொண்டு நன்கறியலாம். அந்நூலில் சேக்கிழார் தாம் பல்கலைப் புலவர் என்பதை நன்கு நிலைநாட்டியுள்ளார்.[7] எனவே, பண்டைத் தமிழ்க் கல்வி முறையில் பொதுக் கல்வி, சமயக்கல்வி, பல்கலைக்கல்வி என முத்திறக் கல்வி இருந்திருத்தல் வேண்டும் என்பது தெரிகிறது. அத்துடன் தொழிற்கல்வியும் இருந்தது. புரவித்தொழில், யானைத் தொழில், தேர்த்தொழில், வில், வாள் முதலிய படைக்கலத் தொழில்கள் இருந்தன.[8] இத் தொழில்களில் அக் காலத்திற் சைவர்கள் நன்கு பயின்றிருந்தனர் என்பது இயற்பகையார், ஏனாதிநாதர், கோட்புலியார் முதலியோர் வரலாறுகளிலிருந்து அறியலாம். சத்தியார் கத்தி வைத்திருந்ததும், எறிபத்தர் கோடரி வைத்திருந்ததும் அக் காலத்து அடியார்கள் ஆயுதப் பயிற்சியில் வல்லவர்கள் என்பதை வலியுறுத்துகின்றன.

4. ''சிவன் கற்றார்கள் நாவினான்'' என்றும்[9] ''கற்றிருந்த கலை ஞானம் ஆனாய் நீயே''[10] என்று சிவனையே கலை ஞானமென்றும் கூறலை நோக்க, அப்பர் காலத்தில் கல்வியைப் பற்றிச் சைவர் கொண்டிருந்த மனப்பான்மை நன்கு விளங்கலாம். அப்பரும் சுந்தரரும் சங்க நூற்களை நன்கு பயின்ற சைவர் என்பது தருமிக்குப் பொற்கிழியளித்தமை, பாரிபற்றிய குறிப்பு இவற்றிலிருந்து தெரிகிறது.[11] சுந்தரர் காலத்தில் புலவர்கள் பலர் இருந்தனர் என்பதும், அவர்கள் நன்கு படித்தவர்கள் என்பதும் சுந்தரர் பாக்களிலிருந்து தெரிகின்றன.[12] ''தண்தமிழ் நூற் புலவர்க்கோர் அம்மான்''[13] என்று சுந்தரர் கூறலிலிருந்து அக் காலப் புலவர் பலர் சைவரென்பது பெறப்படும். கல்வி உயிர்க்கு இனியது என்பதும், அதனினும் இனியவன் சிவன் என்பதும் சுந்தரர் கருத்து.[14]

5. திருமூலர் காலமுதல் உமாபதி சிவம் காலம்வரை திருமந்திரம் முதலிய சித்தாந்த நூல்கள் சைவர்களால் நன்கு படிக்கப்பட்டு வந்தன என்பது சென்ற பகுதியில் நன்கு விளக்கப்பட்டது அன்றோ? அருணந்தி சிவாசாரியாரை மெய்கண்டாருடைய தந்தையார் சமயகுருவாகக் கொண்டிருந்தமையும், மாளிகை மடத்து ஆசாரியரிடம் ஒருவர் உபதேசம் பெற்றமையும் பொதுமக்கள் சமயக் கல்வியில் காட்டிய ஆர்வத்திற்கேற்ற சான்றுகளாகும்.[15]

**பெண்கள் கல்வி:** சைவப் பெண்களும் சைவ ஆண்களைப் போலவே கல்வி கற்றிருந்தனர் என்பதற்குக் காரைக் காலம்மையாரே

ஏற்ற சான்றாவர். பெண்கள் அம்மானை, பந்தாட்டம் முதலிய பலவகை விளையாட்டுகளிலும் சிவனைப் பற்றிய பாடல்களைப் பாடினர் என்பதும் சம்பந்தர் தேவாரத்தால் தெரிகின்றது:

**"தருந்தடக்கை முத்தழலோர் மனைகள்தொறும்**
**இறைவனது தன்மைபாடிக்**
**கருந்தடங்கண் ணார்கழல்பந் தம்மானைப்**
**பாட்டயருங் கழுமலமே"[16]**

பூக்கொய்தல் முதலிய பலவகை விளையாடல்களிலும் பெண்கள் இங்ஙனமே சிவனது சிறப்பைப் பாடி விளையாடினர் என்பது திருவாசகத்தால் தெரிகிறது. இவை ஆறாம் அதிகாரத்தும் குறிக்கப்பட்டவையே. காரைக்காலம்மையார் பாடல்களில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் இருத்தலும், சோழர் காலத்து மாளிகை மடத்து ஆசாரியரிடம் மாணவி ஒருத்தி சமயக்கல்வி பயின்றனள் என்பதும், பெண்களும் சமய சாத்திரப் பயிற்சியுடையராயிருந்தனர் என்பதை உணர்த்துகின்றன. திலகவதியார், மங்கையர்க்கரசியார், செம்பியன் மாதேவியார் போன்ற சைவத் தாய்மார்கள் சைவ சித்தாந்த உண்மைகளை அறியாதவர்கள் என்று கூறமுடியுமா?

**திருமணம்** : மணமகன் வீட்டார்கள் சில பெரியோரைப் பெண்ணைப் பெற்றோரிடம் அனுப்பி, 'இன்ன மகனுக்கு நும்மகளைத் தருதல் வேண்டும்' என்று கேட்பர். இதனைத் திலகவதியார், சம்பந்தர், சுந்தரர், கலிக்காமர் திருமணங்களிற் காணலாம்.[17] இருதிறத்தாரும் மணமக்களின் குலம், கோத்திரம், குணம் இவற்றை ஆராய்ந்த பிறகே மணத்திற்கு ஒருப்படுவர், பின்னர் உற்றார் - உறவினர்க்கு ஓலை போக்கிக் குறித்த நன்னாளில் திருமணத்தை நடத்துவர்.[18] இத்திருமணச் சடங்குகள் பற்றிய விவரங்கள் சம்பந்தர் புராணத்தும், தடுத்தாட்கொண்ட புராணத்தும்,[19] காணலாம். திருமணத்தின் போது சங்கு, தாரை, சின்னம், பெருங்காளம், தாளம், வங்கியம், நாதசுரம் முதலிய கருவிகள் ஒலித்தன.[20] மணமகனும் மணமகளும் பலவகை ஆடையணிகளால் தம்மை அலங்கரித்தல் மரபு.[21] மணமகன் அலங்கரித்துக்கொண்டு மணப்பந்தலுக்குச் செல்லுமுன் 'சிவாய நம' என்று ஐந்தெழுத்தோதித் திருநீறணிதல் மரபு.[22] இங்ஙனம் பல சடங்குகளுடன் வீட்டில் திருமணம் நடப்பதே பெருவழக்கு. கோயில்களில் இறைவன் திருமுன் திருமணம் நடத்தலும் உண்டு என்பது சுந்தரர் வரலாற்றால் அறிகிறோம். அவர் திருவாரூர்க் கோயிலில் பரவையாரையும், சங்கிலியாரைத் திருவொற்றியூர்க் கோயிலிலும்

மணந்து கொண்டார். சிவப்பிராமணரான சுந்தரர் கணிகையரான பரவையாரையும், வேளாளப் பெண்ணான சங்கிலியாரையும் மணந்து கொண்டமையும், சைவப் பெண்மணியான மங்கையர்க்கரசியார் சமணனான பாண்டியன் நெடுமாறனை மணந்துகொண்டதும், தமிழ்ச் சைவனான இராசராசன்I தமிழனல்லாத சாளுக்கிய விமலாதித்தனுக்குத் தன் மகளைக் கொடுத்ததும் சைவரது பரந்த நோக்கத்தையும் அரசியல் அறிவையும் குறிப்பனவாகும். சைவ அரசர்கள் பல மனைவியரை மணம் செய்து கொண்டனர் என்பது பல்லவர் - சோழர் வரலாறுகளிலிருந்து அறியலாம். ஆதிசைவராகிய சுந்தரரும் காரைக்காலம்மையார் கணவனும் இருமனைவியரை மணந்து கொண்டமை காண்கிறோம். எனினும், ஒரு மனைவி வாழ்க்கையே பெருவழக்காக இருந்தது.

**மணவாழ்க்கை :** மனைவி கணவனுக்குத் துணைவி; கணவன் மனைவிக்குத் துணைவன்.[23] கணவனும் மனைவியும் மனமொத்தே இல்லறத்தை நடத்திவந்தனர். கணவன் மனைவியின் யோசனைப்படியே வீட்டுக் காரியங்களைச் செய்து வந்தான் என்பது சிறுத்தொண்டர், இளையான் குடிமாறர் இவர் தம் வரலாறுகளிலிருந்து அறியலாம்.[24] மனைவி கணவன் அருகிருந்து உண்பித்தல் வழக்கம்.[25] கணவன் செய்யும் சிவத் தொண்டுகளுக்கு மனைவி ஆதரவளித்தல் வழக்கம். இதற்கு நமிநந்தியடிகள் போன்ற நாயன்மார் வரலாறுகளும் பல்லவ - சோழ அரசர்கள் வரலாறுகளும் ஏற்ற சான்றாகும். முதலாம் இராசராசன் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிப் பல நிவந்தங்கள் விட்டபொழுது அவனுடைய தமக்கை, மனைவிமார் ஆகியோரும் அதே கோயிலுக்குப் பல அறங்கள் செய்தனர் என்பதும், செம்பியன் மாதேவிச் சிவன் கோயிலுக்குச் செம்பியன் மாதேவியருடைய மருமக்கள் அனைவரும் அறங்கள் செய்தனர் என்பதும் சைவக் குடும்பத்தின் ஒருமைப்பட்ட சமயப்பற்றை நன்கு விளக்கும் சான்றுகள் ஆகும். கணவன் ஒழுக்கம் கெட்டவனாயின் மனைவி அவனை அறவே வெறுத்தாள் என்பது திருநீலகண்டர் வரலாற்றிலிருந்து அறியலாம்.[26] கணவன் சமயத்தில் அழுத்தமான பற்று அற்றவனாயினும் மனைவியின் சிவத் தொண்டுக்கு ஊறு செய்யவில்லை என்பது காரைக்கால் அம்மையார் வரலாற்றால் நன்கறியலாம்.[27] சமணனான கணவன் அறியாது சிவபூசை செய்த மனைவியார் மங்கையர்க்கரசியார் ஆவர்.[28] ஆயினும் இம் மனைவியர் தம் கணவரை முழு அன்புடன் நேசித்தனரே அன்றி வெறுத்திலர்.[29] சிவபூசையில் கணவனுடன் ஒத்துழைத்தாற் போலவே, அடியார்களை உபசரித்தலிலும் மனைவி

கணவனுடன் ஒத்துழைத்தாள். பரவையார் சேரமான் பெருமானை வரவேற்று உபசரித்தது பெரிய புராணத்திற் படித்து இன்புறத்தக்க பகுதியாகும்.

**பொங்கு விளக்கும் நிறைகுடமும் பூமா லைகளும் புகையகிலும்**
**எங்கும் மடவார் எடுத்தேத்த அணைந்து தாமும் எதிர்கொண்டார்.**

**சோதி மணிமா ளிகையின்கண் சுடரும் பசும்பொற் காலமளி**
**மீது பெருமாள் தமையிருத்தி நம்பி மேவி யுடனிருப்பக்**
**கோதில் குணத்துப் பரவையார் கொழுந னார்க்குந் தோழர்க்கும்**
**நீதி வழுவா வொழுக்கத்து நிறைபூ சனைகள் முறையளித்தார்.**[30]

முதலிற் சிவனடியார் பாதங்களை இல்லத்தலைவி நீர்வார்க்கக் கணவன் நீராட்டி,[31] அந்நீரைத் தங்கள் தலையில் தெளித்துக் கொள்வர்; உள்ளும் கொள்ளுதல் உண்டு.[32] பிறகு உணவு தயாரிக்கப்படும். முதலிற் கறிகள், குழம்பு, ரசம் என்பன தயாரித்த பிறகே இறுதியில் சோறு சமைக்கப்படும்.[33] சோறு சூடாக இருத்தல் நலமாதலின், இம்முறை கையாளப்பட்டது போலும்!

**சிவனடியாரை உண்பித்தல் :** அடியவர் விருத்துண்ணுமுன் இலைக்கு எதிரில் பீடத்தில் அமர்ந்து, ஐந்தெழுத்தோதித் திருநீறணிந்து, பிறகு வீட்டுத் தலைவன் தலைவியர்க்கும் பிறகு பிள்ளைகட்கும் திருநீறு தந்து பூசிக்கொள்ளச் செய்வர்;[34] அடியவர்க்கு அமுது படைக்கும் இடம் பசுவின் சாணத்தால் மெழுகப்படும்; கோலமிடப்படும்; தீபம் ஏற்றிவைக்கப்படும்; அங்கு நீண்ட வாழை இலை கழுவி, அறுத்தவாய் வலம்பெற வைக்கப்படும். அடியவர் கையை நண்ணீராற் கழுவி உணவுண்ணத் தொடங்குவார். அவர் விருப்பப்படி வீட்டுத் தலைவனும் மக்களும் உடனுண்பர். வீட்டு அம்மையும் பிறரும் அமுது படைப்பர்.[35]

அக்காலப் பெண்கள் அவசியம் நேரும்பொழுது கணவர் பெயரைக் கூறிவந்தனர் என்பது இயற்பகையார் வரலாற்றிலிருந்து தெரிகிறது.[36] கணவன் செயல் உலக இயற்கைக்கு மாறுபட்டதாயினும் சமயச் சார்புடையதாயின், மனைவி மகிழ்ச்சியுடன் கணவன் கட்டளைக்குக் கீழ்ப் படிந்து நடந்தாள் என்பதற்கு இயற்பகையார் மனைவியே ஏற்ற சான்றாவார்.[37]

சிறுத்தொண்டர் தாம்வழிப்பட்ட சீராளதேவர் பெயரையே தம் மைந்தர்க்கு இட்டார்; அப்பூதியடிகள் தமது ஆசாரியராகிய திருநாவுக்கரசர் பெயரையே தம் பிள்ளைகட்கிட்டார். இவற்றிலிருந்து சைவர்கள் தங்கள் பிள்ளைகட்குத் தங்கள் இஷ்ட தெய்வங்களின்

பெயர்களை அல்லது தம் சமயப் பெரியாரின் பெயர்களை வைத்தல் மரபென்பது தெரிகிறது. பல்லாற்றாலும் சிவத்தொண்டில் கருத்து ஒருமித்து வாழ்ந்த சைவத் தம்பதிகட்குப் பிறந்த குழைந்தைகள் சிவத்தொண்டில் உறைந்த உள்ள முடையராய் இருந்தனர் என்பதற்கு அப்பூதியடிகளின் மூத்தமைந்தனே ஏற்ற சான்றாவன்.[38] முதலாம் இராசராசன் பெரிய சிவபக்தன். அவன் தேவாரத்தை முறைபடுத்தக் காரணமாக இருந்தான். அவன் மகன் அத்தேவாரத்தை ஓதும் ஓதுவார்களைக் கவனிக்கத் தேவார நாயகம் என்ற அரசாங்க உத்யோகஸ்தனை நியமித்திருந்தான். இவ்வாறே முதற் குலோத்துங்கன் தில்லையில் தொடங்கிய திருப்பணிகளை அவன் மகனான விக்கிரம சோழனும் அவனுக்குப் பின்வந்த அவன் மகனான இரண்டாம் குலோத்துங்கனும் தொடர்ந்து முடித்தனர். இரண்டாம் குலோத்துங்கன் பெரிய புராணம் பாடக் காரணமாக இருந்தான். அவன் மகனான இரண்டாம் இராசராசன் பெரியபுராண நாயன்மார் வரலாற்று நிகழ்ச்சிகளைப் பாமரரும் அறிந்து அறிவு பெறும்படி தாராசுரம் கோயிலிற் சிற்பங்களாகச் செதுக்குவித்தான். இத்தகைய சைவக்குடும்பங்களாற்றான் அக்காலத்தில் சைவ சமயம் நன்கு வளர்ச்சி அடைந்தது.

**உடன்கட்டை ஏறலும் கைம்மை வாழ்க்கையும் :** அப்பரது தந்தையார் இறந்ததும், தாயார் சுற்றத்தாரையும் மக்களையும் (அப்பரையும் அவர் தமக்கையார் திலவதியாரையும்) துகளாக மதித்து உடன்கட்டை ஏறினார். இதனைச் சேக்கிழார், "கற்புநெறி வழுவாமற் கணவனாருடன் சென்றார்"[39] என்று குறித்தார். இவ்வாறு உடன்கட்டை ஏறல் சோழர் காலத்தும் வழக்கமாக இருந்தது. சுந்தரசோழன் இறந்ததும் அவன் மனைவியும் முதலாம் இராசராசன் தாயுமான வானவன் மாதேவி உடன்கட்டை ஏறினாள்.[40] மணம் நிச்சயமாகி மணம் நிறைவேறாமுன், கணவனாகவர வேண்டியவன் இறந்தாலும் மணப்பெண் இறத்தலும் வழக்கமாக இருந்ததென்பது திலவதியார் வரலாற்றால் தெரிகிறது.[41] பெற்றோரும் அற்ற நிலையில் தம்மைத்தனியே விட்டு இறத்தலாகா தென்று அப்பர் அழுதுவேண்ட, திலகவதியார் இறவாத கைம்மை நோன்பை மேற்கொண்டு, திருவதிகையிற் குடியேறிக் கோயில் தொண்டிற் காலங் கழிக்கலானார்.[42] கலிக்காமர் மனைவியார் கணவருடன் இறக்கத் துணிந்தவர், சுந்தரர் தம் கணவரைக் காண வருகிறார் என்றவுடன் சாவதை விடுத்து, கணவரை இழந்த நிலையில் தாம் அவரை வரவேற்றல் முறையன்றாதலின், சுந்தரர்க்குத் தம்

ஆட்களைக்கொண்டு சிறந்த வரவேற்பளித்தார்.[43] இவ்வாறே சோழர் காலத்தில் கணவனை இழந்த செம்பியன் மாதேவியார் அளவரிய சிவத்தொண்டுகளில் ஈடுபட்டார்; கணவரைச் சிவலிங்கமாகக் கருதிப் பூசித்து வந்தார். அதனைக் குறிக்கும் சிற்பம் செம்பியன் மாதேவியில் உள்ள சிவன் கோயிலிற் காணலாம்.[44] திருநல்லூரிற் கணவனை இழந்த பெண்மணி ஒருத்தி தத்தன் - உடையார் ஈசான சிவாசாரியார் என்பவரிடம் சமய போதனை பெற்று வந்தாள்; அக்குருவிற்குத் தன் கணவர் விருப்பப்படி மடம் கட்டிக் கொடுத்து நிலமும் அளித்தாள்.[45]

**உருத்திர கணிகையர்** : இவர்கள் தூய்மையான வாழ்க்கையுடையவர்கள்.[46] இவர்கள் சிவன் கோவில் தேவரடியார். பெண் பிறந்த மூன்றாம் மாதம் முதல் இருபத்தொரு மாதம் வரை-செங்கீரை முதலிய பருவந்தோறும் அப்பருவத்திற்குரிய விழாவினைச் சிறப்புறச் செய்தல் மரபு.[47] உருத்திர கணிகை மகாமண்டபம் முதல் கருப்பாவரணப்பிரகாரம் வரை திருவலகு, திருமெழுக்கிட்டு, பஞ்ச சூர்ணங்களினால் அலங்கரித்து, சுத்தமாயிருந்து, பூசை நேரங்களில் தீபங்களை ஏந்தியும், பாடியும், நடனமாடியும் உபசரிக்கத்தக்கவள். சுத்தம், மிசிரம், கேவலம் என்னும் மூவகை நடனங்களில் சுத்தநிர்த்தனமே இவளுக்கு ஆகமத்தில் விதிக்கப்பட்டது.[48] இவள் சிவத்தொண்டில் ஈடுபட்டிருக்கையில் தன் மனங்கொண்ட பக்தனை மணக்கலாம். இங்ஙனம் உண்டான திருமணமே சுந்தரர் பாவையார் திருமணம். இக்கணிகையரே சோழர் காலத்திற் 'பதியிலார்' எனப்பட்டவர். இவர்கள் சமூகத்தில் நன்மதிப்புப் பெற்றவர் என்பது பரவையார் வரலாற்றால் நன்கறியலாம். இவர் தம் ஆடையணிகளும் கூந்தல் ஒப்பனையும் தஞ்சைப் பெரிய கோயில் ஆடல்மகளிர் ஓவியங்கொண்டு உணரலாம்.

**சிவனடியார்கள்:** சிவனடியார்கள் திருநீறு அணிந்தவர்கள்; உருத்திராக்கமாலை தரித்தவர்கள்; வெளியிற் பூசிய திருநீற்றின் தூய்மை போல உள்ளும் தூய்மை உடையவர்கள்; அன்பே உருவானவர்கள்; தமது கடமையாகவே சிவத்தொண்டு செய்பவர்கள்; எத்தகைய கலக்க நிலையிலும் சிவனை மறவாதவர்கள்; அன்பிலே முளைத்த பக்தி வழியில் நிலை நிற்பவர்கள்; குற்றமற்ற குணங்களை உடையவர்கள்; மண் ஓட்டையும் பொன்னையும் ஒன்றாகக் கருதும் இயல்பினர்; இறைவனைக் கும்பிடுவதையே விரும்பியவர்; மோட்சத்தையும் விரும்பாதவர். இத்தகைய சிறப்பினையுடைய அடியவர்கள் பலவேடங்களில் விளங்குவர்.[50] 'சிவாய நம' என்று ஐந்தெழுத்தோதி நீறணிவர்.[50] அவர்கள் பாசுபதர், லகுலீசபாசுபதர்,

மாவிரதிகள், காபாலிகர், சக்தி வணக்கத்தார், பைரவர், அப்பர், சம்பந்தரைப் போன்ற சைவர், சிவயோகியர், பிரமசாரிகள், ஆடையே அற்ற சிவனடியார் எனப்பலவகைப்படுபவர். சிவன் ஆடையின்றியும் அலைபவன்[51] என்று நூல்கள் கூறலால் அவனடியாருட் சிலர் ஆடையின்றி இருந்தனர் போலும்! நரசிங்கமுனையரையர் வீட்டிற்கு இத்தகைய அடியார் ஒருவர் வந்தார்.[52]

அடியார்கள் எவ்வகை வேடத்தவராயினும் சரி, அவர்களை வரவேற்றுத் திருவடி துலக்கி, உள் அழைத்துச் சென்று இருக்கச் செய்து, உணவு படைத்தலும், அவர் விரும்பியவை கொடுத்தலும் அக்கால வழக்கம் என்பதை நாயன்மார் வரலாறுகள் நன்கு காட்டுகின்றன. சைவர் எந்தச் சாதியினர் ஆயினும்-எந்தத் தொழிலினர் ஆயினும்-தம்மால் முடிந்த அளவு அடியார்க்குத் தொண்டு செய்தனர். அடியாரை மகிழ்வித்தல் ஆண்டவனை மகிழ்விப்பதாகும் என்பது அக்காலத்தார் கருத்து. அடியார் கேட்டார் என்றவுடனே தம் மனைவியை அவர்பால் ஒப்பு வித்த இயற்பகையாரின் அடியார் பக்திக்கு அளவு கூற முடியுமா? மாவிரதியர் கேட்டவுடனே மணப்பெண்ணின் கூந்தலை அறுத்துக் கொடுத்த மானக்கஞ்சாறர் பக்தியை என்னென்பது! அக் கூந்தலை மனமுவந்தளித்த மணப்பெண்ணின் - கலிக்காமர் மனைவியாரின் அடியார் பக்தியை என்னென்பது? மாவிரதிகள், ஆண்டார், தவசிகள், சிவயோகியர், மாகேசுவரர் முதலிய பலதிறப்பட்ட அடியார்களை உண்பித்தலே சிறந்த தொண்டாகக் கருதப்பட்டது. அமுது படைப்பவர் கடைப்பந்தியில் உண்பது வழக்கம்.[53] சோழர் காலத்தில் இக்காரணம் கொண்டே அறச்சாலைகள் தோன்றின. ஒவ்வொரு கோயிலிலும் அடியார்களை உண்பிக்க நிவந்தங்கள் விடப்பட்டன. மடங்களிலும் குகைகளிலும் அடியார்களை உண்பிக்க வசதி செய்து தரப்பட்டன.[54] துறவுள்ளமும் சிவத்தொண்டில் ஈடுபாடும் கொண்ட பெண்மணிகள் அரசர்கள் மதிப்பையும் பெற்றிருந்தனர் என்பது, "திருவொற்றியூரம்மை என்ற பெண்பால் துறவியின் வேண்டுகோட்படி மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி.1204-இல்) வியாகரணதான பெருமாளுக்கும் அம்மனுக்கும் நகைகளையும் குளப்பாக்கம் என்ற கிராமத்தையும் வழங்கினான்"[55] என்னும் கல்வெட்டுச் செய்தியால் நன்கறியலாம்.

அடியார்கள் அரசர்க்கு ஆகமம் படித்து விளக்கல் உண்டு. அதனைக் கூறும் அடியவர் ஆசனத்தின் மேலிருந்து கூறலும், கேட்கும் அரசன் தரைமீதிருந்து கேட்டலும் வழக்கம்.[56] அடியார்கள் சைவ அரசர் அரண்மனையுள் எந்த நேரத்திலும் நுழையும் உரிமை பெற்றிருந்தனர்.

அவர்கள் அரசர் பள்ளியறையுள்ளும் நுழையும் உரிமை பெற்றிருந்தனர்.[57] இந்த உரிமையைப் பகையரசர்கள் தங்கட்குச் சாதகமாகப் பயன்படுத்திச் சைவ அரசர்களை எளிதிற் கொன்றனர் என்பதற்கும் சான்றுண்டு.[58] சிவனடியார் வேடத்திற்காணப்பட்ட பகைவரைச் சைவ வீரர்கள் எதிர்த்திலர்.[59]

அடியார் தாம் கருதியது நிறைவேற உண்ணாவிரதம் இருத்தலும் மரபு.[60] அடியார்கள் தமக்குள் ஒற்றுமையும் அன்பும் மரியாதையும் உடையவர்கள். ஒருவரை ஒருவர் கண்டவுடன் தலைவணக்கம் செய்வர்;[61] அடியார் குழாத்தில் இருப்பதையே விரும்புவர்; தமக்குக் காலத்தால் முற்பட்ட அடியார்களையும் தம் காலத்து அடியார்களையும் அவர்களுடைய பக்திச் செயல்களைக் குறிப்பிட்டுப் போற்றிப் புகழ்வர். இப் பண்பு மூன்று, ஆறாம் பகுதிகளிற் குறிக்கப்பெற்றது. ஓடும், பொன்னும் ஒக்கநோக்கும் உள்ளம் படைத்த அடியார்கள் சிலர், குற்றம் செய்தார் எவரேயாயினும் அவர்களைத் தண்டிக்கத் தவறியதில்லை. எறிபத்தர் சோழன் பட்டத்து யானையைக் கொன்றதும், செருத்துணையார் கழற்சிங்கரது பட்டத்தரசியின் மூக்கரிந்ததுமே தக்க சான்றுகள் ஆகும். அடியார்கள் அரசரைப் பொருளாகக் கருதி அஞ்சவில்லை என்பதற்கு அப்பர் வரலாறே ஏற்ற சான்றாகும். மூன்றாம் குலோத்துங்கன் ஆணையைச் சுவாமிதேவர் என்ற இராஜகுரு மாற்றி யமைத்ததையும் அதனை அரசன் ஆமோதித்ததையும் காணச் சைவப் பெரியார்களின் மதிப்பு நன்கு விளங்கும்.

**நாமார்க்கும் குடியல்லோம், நமனை யஞ்சோம்**

**என் கடன் பணிசெய்து கிடப்பதே**

**நற்றுணை யாவது நமச்சி வாயவே**

என்ற அப்பர் பாக்களின் அடிகள் அடியார்களது உள்ளத்திறனை நன்கு விளக்கவல்லவை.

## *அடியார்களும் ஐந்தெழுத்தும்*

அடியார்கள் ஐந்தெழுத்தின் துணையை உறுதியாகப் பற்றியவர்கள். அமர்நீதியார் தராசில் ஏறியபொழுதும்.[62] ஆனாயர் குழலிசைத்த பொழுதும்,[63] திலகவதியார் அப்பரைச் சைவராக்க விபூதி தந்தபொழுதும்.[64] அப்பர் கல்மேல் மிதந்தபோதும்,[65] சம்பந்தர் முத்துச் சிவிகையில் ஏறியபொழுதும்,[66] அவர் பாண்டிநாட்டிற்குப் புறப்பட்ட போதும்,[67] தண்டியடிகள் சமணர்முன் சபதம் கூறிக் குளத்தில் மூழ்கியபோதும்,[68] புகழ்ச் சோழர் தீக்குளித்த போதும்,[69] சேரமான்

பெருமாள் கயிலாயத்திற்குக் குதிரை மீது புறப்பட்டபோதும்,[76] ஐந்தெழுத்தோதினர். அடியார் காலையில் துயில் நீத்தெழும்போதும் ஐந்தெழுத்தோதி எழுதல் மரபு.[71] ஐந்தெழுத்து – 'சிவமந்திரம்' என்று சேக்கிழார் கூறுகிறார்.[72]

**புறச்சமய வெறுப்பு:** பல்லவர் காலத்தில் சைவமும் வைணவமும் சமணபௌத்தங்களுடன் போராடி, அவற்றின் செல்வாக்கை ஒழித்தன. அதனால் பிற்காலச் சோழர் காலத்தில் சைவமும் வைணவமுமே தமிழகத்தில செல்வாக்குற்றன. எனினும், சோழமன்னர் அனைவரும் சிறந்த சிவனடியார்கள் ஆதலின், சைவமே நாட்டில் தனியாட்சி புரிந்ததென்னல் தவறாகாது. சோழ அரசருள் ஒருவன் அதிராசேந்திரன், அல்லது வீரராசேந்திரன் ஆவன். இவருள் ஒருவன் காலத்திற்றான் இராமாநுசர் சோழ நாட்டை விட்டு ஹொய்சள நாட்டிற்கு ஓடும் துர்ப்பாக்கிய நிலைமை உண்டானது.[73] மற்றொருவன் சேக்கிழார் காலத்தவனான இரண்டாம் குலோத்துங்கன். இவன் தில்லைக் கோவிந்தராசரைப் பெயர்த்து அப்புறப்படுத்திவிட்டான்.[74] இரண்டாம் இராசராசன் 14–ஆம் ஆட்சியாண்டில், "நமது கோயிலைக் கண்காணிக்கும் மாகேசுவரர்கள் சிவநெறிக்குமாறாக வைணவருடன் தாராளமாகப் பழகுவது கூடாது; இறைவனுக்கு உரிய செங்கழுநீர் மலர்களை அவர்கள் விற்கவும், அணியவும் கூடாது." என்று திருக்கடவூர்ப் பேரவையினர் தீர்மானித்தனர்.[75]

திருத்தான்தோன்றி மாடம் உடையார் கோயில் குளத்து நீரை, அவ்வூரைச் சேர்ந்த பெருமாள் கோயில் சிலையை நீராட்ட எடுத்துச் செல்வது வழக்கம். பிறகு சிவன் கோவில் அதிகாரிகள் அவ்வாறு நீர் எடுத்துச் செல்வதைத் தடுத்துவிட்டனர். ஆதலால் அவ்வூர் அவையினர் பெருமாளை நீராட்டக் காவிரியாற்று நீரைப் பயன்படுத்தத் துணிந்தனர். நீரைக் கொண்டுவர ஒரு புதிய பாதையை அமைக்க வரியிலியாக நிலதானம் செய்தனர்.[74] முன்னவை இரண்டும் சோழமன்னர் வைணவத்தின்மீது கொண்ட வெறுப்பையும், பின்னவை இரண்டும் சிவன் கோயில் ஆட்சியாளர் வைணவத்தின்மீது கொண்டிருந்த வெறுப்பையும் நன்கு காட்டவல்லவை. எனினும், இவை தவிரப் பொதுவாகச் சைவ மக்கள் பிற சமயங்களை, தம் சமயப்பற்றின் காரணமாக, வெறுத்தார்கள் என்று கூறுதல் இயலாது.

**கோயில் தொண்டுகள்:** கோயில்கள் ஆகம முறைப்படி கட்டப்பட்டவை[77] அடியார்கட்குத் திருக்கோயில் வழிபாடு இன்றியமையாதது; அங்குத் தொண்டு புரிதலும் அவர்கள் இயல்பாக மேற்கொள்ளும் பணியாகும். கோயிலைப் பெருக்குதல் (திரு

அலகிடல்),கோயிலைச் சாணமிட்டு மெழுகுதல் (திருமெழுக்கிடல்), இறைவன் பூசைக்குரிய மலர்களைப் பறித்தல், இண்டை, கண்ணி, தார் முதலிய பலவகை மாலைகளைத் தயாரித்தல், விளக்குகள் வைத்தல் முதலிய கோயிற் பணிகள் செய்வர். அப்பர் கோயில் தொண்டு செய்தவர்; திலகவதியார் திருவலகு, திருமெழுக்கு, மாலைகட்டல் முதலிய பணிகள் செய்தவர்;[78] சங்கிலியார் இறைவனுக்குரிய மாலைகளைத் தொடுக்கும் பணியில் ஈடுபட்டவர்.[79] அடியார் நந்தவனம் வைத்துப் பாதுகாத்தனர். திருமுறை எழுதுதல், பாது காத்தல், பாடல் முதலியவையும் ஆண்டார் தொழில்கள் என்று சோழர் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

கோயில் கட்டுதல், நந்தவனம் அமைத்தல், கோயிலில் விளக்கெரித்தல், விழாக்கள் செய்தல் முதலிய திருப்பணிகள் புண்ணியம் தரும் சமயப் பணிகளாகக் கருதப் பட்டன. ஆதலின் சோழர் காலத்தில் கணக்கற்ற கோயில்கள் பலராலும் கட்டப்பட்டன; நந்தவனங்கள் அமைக்கப்பட்டன; கோயிலில் விளக்கெரிக்கப் பொது மக்கள் நிவந்தங்களை அளித்தனர்; காலா காலங்களில் விழாக்கள் செய்ய நிலம் முதலியன தானமாக அளிக்கப்பட்டன. அடியார்களைப் போற்றல் சைவசமயத்தில் சிறந்த பணியாகக் கருதப்பட்டதால், நாயன்மார்கட்குக் கோயில்களும் உருவச்சிலைகளும் பூசைகளும் விழாக்களும் ஏற்பட்டன, இத்தகைய திருப்பணிகளில் அரசர் முதல் துறவி ஈறாக இருந்த எல்லாச் சைவரும் மன மகிழ்ச்சியோடு ஈடுபட்டனர். சோழநாட்டை வென்ற ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் தான் வென்ற நாட்டிலுள்ள தில்லைச் சிற்றம்பலத்தைப் பொன் வேய்ந்தான் எனின், அவனது தொண்டின் சிறப்பை என்னென்பது![80] விசயராசேந்திர சோழரின் அணுக்கியார் (பணிப்பெண்) பல்லவன்-பட்டாலி நங்கை என்பவள் திருவீழிமிழலைக் கோவிற் கூரைக்குப் பொன்னோடுகள் உதவினாள் எனின், அப்பணி மகளது பக்திக்கு எல்லை கூற முடியுமா?[81] சுருங்கக் கூறின், அக்கால மக்கள் தங்கள் உடல்-பொருள்-ஆவி என்னும் மூன்றையும் கோயில் தொண்டிலேயே வைத்திருந்தனர் என்பதைச் சோழர் காலத்தெழுந்த ஆயிரக்கணக்கான கல்வெட்டுக்கள் உறுதிப்படுத்துகின்றன என்று கூறுவதே பொருத்தமாகும்.

**அடியார்க்குக் கோயில் எடுத்தல்:** சிறந்த பக்திமான்களைப் புதைத்த அல்லது எரித்த இடத்தில் லிங்கத்தை எழுப்பிக் கோயில் கட்டல் நாட்பட்ட வழக்கம். பல்லவ கம்பவர்மன் காலத்தில்

இராசாதித்யன் என்னும் கங்கர் தலைவன் சோழபுரத்தில் சிவன் கோயிலைக் கட்டினான்; தன் தந்தை புதைக்கப்பட்ட இடத்தில் ஒரு பள்ளிப் படையை (கோயிலை) அமைத்தான்.[82] முதலாம் ஆதித்த சோழன் காளத்தியை அடுத்த தொண்டைமான் ஆற்றூரில் இறக்க, அங்கு அவன் மகனான பராந்தகன் ஆதித்தேசுவரம் என்ற கோயிலைக் கட்டினான். விழாக்காலங்களில் ஆயிரம் பிராமணர் உண்ண வசதி செய்தான்.[82] அரிஞ்சயன் ஆற்றூரில் இறக்க, முதலாம் இராசராசன், அவன் இறந்த இடத்தில் ஒரு கோயிலைக் கட்டினான்.[84] இத்தகைய கோயில்களிலும் வழிபாடுகளும் விழாக்களும் குறைவின்றி நடந்தன.[85]

**கோயிலில் மக்கள் வழிபாட்டு முறைகள்:** கோயிலில் ஆகம முறைப்படி பூசை நடைபெற்றது; காலையில் கோயிலிற் சங்கொலித்தல் மரபு. அப்பொழுது கோயிலிற் குங்குலியப் புகை கூட்டல் மரபு.[86] தேன், இளநீர், ஆனைந்து கொண்டு அபிஷேகம் நடைபெற்றது.[87] காலையில் மக்கள் எழுந்து நீராடித் திருநீறணிந்து கோயிலுக்குச் செல்வர்.[88] பலர் தோத்திரப் பாக்களைப் பாடிக்கொண்டே கோயிலிற்புகுவர்;[89] மக்களிடம் உள்மெலிவு, உணர்ச்சி, உருக்கம் காணப்படும்; பாடிக்கொண்டே திருச்சுற்றை வலம் வருவர்.[90] வாழிபோற்றி-சயசய, என்று கூறிக் கடவுளைத் துதிப்பர்.[91] பாடுவர், பணிவர், பல்லாண்டிசைப்பர்;[92] ஐம்புலனும் அகத்தடக்கி நினைப்பர்;[93] மூன்று சந்தி வணங்குவர்;[94] பிரார்த்தனை செய்துகொள்ளல் மரபு.[95] கனவிற்கண்ட காதலர்மீது காதல்கொண்ட கன்னியர் மணம் இசைக்குமாறு இறைவனை வேண்டலும் உண்டு.[86] பக்தர்கள் கையால் தொழுது தலைசாய்த்து (வணங்கி) உள்ளம் கசிவார்கள்;[97] கோயில்களிலும் வீடுகளிலும் இருந்து அக்குமாலை வைத்து செபிப்பவரும் உண்டு.[98] பக்தர்கள் அழுது குறையிரந்து உள்ளத் தூய்மை பெற்றனர்.[99] அப்பர் பாடிய திருக்கன்றாப்பூர்த் திருத்தாண்டகமும், சம்பந்தரது திருமுதுகுன்றப் பதிகமும், பிற சில பாடல்களும் வழிபாட்டு முறைகளை நன்கு விளக்குவனவாகும்.[100] கோயிலில் கடவுளை முதலில் ஆடவர் அஷ்டாங்க வணக்கம் செய்வர்; அஃதாவது, இரண்டு கால், இரண்டு கை, தலை, இரண்டு காதுகள், நெற்றி என்பன தரையிற் பொருந்துமாறு வணங்குவர்; பின்னர் இரண்டு கைகளும் இரண்டு கால்களும் தலையும் தரையில் படும்படி பஞ்சாங்க வணக்கம் செய்வர். பெண்கள் அஷ்டாங்க வணக்கம் செய்யலாகாது; பஞ்சாங்க வணக்கம் செய்வர். கோயிலில் வேறெவரையும் வணங்கலாகாது; ஸ்தூபி முதலியவற்றின் நிழலை மிதித்தல் ஆகாது என்பது விதி.[101]

நாயன்மார்க்குப் பிற்பட்ட சோழர் காலத்தில் வழிபாட்டு முறைகளும் பிறவும் நன்கு வளர்ந்தன. அவ்வளர்ச்சியை ஆயிரக்கணக்கான கல்வெட்டுக்களிற் காணலாம். பெரியபுராண வரலாறு பல்லவர் காலத்ததாயினும், நூலைப் பாடியவரான சேக்கிழார் சோழர் காலத்தவராதலால், அவர் செய்யுட்களில் சோழர் காலச் சமய நிலையையும் வழிபாட்டு முறைகளையும் அறிய இடமுண்டு. அவரே சிறந்த சைவசமயப் புலவராதலின், அவர் பாக்களில் சிவப் பொலிவினைக் காணலாம். அப்பக்திமானது காலத்தவனான "அநபாய சோழன் பொன்னம்பலத்துக் கூத்தப் பெருமானுடைய பாதங்களாகிய தாமரை மலர்களில் உள்ள தேனைப் பருகும் தேனீப் போன்றவன்," என்று கல்வெட்டுக் கூறுவதிலிருந்து,[102] அவனது சிவ வழிபாட்டையும் பக்தியையும் நன்கறியலாம்.


**சைவர் நம்பிக்கைகள்:** முன்வினை இப்பிறவியிற் பலிக்கும்;[105] இறைவன் அடியவர் அன்பினை அளக்கச் சோதனைகள் நிகழ்த்துவான்.[104] இறைவன் வேதங்கட்கும் உரியவன்; தமிழ் நூல்கட்கும் உரியவன். ("ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்")[105] அடியார்க்குக் கோளும் நாளும் தீயவும் நல்லவாம்;[106] அடியார்கள் பிழைகளை இறைவன் மன்னிப்பான்; அடியார்க்கு எளியனாய் வந்து உதவுவன்,[107] என்பன அக்காலச் சைவ மக்கள் கொண்டிருந்த நம்பிக்கைகளிற் சிலவாகும்.

## குறிப்பு விளக்கம்

1. அப்பர் புராணம், 20-21.
2. தடுத்தாட்... ...6.
3. சி.கே.சு. அப்பர் புராணம், ப.29.
4. "பொருள் நீத்தங் கொளவீசிப் புலன்கொளுவ மனமுகிழ்த்த சுருணீக்கி மலர்விக்கும் கலைபயிலத் தொடங்குவித்தார்." அப்பர் புராணம், 20; சிறுத்தொண்டர் புராணம்,22.
5. பெ.பு.நாட்டுச் சிறப்பு,18.
6. சி.கே.சு.பெ.பு.I, ப.124.
7. பெ.பு. ஆராய்ச்சி, அதி.10; சி.கே.சு.சேக்கிழார்.
8. பெ.பு.நாட்டுச் சிறப்பு, 18; சி.கே.சு.உரை, தொகுதி 1, பக்.124.
9. அப்பர் தே.ப.390.செ.6.
10. மேலது, ப.392, செ.6.
11. அப்பர் தே. ப.473, செ.3; சுந்தரர் தே. ப.45, செ.2.
12. சுந்தரர், ப.45, செ.7; 114, செ.11.
13. மேலது, ப.231, செ.6
14. மேலது, ப. 155, செ. 5
15. சந்தானாசாரியர் சரிதம், ப.11; 49 of 1911; A.R.E.1909, P.75.
16. ப. 205, செ.2; தடுத். பு.செ.135.
17. அப்பர் புராணம் 23; சம்பந்தர் புராணம் 1165. தடுத்தாட், 7. மானக் 116.
18. மேலது, செ. 24. 1166; 8.
19. மேலது, செ. 1169-1240; செ.10-27.
20. சம்பந்தர் பு, 1199.
21. மேலது, 1209-1216; 1223.
22. மேலது, 1217.
23. சேரமான் புராணம் 72.
24. சிறுத்தொண்டர் 12, 17, 55-63; 11-23
25. காரைக்கால் 22.
26. செ. 3-6.
27. செ. 13-21.
28. சம்பந்தர் பு.604.
29. காரைக்கால், 49; மங்கையர்...,2.
30. சேரமான் புராணம், 70-71.
31. கலிக்கம்பர் 5.
32. அப்பூதி, 20.
33. இளையான்குடி, 22.
34. அப்பூதியடிகள், 31.
35. மேலது, 39-41.
36. செ. 16.
37. செ. 8-9.

38. செ.24-26.
39. அப்பர் புராணம், 28.
40. 236 of 1902: திருவாலங்காட்டுச் செப்பேடுகள், சு.65.6.
41. அப்பர் புராணம், 32.
42. மேலது, 34, 41-44.
43. ஏயர்கோன், 398-400.
44. சோழர் கோயிற் பணிகள், ப.33.
45. A.R.E. 1909, P. 75.
46. சி.கே.சு.பெ.பு.I, செ. 133ம் உரையும்.
47. தடுத்தாட்... ... ...133.
48. சி.கே.சு.பெ.பு.I பக்.332-4.
49. பெ. பு. திருக் கூட்டச் சிறப்பு, 5-10.
50. அப்பர் தேவாரம், பக்.141, செ.6.
51. வாயு புராணத்திற் பண்பாட்டு வரலாறு, ப.56.
52. நரசிங்கர் புராணம், செ.5.
53. மூர்க்கர் புராணம், செ.10.
54. 101 of 1914, 111 of 1925, 225, 230 of 1911, 687 of 1909, 467 of 1908, 99 of 1926, 75 of 1920, 2 of 1914, 677 of 1919, 164, 177 of 1908, 124 of 1911; 168 of 1912, 100 of 1906, 189 of 1928-9, 311 of 1928; 75 of 1920, 144 of 1925, 144 of 1926, 82 of 1931, 148 of 1935-6; 149 of 1927, 19 of 1931, 422 of 1904, 108 of 1925.
55. 120 of 1912.
56. மெய்ப்பொருள், 12,14.
57. மேலது, 10.
58. மேலது, 6-15.
59. மேலது, 11-21; ஏனாதி 35-40.
60. அப்பர் பு.299.
61. பெ.பு. நாட்டுச் சிறப்பு 22.
62. அமர் நீதி, 43.
63. ஆனாயர். 22.
64. அப்பர், பு. 66.
65. மேலது, 125.
66. சம்பந்தர், பு.216.
67. மேலது, 619.
68. தண்டியடிகள் 19.
69. புகழ்ச் சோழர், 39.
70. வெள்ளானைச் சருக்கம், 36.
71. சம்பந்தர், பு. 208.
72. வெள்ளானைச் சருக்கம், 36.
73. சோழர் I.P. 354.

74. 363 of 1907.
75. 257 of 1925.
76. 231 of 1925.
77. பூசலார் புராணம், 6.
78. அப்பர் பு. 44.
79. ஏயர்கோன், 223.
80. 19 of 1899; A.R.E. 1936.7, P. 74.
81. 384 of 1908.
82. E.I.7.P.193.
83. 286 of 1906, 230 of 1903.
84. S.I.I.3. 17.
85. இத்தகைய கோயில்களைப் பற்றி மிகுதியாக அறிய விரும்புவோர் கல்வெட்டு ஆண்டு அறிக்கையைக் (A.R.E. 1914, P. 107) காண்க.
86. அப்பர் தேவாரம், பக். 151, செ. 10.
87. மேலது, 228, " 10.
88. மேலது, 50, " 4.
89. மேலது, 6 " 1.
90. மேலது, 268 " 10.
91. மேலது, 320, போற்றித் திருத்தாண்டகம்;
திருவாசகம் – போற்றித்
திருவகவல்.
92. மேலது 35 செ. 10.
93. மேலது 52, செ. 9.
94. மேலது 170, " 9.
95. மேலது 35, " 2.
96. மேலது 145, " 9.
97. சம்பந்தர் தேவாரம, ப. 319, செ. 3.
98. மேலது, 503, " 3.
99. அப்பர் 513, " 9.
100. சம்பந்தர் தே. பக். 326, செ. 7; 373, செ. 3; 391. செ. 5.
101. தடுத்தாட் கொண்ட புராணம் 126, உரை, சி.கே.சு.பெ.பு.I,ப. 324.
102. 73 of 1890; S.I.I. 4. 397.
103. அப்பர் தேவாரம், ப. 161, செ. 4.
104. மேலது, " 194, " 6.
105. மேலது, " 360, " 5.
106. சம்பந்தர் தேவாரம், 417, செ. 5.
107. அப்பர் தேவாரம், ப, 513, செ. 8.


பூங்கொடி
பதிப்பகம்
சைவ
சமய
வளர்ச்சி
டாக்டர்
மா. இராசமாணிக்கனார்